# சிலப்பதிகார விளக்கம்

196

மதராஸ் யூனிவேர்சிட்டி தமிழாசிரியர்
ஸ்ரீமான் ஆர். பி. சேதுப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.
எழுதியது

'ஒற்றுமை' ஆபீஸ்,
தியாகராயநகர், சென்னை.

பதிவு செய்தது] 1937 [விலை ரூ. 1-8-0

196

# சிலப்பதிகாரக் கதை

## 1-வது அதிகாரம்

### ‘மாநகர்க்கு ஈந்தார் மணம்’

**சோழ நாடு.**

நீர்வளம் நிலவளம் மலைவளம் குடிவளம் ஆகிய நால்வகை வளங்களும் நிறைந்து, சேர சோழ பாண்டியரென்னும் தமிழ்வேந்தர் மூவராலும் முறை திறம்பாது அரசாளப்பெற்ற முந்நாடுகளும் தென்-நாட்டில் திகழ்ந்து விளங்கின. இம் முந்நாட்டிலும் அருந்திறமையால் செயற்கரிய செயல்களைச் செய்த வளவன் ஆண்ட சோழநாடு, புலவர் பாடும் புகழமைந்ததாய், பொன்னியாற்றின் வளத்தினைப் பெற்றதாய், பட்டினப்பாக்கம் மருவூர்ப்பாக்கம் என்னும் இரு பகுப்பினை உடையதாய், விளங்கிற்று. அந்நாட்டின் தலைநகராகிய புகார் நகரத்தில், பூவார்சோலை மயிலாட, புரிந்து குயில்கள் இசைபாட, காமர்மாலை அருகசைய, காவேரியாறு களிப்பொடு சென்றது. இருமருங்கும் செழித்து வளர்ந்திருந்த மரங்களிலும் கொடிகளிலும் அழகுற மலர்ந்து மணங்கமழ்ந்த மலரை ஆடையாகப் போர்த்து, அம் மலர்

களின் தேனை உண்டு திளைத்த வண்டுகளின் இசை

பொன்னியாற்றின் பெருமை

யொலியால் இன்புற்று, கண்ணனைய கயல் மீன்கள் அங்குமிங்கும் புரள காவேரியாறு கண்ணுக்கு இனியதாய் நடந்து சென்றது. அவ் வாற்றங்கரையில் மருத நிலத்தைப் பண்படுத்திப் பயிர் செய்யும் உழவோர் செய்யும் ஒலியும், நீர்க்காலின் வழியாக விரைந்து செல்லும் நீரின் ஒலியும், அந்நீரில் மூழ்கி மகிழ்வோர் ஒலியும் எங்கும் மிகுந்து ஒலித்தது. இவ்வாறு காவேரியாறு வளம் பெருக்கிய நன்னகரம் காவிரிப்பூம் பட்டினம் என்னும் சிறப்புப் பெயர் பெற்றது.

மருவூர்ப் பாக்கம்

அந்நகரில் ஒரு பாக்கமாய் விளங்கிய மருவூர்ப் பாக்கத்தில் மாடமாளிகைகள் மாண்புற விளங்கும். கயவாய் மருங்கில் கண்ணுக்கு எட்டாத தூரம் வணிகர் இருப்பிடங்கள் விண்ணிலே விளங்கித் தோன்றும். மரக்கலத்தால் வரும் மாண்புடைய செல்வத்திற்காகத் தம் நாட்டைவிட்டுத் தமிழ் நாடு போந்து தமிழ் மக்களுடன் நீரோடு நீர் சேர்ந்தாற்போல ஒன்றுபட்டு வாழும் அயல்நாட்டார் இருப்பிடங்களும் இலங்கித் தோன்றும். இன்னும் வண்ணமும் சுண்ணமும் தண் நறும் சாந்தமும் பூவும் விரையும் விற்பவர்கள் சுற்றித் திரியும் நகர வீதியும் நலம்பெற விளங்கும். அவ் வீதியில் பட்டாலும் கம்பளத்தாலும் பருத்தி நூலாலும் நுண்ணிய வேலையில் வல்லவராய சாலியர் இருப்பிடங்கள் சிறந்து தோன்றும். இன்னும் ஆரமும் அகிலும், தூசும் துகிரும், மாசறு பொன்னும், மணி

யும் முத்தும், நிறைந்த வணிகர் வீதியும் திருந்தி விளங்கும். நெல்லும் புல்லும் வரகும் தினையும் முதலிய எண்வகைக் கூலம் குவித்த கூல வீதியும் நிறைந்து தோன்றும்.

பட்டினப் பாக்கம்

இனிப் பெருமை சான்ற பெரியார் வாழும் பாடல் சால் சிறப்பமைந்த பட்டினப்பாக்கத்தில் அரசர் வீதியும் தேரோடு வீதியும் வணிகரின் மாட மாளிகை மலிந்த வீதியும், மறையோர் வாழும் மங்கல வீதியும், வேளாளர் வாழும் விழுமிய வீதியும், விளங்கித் தோன்றும். இன்னும் ஆயுள் வேதரும் காலக் கணிதரும் முறையாய் அமைந்து வாழும் அழகிய வீடுகளும், யானை வீரரும் குதிரை வீரரும் தேர்ப்பாகரும் வாழும் திருந்திய வீதிகளும் இலங்கித் தோன்றும். இவ்விரு பாக்கத்திற்கும் நடுவே ஓர் அங்காடி அமைந்திருந்தது. அதன்கண் கொடுப்போர் ஒலியும் கொள்வோர் ஒலியும் இடையறாது ஒலிக்கும்.

இன்னும் கடல் வழியாகவும் தரை வழியாகவும் நடந்த வாணிகத்தால் வளம் மிகப் பெருகி,

"பொறை ஒருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவர்க்கு
இறை ஒருங்கு நேர்வது நாடு"

நகரின் நல்வளம்

என்று நாயனார் அருளியவாறு முழங்கு கடலாற் சூழப்பட்ட உலகம் முழுவதும் ஒருங்கே திரண்டு வந்தாலும் வழங்கக் குறையாத வளமும் பொருளும் உடையதாய் அந்நகரம் விளங்கிற்று.

இத்தகைய புலவர் பாடும் புகழமைந்த புகார் நகரத்தில் வறுமையால் வருந்தும் ஏழை மாந்தர்க்கு மழை போலப் பொருள் வழங்கும் மாநாய்கன் என்னும் வணிகன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் அழகிய பூங்கொம்பு போன்ற ஓர் பெண்மணியைப் பெற்று நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தான். அம்மங்கையின் அழகினைக் கண்ட மற்றைய மாதர்கள் செந்தாமரையில் இலங்கும் திருமகள் அழகால் இவளை ஒப்பாள் என்று புகழ்ந்தார்கள். இன்னும் இவள் கற்பின் திறத்தினைக் கண்ட மாதர்கள், ஆசிலாக் கற்புடைய அருந்ததியின் திறம் இவள் கற்பை ஒக்குமென்று போற்றிப் புகழ்ந்தார்கள். இவ்வாறு ஒப்பற்ற அழகும் உயரிய கற்பும், அமைந்த மாது கண்ணகி யென்னும் பெயர் பெற்றுப் பன்னிரண்டு ஆண்டமைந்த இளங்கொடியாய் விளங்கினாள்.

மாநாய்கன் மகள் கண்ணகி

அந்நகரத்திலேயே மாசாத்துவான் என்னும் பெயருடைய மற்றொரு வணிகன் இருந்தான். அவன் செல்வம் மிகப் பெற்றவன். நல்வழியால் தான் சேர்த்த பொருளை வறியார்க்கு வழங்கிப் பயன் - மரம் ஊர் - நடுவே பழுத்தாற் போன்று பலர்க்கும் பயன்பட வாழ்ந்திருந்தான். அவ் வணிகனுக்குச் செவ்வேள் போன்ற இளமையும் செம்மையும் வாய்ந்து, அறிவாலும் குணத்தாலும் புகழ்பெற்ற கோவலன் என்பான் பதினாறு ஆண்டமைந்த குமரனாய் விளங்கினான்.

மாசாத்துவான் மகன் கோவலன்

இவ்விருவரது பெற்றோரும் ஒரு நன்னாளில் கோவலனுக்குக் கண்ணகியை மணஞ் செய்து மனங் களிக்க எண்ணினார்கள். அவ்வாறே திருமணத்திற்குரிய நன்னாளைக் குறித்துப் பட்ட யானையின்மீது நல்லணி யணிந்த மாதர் சிலரை ஏற்றித் திருமணச் செய்தியை நகர மக்கள் அனைவர்க்கும் அறிவித்தார்கள். திருமணத்திற்காக அமைத்திருந்த நன்னாளில் முரசு அடிக்கவும் மத்தளம் அதிர்க்கவும் முழங்கு கருவிகள் முழங்கவும், மங்கள முழக்கமே எங்கும் நிறைந்திருந்தது.

"மாலைதாழ் சென்னி வயிர மணித்தூணத்து
நீலவிதானத்து நித்திலப் பூம்பந்தர்க் கீழ்"

*கண்ணகிக்கும் கோவலனுக்கும் கடி மணம்*

கண்ணகியைக் கோவலன் முறைப்படி மணஞ் செய்தான். மணக்கோலங் காண நிறைந்து நின்ற மாதர்கள் கண்ணகியும் அவள் காதலனும், மணியும் ஒளியும் போலவும், மலரும் மணமும் போலவும், ஒருவரை ஒருவர் பிரியாமல் வாழ்க என்று வாழ்த்தி நறுமலர் தூவினார்கள்.

நறுமணங்கமழும் மலர்களின் நலத்தினை உண்டு மகிழ்ந்த வண்டுகள் எங்கும் ஓடிச் சுழன்று இன்புற்றிருந்தன. இளவேனிற் காலத்தில் வீசிய இளந் தென்றல் மலர்களின் மெல்லிய மணத்தைத் தாங்கி, எங்கும் பரந்து வீசி இன்பம் பயந்தது. காதலர் இருவரும் அணிபெற வகுத்த மணிநிலா முற்றத்தில் இனிதிருந்து, அம் மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்றின் நலத்தினை நுகர்ந்து இன்புற்றிருந்தார்

இல்வாழ்க்கையின் இன்பம் நுகர்தல்

கள். மலரின் மணமும், மாலை மதியமும், வீசு தென்றலும், வீங்கிள வேனிலும், காதலர் மனத்தைப் பெரிதும் மகிழ்வித்தன. இவ்வாறு இன்புற்றிருக்கையில் கோவலன் தன் காதலியின் குலத்தையும் நலத்தையும் பலவாருகப் புகழ்ந்துரைத்தான். தன் காதலியின் அழகைக்கண்டு, "மாதே, அழகிய தோகையையுடைய மயில்கள் உன் சாயலைக் கண்டு நாணி, நாட்டை விட்டுக் காட்டுக்குச் சென்றன; அழகிய நடையையுடைய அன்னங்கள், உனது மென்னடையைக் கண்டு நாணி மலர்ச்சோலையிற் சென்று மறைந்தன. பச்சைப் பசுங்கிளிகள், குழலும் யாழும் குழைத்தாலொத்த உனது மழலை மொழியைக்கேட்டு நாணி உன்னைப்போல் பேசப் பழக எண்ணி உனது அழகிய கையில் அமர்ந்திருக்கின்றன" என்று தன் காதலியின் மயில்போன்ற சாயலையும், அன்ன நடையினும் அழகிய நடையையும், கிளியின் மொழிபோன்ற மழலை மொழியையும் புகழ்ந்துரைத்தான். இன்னும் அவள் முடிமுதல் அடிவரை அணிந்திருந்த அணிகளையும், கருங்குழலில் சூடியிருந்த நறுமலர் மாலையையும் பார்த்து, "இயற்கை யழகு அமைந்த உனக்கு ஏன் இவ்வாறு செயற்கை அழகு" என்று வருந்துவான் போல மகிழ்ந்தான். "மாதே, உன்னை அழகு செய்ய எண்ணிய தோழியர் மங்கல அணியே யன்றி மற்றைய அணிகளை ஏன் அணிந்தார்கள்? உனது அழகிய கூந்தலிற் சில மங்கல மலர்களைத்

கோவலன் தன் காதலியின் நலம் புனைந்துரைத்தல்

தூவுதலன்றி ஏன் பனுவான இம் மாலையைப் புனைந்தார்கள்? உன் கூந்தலுக்கு நல்ல அகிலின் நறும் புகை ஊட்டியிருப்ப, அதற்குமேல் ஏன் * மான்மதச்சாந்தை அணிந்தார்கள்?" என்று அவள் நலம் பாராட்டினான். இன்னும்,

"மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ"

என்று கோவலன் தன் கண்மணி அனையாளைக் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறிந்த நலங்கள் யாவும் தோன்றப் புகழ்ந்துரைத்தான். இவ்வாறு காதலர் இருவரும் இன்புற்றுக் களித்து வாழும் நாளில், கோவலன் நற்றாய், தன் மகனும் மருகியும் இல்லறமென்னும் நல்லறத்தை இனிது நடத்தி அறவோர்க்களித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க் கெதிர்தல் ஆகிய நல்லறங்களை நாள்தோறும் நடத்தி வாழ்வதைக் காணும் விருப்பமுடையவளாய், இருவரையும் தனியாக ஒரு மாளிகையில் வாழ்ந்துவரச்செய்தாள்.

இருவரும் இல்லறம் நடத்தல்

இவ்வாறு இல்லறத்தை இருவரும் சில ஆண்டுகளாக இனிது நடத்தி வந்தார்கள்.

* மான்மதம் = கஸ்தூரி.

# 2-வது அதிகாரம்

## மாதவியும் மணமாலையும்

மாதவி என்னும் நாடக மாது, தாது அவிழும் மலர்களையும், சுழன்று சுருண்ட குழலினையும், மாந் தளிர்போன்ற மேனியையும் உடையவளாய், ஆடல் பாடல் அழகென்னும் மூன்றில் ஒன்றும் குறைபடா மல், வீரக்கழல் அணிந்த சோழனது சபையில் தனது ஆடலையும் பாடலையும் அரங்கேற்றினாள். அச்சபை யில் அரசர் வணிகர் முதலிய சிறப்பு வாய்ந்த மக்க ளெல்லாம் தத்தம் பெருமைக்கும் நிலைமைக்கும் ஏற்ற முறையில், வரிசை வரிசையாக அமர்ந்திருந்தார்கள். கோவலனும் அங்குற்றுத் தன் குலத்திற்கும் செல்வத் திற்கும் ஏற்ற இடத்தில் இனிதமர்ந் திருந்தான். அங்கு இருவகைக் கூத் தின் இயலமைந்த ஆடலாசிரியனும், யாழும் குழலும் தாளமும் பாடலும் வல்லவனாகிய இசையாசிரியனும், தமிழ் முழுதறிந்த தன்மையனாகிய நல்ல மொழிகளால் நாடகநூல் செய்ய வல்ல கவிப்புலவனும், குழலாசிரியனும், யாழாசிரிய னும் விளங்கித் தோன்றினார்கள். அவ்வரங்கத்தில் பூங்கொம்புபோன்ற மாதவி, மின்னொளிபோலத் தோன்றி, வலதுகாலை முன்னே வைத்து, நாட்டில் நன்மை பெருகவும் தீமை அகலவும் வேண்டித் தெய் வப்பாடல் பாடியபொழுது, குழலின் வழியே யாழ் நின்றது, யாழின் வழியே மத்தளம் நின்றது. இவ்

மாதவி ஆட ரங்கத்தில் தோன்றுதல்

வாறு இசைக்கருவிகளெல்லாம் பருந்தும் நிழலும் போல ஒன்ருய் ஒலிப்பச் சபையில் பாட்டும் கூத்தும் நிகழ்ந்தன. அரங்கேற்று விழா முடிந்தவுடன் அரசன் மாதவியின் பாட்டிற்கும் கூத்துக்கும் ஏற்ற முறையில் ஆயிரத் தெண்கழஞ்சு பொன்னும், பச்சைமாலையும் பரிசாகக் கொடுத்தான்.

அரசன் மாதவிக்குப் பரிசளித்தல்

அப் பச்சைமாலையை மாதவி தன் தோழிகையில் கொடுத்து "மாற்றுயர்ந்த புசும்பொன்னை விலையாகப் பெறுதற்குரியது இம் மாலை; இதற்குரிய பொன்னைத் தந்து வாங்குவோன் என் காதலனுக அமைவான்" என்று சொன்னுள். தோழியும் மாதவியின் மண-மாலையைக்கொண்டு வீதியிற் சென்ருள். அப்பொழுது மாதவியின் ஆடலையும் பாடலையும் அழகையும் கண்டு மயங்கித் தன் உள்ளத்தில் அவள் உருவத்தையே அழகொழுக எழுதிப்பார்த்து மகிழ்ந்திருந்த கோவலன், மாதவி மாலையைப் பொன் கொடுத்து வாங்கித் தோழியுடனே அவள் மனையிற் சென்ருன். மாதவியை மணந்தான். அவள் மையலிலே தாழ்ந்தான். மாசிலாக் கற்புடைய தன் மனையாளையும் மாளிகையையும் மறந்தான்.

கோவலன் காதல்

மாதவி மனையில் மல்லிகை முல்லை முதலிய மலர்கள் மணங்கமழ்ந்தன. மாலைப்பொழுதில் மந்த மாருதம் மெல்லென வீசியது. கதிரவன் மறைந்து குளிர்ந்த கலைகளையுடைய சந்திரன் விண்ணிலே விளங்கித்

மாதவியின் மையலிலே தாழ்தல்

தோன்றியது. தண்ணீர் நிறைந்த தடாகங்களில் அழகுற மலர்ந்து நின்ற தாமரை மலர்கள் தண் கதிர்ச் செல்வனைக் கைகூப்பித் தொழுவனபோல் இதழ் குவிந்து இலங்கின. அங்கு நின்ற குமுத மலர்கள் நன்றாய் மலர்ந்து தம்பாலுள்ள நலத்தையெல்லாம் மதியினுக்களித்து மகிழ்வனபோல மாண்புற விளங்கின. இத்தகைய மாலைப்பொழுதில் கோவலன் மாதவியுடன் நிலா முற்றத்தில் இனிதமர்ந்து இன்புற்றிருந்தான்.

கற்பெனும் பெருமைக்கு உறைவிடமாகிய கண்ணகியோ காதலன் பிரிவாற்றாது கவலைக் கடலில் மூழ்கியிருந்தாள். பஞ்சினும் மெல்லிய அவள் பாதங்கள் அழகிய சிலம்பை அறவே மறந்தன.

கண்ணகி பிரிவாற்றாது வருந்துதல்

செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறந்தது. மதிபோன்ற திருநுதல் திலகம் இழந்தது. மையிருங்கூந்தல் நெய்யணி மறந்தது. மங்கல அணியேயன்றி மற்றைய அணிகளை மறந்தாள். இளவேனிற் காலத்திற்கு இனிதாக அமைத்திருந்த மணிமுற்றத்தை மேவாது நீங்கினாள். தென்றலும் நிலாவும் தன் மாளிகையின் உள்ளே புகாவண்ணம் சாளரங்களை எல்லாம் அடைத்தாள். அழகிய கழுத்தில் அணிந்திருந்த முத்தாரத்தையும், சந்தனம் முதலிய வாசனைகளையும் வெறுத்தாள். குவளை மலரும் நீலமலரும் மற்றும் நறுமணங் கமழும் மெல்லிய மலர்களும் மணிப்பூஞ் சேக்கையில் சேராதொழிந்

தன. காதலன் பிரிந்த துயரம் உலை நெருப்புப்போல அவள் உள்ளத்தை உருக்கி வருத்தியது. காவிமலர் போன்ற கண்களினின்றும் முத்துப் போன்ற கண்ணீர் சிந்தினாள். இவ்வாறு இரவும் பகலும் உறக்கமற்று வருந்திய உள்ளத்துடன் கண்ணகி உயிர் வாழ்ந்தாள்.

புகார் நகரத்தில் இந்திர விழா

இங்ஙனமிருக்கையில் காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரனுக்குத் திருவிழாக் கொண்டாடும் நன்னாள் வந்தது. விண்ணுலகத்தினின்றும் புகார் நகரத்தில்போந்து அங்காடியில் அமர்ந்திருந்த பூதத்திற்கு மறக்குலப் பெண்கள் பொங்கல் முதலியவற்றைப் படைத்து தமது அரசன் ஆளும் நாட்டில் "பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும்வளமும் சுரக்"குமாறு குரவைக் கூத்து ஆடி வாழ்த்தினார்கள். இன்னும் இந்திரன் ஏவலால் அந்நகரத்தில் நிலைபெற்றிருந்த ஐம் பெரு மன்றங்களிலும் அரும்பலியிட்டார்கள். இந்திரனது கற்பகத்தரு நிற்கும் தோட்டத்தில் கொடி ஏற்றினார்கள். அரசனது ஐம்பெரும் சபைகளும் எண்பேராயமும், அரசகுமாரரும், பரதகுமாரரும் திரள் திரளாக வந்து சேர்ந்து, மண்ணில் வாழும் மக்களும், விண்ணில் வாழும் வானவரும் வியப்பெய்த பொன்னியாற்றின் புண்ணிய நீரைப் பொற்குடத்தில் ஏந்தி விண்ணவர் தலைவனை விழு நீராட்டினார்கள். அப்பொழுது அந்நகரிலிருந்த சிவபெருமான் கோயிலிலும் அறுமுகன் ஆலயத்திலும், பலதேவர் கோயிலிலும், நீலமேனி நெடியோன் ஆலயத்திலும், மாலை வெண் குடை வாசவன் ஆலயத்திலும், மாமறைவிதி வழாமல்

ஒருபுறம் ஓமங்கள் நடந்தன. அருகர் பள்ளியிலும், புத்தர் பள்ளியிலும், அறங்கூறு மிடத்திலும் ஆன்றோர் புண்ணிய கதைகள் படிக்கப் பெற்றன. யாழ் முதலிய இசைக்கருவிகளில் இசை பாடவல்ல பாணர்கள் இனிது பாடினார்கள். இவ் விழாவினைக் கண்டு மாதவியும் கோவலனும் மகிழ்ந்து, இன்புற்றிருந்தார்கள். திருநாள் முடிந்த மறுநாள் அமாவாசை தினமாய் அமைந்திருந்தமையால், புகார் நகரத்து மக்களெல்லாம் நீராடும் பொருட்டுக் கடற்கரைக்கு விரைந்து சென்றார்கள். மடலவிழ் தாழையும் புன்னையும் பூத்த நெய்தல் நிலத்தில் கடல் விளையாட்டுக் காணவிரும்பி, மாதவியும் கோவலனுடன் கடற்கரை சேர்ந்தாள். அங்குத் தாழை வேலியாற் சூழ்ந்த வெண்மணல் விரிந்த இடத்தில் ஓர் புன்னை மரத்தின் நிழலில் இருவரும் இனிதமர்ந்திருக்கையில், மாதவி தன் தோழியாகிய வசந்தமாலை கையினின்றும் யாழை வாங்கி, அதனை முறைப்படி திருத்திக் கோவலன் கையில் கொடுத்தாள். கோவலனும் மாதவி மனமகிழக் கானல்வரி பாடத் தொடங்கினான். இவ்வாறு கோவலன் பாடிய பாக்கள் அகப்பொருளியலில் களவுத் துறையில் தலைமகன் கூறிய மொழிகளாயிருந்தமையால், கோவலன் தன்மேல் அன்பில்லாது வேறொரு காதலியை விரும்பி மயங்கினான் என்று மாதவி எண்ணினாள். ஆயினும் அக்கருத்தை வெளிப்படுத்தாமல், கோவலனது இசையால் மகிழ்ந்தவள்போல நடித்து, அவன் கையினின்றும் யாழை வாங்கித் தானும் வேறு குறிப்புடையவள்போல் "நிலத்தெய்வம்

வியப்பெய்த, நீள் நிலத்தோர் மனமகிழ" மாதவி இன்னிசை பாடினாள். இப் பாட்டைக் கேட்ட கோவலன், என்னையன்றி வேறொருவன் மேல் மனம் வைத்து மாயப் பொய் பல கூட்டும் மாயத்தவளாகிய மாதவி பாடினாள் என்றெண்ணி, கோபக்குறியோடெழுந்து அவளை விட்டுப் பிரிந்து தனியாகத் தன் மனை நோக்கிப் புறப்பட்டான். கடற்கரையில் தனியாய் நின்ற மாதவியும், ஆற்றொணுத் துயருற்றுத் தன் தோழியோடு தன் மனை புகுந்தாள்.

---

## 3-வது அதிகாரம்

---

### மாலதியும் கண்ணகியும்

முன்னொரு காலத்தில் மாலதி என்னும் பெயரமைந்த ஒரு பார்ப்பனப் பெண்ணிருந்தாள். அவள் பிள்ளையற்றவளா யிருந்தமையால், அவள் கணவன் மற்றொரு பெண்ணை மணந்து அவள் மூலமாய் ஒரு ஆண் மகவைப் பெற்று இன்புற்று வாழ்ந்து வந்தான். ஒருநாள் தாயார் வெளியே சென்றிருந்த பொழுது அப் பிள்ளை பசி பொறுக்கமாட்டாமல் அழத்தொடங்கிற்று. பாலன் அழுவதைப் பார்த்து மனம் பொறுமல், மாலதி அதனை எடுத்துப் பாலூட்டினாள். பால் தொண்டையில் விக்கிப் பாலனைக் கொன்றுவிட்டது. தன் கையிலிருந்த பாலன் இறந்ததைக்

மாலதி மாற்றாள் பாலனுக்குப் பாலூட்டல்

கண்ட மாலதி மிகப் பரிதபித்தாள். "இப் பிள்ளையை நான் கொன்றுவிட்டே னென்றல்லவோ இதன் தாய் என்மீது பழி சுமத்துவாள்; பால் கொடுக்கப் போய் பாழாய் முடிந்ததே; பசியைத் தீர்க்கப்போய் பெரும் பழியாய் முடிந்ததே; ஐயோ தெய்வமே! இதற்கு நான் என்செய்வேன்" என்று ஏங்கி அழுது கோயில் கண்ட இடமெல்லாம் பிள்ளையைக் கொண்டு மாலதி அலைந்து திரிந்தாள். இவ்வாறு கோயில்தோறும் சென்று கும்பிட்டும் ஒரு தெய்வமும் மனமிரங்கி அவள் மனக்கவலையை மாற்றவில்லை. கடைசியாக அவள் சாத்தன் கோட்டத்தில் சென்று வணங்கி, வரங் கிடந்தாள். அந் நள்ளிரவில் அருகே யிருந்த சுடு

சுடுகாட்டுப் பேய் பிள்ளையை விழுங்குதல்

காட்டுக் கோட்டத்தில் பிணந்தின்ன வந்த ஒரு பேய், மாலதியின்மேல் இரக்கம் கொள்வதுபோல நடித்து அவளைப் பார்த்து, 'குற்றமற்ற பெண்ணே! நான் ஒன்று சொல்லக்கேள்: முற்பிறப்பில் தவஞ் செய்யாதவர்க்கு இப்பிறப்பில் தெய்வங்கள் வரங் கொடுக்கமாட்டா என்பது உண்மையாகும். ஆதலால் உன் கையிலுள்ள பிள்ளையை என்னிடம் தா' என்று இழுத்துப் பிடுங்கி விழுங்கிவிட்டது.

இதைக்கண்ட மாலதி எரிகின்ற புண்ணில் ஈட்டி தைத்தாற்போல, மனம் நொந்து, இடியோசை கேட்ட மயில்போல ஏங்கி அழுதாள். அவ் அழுகையைக் கண்ட சாத்தன் மனமிரங்கி, "அன்னையே, நீ அழ வேண்டாம், நீ போகும் வழியில் உன் பிள்ளையை உயிரோடு கண்டு மகிழ்வாய்" என்று சொல்லி

சாத்தன் பாலனாய் அமைதல்

மறைந்து தானே பாலன் வடிவு கொண்டு அவள் செல்லும் வழியில் ஒரு சோலையிற் கிடந்து அழுதான். அப்பிள்ளையைக் கண்ட மாலதி பெரு மகிழ் வடைந்து, அது மாயப்பிள்ளை என்பதை அறியாது கட்டி அணைத்து முத்தமிட்டு மார்போடணைத்து விரைந்து சென்று அதன் தாய் கையில் கொடுத்தாள்.

இவ்வாறு வந்த சாத்தனும் அம்மறையவனுக்கு மகனாய், அறிவு நூல்களையெல்லாம் துறை போகக் கற்றுக், கல்வி கேள்விகளில் மேம்பட்டான். தன் தாய் தந்தையார் இறந்தபொழுது அவர்க்கு நீர்க்கடன் முடித்து உரியகாலத்தில் தேவந்தியென்னும் பெண்ணை மணம்புரிந்து இல்லறம் நடத்தினான். எட்டாண்டுகளாக இவ்வாறு இன்புற்று வாழ்ந்த பின் ஒருநாள் சாத்தன் தன் காதலியின் முன்பு சென்று, தனது

மணம்புரிந்து இல்லறம் நடத்தல்

தெய்வ ஒளியையும் நலத்தையுங் காட்டி, "நீ என் கோட்டத்துக்கு வந்துசேர்" என்று சொல்லி மறைந்தான். தன்காதலன் பிரிவைக் கண்டு ஆற்றாத அப்பெண் பெரிதும் மனங்கலங்கி, அத்தெய்

சாத்தனார் மறைதல்

வம் உறையும் கோட்டத்திற் சென்று தன் தலைவனைத் தனக்கு மீண்டும் தர வேண்டுமென்று வழிபாடு செய்து வந்தாள்.

இப் பெண்மணி, தன்னைப்போல் கண்ணகி என்னும் கற்புடைய மங்கையும் தன் காதலனை இழந்து தவிக்கின்றாள் என்று உணர்ந்து, தான் வழிபடும்

தேவந்தி தெய்வம் தொழுதல்

கோட்டத்திற் சென்று தொழுது, கண்ணகியும் தன் காதலனைப் பெறவேண்டுமென்று வணங்கி, பின்பு அவள் மனை இடம் சென்று நீ உன் கணவனை விரைவில் கண்டு மகிழ்வாய் என்று ஆசி கூறினாள்.

இதைக் கேட்ட கண்ணகி தேவந்தியை வணங்கி "அம்மையே, நீ இவ்வாறு சொல்வதால் நான் என் காதலனைப் பெறுவேனென்பதில் ஐயமில்லை. ஆயினும் நேற்றிரவில் நான் சிறிது கண்ணயர்ந்திருக்கையில் ஓர்

தேவந்தியிடம் கண்ணகி கனவுரைத்தல்

கனவு கண்டேன். அக்கனவை நினைப்பதற்கே இப்பொழுது நடுங்குகின்றேன். என் காதலனும் நானும் ஒரு பெரிய நகரத்திற்குச் செல்வது போலவும், அங்கு என் காதலன்மீது வஞ்சகமான பழி விழுந்தது போலவும், அதனால் அவருக்குப் பெருந் தீங்குற்றது போலவும், நான் அவ்வூர் அரசனிடம் சென்று முறையிட்டதுபோலவும், அவ்வரசனுக்கும் அந்நகரத்திற்கும் அதனால் தீங்கு விளைந்தது போலவும் ஒரு தீக்கனவு கண்டேன். இவ்வாறு தீவினையுற்ற என் காதலனோடு பின்பு நான் பெற்ற நலங்களைக் கேட்டால் நீ நகைப்பாய்" என்று கூறினாள்.

இவ்வாறு தீக்கனவைக் கண்டு திகைத்து வருந்திய கண்ணகியைத் தேவந்தி பலவாறு தேற்றி அவளைப் பார்த்து, "பெண்மணீ, முற்பிறப்பில் உன் கணவன் பொருட்டு ஒரு நோன்பு செய்யத் தவறிவிட்டாய்; அதனாலேயே உனக்கு இத்தகைய தீங்குகள் நேர்ந்தன; முற்பிறப்பில் நேர்ந்த குறையை இப்பிறப்பில் நிறை

நிறை செய்துவிடலாம். காவிரி யாறு கடலொடு கலக்கும் இடத்திற்கு அருகே சோமகுண்டம் சூரியகுண்டம் என்னும் பெயருடைய இரண்டு பொய்கைகளிருக்கின்றன. அவற்றில் நீராடி அண்மையிலுள்ள காமன் கோட்டத்தில் சென்று தொழுதால் இப்பிறப்பில் எப்பொழுதும் கணவனைப் பிரியாத பெருவாழ்வு பெறுவதோடு மறுபிறப்பிலும் போகநாட்டில் பிறந்து காதலனோடு களித்து மகிழ்ந்து வாழலாம். அப்பொய்கை இடத்திற்கு நாமும் போவோம்" என்று கண்ணகியை அழைத்தாள். அதற்குக் கண்ணகி இணங்காமல் அவ்வாறு துறை முழுகித் தெய்வம் தொழுவது தன் மரபிற்கும் நிலைமைக்கும் தகாதென்று எடுத்துரைத்தாள்.

தேவந்தி தேறுதல் கூறல்

---

## 4-வது அதிகாரம்

---

### கண்ணகியும் கோவலனும்

அப்பொழுது அவ்வீட்டுப் பணிப் பெண் விரைந்தோடி வந்து, "அம்மா, கோவலன் வருகின்றான்" என்று கூறி மகிழ்ந்தாள். கோவலனும் கண்ணகியின் கண்ணெதிரே தோன்றினான். தன் காதலியின் வாடிய மேனியையும் வருந்திய மனத்தையும் கண்டான். கற்பிற் சிறந்த கண்ணகியைப் பார்த்து, "பொருளையே விரும்பும் பொது மாதின் பொய் யொழுக்கத்தை மெய்யென்று நம்பி மோசம் போனேன். என் குலத்தோர் சேர்த்துவைத்த அரும் பொருளை யெல்லாம் அவள்

கோவலன் வருகை

பொருட்டு அழித்தேன். இப்பொழுது வறுமையுற்று நாணுகின்றேன்" என்று கோவலன் கூறினன்.

கூடாத வொழுக்கத்திற்குக் கோவலன் வருந்துதல்

இதைக் கேட்ட கண்ணகி இன்னும் மாதவிக்குக் கொடுக்கக் கையில் பொருளில்லாமையால் இவ்வாறு தன் கணவன் மனம் நொந்து வருந்துகின்ருன் என்று எண்ணி, "ஐயனே, இன்னும் என்னிடம் இரண்டு சிலம்புகளிருக்கின்றன. அவற்றை இதோ தருகின்றேன்" என்று முகமலர்ந்து கூறினள்.

சிலம்பை விற்று வாணிகம் செய்ய மதுரைக்குப் புறப்படல்

தனது காதலியின் கற்பின் திறத்தையும் தான் அவளுக்குச் செய்த தீமைகளையும் கோவலன் நினைந்து நினைந்து நெஞ்சம் குழைந்து, "என் கண்மணீ, நீ சொல்லிய சிலம்பை விற்று அப்பொருளையே மூலப் பொருளாக வைத்து வாணிகம் செய்து நான் இழந்த பொருளை மீண்டும் சேர்க்க எண்ணியிருக்கின்றேன் ; அதற்காக இவ்விடம் விட்டு மதுரைமா நகரத்திற்கு நான் செல்லவேண்டும், நீயும் என்னோடு புறப்படு" என்று கூறினன்.

காதலர் இருவரும் இருள் செறிந்த விடியற் காலத்தில் தமது பெருமை சேர் வீட்டை விட்டுப் பெயர்ந்தார்கள். கண்ணகி பல நாள் காதலித்து வளர்த்த கவரி மானையும், அன்புடன் வளர்த்த அன்னப்பறவையையும் புறத்தே விட்டுப் புறப்பட்டாள். போகும் வழியில் அரவணையின்மீது அறிதுயில் கொண்ட அழகிய திருமால் கோயிலை வலம் செய்து, மெய்வகை உணர்ந்த விழுமியோர் நிறைந்து ஐவகையாய் நிலவிய அருகத் தானத்தில் அமைந்த சிலாதலத்தையும்

வழி நடத்தல்

தொழுது, இருவரும் அந்நகரெல்லை யைக் கடந்து அப்பாற் சென்றார்கள். மெல்லிய தென்றல் தவழ்ந்து நறுமணங் கமழும் ஒரு நண் மலர்ச் சோலையைக் கழிந்து வழிச் செல்லும் பொழுது அம் மெல்லியல் மாதின் வண்ணச் சீரடிகள் வருந்தி நோவுற்றன. கொடிபோன்ற இடைகள் வாடி வருந்தின. வெய்யோன் வெப்பத்தால் மெய் முழுதும் தளர்ந்து சோர்வுற்றது. இந்நிலையில் இருவரும் கண் ணெதிரே கண்ட ஒரு சோலையில் சென்று சிறிது இளைப்பாறிப் போக எண்ணினார்கள்.

காத வழி தூரம் நடத்தல்

அச் சோலையில் குளிர்ந்த நிழலில் இருந்து சிறிது நேரம் இளைப்பாறினார் கள். அப்பொழுது கண்ணகி தமது இனிய மழலை மொழிகளால், "மதுரை மூதூர் எங்கிருக்கின்றது" என்று தன் காதலனிடம் கேட்டாள். கோவலன் மிகவும் மனம் வருந்தி இதுவரையும் நாம் ஒரு காத வழி வந்துவிட்டோம். இன்னும் முப்பது காதம் இருக்கின்றது என்று மொழிந்தான்.

அச் சோலையின் ஒரு பக்கத்தில் கவுந்தியடிகள் என்னும் பெரியார் தவஞ்செய்து கொண்டிருந்தார்.

கவுந்தி யடி களைக் காணுதல்.

அப்பெரியாரைக் காதலர் இருவரும் கண்டு வணங்கினார்கள். அவர்களைக் கண்ட அடிகள் வியப்படைந்து, "அழ கும் குலமும் ஒழுக்கமும் வாய்ந்த நீங்களிருவரும் துன்பத்தால், நலிந்தாரைப்போல வீட்டைவிட்டு வெளியேறியதற்குக் காரணம் என்னை", என்று கேட்டார். அதற்குக் கோவலன், "ஐயனே,

பொருள் தேடும்பொருட்டு மதுரைமா நகரத்திற்குச் செல்கின்றோம்" என்று சுருக்கமாகப் பதிலுரைத்தான். இதைக் கேட்ட கவுந்தி யடிகள், "ஐயோ! மதுரைமா நகரத்திற்கு இன்னும் நாட்டு வழியாகவும் காட்டு வழியாகவும் நெடுந்தூர மிருக்கின்றதே; வழியில் நிறைந்து கிடக்கும் கல்லும் முள்ளும் இம் மாதின் மெல்லிய கால்களில் உறுத்துமே. இம் மெல்லியல் மாது அவ்வழியை எவ்வாறு கடக்கப் போகின்றாள்?

**கவுந்தியடிகளும் மதுரைக்குப் புறப்படல்**

ஆயினும் ஊழ்வினைப் பயன் யாதோ? அதை யார் அறிவார்" என்று சொல்லி வருந்தினார். பின்னர் இருவரையும் பார்த்து, "நானும் செந்தமிழ்ப் பயிலும் மதுரையில் சென்று அறவுரை கேட்கும் ஆர்வமுடையேன். ஆகையால் நானும் உங்களுடன் வருகிறேன்" என்று மொழிந்தார். இந் நற்செய்தியைக் கேட்டு மனம் மகிழ்ந்த கோவலனிடம் கவுந்தியடிகள் மதுரைக்குச் செல்லும் வழியிலுள்ள துன்பங்களை யெல்லாம் எடுத்துரைத்தார்.

"நாம் போகின்ற வழியில் கண்ணெடுத்துப் பார்க்க முடியாத வெயில் எரிக்கும். வெயிலுக்குப் பயந்து சோலை வழியே செல்வோமென்றால் அங்கு வள்ளிக் கிழங்கை அகழ்ந்து எடுத்த பெருங்குழிகளை செண்பக மரங்களினின்றும் உதிர்ந்தமலர்கள் நிறைந்து மறைத்து வைத்திருக்குமாதலால் அவற்றை அறியாது செல்வோமானால்

**வழியிலுள்ள வருத்தங்கள்**

குழிகளில் விழுந்து மீளாத் துன்பமடைவோம். அக்குழிகள் இருக்குமிடந்தெரிந்து ஒதுங்கிச்செல்வோமானால் தணிந்த கிளைகளில் முற்றிப் பழுத்துத் தேன்

ஒழுகும் பலாப்பழங்கள் பகைவர்போல வழியைத் தடுக்கும். அம்மாக்கிளைகளையும் விலகிப் போவோமெனில் பாத்திகளில் முளை கிளம்பி இலைச்சருகுகளால் மறைந்திருக்கும் மஞ்சள் முளைகளும், பலாக்கனியினின்றும் வெடித்து விழுந்த பலாக்கொட்டைகளும் காலில் உருத்தி வருத்தும்.

நிலப்பாதை

இந்த நிலப்பாதையை விட்டு வயல் வழியாகப் போவோமென்றால் அங்கு மீன் தின்பதற்காகத் திரியும் நீர்நாயின் தோற்றத்தையும், பெரும் கயல் மீன்கள் அங்குமிங்கும் புரள்வதையும், வாளை மீன்கள் விரைவாகப் பாய்வதையும், மலங்குகள் மிளிர்வதையும் கண்டு இம்மாது கலங்குவாள். அன்றியும், காட்டிலுள்ள கரும்புகள் முற்றி வெடித்தலால் அவற்றின் தேன் மருங்கிலுள்ள நல்ல நீரோடு கலந்து நிற்கும். அதனை அறியாமல் நீர் வேட்கையால் அத்தேன் கலந்த நீரை நாம் பருக நேரினும் நேரும். அன்றியும், வயல்களின் வரப்புகளில் குவளைப் பூக்களை உழவோர் களையாகப் பறித்துப் போட்டிருப்பார்கள். அவ்வரப்பின் வழியே செல்லும் பொழுது அக்குவளை மலர்களின் மதுவை உண்ணும் பொருட்டுத் தங்கியிருக்கும் வண்டுகளின்மேல் நாம் கால்வைத்து நடத்தலால் அவை வருந்தி இறக்கவும் கூடும்.

வயற்பாதை

அவ்வழியாகச் செல்லாமல் கால்வாய்க் கரை வழியே செல்வோ மென்றால், அங்குள்ள நண்டும் நந்தும் நம் முன்னால் ஓடி ஒளிக்கின்ற நிலையில் நாம் அவற்றை மிதித்து நசுக்கி விடவும் கூடும். இதுகாறும் கூறிய சோலை வழியும் வயல் வழியும் அல்லாது மது

கால்வாய்ப் பாதை

ரைக்குச் செல்ல வேறு வழியுமில்லை. ஆகையால், நான் கூறிய இடங்களைக் குறிப்பாயறிந்து ஒரு உயிர்க்கும் கேடு செய்யாமல் நாம் வழிச் செல்லவேண்டும் என்று கவுந்தியடிகள் கூறினார்.

## 5-வது அதிகாரம்

### நாட்டுவழியும் காட்டுவழியும்

இவ்வாறு அடிகள் கூறக்கேட்டு ஒருவாறு மனந் தெளிந்து மூவரும் மதுரைமாநகர் நோக்கிச் சென்றார்கள். செல்லும் வழியில் காவிரியாற்றின் நீர் வெள்ளமாகப் பெருகி கடல் நீரோடு எதிர்த்துத்தேங்கி ஒலித்தது ஒரு புறம்: செந் நெல்லும் கரும்பும் செழித்து நிறைந்த வயல்கள் சூழ்ந்த தடாகங்களில் அழகுற மலர்ந்த தாமரையின் இனிய காட்சி ஒருபுறம்: அன்னமும் கொக்கும், கோழியும் நாரையும், உள்ளும் ஊரலும், புள்ளும் புதாவும், போர் செய்து ஒலிக்கும் ஆரவார ஒலிகள் ஒரு புறம்: ஆகமும் தோளும் தொழிலில் தோய்ந்து களைபறிப்போர் கள்ளுண்டு களித்து மது மயக்கத்தால் மகிழ்ந்து பாடிய பாட்டொலி ஒரு புறம்: குவளை மலரையும் அருகம் புல்லையும் அடுக்கடுக்காய்த் தொடுத்த மாலையை மேழியில் அணிந்து நிலத்தைப் பிளப்பாரைப்போல உழுகின்ற உழவோர் பாடும் ஏர் மங்கலப் பாட்டின் முழக்கம் ஒருபுறம்: முற்றிய கதிரை அறுத்துக் களத்திலிட்டு நெல்லைக் குவித்து அளப்பவர்கள் பாடும் முகவைப் பாட்டின் முழக்கம் ஒருபுறம். இவ்வோசை

வழி நடத்தல்

களையும் ஒலிகளையும் ஒன்றன் பின் ஒன்றாய்க் கேட்டு மூவருக்கும் வழி நடந்த வருத்தம் நீங்கியது. பின்னும் அப்பால் செல்லும்பொழுது அருமறை அந்தணரது மாட மாளிகைகள் வேள்விச்சாலையின் புகையாற் சூழப்பட்டு மஞ்சு சூழ்ந்த மலைபோல மாண்புறத் தோன்றின. இன்னும் இரப்போர் சுற்றத்தையும் இறையவன் கொற்றத்தையும் காத்து உழவு தொழிலால் உலகோர்க்கெல்லாம் உணவளிக்கும் வேளாளர் வாழ்ந்த ஊர்களையும் கடந்து சென்றார்கள்.

அருகசமயச் சாரணர்

இவ்வாறு மெல்ல மெல்லச் செல்லும்பொழுது ஒரு நாள், வேலி சூழ்ந்த ஒரு சோலையில் தருமஞ் சாற்றும் அருகசமயச் சாரணர் ஒருவர் தோன்றினார். அவரைக் கண்ட கவுந்தியடிகள் முடியுற அடியில் வீழ்ந்து முறையாக வழிபாடு செய்தார். அச்சாரணர் அடிகளைப் பார்த்து, 'வினையின் பயன் வந்தே தீருமென்றும் மக்கள் உடம்பானது கடுங்காற்றுள்ள நெடுவெளியில் ஏற்றப்பட்ட ஒளி விளக்குப்போல நில்லா தொழியுமென்றும். எண்ணரும் குணங்களையுடைய இறைவன் அருளிய மறையின் ஒளியைப் பெற்றாலல்லது பிறவியாகிய சிறையினின்று வெளியேற முடியாதென்றும் உண்மை மொழிகளை உள்ளம் கொள்ளக் கூறினார். இவ்வுறுதி மொழியைக் கேட்ட கவுந்தியடிகள் உச்சி மேற் கை கூப்பி, "ஐயனே! இறைவன் திருமொழியைக் கேட்பதற்கு என் செவி திறக்குமே யல்லாமல் வேறொன்றிற்கும் திறக்கமாட்டாது. இறைவனது எண்ணிறந்த குணங்களை எடுத்து மொழிவதற்கல்லாமல் வேறொன்றிற்கும் என் நாவெழ மாட்டாது. இறை

வனது இணையடிகளைக் காண்பதற்குத் திறக்குமே யல்லாமல் என் கண் வேறொன்றிற்கும் திறக்க மாட்டாது.

திருவங்க மாலை பாடுதல்

என் பயனற்ற அங்கங்கள் அறவாழி அந்தணனைத் தொழுவதற் கல்லால் வேறொன்றிற்கும் பூமியில் பொருந்த மாட்டா. என்னிரு கரங்களும் இறைவனை வழிபடும் பொருட்டுக் குவிவதல்லால் வேறொருவர் பொருட்டுக் குவிய மாட்டா. என் தலையானது மலர்மிசை நடந்த மலரடியை யல்லது மற்றொன்றையும் அணியமாட்டாது. என் மனம் இறைவன் அருளிய மறைமொழியை நினைந்து நினைந்து குழைவதல்லால் வேறொரு மொழியை ஓதி உருகமாட்டாது என்று இறைவனது திருவடிகளுக்குப் புகழ்மாலை பாடித்தொழுதார். இவ்வாறு கவுந்தியடிகள் இசைத்த புகழ் மாலையைக் கேட்ட சாரணர் அவரது பாசம் கெடுமாறு அருள் செய்து அந்தர வழியால் விரைந்து சென்றனர். சாரணர் சொற்களைக் கேட்ட மூவரும் பணிந்து நின்றார்கள்.

அப்பால், காவியாற்றைக் கடந்து தென்கரை சேர்ந்து அங்கு மலர்கள் நிறைந்து மணங்கமழ்ந்த ஓர்

காமுகர் இருவர்

பூம் பொழிலைச் சேர்ந்தார்கள். அங்கு சிறிது இளைப்பாறும்பொழுது எதிரே கழிந்த காம மகள் போன்ற ஒரு கணிகையும் அவள் துணைவனும் வந்தார்கள். அவர்களிருவரும் கோவலனையும் கண்ணகியையும் கண்டு மயங்கி காமனும் அவன் மனைவியும் போன்ற இவர்கள் யாரென்று அறிய ஆசைகொண்டு கடுந்தவத்தால் உடல் மெலிந்த கவுந்தியிடம் சென்றார்கள். அவரைப்

பார்த்து அடிகளே உம்முடன் இருக்கின்ற இவ்விருவரும் யாவர் என்று கேட்டார்கள். அதற்கு அடிகள் இவர்கள் இருவரும் என்னுடைய மக்கள். வழிநடந்த வருத்தத்தால் மனம் வருந்தி யிருக்கின்றார்கள். அவர்களிடம் ஒன்றும் பேசாமல் விலகிப்போமின் என்று அருளினார். இதைக்கேட்ட காமுகர் அறிவாற் சிறந்த

*அவர் கண்ணகியையும், கோவலனையும் பரிகசித்தல்*

அருந்தவத்தோரே! ஒரு வயிற்றில் பிறந்த ஆணும் பெண்ணும் காதலனும் காதலியுமாக வாழலாமென்று நீர் கற்ற எந்த நூலாயினும் கூறுகின்றதோ சொல்லுமென்று கேட்டனர். இத் தீமொழியைக் கேட்டதும் மெல்லியல் வாய்ந்த கண்ணகி நடுங்கித் தன் செவிகளை பொத்திக்கொண்டு காதலன் முன்னே கலங்கி நின்றாள். இதைக்கண்ட கவுந்தியடிகள் கற்பிற் சிறந்த இப்பூங்கொடியை இக்காமுகர் இகழ்ந்தார்களே யென்றெண்ணி மனம் வருந்தி அவ்விருவரையும் பார்த்து, "நீர் இம்முள்ளுடைக் காட்டில் முது நரியாகுக" என்று சபித்தார்.

*கவுந்தியடிகள் சாபத்தால் இருவரும் நரியாதல்*

அது தவத்தின் மிக்கவர் சாபமாதலால் அப்பொழுதே பலித்து இருவரும் நரியாகி நீண்ட குரலோடு ஊளையிட்டதைக் கேட்டுக் கண்ணகியும் அவள் காதலனும் நடுங்கி அடிகளைப் பார்த்து,

"நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்
அறியாமையென்று அறியல் வேண்டும்
செய்தவத்தீர்; நும் திருமுன் பிழைத்தோர்க்கு
உய்திக்காலம் உரையீரோ."

என்று வேண்டினார்கள். அடிகளும் அன்பர் வேண்டு கோளுக்கிரங்கி இந்நரியார் இருவரும் உறையூர் மதிற் புறம் ஓர் ஆண்டு துன்பம் உழந்து பின்னர் முந்திய பிறப்பைப் பெறுவார்கள் என்று சாபவிடை செய்தார்.

சாபவிடை

அதன் பின்னர் மூவரும் பின்னும் வழி நடந்து மாலைப்பொழுதில் உறையூரின் கண் வந்து சேர்ந்தார்கள். அங்குப் பூமலி அசோகின் புனை நிழலமர்ந்த அறிவனை வணங்கி அருகசமய இல் லறத்தார் வாழ்ந்த இடத்தில் இராப்பொழுதைக்கழித் தார்கள். பொழுது புலரு முன்னமே உறையூரை விட்டகன்று தென்திசையை நோக்கிச் சென்றார்கள். அப்பொழுது மாடமதுரையில் அரசாண்ட மன்ன வனை வாழ்த்திக்கொண்டு ஒரு மாமுது மறையோன் அவ்வழியே வந்தான். கோவலன் அவனைப் பார்த்து ஐயனே, உமது ஊர் யாது? நீர் எங்கிருந்து வருகின்றீர் என்று கேட்க, அவன் நான் மாங்காடென்னும் ஊரி லுள்ளவன். வரும்பொருளுரைக்கும் வன்மையுடை யவன். ஆயிரம் தலையுடைய ஆதி சேடன்மேல் அமரர்கள் தொழுதேத் தும் வண்ணம் அறிதுயில் கொள் ளும் அஞ்சன வண்ணனது அழகிய கோலத்தையும், தன் அழகிய கையில் ஆழியும் சங்கும் ஏந்தி மணியாரத்தை மார்பில் பூண்டு பொலம்பூவா டையில் பொலிந்து தோன்றும் செங்கண் நெடியோன் நின்ற கோலத்தையுங் கண்டு மகிழும் பொருட்டு இந்நாட்டிற்கு வந்தேன். பாண்டிய நாட்டின் மன்ன வனது பெருஞ் சிறப்பையும் அருஞ்செயலையும்

மதுரையி னின்றும் வந்த மறையவன்

என் கண்குளிரக் கண்டேன். ஆதலால் அவன் புகழை வாயார வாழ்த்தினேன் என்று கூறினன். அதுகேட்ட கோவலன் இம்மறையவன் மதுரைமா நகரிலிருந்து வருகின்றமையால் அவ்வூருக்குச் செல்ல நல்ல வழியைச் சொல்லுவான் என்று துணிந்து அவனிடம் மதுரைமா நகர்க்கு வழி கேட்டான். மறையவன் கோவலனை நோக்கி, "ஐயா, சூரியனுடைய வெம்மை சிறிதும் பொறுக்க முடியவில்லை. இவ் வெப்பத்திற்கு ஆற்றாது இயற்கையும் நிலைகுலைந்து நிற்கின்றது. மரமும் செடியும் செழித்து வளரும் மலைநாடும், புல்லும் கொடியும் படர்ந்து நிற்கும் முல்லைநிலமும் பாலை நிலம்போலப் பாழாகத் தோன்றுகின்றன. இக்கொடிய வேனிற் காலத்தில் இளங்கொடிபோன்ற இப் பெண்ணோடு இங்கு வந்தீரே. பாரையும் பருங்கல்லும் பேய்த் தேரையும் நிறைந்த இக்காட்டு வழியைக் கடந்துபோய் கொடும்பாளூர் நெடுங்குளம் என்னும் இரண்டு ஊர்களுக்கும் மத்தியிலுள்ள ஏரிக்கரையைக் கழிந்து சென்றால், வழிச்செல்வோர் மயங்கும்படி சூலாயுதம் போன்று மூன்று கவராகப் பாதை பிரியும். வலது பக்கமாய்ப் பிரிந்து செல்லும் வழியேபோனால் வெண் கடம்பும் வாழையும் மூங்கிலும் கரிந்து கிடக்கும். அது கடத்தற்கரிய ஓர் அருங்காடாகும். அதனைக் கடந்து அப்பால் சென்றால் வெள்ளிய நெல்லும் முதிர்ந்த கரும்பும், மஞ்சளும் தினையும், வாழையும் கமுகும், மாவும் பலாவும் சூழ்ந்து செழித்தோங்கிய சிறுமலை என்னும் குன்று விளங்கித் தோன்றும். அம் மலையில் அருகே

மதுரைக்கு மூன்று வழிகள்

யுள்ள வழியே சென்றால் மதுரை சேரலாம்."

"இவ்வாறு வலது பக்கம் செல்லாது இடது பக்கம் சென்றால் வண்டுகள் இசைபாடும் தடாகங்களும் வயல்களும பூஞ்சோலைகளும் கடந்து அதற்கப்பாலுள்ள காட்டுவழியையும் கழிந்துசென்றால் திருமால் குன்றம் சேரலாம். அக்குன்றத்தில் பூமிக்குள்ளே செல்லும் ஒரு வழியுண்டு. அவ்வழியே சென்றால் மூன்று தடாகங்கள் விளங்கித் தோன்றும். அம் மூன்றில் ஒரு தடாகத்தில் மூழ்கினால் இந்திரன் இயற்றிய நூலின் நுணுக்கம் உணரலாம். மற்றொன்றில் முழுகினால் பழம்பிறப் புணரும் பான்மை அடையலாம். மூன்றாவது குளத்தில் முழுகினால் எண்ணிய கருமங்கள் எண்ணியவாறே எய்தப் பெறலாம். இப் பாதாள வழியில் செல்ல விருப்பமில்லையாயின் அத் திருமலையின்கண் எழுந்தருளியிருக்கும் திருமாலைத் தொழுது, அம்மலையை மும்முறை வலம் செய்தால் ஒரு தேவதை முன்னால் தோன்றி இம்மை மறுமை இன்பங்கள் எவையென்று கேட்கும். அவ் வினாவிற்குப் பதிலுரைத்தால் ஓர் கதவைத் திறந்து நல்ல வழியைக் காட்டும். அவ்வழியே சென்றால் இரண்டு கதவை உடையதோர் வாயில் காணப்படும். அவ் வாயிலுக்கப்பால் பூங்கொடி போன்ற ஒரு மாது தோன்றி ஈறில்லாத இன்பம் யாதென்று கேட்கும். அதற்குச் சரியான மாற்றம் உரைத்தால் முன்னே கூறிய மூன்று பொய்கையில் கொண்டு சேர்த்து அவற்றின் தன்மையை உரைத்துப் போகும். அவ் வினாவிற்கு

மறுமொழி சொல்ல இயலாமற் போயினும் யாதொரு துன்பமும் செய்யாது வழிப்போக விட்டுவிடும். அப் பொய்கைகளில் ஐந்தெழுத்தையாயினும் எட்டெழுத்தையாயினும் அன்போடு ஒரு முறை ஓதி ஒரு பொருளை நினைத்தால் அது உடனே வந்தடையும். இப்பொய்கையின் பயனை விரும்பாமல் மலைமீது நின்ற திருமால் திருவடிகளை நினைந்தால் அப் பெருமான் திருவடி நிழல் அடையலா மென்னும் உறுதியுடன் மாண்புடைய மதுரை சேரலாம். மேற்கூறிய இருவழிகளிலும் செல்லாமல் மத்தி வழியே சென்றால் அது மிக நல்ல வழியாய்த் தோன்றும். அதன்கண் இனிய சோலை சூழ்ந்த ஊர்களும், ஊர்களுக்கு மத்தியிலுள்ள காடுகளும், கடந்து சென்றால் வழியிலோர் தெய்வம் குறுக்கிடும். அது வழிச் செல்வோரைத் துன்புறுத்தித் தடுக்கும் தன்மையதன்று. ஆனால், நயவஞ்சகத்தால் தடுக்கும். அத் தெய்வதைத் தப்பிவிட்டால் மதுரைமா நகரத்தை எளிதிலடையலாம் என்று சொல்லி முடித்தான்.”

கவுந்தியடிகளும் இதனைக் கவனமாய்க் கேட்டு இம் மூன்று வழிகளில் எங்களுக்கு ஏற்ற வழியே நாங்கள் செல்கிறோம் என்று கூறி மறையவனிடம் விடைபெற்றுக்கொண்டு மேற்சொல்லிய மத்திய வழியாக மூவரும் சென்றார்கள்.

அவ்வாறு போகும்பொழுது நெடுந்தூரம் சென்றபின் தண்ணீர் தகையால் கோவலன் வருந்தி அருகே தோன்றிய ஓர் பொய்கையிடம் சென்றான். அவ்வி

வனதெய்வம் கோவலனை மயக்க முயலுதல்

டத்தில் முன் மறையோன் கூறிய வன தெய்வம் கோவலன் மேல் காதல் கொண்டு மாதவியின் தோழியாகிய வசந்தமாலையின் வடிவு பூண்டு பூங் கொடிபோன்று அவன் அடிகளில் விழுந்து பொய்க் கண்ணீர் பெருக்கிற்று. பின்பு எழுந்து நின்று கோவலனைப் பார்த்து, "ஐயனே, மாதவியின் திரு முகத்தை நீர் மறுத்த செய்தியை அவள் கேட்டு மனங் கலங்கித் துன்புற்று என் முன்னே மயங்கி விழுந்தாள். செவ்வரி படர்ந்த அழகிய கண்களினின்றும் முத்துப் போன்ற கண்ணீர் சொரிந்தாள். தன் மார்பில் அணிந் திருந்த அழகிய முத்தாரத்தை வெறுத்து இழுத்து முத்துக்களை யெல்லாம் சிதறிவிட்டாள். ஒருநாளும் நீக்காத என்னையும் வேலையினின்றும் நீக்கிவிட்டாள். இப்பொழுது தனியாய் நான் துயரப்படுகின்றேன். ஆதரவற்ற எனக்கு அருள் செய்யவேண்டும்" என்று பணிந்து கேட்டது. இதைச் செவியுற்ற கோவலன், மதியை மயக்கும் ஓர் மாயத் தெய்வம் இக் காட்டில் உண்டென்று மறையவன் கூறினனே; அத் தெய்வம் இதுதானோ? என்று ஐயுற்று ஓர் மந்திரத்தை மனதில் நினைத்தான். அம் மந்திர வலிமைக்கு ஆற்றாத வன தெய்வம், அஞ்சி நடுங்கிக் கோவலனைப் பார்த்து, "ஐயனே! உன்னிடம் உண்மையைக் கூறிவிடுகிறேன். நான் இவ்வனத்தில் உறைகின்ற ஒரு சிறு தெய்வம். உன்னை விரும்பி மயக்கத் துணிந்தேன். நான் செய்த இப் பிழையை பொறுப்பதோடு இச் செய்தியை மாத வப் பெரியோராகிய அடிகளிடத்தும் மயில்போன்ற

சாயலேயுடைய உன் மனைவியினிடத்தும் சொல்லலாகாது" என்று வேண்டி வணங்கிச் சென்றது. பின்னர் கோவலன் தாமரை படர்ந்த அத் தடாகத்தில் தண்ணீர் கொண்டுவந்து தாகத்தால் அயர்வுற்ற தன் காதலியின் அருந் துயர் தீர்த்தான்.

அப்பால் வெய்யோன் கதிர்களின் வெம்மைக்கு ஆற்ருது மூவரும் குரவமும் கடம்பும், கோங்கும், வேங்கையும், விரவிய பூம்பொழில் சூழ்ந்த ஓர் காளி கோட்டத்தைச் சென்றடைந்தார்கள், பாலே நிலத்தின் வழியாய் நடந்து சென்ற பாவையின் பாதங்கள் வெப்பத்தால் சிவந்து நோவுற்றன. அவள் மெல்லிய மேனி வாடி வருந்தியது. அவ்விடத்தில் சிறிதுநேரம் இளேப்பாறியிருக்கையில், வில்லும் கையுமாக மறவர் குடியில் பிறந்த சாலினி யென்னும் மறப்பெண் தோன்றினுள். அவள் தெய்வமுற்று ஆவேசமாகி ஊர் நடுவேயுள்ள மன்றத்தில் அடி பெயர்த்து ஆடத் தொடங்கினுள். அங்கு நிறைந்து நின்ற தன் குல மக்களேப் பார்த்து தேவிக்கு முன்பு சொல்லிய பலியைக் கொடாமையால் மறக்குடி தாழ்ந்தது, மறவரும் வளம் குன்றி வீரம் குறைந்து செருக்கடங்கி விட்டார்கள். நீங்கள் செழித்து வாழ விரும்பினுல் தேவிக்குச் செலுத்தவேண்டிய கடனே விரைவில் செலுத்துங்கள்" என்றி சாலினி சொன்னுள். இதைக் கேட்ட மறவர் தெய்வமுற்ற அம் மாதின் சடையை முடித்து, பன்றிக் கொம்பைப் பிறையாகச் சாத்தி,

காளி கோட்டத்தில் இளேப்பாறுதல்

புலிப் பல்லை ஒழுங்காகக் கோத்துத் தாலியாகக் கட்டி புலித்தோலை ஆடையாக அணிந்து கருவில்லைக் கையில் கொடுத்து, முறுக்குக் கொம்பை யுடைய ஆட்டின்மேலேற்றி, கோழி யும் மயிலும், பந்தும் கழங்கும் காணிக்கையாகக் கொடுத்து, வண்ணமும் சுண்ணமும் பூவும் புகையும் சோறும் எள்ளுருண்டையும் கொண்டு ஏவலாளர் பின்னே வர, கொட்டும் பறையும், சின்ன மும் மணியும், குழலும் கொம்பும், ஒன்றாய் ஒலிப்பத் தெய்வத்தைத் தொழுது வணங்கினார்கள். அம் மாது மறுபடியும் ஆவேசம் உற்று கண்ணகியைப் பார்த்து இவள் கொங்க நாட்டை ஆளும் செல்வி; குடநாட்டை ஆளும் செல்வி; செந்தமிழ் நாட்டை ஆளும் சீரி யாவை; முற்பிறப்பில் தவம் செய்த தவக்கொழுந்து; ஒரு மாமணியாய் ஓங்கிய திரு மாமணியென்று பல்வாறு போற்றி யுரைத்தாள். இப் புகழுரையைக் கண்ணகி கேட்டு நாணுற்று, தெய்வ மயக்கத்தால் அவள் இவ்வாறு கூறினாள் என்று கருதி தன் கணவன் பின்னே சென்று மறைந்து, சிறுநகை செய்தாள். இவ் வாவேசக் கோலமும் கூத்தும் முடிந்தவுடன், கோவலன் கவுந்தியடிகளைப் பார்த்து இம் மெல்லியல் மாது பகலின் வெம்மையைப் பொறுக்கமாட்டாது வருந்துகின்றாள். அவளது மெல்லிய அடிகளும் கல் நிறைந்த இப் பாலை நிலத்தில் பொருந்தவில்லை. ஆகையால் இனி, பகற்பொழுதில் வழி நடத்தலை விட்டு நிலாப்பொழுதில் நாம் நடந்தால் நல மாகும். செங்கோல் மன்னனாகிய பாண்டியன் ஆளும்

ஆவேசக் கோலம்

நாட்டில் இராப்பொழுதில் எதற்கும் அஞ்சவேண்டாம். அம்மன்னவன் நாட்டில், புலியும் புல்வாயும் ஒத்து வாழும். பாம்பு மிதித்தாரையும் கடிக்கமாட்டாது. ஆகையால் இரவில் நாம் பயமின்றிப் போகலாம் என்றான். அதற்கு அடிகளும் இணங்கினர்.

குளிர்ந்த கதிர்களையுடைய சந்திரனும் விண்ணிலே விளங்கித் தோன்றினன். கற்பரசியாகிய கண்ணகியின் மீது வீசிய வெண்ணிலாவைக் கண்டு மனமிரங்கி, "ஐயோ பாவாய்! முன்னாள் இளவேனிற் காலத்தில் அழகிய முத்தாரமும் சந்தனக் குழம்பும் உனது அழகிய ஆகத்தில் சேராது ஒழியவும், நறுமணங் கமழும் நல்ல மலர்மாலைகள் உன் கருங் கூந்தலில் பொருந்தா தொழியவும், சந்தனத் தளிரொடு மலர்களின் இதழ்களும் உன் செந்தளிர் மேனியைச் சேரா தொழியவும், வாழ்ந்துவந்த நீ, இம் முதுவேனிற் காலத்தில் மதுரைத் தென்றலில் மகிழ்ந்து இவ் வெண்ணிலாவின் கதிர்களை விரும்பி யிருக்கின்றாயே" என்று வருந்தி நிலமகளும் கண்ணயர்ந்து நித்திரை போயினாள். வழி நடந்த வருத்தத்தால் துயர்

**மூவரும் இரவில் வழிநடத்தல்**

உழந்த கண்ணகியைக் கோவலன் நோக்கி, "என் கண்மணீ! இவ்விரவில் நாம் போகும் வழியில், புலி குறுக்கிடும்; ஆந்தை அலரும்; காடி இடிபோல் முழங்கும்; இவற்றால் நெஞ்சு பதாமல் வழி நடக்க வேண்டும்" என்று ஏங்கிக் கூறினன். தொலையாத வழிநடந்து கால்தளர்ந்த கண்ணகியும் தூக்கம் கண்ணை மயக்க, துன்பம் நெஞ்சை வருத்த, தன் கணவன்

தோளில் கையை வைத்துக்கொண்டு வழி நடந்தாள். கானலால் கரிந்து கிடந்த அம்மூங்கில் காட்டில் காட்டுக் கோழிகள் கூவி விடியற்காலப் பொழுதை அறிவித்தன. அதன் அருகே அருமறை அந்தணர் வாழ்ந்த ஒரு சிற்றூர் தோன்றிற்று. அவ்வூரின் புறத்தேயுள்ள ஆலயத்தின் அருகே அடிகளையும் கண்ணகியையும் வைத்துவிட்டு கோவலன் பக்கத்திலிருந்த ஒரு குளத்திற்குச் சென்றான். இவ்வாறு தனியே குளம் நோக்கிச்செல்லும் பொழுது கோவலன் தன் காதலி தனக்காக முன்னர் அடைந்த துயரங்களையும், பின்னர் கானகத்திலடைந்த கடுந்துயரங்களையும் எண்ணி எண்ணி மனம் வெதும்பி நிறம் வேறுபட்டு, அக்குளத்தின் கரையில் நின்றான்.

அங்கு மாதவியால் தூதாக அனுப்பப்பட்ட கௌசிகன் என்னும் மறையவன் மறைந்து நின்று சிறிது நேரம் பார்த்து, அவன் கோவலன் தானோ வென்று ஐயுற்று, பின் அவன்தானென்று தெளிந்து, கோவலனை நோக்கி, “ஐயனே! உம்மைக் காணாத தந்தையும் தாயும் அருமணி இழந்த நாகம்போல் ஆறாத் துயருற்று வருந்துகின்றார்களே, உமது நெருங்கிய சுற்றத்தாரெல்லாம் உயிரிழந்த உடல்போலச் செயலற்றுத் துயர்க்கடலில் அழுந்தியிருக்கின்றார்கள். உமது தந்தையார் எல்லாத்திசைகளிலும் ஏவலாளரைப் போக்கி உம் இருப்பிடம் அறிந்துவர அனுப்பியுள்ளார். புகார் நகரமெல்லாம் இராமன் நீங்கிய அயோத்திபோல பெருந்துயர் அடைந்தது. மாதவியும் தானனுப்பிய

மாதவியின் தூதுவன்

திருமுகத்தை நீ மறுத்துக் கூறிய மொழிகளை வசந்தமாலை வாயிலாக அறிந்து, பசந்த மேனியளாய், படர் நோயுற்று, உம்மையே நினைந்து, நலிந்து, மாடத்தி லுள்ள கட்டிலில் மயங்கி விழுந்தாள். இவ்வாறு துயருற்ற மாதவி உமது இணையடி தொழுது தன் மலர்க் கையால் ஓர் அழகிய ஓலையில் எழுதி இதனை என் கண்மணி அனையானுக்குக் காட்டுக என்று சொல்லி என் கையில் கொடுத்தாள். நானும் இவ்வோலையைக் கையில் வைத்துக்கொண்டு நாடு நகரங்களெல்லாம் அலைந்து திரிந்தும் உம்மைக் காணப்பெறாது இன்று கண்டேன்" என்று சொல்லித் தன் கையிலிருந்த ஓலையைக் கோவலனிடம் கொடுத்தான். கோவலனும் அதனை வாங்கிப் படித்தான். அவ்வோலையில், "ஐயனே, உமது அழகிய திருவடிகளைத் திக்கு நோக்கித் தொழுகின்றேன். உமது தாய் தந்தையர்க்குச் செய்யும் பணிவிடைகளையும் மறந்து, குலக்கொழுந்தாகிய கண்ணகியுடனே பொழுது புலருமுன்னே புகார் நகரத்தினின்றும் புறப்படுவதற்கு நான் என்ன தவறு செய்தேன். நான் செய்த பிழையை அறியாது என் மனம் ஏங்கி வாடுகின்றது. என்ன குற்றமாயினும் பேதையாகிய மாதர் சொல் குற்றமற்ற சொல்லென்று திருவுள்ளம் பற்றவேண்டும். என் மனக்கவலையை விரைவில் மாற்ற வேண்டும்" என்று எழுதியிருந்தது. அதைப் படித்துணர்ந்த கோவலன் மனம் குழைந்து கௌசிகனைப் பார்த்து அவள் செய்த தீவினை யாதொன்றுமில்லை; எல்லாம் என் தீவினையே; எனக்காக அவள் வருந்துவதை விரைந்து சென்று தவிர்ப்பாய்; எனது மாசற்ற

தாய் தந்தையரது மலரடியைத் தொழுதேன்" என்று சொல்லி மறையவனை அனுப்பினன்.

அதன் பின்னர் கோவலன் கவுந்தி அடிகளும் கண்ணகியும் இருந்த இடம் போந்து, பகலின் வெம்மையால் வழி நடக்கமுடியாமல் அவ்விடம் மூவரும் அமர்ந்திருந்தார்கள். தொலையாத பகற் பொழுதைக் கழிக்கும் பொருட்டுக்கோவலன் அங்குப்பாடிக்கொண்டிருந்த பாணரோடு தானும் சேர்ந்து யாழைக் கையிலேற்று மிக இனிமையாய்ப் பாடினன். இன்னிசை முடிந்த பின்னர் மருங்கிலிருந்த மக்களிடம் இன்னும் மதுரைமாநகர் எவ்வளவு தூர மிருக்கின்றது என்று கோவலன் கேட்டான். அதற்கு அவர்கள் இதோ மதுரைத் தென்றல் வீசுகின்றது. இன்னும் மதுரைமாநகர்க்கு வெகுதூரமில்லை என்று கூறக்கேட்டு ஒருவாறு ஆறுதல் அடைந்து மூவரும் வழக்கம்போல் இரவில் வழிநடந்து சென்றார்கள். மதுரைக்கு அருகே வந்த பொழுது பிறவாத பெருமையையுடைய சிவபெருமான் கோவிலிலும், பெரும்பெயர் வாய்ந்த அரசனது

மதுரைமா நகரின் ஒலி

பெருமை சார்ந்த அரண்மனையிலும், காலை முரசங்கள் அதிர்த்து ஒலித்தன. நான்மறை பயின்ற அந்தணர் நவின்ற மறையின் ஒலியும், மாதவர் ஓதிய மந்திர ஒலியும், மங்கலமாக ஒலித்தன. இன்னும் யானைகள் முழங்கும் ஒலியும், புரவிகள் போரை நினைந்து ஆலிக்கும் ஒலியும், மருத நிலமக்கள் காலையில் கொட்டும் பறை ஒலியும், கடலொலிபோலக் காதில் பட்டபொழுது, முன்

னடைந்த துயரமெல்லாம் நீங்கி முன்போல மூவரும் களிகூர்ந்தார்கள்.

## 6-வது அதிகாரம்

### மதுரைமா நகரம்

இவ்வாறு மனங்களித்துச் செல்லும் வழியில், அழகிய மலர்களைப் பூவாடையாகவும், மலர்கள் நிறைந்து நெருங்கிப் படர்ந்த கொடிகளை மேகலையாகவும், நறுமணம் கமழும் முல்லை மலர்களை நல்லணியாகவும், எங்கும் ஓடித்திரியும் கயல் மீன்களை நெடிய கண்களாகவும், பல பொருள்களையும் விளைவித்து உலகம் காக்கும் உயரிய அருளையே நல்லொழுக்கமாகவும் கொண்டு விளங்கிய புலவர் பாடும் புகழுடைய வையை யென்னும் பூங்கொடியைக் கண்டார்கள். அவ்வையை யென்னும் பொய்யாக் குலக்கொடி கற்பரசியாகிய கண்ணகிக்குப் பின்வரும் துன்பத்தை முன்னறிந்தவள்போல, மெல்லிய மலராடையால் தன் மெய்முழுதும் போர்த்து நன்னீரை உள்ளடக்கிக் கொண்டு சென்றமையால் காதலர் இருவரும் அது புனலாறு அன்று பூவாறே என்று புகழ்ந்து தொழுதார்கள். இத்தகைய பெருமை வாய்ந்த வையை யாற்றை ஒரு மரப் புணையால் கடந்து தென்கரை சென்று பலரும் செல்லாத ஒரு சோலையில் தங்கினார்கள். தண்ணீர் நிறைந்த தடாகங்களிலுள்ள குவளையும், ஆம்பலும், கமலமும், காதலர் இருவருக்கும்

வையை ஆறு

வரப்போகின்ற துன்பத்தை முன் அறிந்து வருந்தினாற் போல, மெல்லிய காற்றில் அங்கு மிங்கும் அசைந்து நடுங்கின. வண்டுகள் இருவர் மீதும் இரக்கமுற்றாற் போலத் தமது பண்களைப்பாடிப்பரிந்து இரங்கியழு தன. மாடமாளிகைகளில் இளங்காற்றால் அழகுற அசைந்த கொடிகள் காதலர் இருவரையும் அந்நகரில் வரவேண்டாமென்று கையெடுத்துத் தடுப்பனபோலத் தோன்றின. இத்தகைய மதுரை மூதூரில் மூவரும் போந்து ஓர் புறஞ்சேரியை அடைந்தார்கள்.

**காலைப் பொழுது**

அங்குச் சோலைகளிலும் நீர்ப்பண்ணைகளிலும் வயல்களிலும் பறவைகள் துயிலெழுந்து ஆரவாரித் தன. தடாகங்களிலுள்ள தாமரை முகைகளை மலர் வித்து உலகமெல்லாம் தொழுதேத்தும் கதிரவன் மாடமதுரையைத் தூக்கத்தினின்றும் எழுப்பினான். முக்கண்ணனை முதல்வன் கோயிலிலும், திருமால் கோயிலிலும், பலதேவர் கோயிலிலும், அறுமுகன் கோட்டத்திலும், அற வோர் பள்ளியிலும், மன்னவன் மாளி கையிலும், வெண்சங்கங்களும் காலை முரசங்களும் அதிர்த்து ஒலித்தன. அப்பொழுது கோவலன் கவுந்தி யடிகளைக் கையால் தொழுது, "மாதவப் பெரியோய்! நன்னெறியினின்றும் நீங்கிப் புன்னெறியை மேற் கொண்ட நான், மெல்லிய மேனியையுடைய இம் மாது நடுங்கித் துயரமுறும்படி, கனவிலும் நினைத் தறியாத காடு வனமெல்லாம் அலைந்து திரிந்து துன்ப முற்றுச் சிறுமையுற்றேன். ஐயனே! இம் மாநகரத்தில்

நான் சென்று வருமளவும் என் காதலியைக் காத்தருளவேண்டும். தாம் என்னுடன் இன்னகர்க்கு வருவதாய் இசைந்த அன்றே கண்ணகி உமது காவலில் அமைந்தாள். இனி அம்மாதுக்கு என்ன குறையும் வராது" என்று கூறி மறுமுறையும் கைகூப்பித் தொழுதான். அதுகேட்ட அடிகள், "அன்பனே, முற்பிறப்பில் நல்வினை செய்த நீ, சிறிது தீவினையும் செய்தாய். ஆதலால் உனது பெரும் பொருளையும் பெற்றோர் உற்றோரையும் துறந்து காதலியோடு கடுந்துயர் அடைய நேர்ந்தது. கற்றுணர்ந்த பெரியோர் தீவினைப் பயனாகிய துன்பத்தை நுகரும் பொழுது மனம் வருந்தமாட்டார்கள். தாம் செய்த வினையின் பயனே என்று அறிந்து பொறுமையோடு தாங்குவார்கள். இவ்வுலகிலுள்ள பொருளும், மாதர் உறவும் சிறிது இன்பம் பயப்பனபோலத் தோன்றிப் பின் பெருந்துன்பம் விளைவிக்கும். இவ்வாறு உன்னைப்போல் துன்ப மடைந்தோர் முன் உலகிற் பலராவர். முன்னால், வேத முதல்வன் பயந்த திருமால் இராமனாக உலகில் வந்து தந்தை சொல்லைத் தலைமேல் தாங்கி தரணி துறந்து காதலியோடும் காட்டுக்குச் சென்று, அங்குச் சிலம் மிகுந்த சீதையை இழந்துபட்ட பாடெல்லாம் பழங் கதையன்றோ? இன்னும் பொன்னையும் மண்ணையும் சூதினால் இழந்து, காதலியோடு கடுங்கானம் சேர்ந்து, அங்குக் குற்றமற்ற தன் காதலியைக் காரிருளிற் கைவிட்டுத் துயரடைந்த நளனது கதையையும் நாம் நன்கு அறிவோமல்லவோ? இவ்

கவுந்தியடிகள் கோவலனைத் தேற்றுதல்

விருவரைப் பார்க்கிலும் உனக்கு நேர்ந்த துன்பம் குறையாகும். ஏனெனில், அவர்கள் இருவரும் தம் காதலியைப் பிரிந்து வருந்தினார்கள். நீயோ துன்பத் திலும் கண்ணகியைப் பிரியாது வாழும் பெருமை யடைந்தாய்; ஆதலால் நீ வருந்தாதே" என்று தேற் றினார்.

அடிகளது அருள் மொழிகளால் ஒருவாறு கோவ லன் ஆறுதலடைந்து மதுரைமா நகரைப் பார்த்து வரும் பொருட்டுப் புறப்பட்டான். அம்மாநகரத்தைச் சுற்றிப் பார்த்து அதன் அளவிறந்த வளங்களைக்கண்டு களித்தான். அரண்மனைகளில் ஆடலும் பாடலும் நிரம்பியிருந்தன. உயரிய மாடங்களில் உல்லாசமாய் வாழ்ந்த பொதுமாதர் தாம் காதலித்த காமுகரோடு நீர் விளையாட்டும் பொழில் விளையாட்டும் நிகழ்த்தி மகிழ்ந்தார்கள். மற்றும் நீலமணியும், வயிரமும், மரகதமும், மாணிக்கமும், முத்து வகையும், பவளவகையும், பொன்னும் பட்டும், நிறைந்த அழகிய வீதிகளையும், கூலம் குவித்த *கூல வீதிகளையும் கோவலன் கண்டு மகிழ்ந்தான். இக்காட்சிகளைக்கண்டு திரும்பிவந்து கவுந் தியடிகளிடம் தீதற்ற மதுரையின் சிறப்பையும், தென் னவன் பெருமையையும் கோவலன் எடுத்துரைத்தான்.

மதுரைமா நக ரின் சிறப்பு

அப்பொழுது மறை நான்கும் வல்ல மாடலன்

* கூல வீதி—கூலக்கடைத் தெரு...பல்சரக்கு கடைகளை உடைய தெரு. திருநெல்வேலியில் கூலக்கடைத் தெரு என்று பெயரமைந்த ஒரு தெரு இருக்கிறது. கூலக்கடைத் தெரு என்பதே வழக்காற்றில் இவ்வாறு மாறிவழங்குகின்றது.

என்னும் மறையவன் பொதியை மலையை வலம் வந்து குமரியாற்றில் நீராடித் திரும்பி வரும் வழியில் அவ்விடம் வந்து சேர்ந்தான். கோவலன் மறையவனை முன்னரே அறிந்தவனாதலால், முன்சென்று வணங்கினான். மாடலன் அவனது வாடிய முகத்தையும் வருந்திய உளத்தையும் கண்டு, "ஐயனே, யான் அறிய நீ இப்பிறப்பில் செய்தனவெல்லாம் நல்வினையா யிருக்க, இவ்வாறு இம் மெல்லியல் மாதுடன் நீ மாதுயர் அடைய நேர்ந்தது. முற்பிறப்பில் செய்த தீவினைப் பயனே" என்று ஏங்கி வருந்தினான். இதைக்கேட்ட கோவலன் மறையவனைப்பார்த்து, "அன்பனே, இன்று விடியற்காலத்தில் நான் ஒரு தீக்கனவு கண்டேன். இம் மதுரைமா நகரில் எனது காதலியாகிய கண்ணகி நடுங்கித் துயரம் உறுவதுபோலவும், நான் அணிந்திருந்த ஆடையைப் பிறர் பற்றிக் கவர்ந்துகொண்டது போலவும், பெரிய கொம்புகளையுடைய எருமையின்மீது நான் ஏறிப் போவதுபோலவும் பின் என் காதலியுடன் மேலுலகம் அடைவது போலவும், மாதவியின் மகளாகிய மணிமேகலை இவ்வுலக இன்பத்தைத் துறந்து மாதவக் கோலம் கொள்வதுபோலவும் கனவு கண்டேன்; அது விடியுமுன் கண்ட கனவாதலால் இப்பொழுதே பலித்துவிடும்" என்று கூறினான்.

கோவலன் மாடலனைச் சந்தித்தல்

கோவலன் கனவுரைத்தல்

இதைக்கேட்ட மாடலனும் அடிகளும் என்ன நேருமோவென்று ஏங்கிய உள்ளமுடையவராய் கோவலனைப் பார்த்து இப்புறஞ் சேரியிலிருப்பது இல்லறத்

தார்க்கு ஏற்றதன்று. ஆதலால் நீங்களிருவரும் மதுரைமா நகரினுள்ளே செல்லவேண்டுமென்று அருளினார். அப்பொழுது அவ்வழியாக ஆயர்குலத்திற் பிறந்த மாதிரி என்னும் முதுமகள் தன் குல தெய்வத்தை வழிபட்டு வந்து சேர்ந்தாள். மாதவப்பெரியோராகிய அடிகளைக் கண்டவுடன் மாதிரி வணங்கித் தொழுதாள். அம் முதுமகளை அடிகளும் நன்றாய் உற்று நோக்கி "பசுவை வளர்த்து அதன் பயனை யாவர்க்கும் அளிக்கும் இவ்வாயருடைய வாழ்க்கையில் யாதொரு தீமையுமில்லை. இம் முதுமகள் தீதற்ற தன்மை அமைந்தவளா யிருத்தலால் இவளிடம் கண்ணகியை அடைக்கலமாக வைத்துப் போவது பொருத்தமுடையதாகும்" என்று எண்ணி

கண்ணகியை மாதிரியிடம் அடைக்கலமாக கொடுத்தல்

மாதிரியைப் பார்த்து, "மாதே! இதோ நிற்கின்ற பெண்ணின் கணவனது தந்தை பெயரைக் கேட்டால், இந்நகரில் வாழும் வணிகர் யாவரும் பெறுதற்கரிய பேறு பெற்றாற்போல இருவரையும் போற்றி மகிழ்வார்கள். அவ்வாறு இவர்கள் இருவரும் பெருஞ்செல்வரது மனையகத்தே செல்லுமளவும் இக் குலக்கொடியை உனக்கு அடைக்கலமாகத் தந்தேன். நீயே அவளுக்குத் தாயும் தோழியுமாக அமைந்து, நல்ல நீரில் அவளை மூழ்குவித்து, கண்களில் மையெழுதி கருங்கூந்தலில் நறுமலர் சூடி, மலினமற்ற நல்லாடையை அணிந்து, போற்றிப் பாதுகாப்பாயாக. இம் மாது இதற்குமுன் தன் வீட்டை விட்டு அடிபெயர்ந்து அறியாதவள். வழியில் கதிரவன் வெம்மை

கவுந்தியடிகள் கண்ணகி கற்பின் பெருமை கூறல்

யால் தானடைந்த துயரத்தைச் சிறிதும் சிந்தியாமல் தன் காதலன் மேனி, வாடி வருந்தியதென்று நடுங்கித் துயரமுற்ருள். இத்தகைய கற்புடைய தெய்வத்தை அல்லது வேறு பொற்புடைய தெய்வத்தை நான் கண்டிலேன். கற்புடைய மங்கையர் வாழும் நாட்டில், வானம் பொய்யாது, வளம் எந்நாளும் பிழையாது, வேந்தனது கொற்றம் சிதையாது என்று அடிகள் கூறினர். இது கேட்ட முதுமகள், கண்ணகியை அடைக்கலப் பொருளாகக் கொள்ள இசைந்து அவ் வழகிய நங்கையைக் கூட்டிக் கொண்டு மாலைப்பொழுதில் தன் மனை புகுந்தாள். அங்கு வேலி சூழ்ந்த காவலையும் குளிர்ந்த பூம்பந்தலையும் உடைய செம்மண்ணுல் பூசப்பெற்ற சிறிய ஓர் இல்லத்தில் கண்ணகியை அமைத்தாள். அங்குள்ள ஆய்ச்சியர் சிலரைக் கூவியழைத்து கண்ணகியை நல்ல

கண்ணகி மாதிரியின் மனையில் தங்குதல்

நீரில் முழுகச் செய்தாள். தன் மகளாகிய ஐயை என்பவளைப் பணிப்பெண்ணுக நியமித்தாள். கண்ணகியைப் பார்த்து, "அழகிய நங்காய்! உன்னை நான் பொன்போல் போற்றிக் காப்பேன். நீ எதற்கும் அஞ்சவேண்டாம்; வழியில் நேர்ந்த துயரமெல்லாம் நீக்கி ஏதமற்ற இவ்விடத்தில் உன்னைக் கொண்டு சேர்த்த கணவனுக்கு இனி யாதொரு கவலையுமில்லை," என்று சொல்லித் தேற்றினுள். மற்றைய இடைக்குல மாதர்கள் பாகற்பழமும் வெள்ளரிக்காயும் மாதுளங்காயும் மாங்கனியும்

வாழைக்கனியும் அரிசியும் பாலும் நெய்யும் சமையற் பாண்டங்களும் கொண்டுவந்து கண்ணகி தேவியிடம் கொடுத்தார்கள். தன் காதலனுக்கு நல்ல உணவாக்கும் பொருட்டு அவர்கள் கொடுத்த காய்களை கண்ணகி அரிவாளால் அரியும்பொழுது காந்தள் மலரினும் மெல்லிய அவள் கைவிரல்கள் சிவந்தன. திருமுகம் வியர்த்தது. செங்கண் சிவந்தன. இந்நிலையில் தன் தோழியாகிய ஐயை எரியூட்டத் தான் காதலனுக்கு நல்லுணவு ஆக்கினாள். அதன்பின்

கோவலனுக்கு கண்ணகி உணவாக்குதல்

புல்லினால் புனைந்த தடுக்கை ஆசனமாக அமைத்தாள். அதன் முன்னே தண்ணீர் தெளித்தாள். வாழைக்குருத்தை இலையாக விரித்தாள். தன் கணவனது பாத மலர்களை நன்னீரால் சுத்தி செய்தாள். கோவலன் ஆசனத்தில் அமர்ந்த பின்னர் அமுதம் படைத்து அருகே நின்றாள். கோவலனும் அந் நல்லமுதை உண்டான். இவ்விருவரையும் கண்ட இடைக் குலமாதர்கள் அடங்கா ஆனந்தங்கொண்டு அக்காலத்தில் ஆயர்பாடியில் அசோதை பெற்றெடுத்த காயாமலர் போன்ற வண்ணமுடைய கண்ணனே இவன். இவனருகே நிற்கும் நங்கை நீலமணி வண்ணனது நெடுந்துயர் தீர்த்த பின்னைப் பிராட்டியோ வென்று புகழ்ந்தார்கள். கோவலனும் அமுதுண்டு அமர்ந்தான். கண்ணகி மெல்லிய வெற்றிலைச் சுருளும் அடைகாயும் கொடுத்து அருகே நின்றாள். அப்பொழுது கோவலன் தன் காதலியை அழைத்து, "என்

கோவலன் உணவை அருந்துதல்

கண்ணே! கல்லும் கனலும் கலந்து விளையாடும் கானகத்தில் நாம் வழி நடந்ததை அறிந்து ஏங்கி நமது தாய் தந்தையர் என்ன கதி யடைந்தார்களோ! இதென்ன மாயமோ! வல்வினையோ! அறியேன். வீணரோடும் விடலையரோடும் சேர்ந்து நல்லொழுக்கத்தைத் துறந்த எனக்கு இனித் தீக்கதியேயன்றி நற்கதியுண்டோ? ஐயோ! முன்னறி தெய்வமாகிய பெற்றோர்க்கும் பிழை செய்தேன். அறிவும் பெருமையும் அமைந்து விளங்கும் உனக்கும் சிறுமை செய்தேன். இவ்வாறு தீமையே செய்த நான் மதுரைமா நகரத்திற்குப் புறப்படு என்றேன். நீயும் பாவியேன் சொல்லைப் பணிவுடன் ஏற்றுப் புறப்பட்டாயே" என்று புலம்பி வருந்தினான்.

கோவலன் கழிவிரக்கம் கொள்ளல்

அதற்குக் கண்ணகி ஐயனே! இல்லறமாகிய நல்லறத்தில் இனிது வாழ்வோர் இயற்றும் அறங்களாகிய அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்புதல், துறவோர்க்கு எதிர்தல் விருந்தெதிர் கொள்ளுதல் முதலிய அறங்களை இழந்த என்னை ஒரு நாள் உமது தாய் தந்தையர் கண்டார்கள். அப்பொழுது நீர் என் முன்பு நில்லாமையால், என் மனதிலெழுந்த வருத்தத்தை மறைத்துப் பொய்யாக ஒரு புன்முறுவல் செய்தேன். அதனை அவர்கள் அறிந்துகொண்டு அருள் கலந்த மொழியால் அன்போடு என் பொறுமையைப் புகழ்ந்தார்கள். என் மன வாட்டத்தைக் கண்டு வருந்தினார்கள். நீர் கூடா ஒழுக்கத்தை மேற்கொண்டிருந்தாலும் உமது சொல்லைச்

கோவலன் கண்ணகியுடன் உரையாடல்

சிறிதும் மாற்றுத வாழ்க்கையை உடையேனுதலால் நீர் இட்ட ஆணையை உடனே ஏற்றுப் புறப்பட்டேனென் ருள். இதைக்கேட்ட கோவலன் மனங்குழைந்து, "குடி முதல் சுற்றமும் குற்றிளையோரும், அடியோர் பாங் கும் ஆயமும் நீங்கி, நாணமும் மடனும் நல்லோரேத் தும், பேணிய கற்பும் பெருந்துணையாக, என்னோடு போந்து ஈங்கு என் துயர்களைந்த பொன்னே! கொடியே! புனைபூங்கோதாய்! நாணின் பாவாய்! நீள் நில விளக்கே! கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி! உன் சீரடிச் சிலம்பில் ஒன்றைக் கொண்டு நான் மாட மதுரையில் விற்று வருகிறேன். நான் திரும்பி வருமளவும் தனியே இருப்பதற்கு வருந்தாதே என்று சொல்லித் தன் காதலியை அன்போடு அணைத்தான். அவளருகில் ஒருவரும் துணையின்றித் தனியாயிருப்பதை நினைந்தான்; நெஞ்சம் கலங்கினுன்; கண்கள் கலங்கிக் கண்ணீர் பொங்கிற்று; கலங்கிய கண்களைக் காதலி கண்டால் வருந்துவாள் என்று எண்ணிக் கண்ணீரை உள்ளடக்கினுன். பின்னும் தன் காதலியைக் காண மனம் பொருதவனுய் முகத்தைத் திருப்பிக்கொண்டு வீட்டைவிட்டு வெளியே சென்றுன். அவ்வாறு செல்லும் பொழுது ஓர் இமில் ஏறு தன் கூரிய கொம்புகளுடன் அவனெதிரே பாய்ந்தோடி வந்தது. அதனைத் தீச் சகுனமென்று கோவலன் அறிந்தானல்லன்.

*கோவலன் வெளியேறுதல்*

*சகுனப் பேதம்*

## 7-வது அதிகாரம்

### கொலைக் களம்

இவ்வாறு சென்ற காதலனைக் கண்ணகி பின் உயிருடன் காணாளாயினள். வெளியே மன்றங்களை யெல்லாம் கடந்து போய் மாதர் வீதியையும் கடந்து கடைத்தெருவின் வழியே கோவலன் சென்றான். அங்கு அவன் எதிரே நூறு பொற்கொல்லர் பின்னே வர அவர்களுக்குத் தலைவன்போல ஒருவன் சட்டையணிந்தவனாய்க் கையில் கோல் கொண்டு முன்னே வந்தான். அவனைக்கண்ட கோவலன் இவன் மன்னனால் மதிக்கப் பெற்ற பொன்வினைக் கொல்லன் போலும் என்று எண்ணி அவனிடம் "அரசனது தேவி அணிதற்கு ஏற்ற ஓர் சிலம்பை விலை மதித்தற்கு நீ வல்லையோ," என்று கேட்டான். அதற்கு அத் தட்டான் "அடியேன் மாதருடைய அடிக்கலத்தின் விலை மதித்தற்கு அறியேன். ஆயினும் அரசரது முடிக்கலன் முதலிய அணிகள் செய்யும் ஆற்றல் உடையேன்" என்று மொழிந்தான். கோவலனும் தன்னிடமிருந்த சிலம்பைத் தட்டானிடம் காட்டினான். பசும் பொன்னில் மாணிக்கமணியோடு வயிரம் அழுத்தி உட்கருவமைந்த அச்சித்திரச் சிலம்பின் தொழில் அருமையை யெல்லாம் தட்டான் உற்று நோக்கினான். அவனது கண்கள் இரண்டும் புறத்தே சிலம்பின் அழகை நோக்குவனபோல நோக்க, அவனது மனம் தான் முன் அரண்மனையில் வஞ்சித்துக் கவர்ந்துகொண்ட சிலம்போடு இச் சிலம்பை ஒத்துப் பார்க்கக் கண்டார்க்கு இரு

தட்டானைச் சந்தித்தல்

தட்டான் சிலம்பை உற்று நோக்குதல்

நோக்கும் ஒரு நோக்காகவே தோன்றிற்று. சிலம்பைச் செவ்வையாய்ப் பார்த்தபின் தட்டான் கோவலனைப் பார்த்து, “இச் சிலம்பு அரசனுடைய தேவிக்கல்லால் வேறெவர்க்கும் இசையாது. இதனை அரசனிடம் சொல்லி நான் திரும்பி வரும் வரையும் நீர் இங்கே இரும்” என்று கோவலனை ஓர் குடிசையில் அமைத்தான்.

அரண்மனைக் குச் செல்லுதல்

பொற்கொல்லன் அரண்மனைக்குப் போகும் பொழுது தனக்குள்ளே பல எண்ணங்களை எண்ணினான். ‘நான் முன்னால் அரண்மனையில் கவர்ந்து கொண்ட சிலம்பு என்பால் உள்ளதென்று வெளிப்படுவதற்கு முன்னமே அக் குற்றத்தை இவன்மீது சுமத்திப் போக்கி விடுவேன். நல்ல காலம் வாய்த்தது’ என்று எண்ணிக் கொண்டு களவாடும் வன்னெஞ்சக் கள்வன் அரசனது அரண்மனை சேர்ந்தான்.

அரசனது காம மயக்கம்

அப்பொழுது அரசன், அரண்மனையில் தன் காதலியின் ஊடல் தீர்க்கும்பொருட்டு அந்தப்புரத்தை நோக்கி காமப் பரவசனாய் விரைந்து சென்றுகொண்டிருந்தான். இவ்வாறு மனோவேகமாய்ச் சென்ற காவலனைத் தட்டான்கண்டு அடியிணை தொழுது பலவாறு துதித்து அரசே கன்னக்கோலும் கவைக்கோலும் இல்லாமல், துயில் மந்திரத்தையே துணையாகக்கொண்டு காவலாளரது கண்களை மயக்கி அரண்மனைச் சிலம்பைக் கவர்ந்து

அரண்மனையில் களவு போன சிலம்பைக் கண்டதாகக் கொல்லன் கூறுதல்

கொண்ட கள்வன் என் சில்லைச் சிறு குடிசையில் அகப்பட்டிருக்கின்றான்" என்று சொன்னான். இதுகேட்ட வேந்தன் காம மயக்கத்தினாலும், வினைவிளை காலமாதலாலும் மதிமயங்கி ஊர் காக்கும் காவலாளரைக் கூவியழைத்து, "அரசமா தேவியின் காற்சிலம்பு கள்வன் கையில் காணப் பெற்றால் அவனைக் கொன்று அச்சிலம்பைக் கொண்டு வருக" என்று ஆணை செய்தான். கருந்

அரசன் கள்வனைக் கொல்லுமாறு கட்டளையிடல்

தொழிற் கொல்லன் தான் எண்ணிய எண்ணம் முற்றுப் பெற்றதென்று மகிழ்ந்து ஏவலாளருடன் தீவினை வலையிலகப் பட்டிருந்த கோவலன் இருந்த இடம் சென்றான். அங்கு அவன் முன்பு சென்று, "ஐயனே! அரசன் ஆணையால் சிலம்பைக் காண இவர்கள் வந்திருக்கிறார்கள்" என்று சொல்லி அச்சிலம்பின் அருமை பெருமைகளை எடுத்துச் சொல்வான் போல அதனை அரண்மனைச் சிலம்போடு ஒப்புமை கூறிப் பொருத்தினான்.

இதைக்கேட்ட வேல் தாங்கிய வீரர்கள் கோவலனது

காவலாளர் கோவலனைக் கள்வனே என்று ஐயுறுதல்

முகத்தை உற்று நோக்கினார்கள். அவனது முக விலாசத்தையும், மாசற்ற தோற்றத்தையும் நன்றாய்க் கவனித்தார்கள். அவர்கள் மனத்தில் கோவலன் கள்வனாகத் தோன்றவில்லை. "இவனைப் பார்த்தால் குற்றம் செய்தவனைப்போலக் காணவில்லை. ஆதலால் இவனைக் கொல்லுதல் நீதியன்று",

என்று காவலாளர்கள் கூறினார்கள். அதைச் செவியுற்ற தட்டான் அவர்களைப் பார்த்து நகைத்து, "கள்வர்கள் தன்மையை நீங்கள் நன்றாய் அறியமாட்டீர்கள். அவர்கள் மந்திரம், தெய்வம், மருந்து, நிமித்தம், தந்திரம், இடம், காலம், கருவி என்ற எட்டையும் துணையாகக்கொண்டு திரிவார்கள். இவர்களது மருந்திலகப்பட்டால் அரசன் உங்களை ஒறுப்பது திண்ணம். இக்கள்வன் ஒரு மந்திரத்தை நாவினால் நவில்வானாயின் நாமெல்லாம் போன இடம் தெரியாது மறைந்து போவோம். தன் வழிபடு தெய்வத்தை மனத்தில் நினைப்பானாயின் களவு செய்த பொருளைக் கையில் காட்டிக் கொண்டே தப்பி ஓடுவான். நிமித்தம் வாய்த்தாலல்லாமல் பெறுதற்கரிய பொருள் வலிய வந்தாலும் இக்கள்வர்கள் விரும்பார்கள். இன்னும் தந்திரத்தால், இம்மண்ணுலகிலிருந்து கொண்டே விண்ணவர் தலைவன் மார்பில் இலங்கும் மணியாரத்தை அடைய விரும்பினும் அடைவார்கள். இவர்கள் காலமும் இடமும் கருவியும் தேர்ந்து ஒரு பொருளைக் கைப்பற்றுவாராயின் அதனை இவ்வுலகில் எவராலும் காண இயலாது. இக்கள்வர்க்கு இரவு பகல் என்னும் வேற்றுமை இல்லை. இவர்கள் கற்றுள்ள களவு நூலை நாம் கேட்டால் ஓடி ஒளிக்க இடமில்லை.

*தட்டான் கள்வர்களின் மந்திர தந்திரங்களை எடுத்துரைத்தல்*

முன்னொரு காலத்தில் ஒரு கள்வன், தூதுவன் போல வேடம்பூண்டு பகல் முழுதும் அரசனது அரண்மனை வாயிலிலிருந்து இராப்பொழுதில் பெண் கோலம் கொண்டு அரண்மனைப் பள்ளியறையில் அஞ்

ஒரு கள்வன் தந்திரத்தால் தப்பிய கதை

சாது புகுந்து அங்குத் தூங்கிக்கொண்டிருந்த அரசிளங்குமரனது மார்பில் இலங்கிய மணியாரத்தை விரைவாக எடுத்தான். அப்பொழுது இளவரசன் தூக்கத்தினின்றும் திடீரென்று விழித்து தன் உடைவாளை உருவினான். அவ்வாளின் உறையைக் கள்வன் தன் கையில் வைத்துக்கொண்டு இளவரசன் தன்னைக் குத்தும் பொழுதெல்லாம் அவ்வாளிலே உறையைச் செலுத்தினான். இதைக்கண்ட அரசன் அக்கள்வனுடன் மற்போர் தொடங்க அவன் அங்கு நின்ற ஒரு தூணைத் தானாகக் காட்டி மறைந்து தன் களவு நூலறிவால் தப்பிவிட்டான். ஆதலால் இவர்க்கு உலகில் சிலரே நிகரல்லால் வேறு கிடையாது" என்று தட்டான் சொல்லி முடித்தான்.

அவன் முடித்தவுடன், மற்றொருவன் தானும் கள்வர்கள் மாயத்தை அறிந்திருப்பதாகக் கூறினான். "இருள் செறிந்த ஒரு இராப்பொழுதில் ஒரு கள்வன் என் முன்னே வந்து நின்றான். நான் எனது உடைவாளை உறையினின்றும் உருவினேன். அவ்வாளைக்

மற்றொரு கள்வன் மந்திரத்தால் தப்பிய கதை

கள்வன் வாங்கினான். அப்பால் அவனையும் காணேன். என் வாளையும் காணேன். எப்படியோ மறைந்துபோய் விட்டான். இக்கள்வரின் மாயத்தை அறிவது யாவர்க்கும் அரிது. இவனை நாம் இப்பொழுது விட்டு விட்டால் அரசன் நம்மை வருத்துவான். ஆகையால் செய்ய வேண்டுவதைத் துணிந்து கூறுங்க"ளென்று மற்றைய வீரர்களைப் பார்த்துக்கூறி

கோவலன் வெட்டுண்டு இறத்தல்

னான். அப்பொழுது அங்கு நின்ற கல்லாக் களிமகன் ஒருவன் தன் கைவாளால் கோவலன் உடம்பில் குறுக்கே வெட்டினான். வெட்டுண்ட வாயினின்றும் குருதி கொப்புளித்து நிலத்தில் எங்கும் பெருகிற்று. நிலமகளும் இக்கொடுங் கொலையைக் கண்டு துயருற்றாள். கோவலன் மடிந்து மண்ணில் விழுந்து மாய்ந்தான்.

ஆயர்சேரியில் நிகழ்ந்த புதுமைகள்

பாண்டிய அரசனது மாளிகையில் காலை முரசம் முழங்கிற்று. மாதிரி என்னும் இடைக்குல மாது தன் மகளைக் கூவியழைத்து, "இன்று அரண்மனைக்கு நெய் கொடுப்பது நமது முறையாகும். விரைவில் தயிர்கடைவதற்குக் கயிறும் மத்தும் கொண்டுவா" என்று சொல்லி தயிர்த் தாழியைப் பார்த்தாள். முந்திய இரவில் பிரையிட்ட பால் தோயாமல் அப்படியே நின்றது. முந்திய நாள் வெண்ணெயை உருக்கி அரண்மனைக்குக் கொண்டுபோக எண்ணி உருகவைத்தபொழுது அதுவும் உருகாமல் அப்படியே நின்றது. ஆட்டுக் குட்டிகள் எப்பொழுதும் போலத் துள்ளி விளையாடாமல் குழைந்து கிடந்தன. பசுக்கள் மெய் நடுங்கி வாய் விடாமல் கதறிக் கொண்டிருந்தன. அவற்றின் கழுத்தில் கட்டியிருந்த மணிகள் அறுந்து விழுந்து கிடந்தன. எருதுகள் கண்களினின்றும் கண்ணீர் தாரை தாரையாய் வடித்துக் கொண்டிருந்தன. இவற்றையெல்லாம் கண்ட முதுமகள் துன்பம் ஏதேனும் வரும் என்று குறிப்பாக உணர்ந்து கறவையும் கன்றும் பிணி நீங்கு

மாறு மற்றைய ஆயர்குல மாதரையும் கூவி யழைத்து மாயவன் முன்னாள் ஆடிய பல நாடகங்களில் ஒன்றாகிய குரவைக் கூத்தாடினார்கள்.

## 8-வது அதிகாரம்

### கண்ணகியின் புலம்பல்

அது முடிந்த பின்னர் மாதிரி வையைக் கரையி லுள்ள திருமாலைவழிபடும் பொருட்டுப்பூவும் புகையும் புனைசாந்தும் கண்ணியும் கொண்டு ஆற்றில் நீராடப் போயினாள். அங்கு மதுரைமாநகரில் நடந்த பயங்கர மான செய்தியைக் கேட்டாள். நெஞ்சம் துடிக்கக் கண் ணகி யிருந்த இடத்திற்குவிரைந்தோடி வந்தாள். அவளிடம் ஒன்றும் சொல்ல நாவெழாது நின்றாள். அவளது இள மையையும் தனிமையையும் அழகை யும் கண்டு ஏங்கி விம்மினாள். புறத்தே சென்று அங்கு நின்ற ஆயர் குல மாதரிடம் கண்ணகியின் தலைவனுக்கு நேர்ந்த குறையைச் சொல்லிப் பெருமூச் செறிந்து நின்றாள். இதைக்கண்ட கண்ணகி ஒன்றும் உணராதவளாய் இனம்பிரிந்த மானைப்போல் ஏங்கி வருந்தித் தன் தோழியாகிய ஐயையைப் பார்த்து,

*மாதிரி கோவலன் கொலையுண்ட செய்தி கேட்டல்*

"தோழி, என் காதலன் இன்னும் வரக்காணேன்; என் உள்ளம் கலங்கு கின்றது ; அன்பனைக் காணாது என் நெஞ்சம் அலமருகின்றதே; ஏதேனும் வஞ்சமுண்டோ என்று என் நெஞ்சம் மயங்குகின்றதே ; ஏழையேனாகிய என்னைக் குறித்து இவ் வாய்ச்சியர் என்ன பேசிக் கொள்கிறார்கள் ; நீயே

*கண்ணகி கணவன் வாராதைதக்குறித்துத் தோழியிடம் புலம்பல்*

னும் சொல்லமாட்டாயா ?" என்று முறையிட்டுப் புலம்பினாள். இவ்வாறு கண்ணகி படும் துயரத்தைக் கண்டு மனம் பொறாதவளாய் தோழி அவளைப் பார்த்து அரண்மனையில் களவுபோன சிலம்பைக் கோவலன், "களவாடினான் என்று அவனை அரசனது காவலாளர் கொலை செய்தார்கள்" என்றாள். கொலை என்ற சொல் செவியில் விழுந்ததும் கண்ணகி பொங்கி எழுந்தாள்; விழுந்தாள்; மோதினாள்; அழுதாள்; அரற்றினாள். 'என் தலைவா! நீ எங்கே சென்றாய்' என்று ஏங்கி மயங்கினாள். மன்பதை பழிதூற்ற மன்னவன் தவறிழைப்ப அன்பனை இழந்தேன் யான் ஐயோ! என்று அரற்றினாள். வானத்தில் விளங்கித் தோன்றிய கதிரவனைப் பார்த்து, "ஏ! காய் கதிர்ச் செல்வனே! நீ அறியாத பொருள் இவ்வுலகில் ஒன்றுமில்லையே! நீயறிய என் கணவன் கள்வனோ? என்று முறையிட்டாள்!" ஆதவனும் அசரீரியாய் நின்று ஆயர் குல மக்களெல்லாம் கேட்கும்படி, "மாதே உன் கணவன் கள்வனல்லன்: அவனைக் கள்வன் என்று கொன்ற இவ் வூர் தீயினால் அழியும்" என்று கூறிய குரல் ஆகாயத்தில் எழுந்தது.

*தோழி உற்றது உரைத்தல்*

*கண்ணகி புலம்பல்*

இதைக் கேட்ட கண்ணகி மனம் தெளிந்து தன் மற்றொரு சிலம்பைக் கையிலேந்தி மதுரைமா நகரின் உள்ளே புகுந்தாள். போகும் வழியில் "ஏ! பாவிகள்! என் கணவன் கள்வனல்லனே!! அவன் கையிலிருந்த சிலம்பைக் கவர்ந்து கொள்வதற்கல்

*கணவனைக் காணக் கண்ணகி புறப்படல்*

லவோ, கள்வன் என்று பெயரிட்டுக்கொண்டு என் காதலனைக் கொன்ருர்கள்? நான் கற்புடைய மங்கையாயிருப்பின் இந் நகரில் வாழும் நிறையுடைய மாதர்முன் என் காதலனை உயிரோடு காண்பேன். கண்டு அவன் கனிந்த சொற்களைக் கேட்பேன். அவ்விதம் கேளேனாயின் என்னை இழிகுல மகள் என்று எல்லோரும் இகழுங்கள்" என்று வஞ்சினம் கூறி அழுதாள். இவ்வாறு அல்லலுற்று ஆற்ருது அழுவாளைக் கண்டு மதுரையில் வாழ்ந்த மக்களெல்லாம் மயங்கி என்ன நேருமோ என்று ஏங்கி யிருந்தார்கள். அவர்களிற் சிலர் கண்ணகியை அழைத்துக்கொண்டு அவள் கணவன் இறந்து கிடந்த இடத்தைக் காட்டினுர்கள். கற்புடைய மங்கை படும் துயரத்தைக் காண மனம் பொருதவன் போல் கதிரவனும் மேற்றிசையில் மறைந்தான். காலைப்பொழுதில் காதலன் கொடுத்த மாலையை வாங்கி கருங் கூந்தலில் சூடிய மங்கை மாலைப்பொழுதில் அவன் இறந்து கிடந்த இரத்த வெள்ளத்தில் தன் கூந்தலை நனைத்தாள். தரைமீது கிடந்த தன் தலைவனைக் கண்டாள். அவன் தன்னை மணந்த காலத்தில் மார்பில் அணிந்திருந்த பொன்னையும் மணியையும் நினைந்தாள். "ஐயோ! பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ!" என்று புலம்பினுள். தன் மணாளன் மணக்கோலத்தில் அணிந்திருந்த மணமாலையை நினைத்தாள். அந்தோ, 'தார் மலி மணி மார்பம் தரை மூழ்கிக் கிடப்பதோ!' என்று புலம்பி அழுதாள். "இன்னும் பண்டே

வஞ்சினம் கூறல்

காதலன் உடம்பைக் கண்ட கண்ணகி அழுதல்

நிலைத்து வளரும் இம் மதுரைமா நகரில் பெண்டிரும் உண்டோ, பெண்டிரும் உண்டோ? இப் பாடல் சால் சிறப்பமைந்த மாடமதுரையில் சான்றோரும்உண்டோ, சான்றோரும் உண்டோ? தெய்வமும் உண்டோ, தெய் வமும் உண்டோ?" என்று தேம்பியழுதாள். இவ்வாறு புலம்பிக் கொண்டு தன் கணவனது பொன்னார் மேனி யில் விழுந்து தழுவிக் கொண்டாள். அப்பொழுது கோவலன் தூக்கத்தினின்றும் எழுபவன்போல எழுந் தான். "தன் காதலியின் வாடிய முகத்தைக் கண்டு நிறை மதிபோன்ற உன் முகம் கன்றியதே" என்று சொல் லித் தன் கையால் அவள் கண்ணீ ரைத் துடைத்தான். கண்ணகி ஏங்கி அழுது நிலத் தில் விழுந்து தன் கணவனது அடிகளை இருகரங்க ளாலும் பற்றினாள். கோவலன் பொல்லாத உடம்பை விட்டு நல்லார் வாழும் மேலுலகம் புகுவதற்கெழுந்து தெய்வ ஒளியோடு மேலுலகம்சென்றான். இதைக்கண்ட கண்ணகி, "இதென்ன மாயமோ என்னை மயக்கியதெய் வமோ ஒன்றும் தெளியேனே" என்று மயங்கி நின்றாள்.

கோவலன் எழுந்து விண்ணுலக கடைதல்

அப்பொழுது மதுரைமாநகர் மன்னவன் தன் கணவ னைக் கள்வன் என்று பழி சுமத்திய தீமையை நினைத் தாள். தன் காதலனை உலகோர் அறிய குற்ற மற்றவன் என்று நிருவ விரும் பினாள். "இதற்கெல்லாம் காரண மாகிய தீ வேந்தனைக் கண்டு இத்திறம் கேட்பேன்" என்று சொல்லி எழுந்தாள். முன்னர்

பாண்டியனைப் பார்க்க கண்ணகி புறப்படுதல்

தான் கண்ட தீக்கனவை நினைந்தாள். கண்களில் கண்ணீர் நிறைந்தது. கண்ணீரைத் துடைத்துக்கொண்டு அரசனது அரண்மனை நோக்கிச் சென்றாள்.

---

## 9-வது அதிகாரம்

---

### கண்ணகி வழக்குரைத்தல்

இஃது இவ்வாறிருக்க அரசனது அரண்மனையில் பாண்டிமாதேவி ஓர் தீக்கனவு கண்டாள். அரசனது செங்கோலும் வெண்குடையும் கீழே விழுவது போலவும், இறைவனது கொற்றவாயிலில் கட்டிய அசையா மணி நடுங்குவது போலவும், வானம் முழுவதும் ஒரே மின்னலாய் மின்னுவது போலவும், பகற்பொழுதில் விண்மீன்கள் உதிர்ந்து விழுவது போலவும், நான்கு திசைகளும் அதிர்ப்பது போலவும் கனவு கண்டு அத்தீக்கனவால் பெருந்துன்பம் விளையுமென்று பயந்து அரசனிடம் சென்று தேவி தன் கனவைச் சொல்லிக் கொண்டிருந்தாள். அரசனும் அரியாசனத்தில் அமர்ந்து அரசமாதேவி சொல்லிய கனவைக் கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தான்.

பாண்டிமாதேவிகண்ட தீக்கனவு

அப்பொழுது அரண்மனை வாயிலில் கற்புடைய தெய்வம் வந்து நின்று காவலாளனிடம், "ஏ! வாயில் காப்பவனே! 'ஒற்றைச் சிலம்பைக் கையிலேந்தி கண

*கண்ணகி அரண்மனை வாயிலடைதல்*

வனை இழந்த ஒருமாது அரண்மனை வாயிலில் நிற்கின்றாள்,' என்று உன் அரசனிடம் அறிவிப்பாயாக" என்று கூறினாள். காவலாளனும் அரசனிடம் சென்று முறையாகத் தான் கண்ட காட்சியை அறிவித்தான். அரசனும் அம்மாதை உள்ளே அழைத்துவரும்படி ஆணைசெய்ய, கற்பெனும் திண்மையும் அரசன் கண்ணெதிரே வந்து நின்றது. அப்பொழுது கண்ணகியின் மெய்முழுதும் தூசி படிந்திருந்தது. அவள்

*பாண்டியன் முன்னே நின்ற கண்ணகியின் கோலம்*

கருங்கூந்தல் விரிந்து கிடந்தது. கண்ணீர் தாரை தாரையாய் வடிந்தது. இக்கோலத்தைக் கண்ட அரசன் மனங் கலங்கி, "வந்து நிற்கும் மாதே, நீ யார்?" என்றான். அதற்குக் கண்ணகி "தேரா மன்னா, கன்றை இழந்து அலறிய பசுவின் துயர் பொறுக்க மாட்டாமல் தன் மைந்தனென்றும் பாராமல் ஒரு மைந்தனே தன் குலத்துக்கு உள்ளானென்பதையும் உணராமல் அறநெறியே பெரிதாக எண்ணி தன் அருமந்த மைந்தன்மேல் தேர்க்காலைச் செலுத்திய அரசனது புகழமைந்த புகார் நகரமே எனது ஊராகும்.

*கண்ணகி தன் ஊரும் பெயரும் உரைத்தல்*

அவ்வூரில் ஆசிலாச் சிறப்பு வாய்ந்த மாசாத்துவானுக்கு மகனாய்ப் பிறந்து பொற்சிலம்பு விற்றுவர ஊழ்வினைப் பயனால் உன் நகர் புகுந்து, இங்குக் கொலைக் களம் பட்ட கோவலன் மனைவியே நான். கண்ணகி என்பது என் பெயர்", என்றாள். இதைக் கேட்ட காவலன், "பெண்ணணங்கே, கள்வனைக் கொல்

லுதல் கொடுங்கோலன்று; அது நீதி முறையேயாகும்" என்று மொழிந்தான். இதைக்கேட்ட கண்ணகியின் உள்ளத்தில் கடுஞ்சினம் மூண்டது. "அரசே! என் கணவன் குற்றமற்றவன் என்று நிருவும் பொருட்டே இங்கு நான் வந்தேன். என் சிலம்பின் உள்ளே அமைத்திருக்கும் பரல்மாணிக்கம்" என்ருள். அரசன் தன் தேவி அணிந்திருந்த சிலம்பின் பரல் முத்து என்று கூறி, உள்ளே சென்று கோவலன் கையினின்றும் தன் காவலாளர் எடுத்த சிலம்பைக்கொண்டு வந்து கண்ணகியின் முன்னே வைத்தான். அச்சிலம்பைக் கண்ணகி உடைத்தாள். உடனே அதன் உள்ளே இருந்த மாணிக்கம் வீறிட்டு எழுந்து மன்னவன் வாயில் தெறித்தது. மாணிக்கத்தை மன்னவன் கண்டான். அப்பொழுதே அவன் வெண்குடை தாழ்ந்தது; செங்கோல் தளர்ந்தது. "ஐயோ! ஒரு தட்டான் சொல்லைக்கேட்டு முறைதவறிய நானே அரசன்! கோவலன் கள்வனல்லன். நானே அவன் உயிரைக் கவர்ந்து கொண்ட கள்வனுனேன். இதுவரையில் என் நாட்டில் நீதி எக்காலத்திலும் தவறியதில்லை. இப்பொழுது என்னுல் நீதி பிழைத்தது. இனி நான் உயிர் வாழ மாட்டேன்" என்று சொல்லி மன்னவன் மயங்கி விழுந்து உயிர் துறந்தான்.

அரசனிடம் கண்ணகி வழக்குரைத்தல்

பாண்டியன் மயங்கி உயிர் துறந்தான்

பாண்டிமா தேவி கற்புடைய தெய்வத்தின் தோற்றத்தைக் கண்டு நடுங்கி அவள் அடியினை தொழுது விழுந்தாள். பின்பு எழுந்து தன் காதலனது மெல்லிய

அடிகளை வருடிப்பார்த்தாள். அவன் ஆவி அகன்றதை அறிந்தாள். காதலன் இறந்த கடுந் துயர் பொறாமல் தன்னுயிர் கொண்டு அவன் உயிரைத் தேடுபவள் போல அரசமாதேவியும் உயிர் துறந்தாள்.

பாண்டிமா தேவி கற் பரசியை வணங்குதல்

அரசன் இறந்ததனோடு அமைவுறாமல் கண்ணகி, "பட்டாங்கியானுமோர் பத்தினியேயாமாகில் ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் இம்மதுரையையும்" என்று சபதஞ்செய்து தனது இடது கொங்கையை அங்கை யால் திருகி அந்நகரின்மேல் எறிந்தாள். அப்பொழுது அக்கினித் தெய்வம் அவள் முன்பு தோன்றி "உனக்குத் தீங்கிழைத்த இவ்வூரைத் தீயால் அழிக்கும்படி முன் னரே ஒரு ஏவல் பெற்றுள்ளேன். அவ்வாறே இப்பொ ழுது தீயிடப் போகின்றேன். இந்நகரில் யாரைக் காக்க வேண்டும்? யாரை அழிக்க வேண்டும்? என்று உனது கருத்தை அறிந்து போவதற்கே வந்தேன்" என்று கூறிற்று. அதற்குக் கண்ணகி, "பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர், மூத்தோர், குழவி என்னும் இவரைக் கைவிட்டுத் தீத்திறத்தார் பக்கமே சேர்க" என்று ஏவினாள். உடனே மாட மதுரையில் அழலும் புகையும் மண்டிற்று. அந்நகரில் நான்கு திக்கு களிலும் காவலிருந்த தெய்வங்கள் பெயர்ந்து போயின. வருண பூதங்கள் நான்கும் மதுரையை விட்டு அகன் றன கூல வீதியும், கொடித்தேர் வீதியும், பால் வேறு

கண்ணகி மது ரையைச் சபித் தல்

தீயோரை அழிக்கும்படி கண்ணகி அக் கினி தேவ னுக்கு ஆணை செய்தல்

தெரிந்த நால்வேறு தெருவும் எரியுண்ட இலங்கை போல் அழிந்து ஒழிந்தன. கண்ணகிதேவியின் அழல், அறவோர் பக்கம் அணுகாமல் மறவோர் சேரியில் மண்டி நிறைந்தது.

---

## 10-வது அதிகாரம்

---

### வினைப்பயன்

*மதுரை எரிந்து அழிதல்*

இவ்வாறு மதுரைமா நகரம் பாழ்பட்டது. அப்பொழுது ஆறாஞருற்ற வீரபத்தினியின் முன்னால் அழலின் வெம்மைக் காற்றாது மதுரைமா தெய்வம் வந்து தோன்றி "அம்மையே, நான் இந் நகரில் உறையும் தெய்வம். உன்னிடம் சில உண்மைகளைக் கூற வந்தேன். இம் மதுரைமா நகரத்தை முன் அரசாண்ட பாண்டியர் எவரும் கொடுங்கோன் மன்னரல்லர். இப்பொழுது அரசாண்ட நெடுஞ் செழியனும் செங்கோல் மன்னனே யாவான். ஆயினும், இத் தீமை நேர்ந்த வரலாற்றைக் கூறுகின்றேன் கேள். முன்னாள் கலிங்க

*மதுரைமா தெய்வம் கண்ணகியிடம் தீவினை நேர்ந்த வரலாறு கூறல்*

நாட்டிலுள்ள சிங்கபுரம் என்னும் நகரத்தை வசு என்னும் ஒரு அரசன் ஆண்டு வந்தான். அப்பொழுது கபிலபுரம் என்னும் நகரத்தைக் குமரன் என்னும் பெயருடைய அரசன் ஆண்டு வந்தான். இவ்விரு அரசரும் தம்முள் மாறுபட்டு ஒருவரை ஒருவர் வெல்லக் கருதி யிருந்தார்கள். அப்பொழுது சிங்கபுரத்துக் கடைத்தெருவில் வணிக முறையில் பண்டம் விற்றுக்கொண்டிருந்த ஒரு வணி

கனை பகை யரசனுடைய ஒற்றனென்று தவருக எண்ணி அந் நகர்க் காவலாளனுய் அமர்ந்திருந்த பரதன் என்பவன் அவனை அரசன் முன்னே பிடித்துக் கொண்டுபோய், அவன் ஆணைப்படி கொலை செய்து விட்டான். அப்பொழுது அவ் வணிகனது மனைவி யாகிய நீலி என்பவள் ஆருத் துயரமடைந்து பதினலு தினங்களாய் பல இடங்களிலும் அலைந்து திரிந்து பின் ஒரு மலைமீதேறி தன் உயிரை மாய்த்துக் கொள்ள எண்ணினுள். அவ்வாறு தன் உயிரைவிடு முன்னர், "எனக்கும் என் கணவருக்கும் இப் பிறப் பில் துன்பம் செய்தோர் மறு பிறப்பில் எம்மைப் போலவே துயரமடைவார்களாக" என்று சாபம் செய்து இறந்தாள். அப் பரதன் இப் பிறப்பில் கோவல னுய்ப் பிறந்தான். ஆதலால் நீயும் உன் காதலனும் இத் துன்பம் அடைந்தீர்கள். இன்னும் பதினலு தினங்கள் கழிந்த பின்னர் நீ உன் கணவனைக் கண்டு மகிழ்வாய்" என்று சொல்லி மறைந்தது.

கண்ணகியார் விமான மேறி விண்ணுலக டைதல்

அதன் பின்னர் கண்ணகி மதுரையை விட்டு நீங்கி வையையாற்றின் கரை வழியே மேற்றிசையை நோக்கிச் சென்று மலை நாட்டை யடைந்து அங்குத் திருச்செங்குன்று என்னும் மலைமீதேறி ஓர் வேங்கை மரத்தின் நிழலில் வந்து நின்ருள். அங்குத் தேவர்கள் பூமாரி பொழிய ஆகாயத்தி னின்றும் அழகிய விமானம் கீழே இறங்க அவ் விமா

னத்தில் தெய்வ வடிவோடு கோவலன் இலங்க, கண்ணகி களிகூர்ந்து அவ் விமானத்திலேறி விண்ணுலகடைந்தாள்.

## வஞ்சிக்காண்டம்

சேரநாட்டு மலையில் குன்றக் குறவர்கள் தம் தினைப்புலத்திற் சென்று கிளியும் குருவியும் ஓட்டி அருவியில் நீராடி திரும்பிவரும் வழியில் ஒரு வேங்கை மரத்தின் நிழலில் வள்ளிபோன்ற வனப்பமைந்த ஓர் மாது நிற்பதைக் கண்டார்கள். அவ் வழகிய மாதின் மன வருத்தத்தை அவள் முகம் பளிங்குபோல் காட்டிற்று. அக்காட்சியைக் கண்ட குறவர்கள் அவ் வம்மையாரிடம் சென்று, "அம்மையே, நீர் யார்?" என்று வினவினார்கள். அதற்குக் கண்ணகி, "வல்வினையால் மதுரைமா நகரில் கணவனை யிழந்த கடுவினையேன் யான்" என்று மறுமொழி கூறினாள். இதைக் கேட்ட குறவர்கள் அம்மையாரை இறைஞ்சித் தொழுது நின்றார்கள். அப்பொழுது வானவர் மலர்மாரி பொழிந்து கண்ணகியை விமானத்திலேற்றி அவள் காதலனுடன் விண்ணுலகம் கொண்டு சென்றார்கள். இப் புதுமையைக் கண்ட குறவர்கள் கண்ணகியைத் தம் குலதெய்வமாகக் கொண்டு அவ் வேங்கை மரத்தின் நிழலில் தெய்வம் அமைத்து, சிறு பறையடித்து, கோடு வைத்து ஊதி, கொடுமணி அடித்து, குறிஞ்சிப் பாக்களைப் பாடி, நறுமலர் தூவி தெய்வத்தை வணங்கி நின்

குன்றக் குறவர் கண்ணகியைத் தொழுதல்

றார்கள். அப்பால் தாம் கண்ட புதுமையைத் தம் அரசனிடம் அறிவிக்கப் புறப்பட்டார்கள்.

அப்பொழுது சேர மன்னவன் வஞ்சிமா நகரத்தினின்றும் மஞ்சு சூழ் சோலை மலையின் வளத்தினைக் கண்டு களித்தற்காகப் புறப்பட்டுப் பேரயாற்றங் கரையின் மெல்லிய மணலில் இனிதமர்ந்திருந்தான். அப்போது குன்றக் குறவர்கள் யானைக்கோடும், அகிற் கட்டையும், மான் மயிர்க் கவரியும், மதுக்குடங்களும், சந்தனக் கட்டையும், சிந்துரக்கட்டியும், அஞ்சனத் திரளும், அணி அரிதாரமும், தெங்கின் பழமும், தேமாங் கனியும், கமுகின் குலையும், வாழைக்கனியும், ஏலவல்லியம், இருங்கறி வல்லியும், காயமும் கரும்பும், பூமலி கொடியும், அரியின் குருளையும், குரங்கின் குட்டியும், கானக கோழியும், கோல மயிலும் கொண்டு அரசனைக் கண்டு, "அரசே, நமது மலையில் வேங்கை மரத்தின் கீழ் ஒரு மாது மனம் வருந்தி வந்து நின்று வானவர் போற்ற வானகம் அடைந்ததை நாங்கள் நேராகக் கண்டோம்; அவள் எந்நாட்டவளோ? யார் மகளோ? அறியோம்; இத்தகைய புதுமையை இந் நாட்டில் இதுவரை நாங்கள் அறியோம்" என்று வணக்கமாக அறிவித்தார்கள். அப்பொழுது சேரன் செங்குட்டுவனுடன் தண்டமிழ்ப் புலவரான சாத்தனார் அளவளாவிக் கொண்டிருந்தார். குன்றக்குறவர் கூறிய மொழிகளைக் கேட்ட சாத்தனார் சேரனைப் பார்த்து, "அரசே, இவ் வரலாற்றை நான் நன்றாய் அறிவேன்" என்று

குறவர் இப் புதுமையை அரசனிடம் அறிவித்தல்

சொல்லத் தொடங்கி, தீவினைச் சிலம்பு காரணமாக கோவலன் கொலையுண்டதும் கண்ணகி பாண்டியன் முன்னே சென்று வழக்குரைத்து மன்னவனையும் மதுரையையும் அழித்ததையும் மன்னவன் இறந்த துயரம்பொறுது பாண்டிமாதேவி உயிர் துறந்ததையும் விரிவாக எடுத்துக் கூறினர்.

சாத்தனர் மதுரையில் நிகழ்ந்த புதுமை யுரைத்தல்

இச் செய்தி கேட்ட சேரன் பெரிதும் மனம் வருந்தி வல்வினையால் வளைந்த பாண்டியன் கோல் அவன் உயிர் பிரிந்தமையால் நிமிர்ந்து மறுபடியும் செங்கோலாயிற்று என்று கூறி ஒருவாறு ஆறுதல் அடைந்தான். பின்னர் தாம் ஆளும் குடிகளின் பொருட்டு மாநிலம் காக்கும் மன்னவர் அடைகின்ற துன்பங்களை யெல்லாம் சேரன் சாத்தனரிடம் விரிவாக எடுத்துரைத்து அப்புலவர்க்குப் பரிசு கொடுத் தனுப்பினன்.

அப்பால் சேரமன்னவன் தன்னுடனிருந்த அரசியைப் பார்த்து, "காதலி, உயிருடன் சென்ற பாண்டிமாதேவியின் கற்பையும் செயிருடன் வந்த கண்ணகியின் கற்பையும் சீர்தூக்கிப் பார்த்து எவர் நலம் சீரியதென்று கூறுக" என்று வேண்டினன். அதற்கு அறிவால் சிறந்த அவ்வரசி, இருபெரும் மாதர் கற்பின் ஏற்றம் தாழ்வு உரைக்க மனமற்றவளாய் "தம் காதலர் இறந்த துயரம் பொறுக்க மாட்டாமல் இவ்வுலக வாழ்க்கையை நீத்த அவ்விரு மாதரும் பேரின்பப் பெருவாழ்வை அடைவார்களாக; ஆயினும் நமது

5

கண்ணகிக்கு ஆலயம் அமைக்கக் கருதல்

நாடடைந்த பத்தினிக் கடவுளாகிய கண்ணகியை நாம் போற்றி வழிபட வேண்டும்" என்று கூறினாள். உடனே அரசன் தனது அருகேயிருந்த நூலறி புலவரை நோக்கினான். அவர்களும் அரசன் குறிப் புணர்ந்து அவன் கண்ணகியார்க்கு ஆலயம் அமைக்கக் கருதியுள்ளா னென்பதை உணர்ந்து, "கண்ணகி தெய்வத்துக்குப் பொதிய மலையிலும் இமய மலையிலும் கற்கால் எடுக்கலாம். பொதிய மலையில் கல் எடுத்தால் காவிரியாற்றில் அதனை நீராட்டலும் இமயமலையில் கல் எடுத்தால் அதனைக் கங்கை யாற்றில் நீராட்டலும் ஏற்றதாகும்" என்று மொழிந்தார்கள். இதைக் கேட்ட சேரன் "ஆற்றல் மிகப்படைத்த வழி முறையிற் பிறந்த எனக்கு பொதிய மலையிற் கல் எடுத்து காவிரியாற்றில் நீராட்டுதல் ஏற்றதன்று. மறையவரும் முனிவரும் வாழும் இமயமலையிலேயே சென்று சிலை எடுப்பேன். அம் மலையரசன் கண்ணகிக் கடவுள் எழுத கல் தாரானாயின் பாண்டியனை வென்று பொதிய மலையினின்றும் கற்கால் கொள்வேன்" என்று சேரன் கூறினான்.

இமயமலையில் சிலை யெடுக்கத் துணிதல்

அப்பொழுது அச் சபையிலிருந்த வில்லவன் கோதை என்னும் அமைச்சன் எழுந்து நின்று, "அரசே, முன்னர் கொங்கர் செங்களம் என்னும் போர்க்களத்தில் சோழனும் பாண்டியனும் தோல்வியடைந்து நீ வெற்றி பெற்ற பொழுது அச் செய்தி உலகம் முழுதும் பரவி உன் புகழை நிலை நிறுத்தியது. இன்னும் கொங்கணர், கலிங்

கர், கருநாடர், பங்களர், கங்கர், பல்வேல் கட்டியர் ஆகிய அரசர்கள் வட ஆரியரோடு சேர்ந்து தமிழ்ச் சேனையை எதிர்த்த காலத்து நீ, உனது யானையைச் செலுத்திய ஆற்றல் என்கண்ணை விட்டு ஒரு பொழுதும் நீங்காது. எனது அரசியும் உனது தாயுமாகிய நற்சோணை இறந்தபோது அவள் அங்கத்தை கங்கை யாற்றில் நீ, நீராட்டிய காலத்தில் உன் மீது உடன்று எழுந்து வந்த ஆரிய மன்னர் ஆயிரவருக்கும் ஒருவனாய் நின்று நீ போர் செய்த பெருமையைக் கடுங்கட் கூற்றமே கண்விழித்துக் கண்டதன்றோ.

சேரனது ஆற்றலை அமைச்சன் வியந்துரைத்தல்

இத்தகைய ஆற்றல் வாய்ந்த நீ, இந் நாடு முழுமையும் தமிழ் நாடாகக் கருதி வட நாட்டின் மேல் செல்லுவாயாகில் உன்னை எதிர்க்க வல்லார் யாவர்? ஆகையால் நீ வட நாட்டிற்குப் புறப்படும் செய்தியை அங்குள்ள அரசர்க்கு எழுத்து மூலமாய் முன்னரே அறிவிக்க வேண்டும்" என்று கூறினான். அப்பொழுது அங்கிருந்த அழும்பில் வேள் என்னும் மற்றைய அமைச்சன் எழுந்து, "அரசே, நாம் புறப்படும் செய்தியை வட நாட்டரசர்க்கு எழுத்து மூலமாய் அறிவிக்க வேண்டிய அவசிய மின்று. அந் நாட்டு அரசரது ஒற்றரெல்லாம் நமது வஞ்சிமா நகரத்தில் நிறைந்துள்ளார்களாதலால் நமது நகர வீதிகளில் பறையறைவிப்போமானால் அவ் வொற்றர்களே இச் செய்தியைத் தம் அரசருக்கு முறையாய் அறிவித்துக் கொள்வார்கள்" என்று கூறினான். அதனை அரசனும் உண்மையென்று ஒப்புக்கொண்டு தன் நகர வீதி

களில் வடநாட்டிற்குப் புறப்படும் செய்தியை பறை யறையுமாறு பணித்தான். வஞ்சிமா நகரத்தில் அரச னது பட்ட யானையை அலங்கரித்து அதன்மீது பறை யேற்றி, "எமது அரசன் இமயமலையிற் சிலை எடுப்ப தற்காகப் பெயர்கின்றான். ஆதலால் வடநாட்டில் வாழும் மன்னர் யாவரும் இடுதிறை எதிரேகொண்டு காணவருக. அங்ஙனம் எதிரேற்றுக் காணீராகில் கடலுட் புகுந்து மலைமீதேறியும் வாழுமின். அங்ஙனம் செய்யாவிடில் துறவறம் பூண்டு வாழுமின்" என்று பறையறைந்த ஓசை நாடெங்கும் பரந்தது. அதன்பின் சேரன் அரியாசனத்தில் இனிதமர்ந்தான். அவனைச் சுற்றிலும் அமைச்சரும் படைத்தலைவரும் ஆசானும் கணித வல்லானும் அமர்ந்திருந்தார்கள். அப்பொழுது அரசன் அவர்களை நோக்கி, "வட நாட்டிலுள்ள ஆரிய மன்னராகிய கனகனும் விசயனும் தமிழரசரது ஆற் றலை அறியாது எம்மை இகழ்ந்து கூறினார்கள் என்று இமயமலையினின்றும் இங்கு போந்த முனிவர் வாயி லாய் அறிந்தேன். அம்மொழிகளைக் கேட்டு வாளா யிருப்பது என் போன்ற வேந்தருக்கு இகழ்ச்சி தருவ தாகும். கண்ணகியின் சிலை அமைப்பதற்காக நான் இமயமலையிலெடுக்குங் கல்லை அவ் வரசர் முடியி லேற்றிக்கொண்டு வராமல் திரும்புவே னாயில் பகையரசரை நடுங்கச் செய்யும் ஆற்றல் அற்று குடிகளை வருத்தும் கொடுங்கோ லரசன் ஆகக் கடவேன்" என்று சபதம் செய்தான். அப்பொழுது ஆசான் அரசனைப் பார்த்து,

வஞ்சிமாநக ரில் பறை யறைதல்

சேரன் வஞ் சினம் கூறல்

"அருந்திறல் வேந்தே, அவ்வாரிய அரசர் இகழ்ந்து கூறியது உன்னையல்லவே. சோழனது ஆற்றலையல்லவோ இகழ்ந்துரைத்தார்கள். ஆதலால் சிற்றம் தணிக" என்று கூறினன். உடனே காலக் கணிதன் எழுந்து, "அரசே, வட நாட்டின்மேல் படையெடுத்துச் செல்வதற்கு நல்ல முழுத்தம் இதுவாகும். இம் முழுத்தத்தில் வடதிசை நோக்கிப் புறப்பட்டால் அங்குள்ள அரசர் எல்லாம் உன் அடிபணிந்து நிற்பார்கள். ஆகையால் இப்பொழுதே போருக்கெழுக" என்று மொழிந்தான். இதைக்கேட்ட அரசன் அப்பொழுதே தன் போர் வாளையும் வெண் குடையையும் வடக்கு நோக்கிப் பெயர்த்து வைக்கும்படி ஆணை செய்தான். அப்பொழுது அரண்மனை முரசம் முழங்கியது. வீரர்கள் ஆரவாரித்தனர். படை வீரர்களும் ஐம்பெருங்குழுவும் எண் பேராயமும் கருமவினைஞரும் கணக்கியல் வினைஞரும் தருமவினைஞரும் தந்திரவினைஞரும் மன்னவனை வாழ்த்தி பட்ட யானையின் மீது வாளும் குடையும் ஏற்றி புறநிலைக் கோட்டத்தில் பெயர்த்து வைத்து அரச சபையை அடைந்தார்கள். அன்று அரசன் தன் பெரும் படைத் தலைவர்க்குப் பெருஞ் சோறு வகுத்து தன்மணி முடியில் வஞ்சிமாலை சூடினன். அரண்மனையில் காலை முரசம் ஒலித்தலும், தன் வழிபடு தெய்வமாகிய சிவபெருமான் திருவடி தொழுது அப்பெருமானடிகளைத் தன்முடிமேலணிந்து மறையோராக்கிய வேள்விச் சாலைகளையும் சென்று வணங்கி தன் யானையின் மீதேறினன். அப்பொழுது

நல்ல முழுத்தத்தில் போருக்கு நாட்செய்தல்

ஆடகமாடத்தில் அரிதுயிலமர்ந்த திருமாலின் சேடங் கொண்டு, சிலர் நின்று சேரனைப் போற்றினார்கள்.

சேரன் திருவருள் பெறுதல்

இதைக் கண்ட சேரன் செஞ்சடைக் கடவுளாகிய சிவபெருமானது வண்ணச் சேவடிகளை தன் மணிமுடியில் அணிந்திருந்தமையால் திருமால்சேடத்தைப்பெற்றுதன் அணிமணித்தோளில் தாங்கினான். இவ்வாறுவஞ்சிமாநகரத்தினின்றும் அரசன் புறப்படும் பொழுது நாடகமகளிர் நயம் பெற வாழ்த்தினார்கள். யானை வீரரும் குதிரை வீரரும் மற்றைய போர்வீரரும் அரசனது ஆற்றலைப் புகழ்ந்து போற்றினார்கள். இவ்வாறு சேனையோடு சேரன் வஞ்சிமா நகரினின்றும் நீங்கி, நீலகிரியை அடைந்து அங்கே தங்கினான். அப்பொழுது மின்னொளி போன்ற மேனியொடு சில மாதவர் தோன்றினார்கள். அவர்களைக் கண்ட மன்னவன் எழுந்து வணங்கி நின்றான். அவர்கள் அரச

நீலகிரியில் சேரனும் மாதவரும்

னைப் பார்த்து, "சிவனருளால் தோன்றிய சேரனே, நீ இமயமலையில் நோக்கிச் செல்கின்றாய், அம் மலையில் அருமறை அந்தணர் வாழ்கின்றார்கள்; அவர்களைக் காத்தல் உனது கடமை" என்று கூறி அரசனை வாழ்த்திச் சென்றார்கள்.

அப்பால் கொங்கணக் கூத்தரும் கொடுங்கருநாடரும் தம் குலத்திற்குரிய அணிகளையும் மாலைகளையும் அணிந்து அழகிய மங்கையரோடு சிங்காரப் பாட்டுகள் பாடிக்கொண்டு, சேரனைக் காண வந்தார்கள்.

விலைமாதக் காட்சி

குடகரும் அழகிய மாதருடன் 'காரோ வந்தது காதலர் ஏறிய தேரோ வந்தது' என்னும் கார்காலப் பாட்டைப் பாடிக்கொண்டு வந்தார்கள். அரசன் இவர்களுக்கு ஏற்ற முறையில் பரிசளித்து இனிதிருந்தான்.

அப்பொழுது வாயில் காப்போன் சேர மன்னனிடம் வந்து, "அரசே, நாடக மகளிர் ஐம்பத்திருவரோடும் இசையாளர் இருநூற்றெண்மரோடும் மற்றும் தேரும் யானையும், குதிரையும் கொண்டு தூதுவர் தலைவனாகிய சஞ்சயன் பாசறை வாயி

சஞ்சயன் தூது

லில் வந்துள்ளான்" என்று அறிவித்தான். அரசன் சஞ்சயனை உள்ளே வரும்படி ஆணை செய்ய அத்தூதுவர் தலைவனும் அரசன் முன்னே சென்று, "அரசே, வேற்றுமையில்லாது உன்னோடு கலந்த நண்பராகிய நூற்றுவர் கன்னர் உன்னிடம் ஒரு செய்தி சொல்லுமாறு என்னைத் தூதனுப்பினர். நீ வட திசை நோக்கிச் செல்வது இமயமலையில் ஓர் கல் எடுப்பதற்கேயாயின் அதன் பொருட்டு நீ வழிநடந்து வருந்த வேண்டாம். எனது அரசரும் உனது நண்பருமாகிய நூற்றுவர் கன்னர் தாமே இமயமலையிற் சென்று கல்லெடுத்து அதனைக் கங்கையாற்றில் நீராட்டி உன்னிடம் கொண்டு சேர்ப்பதாய்ச் சொல்லி வரும்படி என்னை யனுப்பினர்" என்றான். இதைக்கேட்ட சேரன் "சஞ்சயனே, வட நாட்டிலுள்ள பாலகுமாரன் என்னும் அரசனது மக்களாகிய கனகனும் விசயனும்விருந்திற்காக பல மன்னர் கூடியிருந்த ஓர் இடத்தில் தமிழாற்றலை இகழ்ந்து தம் வாயில் வந்தவாறு பிதற்றின

ராம். அதையறிந்த இச்சேனை அவர் வாய்க்குறும்பை அடக்கும் பொருட்டு சீற்றங்கொண்டு செல்கின்றது. இதனை என் நண்பராகிய நூற்றுவர் கன்னரிடம் எடுத்துச் சொல்லி இச் சேனை கங்கையாற்றைக் கடத்தற்கு வேண்டிய படகுகள் சேகரித்து வைக்கச் சொல்வாயாக" என்று சொல்லி அத்தூதுவனை அனுப்பினான். அதன் பின்னர் தென்னவன் அனுப்பிய சந்தனமும் முத்துங் கொண்டு சில தூதுவர்கள் சேரன் முன்னே வந்து நின்றார்கள்.

தென்னவன் தூது

தென்னவன் திறையைச்சேரன்ஏற்றுக்கொண்டு திருமுகங்கள் எழுதி முத்திரையிட்டுத் தூதுவர்கையில் கொடுத்தான். அப்பால் அங்கு நின்றும் புறப்பட்டு, நூற்றுவர் கன்னர் சேர்த்து வைத்திருந்த மரக்கலங்களின் உதவியால் கங்கையாற்றைக் கடந்து அதன் வடகரை சேர்ந்தான். அங்கே நூற்றுவர் கன்னர் சேரனை அன்போடு எதிர்கொண்டு வரவேற்று உபசரித்தனர். அவர் நாட்டைக் கடந்து சேரன் பகைவர் நாட்டில் சென்று தன் பாசறையில் இருந்தான். அப்பொழுது

சேரன் போரில் பெற்ற பெரு வெற்றி

வடநாட்டரசரான உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன், முதலிய ஆரிய மன்னர்கள் 'கனக விசயருக்குத் துணையாகத் தமிழரின் ஆற்றலைக் காண்போம்' என்று திரண்டு வந்தார்கள். இவ்வாறு வந்த ஆரிய சேனையின்மீது தமிழ்ச் சேனை பாய்ந்து அதனைச் சின்ன பின்னமாய்ச் சிதைத்துப் பதினெட்டு நாழிகை நேரத்தில் வெற்றிக் கொடியோடு விளங்கிற்று.

வெற்றி பெற்ற சேரன் தும்பைமாலை சூடினான். தோல்வியுற்ற ஆரிய அரசர்கள் சடையும் காவி யுடையும் தரித்துச் சாம்பல் பூசிச் சந்நியாசிகள் போலவும் பீலியைக் கையிற் பிடித்துச் சமண முனிவர்கள் போலவும், பாடும் பாணர் போலவும், ஆடும் கூத்தர் போலவும் கோலம் கொண்டு பல திசைகளிலும் பரந்தோடினர். வணங்காவாயினராய் வண்டமிழ் இகழ்ந்த கனகனும் விசயனும் சிறையாகச் சேரன் கைவசப் பட்டார்கள்.

இவ்வாறு கடும்போர் முடிந்தபின் செங்குட்டுவன் தனது அமைச்சனாகிய வில்லவன் கோதையுடன் பல வீரரை அனுப்பி, இமயமலையினின்றும் கல்லெடுத்து அக் கல்லை கனகவிசயர் தம் கதிர்முடியேற்றி முறைப் பாடி கங்கை யாற்றில் நீர்ப்படை செய்தான். அப்பால் கங்கையாற்றில் தென்கரை போந்து ஆரிய மன்னர் அழகுற அமைத்திருந்த வெள்ளிடைப் பாடியில் தன் சேனையோடு தங்கினான். சேரமன்னன் மனங் களிக்குமாறு அப் பாடியில் மன் பெருங் கோயிலும் மணி மண்டபங்களும் பொன் அரங்கமும் பூம் பந்தரும் விரிபூஞ் சோலையும் திருமலர்ப் பொய்கையும் ஆரிய மன்னர் அமைத்திருந்தார்கள். அங்கு சேர அரசன் சிறப்பாக வீற்றிருந்து கடும்போரில் கைகால் சிதைந்தும் காயம் பட்டும் வீரச் செயல் நிகழ்த்திய போர் வீரரை யெல்லாம் வரவழைத்து அவரது ஆற்றலையும் வீரத்தையும் வியந்து ஒவ்வொருவருக்கும் பொன்னாலாகிய தோடுகள் (Medals) பரிசாகக் கொடுத்தான்.

இமயமலையில் கல்லெடுத்தல்

சேரனது திருவோலக்கம்

இவ்வாறு மன்னவன் மகிழ்ந்து இனிதிருக்கையில் மாடலன் என்னும் மறையோன் கங்கையாற்றில் நீராடி, அரசனது திருவோலக்கம் அடைந்தான். அம் மறையவன் அரசனைப் பார்த்து, "மன்ன, மாதவி பாடிய கானல் வரிப்பாட்டுக் கனகவிசயர் தம் முடித் தலை நெரித்தது" என்று நயம்பட குறிப்பாக உரைத்தான். இதைக்கேட்ட சேரன், "இங்குள்ள பகையரசர் பலர் அறியாத மொழிகளை நீ கூறினாய்; அம் மொழிகளின் பொருள் யாது?" என்று கேட்டான். அதற்கு அம் மறையவன் "அரசே, கடற்கரையில் விளையாட்டுக் காண விரும்பிச் சென்ற மாதவி பாடிய கானல் வரிப் பாட்டால் கோவலன் அப்போது மாதை விட்டு நீங்கினான்; தன் குலக்கொடியாகிய கண்ணகியைச் சேர்ந்தான்; அவளுடன் மாடமூதூர் மதுரை புகுந்தான். அங்கு கொலைக் களப்பட்டான்; அவன் மனைவி உன் நாடு புகுந்து வடதிசை மன்னர் மணிமுடி யேறினாள்" என்று தன் குறிப்புரையை விளங்கக் கூறினான். அதன் பின்னர் தான் மதுரையில் கண்ட காட்சிகளையும் மாடலன் மன்னவனிடம் சொல்லத் தொடங்கினான். "மன்னர் கோவே, நான் பொதியை மலையை வலம் வந்து குவரித்துறையில் நீராடி திரும்பி வரும் வழியில் ஊழ்வினைப் பயனால் மாட மதுரையில் சென்றேன். அங்கு பாண்டியன் நீதி தவறினான் என்றும் கோவலன் இறந்து பட்டான் என்றும் கேள்வியுற்ற மாதிரி என்னும் இடைக்குல மாது 'ஐயோ கோவலன் தீதிலன்; கோம

மாடலன் கண்ணகியின் வரலாறு கூறல்

கன் பிழைத்தான்; அடைக்கலம் இழந்தேன்' என்று அழுது புலம்பி நள்ளிரவில் எரியில் பாய்ந்து இறந்தாள்.

மாடலன் மதுரையில் கண்ட காட்சி

கடுந்தவத்தால் பெருமை வாய்ந்த கவுந்தியடிகள் துயர் பொறுக்க மாட்டாமல் உண்ணா நோன்பை மேற்கொண்டு விண்ணுலகை யடைந்தார். இச் செயல்களையும் இன்னும் மதுரை மூதூர் எரிந்து அழிந்ததையும் எல்லாம் உணர்ந்து என் பதியாகிய புகார் நகரத்திற்குச் சென்றேன். அங்கு தன் மைந்தனுக்கும் மருமகளுக்கும் மதுரை வேந்தனுக்கும் உற்ற துயர் கேட்டு கோவலன் தந்தை கொடுந்துயர் அடைந்து தன் தனத்தை யெல்லாம் தானம் செய்து துறவறம் புகுந்தான். அவன் மனைவியார் தன்மகன் இறந்துபட்ட மாதுயர் பொறாமல் வருந்தி உயிர் துறந்தார். கண்ணகியின் தந்தையும் தன் பெரும்பொருள் அனைத்தையும் தானம் புரிந்து துறவறம் புகுந்தான். கண்ணகியின் தாயார் துயர் பொறுக்க மாட்டாமல் உயிர் துறந்தாள். இன்னும் தன் காதலன் இறந்துபட்ட செய்தி கேட்டு

புகார் நகரில் கண்ட காட்சி

மாதவி யென்னும் பொது மாதும் மாதவர் முன் புண்ணிய தானம் புரிந்து துறவறம் எய்தினாள். அவள் மகளாகிய மணிமேகலையையும் கணிகையர் வாழ்க்கையிற் செலுத்தாது அவளது அழகிய கூந்தலைக் களைந்து துறவறத்தில் செலுத்தினாள். இத் தீச் செய்தியெல்லாம் கேட்டு, அப் பாவத்தை தொலைத்தற் பொருட்டு கங்கை யாற்றில் நீராடுவதற்கு இங்கு வந்தேன்" என்று மாடலன் கூறினான்.

இவற்றை யெல்லாம் கேட்ட சேரன் மறையவனைப் பார்த்து, "பாண்டிய மன்னன் இறந்த பின்னர் அவன் நாடு எந்நிலை யடைந்தது?" என்று வினவினான். அதற்கு மாடலன், "அரசே, நெடுஞ் செழியன் இறந்த பின் கொற்கையிலிருந்த இளங்கோவாகிய வெற்றி வேற் செழியன் ஆயிரம் பொற் கொல்லரைக் கண்ணகி தெய்வத்துக்கு களபலி யிட்டு, பத்தினியின் கடுஞ்சினத்தை மாற்றி அரியாசன மேறி இப்போது அரசியல் நடத்துகிறான்" என்று கூறினான்.

வெற்றிவேற் செழியன் மதுரைக்கு அரசனாதல்

இங்ஙனம் மாடலனும் மன்னவனும் உரையாடிக் கொண்டிருக்கையில் பொழுது சாய்ந்து செவ்வானத்தில் வெண்பிறை விளங்கித் தோன்றிற்று; அதனை அரசன் உற்று நோக்கினான். அப்பொழுது அவன் அருகே யிருந்த காலக்கணிதன் "அரசே, நாம் வஞ்சிமா நகரத்தை விட்டுவந்து இன்று முப்பத்திரண்டு மாதம் கழிந்தன" என்று மொழிந்தான். உடனே அரசன் சித்திரவிதானம் அமைத்த சிங்காசனத்தின் மேலிருந்து மாடலனை வரவழைத்துச் சோழ நாட்டில் பெருங்கிள்ளி யென்னும் அரசனோடு பகைத்த இளங்கோவேந்தர் போரில் இறந்த பிறகு சோழ மன்னனது அரசியல் நன்கு நடைபெறுகின்றதா?" என்று வினவினான். அதற்கு அம் மறையவன், "அரசே, தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறவின் உயிரைக் காக்கும்பொருட்டு, அதனை உண்ணக் கருதிவந்த பருந்திற்குத் தன்

சோழ நாட்டின் நிலைமை

னுடம்பை அரிந்து இரை அளித்த இறைவனது (ழிவ) முறையில் வந்த அரசர் ஆளும் நாட்டில் செங்கோல் திரிந்து வேறுகும் காலமுமுண்டோ? எக் காலத்தும் அவர்க்குத் தீதில்லை" என்றுன். இவற்றை யெல்லாம் சேரன் கேட்டு மறையவனுக்குத் தன் நிறையுள்ள ஐம்பது துலாம் பொன்னை தானமாக அளித்தான். அப்பால் ஆரிய மன்னர் நூற்றுவரை அவர் நாட்டுக்குச் செல்ல சேரன் அநுமதி கொடுத்தான். அருந்தமிழாற்றல் அறியாது தன்னேடு மலைந்த கனக விசயரை மற்றைய தமிழ் அரசர் இருவர்க்கும் காட்டி வரும்படி சேரன் நீலன் என்னும் ஒற்றனை ஏவினுன். பின் தன் சேனையோடு புறப்பட்டு அரசமாதேவி மனம் மகிழவும்

**சேரன் வஞ்சிமாநகர் அடைதல்**

வலம்புரிச் சங்கங்கள் முழங்கவும் வஞ்சிமாநகர் மக்கள் எதிர்கொண் டழைக்கவும் மாலை வெண்குடையின் கீழ் வாகைமாலை சூடிய சேர வேந்தன் வஞ்சிமாநகர் புகுந்தான். அங்கு தன் அரண்மனையை அடைந்து தன் காதலியோடு அளவளாவி மகிழ்ந்திருந்தான். அரண்மனையில் நடந்த ஆடல் பாடல்களால் இன்புற்று ஒரு நாள் வேத்தியல் மண்டபத்தில் இனிது வீற்றிருந்தான். அப்பொழுது நீலன் மாடல மறையோனேடு தோன்றி, "அரசே, உனது ஆணைப்படி கனகவிசயரைக் கொண்டு சோழன் அரண்மனைக்குச் சென்றேம். ஆரிய அரச ரிருவரையுங் கண்ட சோழ மன்னவன் "போர்க்களத்தில் வாளும் குடையும் கைவிட்டு துறவிகோலங் கொண்டு தப்பி யோடிய அரசரைச் சிறையாகப் பிடித்தல் சிறப்பன்று" என்று கூறினுன்.

அதன் பின்னர் ஆரிய அரசர் இருவரையும் கொண்டு பாண்டியன் வாழும் மதுரைமா நகரம் சென்றோம். அங்கு பாண்டிய அரசனைக் கண்டோம். அம் மன்னவன், "அமர்க்களத்தைச் சேரனிடம் ஒப்புவித்து தவக் கோலங் கொண்டு, தப்பி யோடிய அரசர் மீது சேரன் கொண்ட சீற்றம் புதுமையாக இருக்கின்றதென்று கூறினான்" என்று மாடலன் சேரனிடம் அறிவித்தான்.

சேரன் ஆரிய மன்னரைச் சிறை கொண்டதைச் சோழ பாண்டியர் முறையன்றென்று கூறுதல்.

இதைக்கேட்ட செங்குட்டுவன் உள்ளத்தில் சினம் பொங்கி எழுந்தது. அவனது தாமரைச் செங்கண் தழல் நிறங்கொண்டது. இதைக் கண்ட மாடலன் "மன்னர் மன்னவ. சீற்றம் தணிக. இஞ்ஞாலம் முழுவதும் ஆளும் அரசே, நீ இந் நாட்டை அரசாளும் பொறுப்பை மேற்கொண்டு ஐம்பது ஆண்டுகள் நிறைந்தன; இது வரையும் அறக்கள வேள்வி செய்யாது மறக்கள வேள்வியே செய்து வருகின்றாய். உனக்கு முன் இந் நாட்டை ஆண்ட நல்லரசரெல்லாம் இப்பொழுது எங்கே யிருக்கின்றார்கள்? இம் மனித வுடம்பானது நீரிற் குமிழிபோல் நிலை யற்றதென்பதை நீ நன்று யறிவாய்.

சேரன் சீற்றம் எழுந்து கொள்ளல்.

மாடலன் நீதி யுரைத்தல்.

செல்வமும் இளமையும் நில்லா என்பதும் நீ அறிந்ததே யாகும். நீயும் ஆண்டில் மூத்து நரை முதிர் யாக்கையும் கண்டாய். இப் பிறப்பில் மக்களுடம்பு பூண்ட உயிர் மறுபிறப்பில் விலங்காக மாறினும் மாறும். விலங்கின் உடம்புகொண்ட உயிர் மக்கள் உடம்பைக் கொள்

ளினும் கொள்ளும் இவ்வாறு ஒரு வழியாக நில்லாது வினையின் வழியே உயிர் செல்லுமென்பது உயர்ந்தோர் மொழியாகும். இதனை யெல்லாம் உன்னிடம் பரிசு பெறும் பொருட்டு நான் சொல்லுகின்றேனல்லேன். இவ் வுலகில் பிறந்து இறக்கும் மற்றைய மக்கள் போகும் வழியில் நீயும் போவது என்றால் பொறுக்க முடியவில்லை. ஆதலால் வீடு பெறுவதற்குக் காரணமாகிய பெருநல் வேள்வியை நீ செய்யவேண்டும். அதனையும் நாளைச் செய்வோவென்றிராது இன்றே செய்யவும் வேண்டும். அறவினையை நாளைச் செய்வோமென்றிருந்தால் இன்றே நமதுயிர் நீங்கினும் நீங்கும். நாம் இவவுலகில் வாழும் நாள் இவ்வளவென்று வரையறுத்துக் கூறுதல் எவராலும், இயலாது. நீ ஊழியோடு ஊழி உலகங் காத்து நீடுவாழ்க" என்று மறையவன் கூறினான். இதனைக் கவனமாய்க் கேட்ட சேரன் சீற்றம் தணிந்து மாடல மறையோன் சொல்லிய முறையில் வேள்விக்கு வேண்டியனவற்றை அமைக்குமாறு அமைச்சனுக்கு ஆணைசெய்தான். தான் சிறையாகக் கொண்டுவந்த ஆரிய அரசரை விடுவித்து வஞ்சிமா நகரத்தின் புறத்தே ஒரு மாளிகையில் இருக்கச் செய்து தனது பெருவேள்வி முடிந்தபின் அவ் வரசர்கள் தம் நாட்டிற்குப் போகலாமென்றும் அதுவரையும் அம் மன்னர்க்கு ஏற்பன செய்யவேண்டு மென்றும் தனது அமைச்சனுக்கு ஆணை செய்தான். அப்பால் அறநூ லுணர்ந்த அந்தணர், ஆசான், பெருங்கணி, சிறப்புடைக் கம்மியர் இவ

அரச வேள்வி செய்யுமாறு மாடலன் தூண்டுதல்

ரொடு சென்று சிற்ப நூல் வல்லார் பால் பெற வருத்த

**கண்ணகிக் கோட்டத்தில் விழா**

பத்தினிக் கோட்டத்தில் தெய்வ வடிவமாய் அமைந்த கண்ணகியை நிறுத்தி நன்கலனணிந்து பூப்பலி செய்து காப்புக் கடை நிறுத்தி வேள்வியும் விழாவும் வகுத்து அம் மங்கல விழாவினை மாண்புல நடத்தினான்.

வல்வினை வந்துறுத்த கோவலன் குறுமகனால் கொலையுண்டதையும் கண்ணகியின் கண்ணீரால் காவலன் உயிர் இழந்ததையும் மாடல மறையோன் சொல்லக்கேட்டு, மாசாத்துவான் துறவறம் எய்தியதையும் அவன் மனைவியார் உயிர் துறந்ததையும் கேட்ட தேவந்தியும் காவற் பெண்டும் கண்ணகி தோழியும் கண்ணகியைக் காணும்பொருட்டு மதுரைக்கு புறப்பட்டார்கள். அந் நகர் புகுந்து மதுரைமா நகரம் எரிந்து அழிந்ததையும் கண்ணகி மலைமீதேறி விண்ணுலகடைந்ததையும் கேட்டு கற்பரசியை ஆயர் சேரியில் அடைக்கலமாக வைத்திருந்த மாதிரி மனைக்குச் சென்று அவள் மகளாகிய ஐயையுங் கூட்டிக்கொண்டு வையையாற்றின் வழியே சென்று மலைமீதேறி கண்ணகியின் கோயிலை யடைந்தார்கள். அங்கு நின்ற சேரன் செங்

**கண்ணகியின் தோழியர் கோட்டத்திற்கு வருதல்**

குட்டுவனிடம் தாம் இன்னாரென்றுரைத்து கண்ணகியை நினைந்து வருந்தினார்கள். அப்பொழுது கண்ணகி மின்னற் கொடிபோல கால்களிற் பொன்னஞ் சிலம்பணிந்து இடையில் மேகலை புனைந்து கையில் வளையணிந்து காதில் வைரப் பொன் தோடணிந்து விண்ணிலே தெய்வ ஒளியோடு விளங்

கித் தோன்றினாள். இக்காட்சியைக் கண்ட அரசன் அதிசயமடைந்து நின்றான்; அப்பொழுது,

> "தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன் கோயில்
> நல்விருந்தாயினான் நானவன் தன் மகள்
> வெல்வேலான் குன்றில் விளையாட்டுயா னகலேன்
> என்னோடும் தோழிமீர் எல்லீரும் வம்மெல்லாம்"

என்று கண்ணகி கூறிய தெய்வ மொழிகள் ஆகாயத்தில் ஒலித்தன. அதன்பின்னர் அங்கு நின்ற மாதர்கள் தமிழ் நாட்டு மூவேந்தரையும் முறையே வாழ்த்தினார்கள்.

கண்ணகியின் காட்சி

கண்ணகியும் சேரன் செங்குட்டுவன் நீடு வாழ்க என்று வாழ்த்தினாள். அப்பால் சேரன் செங்குட்டுவன் தேவந்தியைப் பார்த்து, மாதவி மகளாகிய மணிமேகலை துறவறம் புகுந்ததற்குக் காரணமென்னை? என்று வினவினான். கோவலன் இறந்துபட்ட செய்தி கேட்டு மாதவி தன் மகளை வருகவென்றழைத்து அவள் காமனது கணைகளுக்கிலக்காகாது அவளது அழகிய கூந்தலைக் களைந்து துறவற நெறியில் சேர்த்தாள். அது கேட்டதும் அரசனும் நகரமும் அருமணியை கடலில் இழந்தவர் போன்று ஆறாத்துன்ப மடைந்தார்கள். இவ்வாறு சொல்லி முடித்ததும் தேவந்தி தெய்வமுற்றாள், அவள் கூந்தல் குலைந்து விழுந்தது, புருவம் துடித்தது, செவ்வாய் மடித்தது, திருமுகம்வியர்த்தனள், செங்கண் சிவந்தனள், கைகளை உயர்த்தினள், கால்பெயர்த்தாடினள். அவள்மீது பாசாண்டச் சாத்தன் ஆவேசமாகி மாசல்மற்றையவனை நோக்கி இச்செங்

தேவந்தி ஆவேசமுறுதல்

கோட்டு மலைச் சிகரத்தில் ஒரு சுனை யிருக்கின்றது, அச்சுனையில் நீராடினோர் பண்டைப் பிறப்பினை அறிவார்கள் ; அச் சுனை தெய்வத் தன்மை பொருந்தியதாகும் ; அச்சுனை நீர் உன் கையகத்துள்ளது ; அதனை இப்பெண்கள்மீது தெளிப்பாயாக என்று சொல்லி மூன்று பெண்களைக் காட்டினான். அவர்கள்மீது அந்நீரைத் தெளித்த அளவில் மூவரும் தம் பழம் பிறப்புணர்ந்தார்கள். அம்மூவரும் கண்ணகியைக் குறித்துப் புலம்பும்போது கண்ணகியின் தாயும் கோவலன் தாயும் மாதிரியுமாக அமைந்திருக்கக் கண்டு மன்னவன் வியப்படைந்தான். முற்பிறப்பில் கோவலன் தாயும் கண்ணகி தாயும் சேரநாட்டில் வாழ்ந்த ஒரு

பழம் பிறப் புரைத்தல்

செட்டிக்கு இரட்டைப் பிள்ளைகளாகப் பிறந்திருந்தார்கள். மாதிரிஎன்னும் இடைக்குலமாது முற்பிறப்பில் அனந்தையம்பதியில் ஓர் அந்தணனுக்கு மகளாய்ப் பிறந்திருந்தாள் என்று சொல்லி சேர மன்னனைப் பார்த்து நீ சிவபெருமானுடைய அருளினால் தோன்றி மாநிலம் விளக்கிய மன்னவனாதலின் செய்தவப் பயன்களும் சிறந்தோர் வடிவமும் நேராகக் காணும் பேறு பெற்றாய்; நீ ஊழி ஊழிதோறும் உலகம் காத்து நீடு வாழ்க என்று வாழ்த்தினான். அப்பால் மன்னவன் பத்தினிக் கோட்டத்தில் விளங்கிய தெய்வத்திற்கு விழா எடுக்குமாறு தேவந்தியிடம் சொல்லி கண்ணகி தெய்வத்தை மும்முறை வலம் வந்து வணங்கி நின்றான். அப்பொழுது அருஞ்சிறையினீங்கிய ஆரிய மன்னரும் பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும் குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும் கடல் சூழ்

கண்ணகி வரம் தருதல்

இலங்கைக் கயவாகு வேந்தனும் பத்தினி தெய்வத்தை வணங்கி சேர மன்னனைப் போல நாங்களும் எங்கள் நாட்டில் உனக்குச் செய்யும் விழாவில் நீ எழுந்தருளி, அருள்புரிய வேண்டுமென்று விண்ணப்பம் செய்தார்கள். அப்பொழுது தந்தேன் வரம் என்று ஆகாயத்தில் ஒரு குரல் எழுந்தது. அது கேட்ட சோனும் மற்றைய அரசரும் வீடு கண்டவர் போல் விம்மிதம் எய்தினார்கள். அப்பால் சேர அரசன் மாடல மறையோனோடு வேள்விச் சாலைக்குச் சென்றான். அவ்விருவருடன் ஆசிரியர் இளங் கோவடிகளும் சென்றார். அப்போது பத்தினி தெய்வம் தேவந்தியின்மேல் திகழ்ந்து தோன்றி, நீ வஞ்சிமா நகரில் மணி மண்டபத்தில் உன் தந்தையாருடனிருந்தாய்; அப்போது அங்கு வந்த ஒரு நிமித்திகன் உன்னைப் பார்த்து அரச இலக்கணம் உன்பால் அமைந்து விளங்குகின்றது என உரைத்தான். அவ்வாறு சொல்லிய நிமித்திகனை நீ வெகுண்டு நோக்கி என் தமயனாகிய செங்குட்டுவன் இருக்க இவ்வாறு முறையின்றிச் சொன்னாய் என முனிந்து அப்பொழுதே குணவாயில் கோட்டத்தில் சென்று, துறவு பூண்டு சிந்தை செல்லாச் சேணெடுந்தூரத்து அந்தமில் இன்பத்து அரசாள் வேந்தனாய் விளங்குகின்றாய் என்று இளங்கோவடிகளது வரலாற்றை இனிது எடுத்துரைத்தது. இவ்வாறு கற்புக் கடம் பூண்ட பொற்புடைய தெய்வத்திற்கு ஆலயம் அமைத்து வழிபாடு செய்து தமிழ் மக்கள் பெரும் பேறு பெற்றார்கள்.

கண்ணகி ஆசிரியரது பெருமையுரைத்தல்

சிலப்பதிகாரம் முற்றிற்று

# சிலப்பதிகார நூல் நயம்

## 1-வது அதிகாரம்

### ஆசிரியர் பெருமை

சிலப்பதிகாரம் என்னும் சிறந்த நூல் செய்த புலவர் பெருமான், இளங்கோ வடிகள் என்னும் பெயரால் இக்காலத்தில் விளங்குகின்றார். இப் பெயர் அவரது இயற்பெயரன்றென்பதும், சிறப்பாய் அப்புலவர்க்கு அமைந்த பெயரென்பதும் நன்கு விளங்குகின்றது. இவ்வாசிரியர் அரசிளங் குமரனாய் அமைந்திருந்த தன்மையால் "இளங்கோ" என்றும், இல்லறத்தை நீத்து துறவறம் பூண்டு ஒழுகிய தன்மையால் "அடிகள்" என்னும் சிறப்புப் பெயர் பெற்றதாகத் தெரிகின்றது. இப்பெரியார் துறவறத்தை மெற்கொண்ட வரலாறு சிலப்பதிகாரத்திலேயே கூறப்பட்டுள்ளது.

ஆசிரியர் அரச முனிவர்

சேரலாதன் என்னும் சேர நாட்டரசனுக்கு செங்குட்டுவன் என்ற மூத்த மகனும், இளங்கோ என்ற இளைய மகனும் இருந்தார்கள். இவர்கள் இருவரும், கல்வி கேள்விகளில் சிறந்து எல்லா நலங்களும் அமைந்து விளங்கினார்கள். ஒரு நாள் அரசன் தன் மக்கள் இருவரோடும், அமைச்சர்

முதலிய ஐம்பெரும் சபையினரோடும் அத்தாணிமண்டபத்தில் அரச கோலத்தோடு வீற்றிருந்தான். அப்பொழுது,

அரசிளங்குமரன் துறவியாய வரலாறு

அச்சபை நடுவே, முகக்குறியால், வரும் பொருளுரைக்கும் வன்மையுடைய நிமித்திகன் ஒருவன் வந்து நின்று, சிறிது நேரம், அரசனையும், அவன் மருங்கிலிருந்த மக்கள் இருவரையும், முடிமுதல் அடிவரை நெடிது நோக்கி, சேரலாதனைப் பார்த்து, 'அரசே உனக்குப் பின்னால் இந்நாட்டை அரசாளும் உரிமை இளைய மகனுக்கே உண்டு', என்று கூறினான். இச்சொல் செவியிற் பட்டதும், செங்குட்டுவன், உள்ளத்தில் சினம் பொங்கி எழுந்தது. அவன் கண்களில் தீப்பொறி பறந்தது. மெய் முழுதும் நடுங்கிற்று. இக் கோபக் குறிகளோடு சேரலாதனை விழித்துப் பார்த்தான். இந்நிகழ்ச்சியைக் கண்ட சபையோர் என்ன நேருமோ என்று இமையாமல் எதிர்பார்த்திருந்தார்கள். அப்பொழுது இளங்கோ, அச்சபையில் எழுந்து நின்று, "இவ்வரசாங்க பாரத்தைத் தாங்குவதற்கு எவ்வகையாலும் தகுதியுடையவன் என் தமையனே யாவான். எனக்கு அரச உரிமைகள் ஒன்றும் வேண்டாம். அவ்வுரிமைகளில் நான் ஒரு சிறிதும் பற்றுடையே னல்லன், என்பதை எல்லோரும் அறிந்து கொள்ளும் பொருட்டு இப்பொழுதே துறவறம் கொள்ளப் போகின்றேன்" என்று சொல்லி, உலக இன்பத்தை ஒருங்கே நீத்து, அப்பொழுதே அருகன் கோட்டத்தில் சென்று, அறிவு நூல்களை ஆராய்ந்து அரும்புலமை வாய்ந்து விளங்கினார்.

இவ்வாறு துறவறம் பூண்டிருந்தாலும், தமிழகத்தின் தன்மையை அவர் நன்றாய் அறிந்திருந்தார் என்பது நன்கு தெரிகின்றது. பாண்டிய நாட்டுப் புலவரான சீத்தலைச் சாத்

தனர், மாட மதுரையில் தீப்பற்றியதையும், கற்பினால் அழல் விளைத்த கண்ணகியின் முன்னே மதுரைமா தெய்வம் வந்து தோன்றி, முன் வினைப்பயனை எடுத்து மொழிந்ததையும் நேரில் கண்டிருந்தும் இளங்கோ வடிகளைப் பார்த்து, 'ஐயனே! இக்கதை முடியுடை வேந்தர் மூவர்க்கும் உரியது. ஆதலால் அடிகளே இதனை அருள வேண்டும்' என்று வேண்டிய ஒன்றே ஆசிரியரது நிரம்பிய புலமைக்கும், அகன்ற அறிவிற்கும் சிறந்த சான்று பகர்வதாகும்.

அவரது நிரம்பிய புலமை.

சாத்தனார் சொல்லிய சரித்திரத்தில் விளங்கித் தோன்றிய மூன்று கொள்கைகளை, ஆசிரியர் உலகோர் அறியும் வண்ணம் உணர்த்தப் போந்தார்.

நூலில் அமைந்த மூன்று உண்மைகள்

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டுமென்பதும், சூழ்வினைச் சிலம்பு காரணமாகச் சிலப்பதிகார மென்னும் பெயரால் நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்."

என்று அடிகள் கூறுகின்றார். அரசியலாகிய செங்கோன்மை வழுவி நீதி தவறும் மன்னவன் அறக்கடவுளால் ஒறுக்கப் படுவான் என்பது ஆசிரியரது முதற் கொள்கையாகும். கற்பெனும் திண்மையை தன்னிடத்தே கொண்ட மாது மண்ணுலகில் வாழும் மக்களாலும், விண்ணுலகத்தில் வாழுந் தேவர்களாலும், போற்றப் படுவாள் என்பது ஆசிரியரது மற்றைய கொள்கையாகும். இன்னும் ஒருவன் ஒரு பிறப்பில் செய்யும் நல்வினை தீவினைகளின் பயனை, மறுபிறப்பில் திண்ணமாய் அடைவான் என்பது ஆசிரியரது மூன்றாவது கொள்கையாகும். இம்மூன்று உயரிய உண்மைகளையும் உல

கத்தில் வாழும் மக்கள் அறிந்து உய்யுமாறு ஆசிரியர் சிலப்பதிகார மென்னும் சீரிய நூலைச் செய்தார்.

அக்காலத்தில் தமிழ் நாட்டை அரசு புரிந்த மன்னரின் அரசியல் முறையை அறிந்து கொள்வது இவ்வாசிரியருக்கு மிக எளிதாயிருந்தது. சேர நாட்டை யாண்டு வந்த செங்குட்டுவன் தன் உடன் பிறந்தவனாய் உடன் வளர்ந்தவனாய் இருந்தமையால் அவ்வரசனது மனப்பான்மையையும், ஆற்றலையும், மற்றெவரும் அறிய முடியாத நுணுக்கத்துடன் ஆசிரியர் அறிந்திருந்தது இயல்பே யாகும். இன்னும் பாண்டியன் ஆண்டுவந்த மதுரைமா நகரத்தில்பிறந்து வளர்ந்த புலவர் பெருமானாகிய சீத்தலைச் சாத்தனார், இளங்கோவடிகளுக்கு உயிர் நண்பரா யமைந்திருந்தமையால் அவர் வாயிலாகப் பாண்டி நாட்டின் வளத்தினையும் அரசியல் முறையினையும் அடிகள் நன்கு யறிந்திருந்தார். இத்தகைய சிறப்பு வாய்ந்த ஆசிரியர் தமிழ் மொழியிலும் தலை சிறந்த புலமை உற்றவராய் இருந்தமையால் அவர் எழுதிய சிலப்பதிகார மென்னும் சீரிய நூல் சொல்லாலும் பொருளாலும் சிறந்து விளங்குகின்றது.

தமிழகத்தின் தன்மையை ஆசிரியர் நன்கு அறிந்தவர்

இவ்வாசிரியர் எழுதிய நூலின் போக்கை நோக்குமிடத்து இவரது சமயம் சமண சமயமென்றே தெரிகின்றது. முதற்கண் இவர் துறவறம்பூண்டு வீற்றிருந்த இடம் "குணவாயில் கோட்டம்" என்று கூறப்படுகின்றமையானும் கோட்டம் என்னும் சொல்லுக்கு அடியார்க்கு நல்லார், 'அருகன் கோயில்' என்று பொருள் கூறுகின்றமையாலும், 'இளங்

கோவடிகள் 'என்னும் இவருடைய பெயரிலேயே காணப்படு கின்ற 'அடிகள்' என்னும் சொல் சமண சமயத்தில் துறவிகளைக் குறிக்கும் சொல்லாக விளங்குகின்றமையாலும் ஆசிரியர் சமயம் சமண சமயமே என்று ஒருவாறு அறியப் படுகின்றது.

*அருக சமயமே ஆசிரியரது சமயம்*

இன்னும் ஆசிரியர் தமது நூலில் சைவ சமய தெய்வங்களாகிய சிவபெருமானையும் ஆறுமுகப் பெருமானையும் வைணவ சமய தெய்வமாகிய திருமாலையும் நிறைந்த சொற்களால் புகழ்ந்து வாழ்த்தினாலும் சமண சமயக் கொள்கைகளையே விளக்கமாகவும் விரிவாகவும் கூறியிருக்கின்றார். கோவலனும் கண்ணகியும் புகார் நகரத்தினின்றும் புறப்பட்டு மதுரைமா நகரம் சேரும்வரையும் அவர்கள் நடந்த வழிகளையும் கடந்த காடுகளையும் விரிவாகக் கூறும் பகுதியில் அவ்விருவருக்கும் வழித்துணையாக வந்து அருள் செய்கின்ற பெரியாரெல்லாம் அருக சமய ஆன்றோர்களாகவே விளங்குகின்றார்கள். புகார் நகரினின்றும் ஒரு காதவழி நடந்ததும் கவுந்தியடிகள் என்னும் சமண சமயப் பெரியார் தோன்றுகின்றார். அவர் இருவருக்கும் துணையாய் மதுரைமா நகரம் வரையும் செல்கின்றார்.

*அருக சமய ஆன்றோர்கள்*

இம்மூவரும் செல்லும் வழியில் அறஞ்சாற்றும் அருக சமயச்சாரணர் தோன்றுகின்றார். சமணசமயக் கொள்கையை விளங்க உரைக்கின்றார். அருகக் கடவுளைப் போற்றிப் புகழ்கின்றார். பின்னர் வழிமுழுதும் நடந்து மதுரைமா நகரம் சென்று ஆயர் சேரியில் கண்ணகியை மாதிரி என்னும் இடைக்குல மாதிடம் அடைக்கலமாகக் கொடுக்கும்பொழுது அங்கும் செவ்விய மேனியுடைய வானவன் ஒருவன் வந்து நிற்கின்றான். அவனும் அருக சமய உண்மைகளையும், மந்திரத்

தின் திறத்தினையும் எடுத்துரைக்கின்றான். இவ்வாறு கதை நிகழ்வதற் கிடமில்லாது நாயகனும் நாயகியும் வழி நடந்த பகுதியைச் சொல்லவந்த இடமே தமது சமயக் கொள்கைகளை எடுத்துரைத்தற்கு ஏற்ற இடமெனத் துணிந்து அவ்வாறே ஆசிரியர் சமண சமயக் கொள்கையை விரித்துரைத்தார்.

அருக சமயக் கொள்கைகள்

இன்னும் சமண சமயத்தின் அடிப்படையான கொள்கையை ஆசிரியர் தமது நூலின் முடிந்த முடிவாக அறுதியிட்டுக் கூறுகின்றார். சமண சமயத்தில் அடிப்படையாகவிளங்கும் கொள்கையை மணிமேகலை ஆசிரியர்

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும் பேரின்பம்
பற்றின் வருவது முன்னது, பின்னது
அற்றோர் உறுவது அறிக."

என்று அருளிப் போந்தார். பிறப்பால் வருவது துன்பமே என்றும், பிறவாமையே பேரின்பமென்றும், அப் பிறவாமையை அடைவதற்கு, உலகப்பற்றை யெல்லாம் ஒருங்கே துறக்கும் துறவறமே வழியென்றும் சமண சமயம் கூறுகின்றது. இக் கொள்கையையே ஆசிரியர் சிலப்பதிகாரத்தின் முடிந்த முடிவாக அமைத்திருக்கின்றார். கதையில் தலைமகனும் தலைமகளும் விண்ணுலகடைந்து இன்பம் பெறுகின்றார்கள். இவர்களை யொழிய எஞ்சி நின்றவர் யாவரும் துறவியாகின்றார்கள். கோவலன் இறந்தது கேட்ட மாசாத்து

1. துறவு

வான் என்னும் அவன் தந்தை துயர் பொறுக்கமாட்டாமல் துறவறமடைந்தான். கண்ணகி என்னும் கற்புடைய மங்கையின் தந்தையாகிய மாநாய்கன் என்பான் தன் மகளும் மருகனும் அடைந்த துன்பம் கேட்டுத் துயர் பொறுக்கமாட்டாமல் துறவறம் அடைந்

ளின் முடிவில் ஆசிரியர் அமைத்திருக்கின்ற வெண்பாக்கள் மிகுந்த நயம் உடையனவாய் விளங்குகின்றன. அந்தி மாலை சிறப்புச் செய் காதையில் மாதவி கோவலனுடன் கூடி அடைந்த இன்பத்தையும் கண்ணகி தன் கணவன் பிரிவாற்றாது அடைந்த துன்பத்தையும் ஆசிரியர் எடுத்துரைத்து இறுதியில் ஓர் அழகிய வெண்பாவால் அப்பொருளைச் சுருக்கமாக உரைக்கின்றார்.

அவரது வெண்பாக்களின் நயம்

"கூடினார் பால் நிழலாய்க் கூடார் பால் வெய்யதாய்க்
காவலன் வெண்குடைபோலக் காட்டிற்றே—கூடிய
மாதவிக்கும் கண்ணகிக்கும் வானூர்மதி விரிந்து
போதவிழ்க்கும் கங்குற்பொழுது"

என்று அடிகள் கூறுகின்றார். அரசனது வெண்கொற்றக் குடையின் கீழ் அமைந்து வாழும் குடிகளுக்கு அக்குடை இன்பத்தையும், அதன் கீழ் அமையாது பகைவராயினார்க்கு அக் குடை துன்பத்தையும், கொடுப்பதுபோல வானத்தே குளிர்ந்த கதிர்களை விரித்துக்கொண்டு தோன்றிய சந்திரன் மலர்களின் முகை யவிழ்த்து மலர்விக்கும் மாலைப் பொழுதில் கோவலனொடு கூடிய மாதவிக்கு இன்பத்தையும் கூடாத கண்ணகிக்குத் துன்பத்தையும் கொடுத்தான் என்பதே இவ் வெண்பாவின் கருத்தாகும். மாலைப் பொழுதில் தோன்றிய சந்திரன் மாதவிக்கு இன்பத்தையும் கண்ணகிக்குத் துன்பத்தையும் கொடுத்தான் என்று சொல்வதோ டமையாது, 'போது அவிழ்க்கும் கங்குற் பொழுது' என்று ஆசிரியர் கூறிய அழகு ஆராய்தற் குரியதாகும். மாலைப் பொழுதில் சந்திரன் வருகையால் சில மலர்கள்

ஒரு வெண்பாவின் கவி நயம்

முகையவிழ்ந்து மலரும் என்பது கவிகள் எப்பொழுதும் கூறுகின்ற ஓர் உண்மையாகும். காலையில் கதிரவனைக் கண்டு தாமரை மலர்வதுபோல மாலையில் சந்திரனைக்கண்டு குமுதம் மலரும். இக் குமுத மலரேயன்றி மாலைப்பொழுதில் மதியின் வருகையால் மலரும் மற்றொரு மலரும் உண்டு. அம் மலரைத் தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார்,

> "காலையரும்பி பகலெல்லாம் போதாகி
> மாலைமலரு மிந்நோய்"

என்று அருளிப் போந்தார்.

காதலாகிய பூ, காலையில் அரும்பாகவும் பகலெல்லாம் முகையாகவும் மாலையில் மலராகவும் விளங்குமென்று நாயனார் கூறியவாறு மாலைப் பொழுதில் குமுதம் மலர்வதைப் போலவே காதலும் மலரும். சந்திரன் குமுதத்தைத் தன் குளிர்ந்த கதிர்களால் மலர்விப்பதுபோலவே காதல் மலரையும் மலர்விக்கின்றான். இவ்வாறு சந்திரன் விரித்த காதல் மலர் மாதவிக்கு இன்பம் பயந்தது. ஏனெனில் காதலனாகிய கோவலன் மாதவியுடனிருந்தான். ஆனால் கண்ணகியோ தனியா யிருந்தமையால் காதல் நோயின் வெம்மையால் துயருற்றாள். இவ் வழகிய வெண்பாவில் அமைந்துள்ள மற்றைய நயங்கள் ஆராயுமிடத்து அதிகமாய்ப் பெருகுதலை அறிஞர் உய்த்துணர்ந்துகொள்வார்கள்.

இன்னும் வழக்குரை காதையின் இறுதியில் விளங்கும் வெண்பாவைப்போல பலவகைப்பட்ட நயங்களும் ஒருங்கே யமைந்த வெண்பாவைக் காண்பது தமிழ் நூல்களில் அரிதாகும்.

கண்ணகி பாண்டிய அரசன் முன்னே வந்து நின்ற கோலத்தை ஆசிரியர்,

"மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச் சிலம்பும் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றான் அக்காரிகை தன்சொற் செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்"

மற்றொரு வெண்பாவின், நயம்

என்று அருளியிருக்கின்றார். இவ்வெண்பாவின் நயத்தை மற்றோரிடத்தில் விரித்துரைத்தலால் கூறுவது மிகையாகும். இவ்வாறு உறுதியாகவும் அழகாகவும் கண்ணகியின் கோலத்தையும் பாண்டியனது செம்மையையும் நமது உள்ளமாகிய பளிங்கில் ஓவியம்போல் எழுதி அமைக்கும் ஆசிரியர் கவித்திறம் தமிழ் நயந்தெரி புலவர்க்கு நல்விருந்தாகும். இன்னும்,

"வேலை மடல்தாழை உட்பொதிந்த வெண்தோட்டு
மாலைத் துயின்ற மணிவண்டு—காலைக்
களிநறவம் தாதூதத் தோன்றிற்றே காமர்
தெளிநிற வெங்கதிரோன் தேர்"

என்று ஓர் அழகிய வெண்பா அமைத்திருக்கின்றது. கடற்கரையில் பெரிய மடல்களை உடைய தாழையின் உள்ளே பொதிந்த வெள்ளிய தோட்டைப் பள்ளித் தாமமாய்க் கொண்டு மாலைப் பொழுதில் துஞ்சிய மணிவண்டு காலைப் பொழுதில் மதுநிறைந்த நறவமலரின் இதழ்களில் ஊதி அதன் நலத்தை நுகருமாறு கதிரவன் தோன்றினனென்று காலையின் வருகையைக் கவிநயம்தோன்றக் கூறியுள்ளார். இவ்வெண்பாவின் சொல்நயமும் பொருள்நயமும் கற்போர் கருத்தைக் கவரும் தன்மை வாய்ந்து விளங்குகின்றன.

இசை நயம்

இன்னும் இவ்வாசிரியர் அருளிப்போந்த கானல் வரிப் பாக்களும், வேட்டுவரிப் பாக்களும், மற்றும் அம்மானை வரி, கந்துகவரி, ஊசல்

வரிப்பாக்களும் மிகுந்த இசை நயம் (Lyric Charm) வாய்ந்து விளங்குகின்றன.

ஆகவே, இதுகாறும் கூறியவாற்ருல் சிலப்பதிகார ஆசிரியருக்கு இளங்கோவடிகள் என்னும் பெயர் சிறப்புப் பெயராய் விளங்குகின்றதென்றும், அவர் துறவறத்தை மேற்கொண்டு விளங்கிய பெருந் தமிழ்ப் புலவர் என்றும், துறவியாயினும் தமிழகத்தின் தன்மையையும் தமிழரசின் முறையையும் நன்கறிந்திருந்தாரென்றும், அவரது சமயம் சமண சமயமென்பது அவரது நூலில் விளங்கும் அகச்சான்றுகளாலேயே அறியப்படுகின்றதென்றும், இந்நூலில் திருக்குறளின் திருந்திய மணம் பல இடங்களில் வீசுகின்றதென்றும், தமிழ்மொழியின்பால் இவர் சிறந்த பற்றுடைய பெரியாரென்றும், உலகில் வாழும் உயிர்களிடத்து அருள் மிக வாய்ந்த ஆன்ரேரென்றும், இவரது வெண்பாக்கள் சொல்லழகும் பொருளழகும் உடையனவாய்த் திகழ்கின்றன வென்றுஞ் சுருக்கமாக உணர்த்தப்பட்டது.

முடிவுரை

---

## 2-வது அதிகாரம்

---

### அரச நீதியும், அரசியலும்

அக்காலத்தில் தமிழ் நாட்டை ஆண்டு வந்த அரசர்கள் நீதியைக் கண்ணும் ஆவியுமாகப் போற்றிஞர்கள் என்பது சிலப்பதிகாரத்தால் நன்கு விளங்குகின்றது. குடிகளின் நலத்தைத் தம் நலம்போற் பேணியும், தம் குடைக்கீழ் அமைந்து வாழும் குடிகள் எவ்வகைத் துன்பத்தாலும் நலிவுருது இன்புற்று வாழ்வதையே குறிக்கோளாகக் கொண்டும், தமிழரசர்

கள் ஆண்டு வந்தார்கள் என்று தெரிகின்றது. நீதி தவறாது அரசாளும் முறையில் தமிழ் நாட்டு மூவேந்தரும் ஒருவரை ஒருவர் வெல்ல முயன்றனர் என்பதும் அறியப்படுகின்றது.

தமிழ் நாட்டு அரசியல்

ஒவ்வொரு தமிழ் நாட்டிலும், முற்காலத்தில் நீதி போற்றிய அரசரது அரும் பெரும் செயல்கள் கர்ண பரம்பரைக் கதைகளாக வழங்கி வந்தன. இத்தகைய வழி முறையில் வந்த அரசர்கள் தம் முன்னோர் செயல்களையே குறிக்கோளாகக் கொண்டு நீதிபோற்ற முயன்றார்கள்.

சோழ நாட்டில் அரசுபுரிந்த மன்னவனும் அந்நாட்டில் வாழ்ந்த குடிகளும் சோழ நீதியைப் பெரிதும் பாராட்டினார்கள். தன் கணவனை இழந்து கையிற் சிலம்பும் கண்ணில் கண்ணீருமாக பாண்டிய மன்னன் முன்னே வந்து நின்ற கண்ணகி

சோழ நீதி

யைப் பார்த்து, அவ்வரசன், "மாதே! நீ யார்" என்று கேட்டவுடன் கண்ணகி கூறுகின்றாள்,

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சு சுட
தான் தன் அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும் பெயர்புகார் என் பதியே."

என்று கண்ணகி தான் பிறந்து வளர்ந்த சோழ நாட்டின் நீதியைப் பாண்டிய மன்னன் அறியுமாறு எடுத்துரைத்தாள்.

முன்னொரு காலத்தில் சோழ நாட்டை மனுநீதி கண்ட சோழன் என்னும் பெயர்பெற்ற மன்னவன் ஆண்டுவந்தான். அவ்வரசனது இளங் குமரன் ஒருநாள் அரண்மனையினின்றும் புறப்பட்டுத் தேரிலேறி வீதியில் செல்லும்பொழுது

ஒரு பசுவின் இளங் கன்றானது துள்ளி ஓடித் தேர்க்காலில் விழுந்து இறந்தது. கன்றை இழந்த தாய் மிகத் துயரமுற்று முகத்தில் கண்ணீர் தாரை தாரையாய் ஒழுக மன்னுயிரைத் தன்னுயிர்போற் காக்கும் மனுச்சோழன் அரண்மனைக்குச் சென்று அங்குக் கட்டியிருந்த அசையா மணியைத் தன் கொம்பினல் அசைத்தது. மணியோசை கேட்ட மன்னவன் அரண்மனையினின் றும் இறங்கிப் பசுவின் துன்பத்தை அறிந்து மனம் நொந்து, கன்றை இழந்து வருந்தும் பசுவைப்போல நானும் என் மகனை இழந்து வருந்துவதே முறை என்று துணிந்து தன் அருமந்த மைந்தன்மேல் தேர்க்காலைச் செலுத்தினன்.

மனு நீதி கண்ட சோழன்

"ஒரு மைந்தன் தன் குலத்துக் குள்ளான் என்பதும் உணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன் மைந்தன்
மருமந்தன் தேராழி உற ஊர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோதான்."

என்று சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில்கூறுகின்ற வாறு தன் மகனென்றும் பாராது, தன் குலத்துக்கு ஒரு மைந்தனே உள்ளான் என்பதையும் உணராது, கன்றை இழந்து வருந்துவது ஓர் பசுத்தானே என்றும் எண்ணது, நீதியையே பெரிதாக நினைத்துத் தன் மைந்தன்மேல் தேர்க் காலைச் செலுத்திய சோழ அரசன் செங்கோன்மை தமிழ் நாட்டில் ஓர் பழங் கதையாகப் பரவியிருந்தது. நீதி தவறிய பாண்டிய மன்னனிடம் கண்ணகி நீதி தவறுத சோழ மன்ன வன் சிறப்பை எடுத்துரைத்தாள்.

இன்னும் மற்றொரு சோழ அரசன் தன்னிடம் அடைக் கலம் புகுந்த ஓர் புறவின் உயிரைக் காக்கும்பொருட்டு

அதனைப் பின்தொடர்ந்து கொல்லவந்த பருந்திற்குத் தான் இரையாகி, சொன்ன சொற்பிழையாமல் நீதி செலுத்திய செயலும் சோழ நாட்டில் பழங்கதையாகவே நின்று நிலவியது. இக் கதையைச் சிலப்பதிகார ஆசிரியர்,

சிபிச் சக்கரவர்த்தி

"குருநடைப் புறவின் நெடுந்துயர் தீர
வெரிதரு பருந்தின் இடும்பை நீங்க
அரிந்து உடம்பிட்டோன் அறந்தரு கோலும்
திரிந்து வேறாகும் காலமும் உண்டோ."

என்று அழகாகக் கூறுகின்றார். இவ்வாறு சோழ அரசர்கள் நீதியை உயிரினும் அருமையாய்ப் போற்றிய நீர்மை அக் காலத்திய மக்களால் பெரிதும் வியந்து பாராட்டப் பெற்றது. சோழ அரசர் புகழைப் பாடப் போந்த மாதர்கள்

"புறவு நிறைபுக்குப் பொன்னுலகம் ஏத்தக்
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்யார் அம்மானை
குறைவில் உடம்பரிந்த கொற்றவன் முன் வந்த
கறவை முறை செய்த காவலன்காண் அம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோர் அம்மானை."

என்று அம்மானை வரியில் கூறுவதாலும், இவ்வுண்மை இனிது விளங்குகின்றது.

இவ்வாறே பாண்டிய நாட்டை ஆண்டுவந்த மன்னவன் நீதி காக்கும்பொருட்டுச் செய்த அரும்பெரும் செயல்கள் பழங்கதைகளாகவே பாண்டிய நாட்டில் பரவியிருந்தன. முன்னொரு காலத்தில் பாண்டிய நாட்டைப் பொற்கைப் பாண்டியன் என்னும் மன்னவன் அரசாண்டு வந்தான். அவனது முறை தவறாத ஆட்சியில் அறம் வளர்ந்து மறம் தளர்ந்தது.

பாண்டிய நீதி

அம்மன்னவன் காவலில், மாதவர் நோன்பும், மடவார் கற்பும், சிறந்தோங்கி வளர்ந்தன. அந்நாட்டில் வாழ்ந்துவந்த அந்தணன் ஒருவன் துறை முழுகித் தெய்வம் தொழுவதற்காக வடதிசை நோக்கிச் செல்லும் பொழுது தனிமையாயிருந்த தன் மனைவியைப் பார்த்து "காதலீ, நீ தனியே யிருப்பதற்கு அஞ்சவேண்டாம். நமது காவலன் காவலில் யாதொரு தீங்கும் நேராது," என்று ஆறுதல் சொல்லிப் போனான். இவ்வாறு அந்தணன் சென்றதையும் அவன் மனைவி தனிமையாயிருந்ததையும் அறிந்த அரசன் ஒவ்வொரு இரவிலும் நகர் காவலுக்காகச் சுற்றிவரும்பொழுது அந்தணன் வீட்டின் அருகே வந்து அதனை மிகக் கவலையோடு பாதுகாத்தான். இவ்வாறிருக்கையில் ஒருநாள் வடதிசைச் சென்றிருந்த அந்தணன்

பொற்கைப் பாண்டியன்

மீண்டும் தன் மனைக்கு வந்து தான் சென்ற நாடுகளையும் கண்ட காட்சிகளையும் தன் காதலியிடம் விரிவாகப் பேசிக் கொண்டிருந்தான். அந்தணன் திரும்பி வந்ததை அறியாத அரசன் எப்பொழுதும் போல் நள்ளிரவில் அவ்வீட்டின் அருகே சென்றான். அவ்வீட்டினுள் ஆண் குரலைக் கேட்டான். தலைமகன் இல்லாது தலைவி தனித்திருக்கின்ற இவ்வீட்டில் இன்று ஆண்குரல் கேட்கின்றதே; இதன் காரணத்தை அறிவோமென்று அருகே சென்றான். இன்னும் தெளிவாக ஆண் குரலைக் கேட்டான். தன் காவலில் அமைந்த பெண்மணியின் கற்பிற்கு யாதும் இழுக்கு நேரலாகாதென்றெண்ணி அவ்வீட்டின் கதவைத் தட்டினான். நள்ளிரவில் அயலான் ஒருவன் தன் மனைக் கதவைத் தட்டக் கேட்ட அந்தணன் தன் மனையாளது கற்பினை ஐயுற்று வெளியே நின்றவனை யார் என்று வினவினான். அக் குரல் அம்மனைக்குரிய தலைவனது குரலே என்றறிந்த அரசன் தான் செய்த

பெரும்பிழையை நினைந்து மனம் நொந்தான். அந்தணன் தன்னை ஐயுறுதவாறு அயல்வீட்டுக் கதவுகளைத் தட்டிக் கொண்டுவிரைந்து அரண்மனை புகுந்தான். அந்தணனும் 'அடுத்த மனைவிகளுக்குரிய ஆடவரும் வெளிவந்து பார்த்து கள்வனைக் காணாமையால் மறுநாள் மன்னனிடம் சென்று முறையிட்டார்கள். அப்போது அரசன் தன் அமைச்சரை அழைத்து நள்ளிரவில் தாழிட்ட மனையைத் தட்டியகள்வனுக்கு அறநூல் விதிக்கும் தண்டம்யாதெனவினவினான். அமைச்சரும் சிறிது சிந்தித்து, 'ஐயனே, இத்தகைய தவறிழைத்த கள்வனது கையினைக்கொய்வதேமுறையாகும்' என்றுஎடுத்துரைத்தார்கள். உடனே மன்னவன் மாளிகையினுள்ளே சென்று தன் உடைவாளை எடுத்துவந்து அவ்வாளால் தன் கரத்தை வாங்கினான். இதைக்கண்ட அமைச்சரும் அந்தணரும் யாதும் அறியாது திகைத்துவருந்தினார்கள். அப்போது அரசன்நிகழ்ந்தசெயல்களை நேர்மையாய் எடுத்துரைத்து, ஆராய்ந்தறியாது அவசரமாய் முன்சென்று அந்தணன் கதவைத் தட்டிய கையினைக் கொய்தது முறையேயாகும் என்று மொழிந்தான். இதைக் கேட்ட பெருமக்கள் யாவரும் மன்னவன் நீதியை மனமாறப் புகழ்ந்து குறைந்த கை மீண்டும் நிறைந்திலங்குமாறு இறைவனை வழுத்தினார்கள். இறைவன் அருளால் குறைந்த கரம் வளர்ந்து முன்னினும் மிகுந்த பொன்னிறத்தோடு பொலிவுற்றது. பொன்போலிலங்கிய கையினைக்கண்ட மக்கள்மனம் களித்து நீதி தவறாத மன்னனைப் பொற்கைப் பாண்டியனென்று பேரமைத்துப்போற்றினார்கள். இத்தகைய சிலப்பதிகாரத்தில் மதுரைமாதெய்வம் கண்ணகியிடம் கூறுகின்றது.

"நெஞ்சம் சுடுதலின் அஞ்சிநடுக் குற்று
வச்சிரத் தடக்கை அமரர் கோமான்

உச்சிப் பொன்முடி ஒளிவளை உடைத்தகை
குறைத்த செங்கோல் குறையாக் கொற்றத்து
இறைக்குடிப் பிறந்தோர்க்கு இழுக்கம் இன்மை"

என்று பொற்கைப் பாண்டியன் செங்கோன்மையை சிலப்பதிகாரம் பாராட்டுகின்றது.

இவ்வாறு கர்ண பரம்பரைக் கதைகள் தமிழ்நாட்டில் பெருவாய் வழங்கி வந்தமையால் அரசர்கள் நீதி வழுவாது நடந்து வந்தார்கள். குடிகள் எவ்வகையான துன்பங்களை அடைந்தாலும் அவற்றைச் சிறிதும் மனத்திற் கொள்ளாது குடிகொன்று இறைகொள்ளும் கொடுங்கோன் மன்னரைப் போல் தமிழ் அரசர்கள் ஆட்சி செய்யாமல் தம் குடிகளின் நலத்தை கண்ணும் ஆவியுமாகக் கருதிப் போற்றினார்கள். குடிகளை வருத்தி அரசாளுவதைப்பார்க்கிலும் கொடுங்கோன்மை வேறில்லை என்பதைத் தமிழ் அரசர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். இவ்வுண்மை சேரன் செங்குட்டுவன் வாய்மொழியாலேயே நன்கு அறியப்படுகின்றது. நீதி தவறிய பாண்டிய மன்னன் உயிர் துறந்தானென்றும், அவன் அரசாண்ட அழகிய நகரம் அழிந்ததென்றும், கேள்வியுற்ற சேரன் செங்குட்டுவன் மாநிலம் காக்கும் மன்னவனது துன்பங்களையெல்லாம் எண்ணி ஏங்குகின்றான்.

தமிழரசரது பொறுப்பு

"மழை வளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழை உயிர் எய்தில் பெரும்பே ரச்சம்
குடி புர உண்டும் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதல் இல்லென."

காவலன் குடிகளின் பொருட்டு அடையும் துன்பங்களையும் கவலைகளையும் சேரன் விரிவாய் எடுத்துரைத்தான். இதனை

அக்காலத்தில் அரசர் எத்துணை பொறுப்புடையவர்களாய்த் தம் நாட்டுக் குடிகளின் நலத்தைக் கருதி வளர்த்தார்க ளென்பது நன்கு அறியப்படும்.

இத்தகைய கொள்கைகள் பரவியிருந்த தமிழ் நாட்டில் கண்ணகியின் காரணத்தால் பாண்டிய மன்னன் வளையாச் செங்கோல் வளைந்தது. அப்பொழுது பாண்டிய நாட்டை ஆண்டுவந்த அரசன் நெடுஞ்செழியன் என்னும் பெயர் வாய்ந்தவன். அவன் ஆண்டுவந்த நாட்டில் மறை ஓதும் மங்கல ஒலியே யல்லால் அசையா மணி யோசை எங்காருங் கேட்டதில்லை. இம் மன்னவன் ஆண்டு வந்த மதுரைமா நகரின் சிறப்பினை தன் கண்களால் கண்ட மாமறையாளன் ஒருவன்

பாண்டியன் நெடுஞ் செழிய னது செங் கோன்மை

> "தென்னவன் நாட்டுச் சிறப்பும் செய்கையும்
> கண்மணி குளிர்ப்பக் கண்டேன் ஆதலின்
> வாழ்த்தி வந்திருந் தேன்"

என்றுகோவலனிடம் பாண்டியநாட்டின்சிறப்பையும், அவ்வர சனது நலங்களையும் தன் கண் குளிரக் கண்டதாகக் கூறினன்.

இத்தகைய மன்னவன் முன் செய்த தீவினையால் ஓர் தவறு செய்தான். கோவலன் தன் மனைவியின் சிலம்பை விற்று அதனை மூலப் பொருளாக வைத்து வணிகம் செய்யும் பொருட்டு மதுரைக்கு வந்தான். அச் சிலம்பைக் கொண்டு மதுரை வீதியில் செல்லும்பொழுது, எதிரே வந்த தட்டா னிடம் அதனை விலைமதித்தற்காகக் கொடுத்தான். தட்டானும் அதை நன்றாக உற்றுப் பார்த்து கோவலனிடம், "இத்தகைய விலையுயர்ந்த சிலம்பை இந்நகரில் வேறெவரும் விலைகொடுத்து வாங்கமாட்டார்கள். அரண்மனையில் அரசமாதேவிக்கே இது

ஏற்றதாகும். நான் போய் இதனை அரசனிடம் அறிவித்து திரும்பி வரும்வரையும் நீ இங்கே இரு” என்று அருகிலிருந்த குடிசையில் அவனை அமைத்து அரண்மனைக்குச் சென்றான். அப்பொழுது அரசன் தன் தேவியின் ஊடல் தீர்க்கும் பொருட்டு அந்தப்புரத்தை நோக்கி அதி வேகமாய்ச் சென்றுகொண்டிருந்தான். இவ்வாறு காம வயப்பட்டு மயக்கத்தில் ஆழ்ந்திருந்த அரசனை தட்டான் சென்று வணங்கி “ அரசே,

அவனது காம மயக்கம்

“ கன்னகம் இன்றியும் கவைக்கோல் இன்றியும்
துன்னிய மந்திரம் துணை யெனக் கொண்டு
வாயி லாளரை மயக்கு துயிலுறுத்து
கோயிற் சிலம்பு கொண்ட கள்வன்
கல்லென் பேரூர் காவலர்க் கரந்து என்
சில்லைச் சிறு குடில் அகத்திருந்தோன் ”

எனச் சொன்னான். கன்னக்கோலில்லாமலும் கவைக்கோல் இல்லாமலும் மந்திர வலிமையால் வாயிற் காவலரை மயக்கி அரண்மனைச் சிலம்பைக் கவர்ந்துகொண்ட கள்வன் இப்பொழுதஎன்சிறுகுடிசையில்அகப்பட்டிருக்கின்றானென்று தட்டான் சொன்னவுடன் மன்னவன் காம மயக்கத்தாலும், வினைவிளை கால மாதலாலும், நீதி முறைகளை மறந்தவனாய் குற்றம் சாட்டப்பெற்றவனை விசாரணை செய்து அவன் சொல்லும் மாற்றத்தையும் ஏற்றுக்கொண்டு குற்றம் விளங்கினால் தண்டம் விதிக்கவேண்டும் என்னும் முறையை மறந்தவனாய்

வினை விளை காலம்

“ வினைவிளை காலமாதலின் யாவதும்
சினையலர் வேம்பன் தேராளுகி
ஊர்காப்பாளரைக் கூவி ஈங்குஎன்
தாழ்பூங்கோதைத் தன்கால் சிலம்பு

கன்றிய கள்வன் கையதாகில்
கொன்று அச்சிலம்பு கொணர்க ஈங்கெனப்" பணித்தான்.

இவ்வாறு மயங்கி மொழிந்தபோதும் அரசமாதேவியின் சில ம்பு கள்வன் கையிலிருந்தால் அவனைக் கொன்று சிலம்பைக் கொண்டுவருக என்று அரசன் ஆணை செய்தானேயல்லால் 'இத் தட்டான் காட்டுகின்ற கள்வனைக் கொன்று கொண்டுவருக' என்று சொன்னானல்லன். ஆயினும் கோவலன் கொலையுண்டு இறந்ததற்குக் காரணம் அவன் முன் செய்த தீவினையே யாகும். கோவலன் அப்பொழுது தீவினை முதிர்வலைச் சென்று பட்டிருந்தான் என்று ஆசிரியர் கூறுகின்றார். வினைப்பயனால் கோவலன் வெட்டுண்டு விழுந்தான். அதை யறிந்த கண்ணகி அழுது புலம்பினாள். காதலன் கொலையுண்டு விழுந்த துன்பம் அவள் நெஞ்சில் நெருப்பை வைத்தாற் போல் வாட்டி வருத்தியது. மாசிலாத் தன்மை வாய்ந்த தன் மணாளன்மீது கள்வன் என்ற குற்றமும் பழியும் ஏற்றிய மாற்றம் எரியும் புண்ணில் ஈட்டி தைத்தாற்போல அவள் நெஞ்சத்தைப் பிளந்தது. இத்துயரம் பொறுக்க மாட்டாமல் தன் காதலனைக் காணக் கண்ணகி புறப்பட்டாள். மதுரைமா நகரிலுள்ளார் எவரும் தன் மணாளனது மாசிலாத் தன்மையை அறியாராதலால் விண்ணிலே விளங்கித் தோன்றிய கதிரவனைப் பார்த்து,

பாண்டியன் நீதி தவறுதல்

கண்ணகி புலம்பல்

"பாய்திரை வேலிப் படுபொருள் நீ அறிதி
காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என்கணவன்"

என்று முறையிட்டாள். ஆதவனும் அசரீரியாய் நின்று அவ் வாயர் குல மக்களெல்லாம் அறியும்படி, "மாதே, உன் கணவன் கள்வனல்லன், அவனைக் கள்வனென்று கொன்ற இவ்வூர் அழியும்", என்று கூறிய குரல் ஆகாயத்தில் எழுந்

தது. அதன்பின்னர் தன் கணவன் குற்றமற்றவன் என்றும் அவனைக் குற்றவாளியென்று கொன்ற கொற்றவன் தவறிழைத்தானென்றும் உலகோர் அனைவரும் அறியுமாறு நிருவ விரும்பினாள். ஆயர் சேரியினின்றும் புறப்பட்டு மதுரைமாநகரின் உள்ளே சென்றாள். வழியில் இரு மருங்கும் நிறைந்து நின்ற கற்புடைய மாதரைக்கண்டு தன் கணவன் கள்வனல்லன், அல்லன், என்று அரற்றினாள். இவ்வாறு அல்லலுற்று ஆற்றாது அழுவாளைக்கண்டு ஏங்கி மதுரையில் வாழ்ந்த மக்களெல்லாம் மன்னவன் வளையாச் செங்கோல் வளைந்தது என்று எண்ணி வருந்தினார்கள்.

அவர்களிற் சிலர்

> " களையாத துன்பம் இக்காரிகைக்குக் காட்டி
> வளையாத செங்கோல் வளைந்தது "

என்று வருந்தினார்கள். மற்றும் சிலர்

குடிகளின் வாய்மொழி

> " மன்னவர் மன்னன் மதிக்குடை வாள் வேந்தன்
> தென்னவன் கொற்றம் சிதைந்தது "

என்று தயங்கினார்கள். இன்னும் சிலர்

> " மண்குளிரச் செய்யும் மறவேல் நெடுந்தகை
> தண்குடை வெம்மை விளைத்தது "

என்று வாடி வருந்தினார்கள். பாண்டியன் எப்பொழுதும் நீதி தவறியவன் அல்லனே. அவனது வளையாத செங்கோல் இப்பொழுது வளைந்ததே, என்ன தீவினையோ என்று குடிகளும் ஏங்கி வருந்தினார்கள். கண்ணகியும் வீதியின் வழியே சென்று, பொடியில் படிந்து குருதியில் தோய்ந்து கிடந்த தன் காதலனைக் கண்டாள், அழுதாள், புலம்பினாள் மன்னவன் இழைத்த தவறே அவள் மனத்தில் பசுமரத்து ஆணி போல் பதிந்திருந்தது.

"பார் மிகு பழி தூற்ற பாண்டியன் தவறிழைப்ப
ஈர்வதோர் வினைகாணு விதுவென உரையாரோ"

என்றும்,

"மண்பதை பழிதூற்ற மன்னவன் தவறிழைப்ப
உண்பதோர் வினைகாணு விதுவென உரையாரோ"

பாண்டியன் அநீதியைக் குறித்து கண்ணகி அழுதல்

என்றும் தன் காதலனைக் கள்வன் என்று கொன்ற மன்னவன் பிழையை நினைந்து நினைந்து நெஞ்சம் உருகினாள். ஒருவரும் அத்தீவினை விளைந்த தன்மையை உரைக்கமாட்டாமையால் கண்ணகி எழுந்து இதற்கெல்லாம் காரணமாகிய தீவேந்தன் தனைக் கண்டு இத்திறம் கேட்பேன் என்று துணிந்து அரண்மனை வாயிலை அடைந்தாள். அங்கு நின்ற அரசனது காவலாளரைக் கண்டாள். அவர்களுடைய முகத்தில் அரசனது அநீதியே அவளுக்கு முற்பட்டுத் தோன்றிற்று. அக்காவலாளரில் ஒருவனைப் பார்த்து,

கண்ணகி அரசனது அரண்மனை செல்லுதல்

"அறிவு அறைபோகிய பொறியறு நெஞ்சத்து
இறை முறை பிழைத்தோன் வாயிலோயே"
இணையரிச் சிலம்பு ஒன்று ஏந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத்தாள் என்று
அறிவிப்பாயே அறிவிப்பாயே"

"அறிவிழந்து அரசமுறை பிழைத்தவனது வாயில் காக்கும் காவலாளனே! ஒற்றைச் சிலம்பைக் கையிலேந்தி கணவனை இழந்த ஒரு மாது இங்கு நிற்கின்றாளென்று உன் அரசனிடம் அறிவிப்பாயாக" என்று சொல்லி கண்களினின்றும் கண்ணீரைத் தாரை தாரையாய்வடித்துக் கொண்டு நின்றாள். இதனைக் காவலாளன் அரசனிடம் அறிவித்தபொழுது, அம்மாதை மாளிகையின் உள்ளே விடும்படி மன்னன் ஆணைசெய்தான். கற்பெனும் திண்மையே வடிவெடுத்தாற் போன்ற

கண்ணகியின் கற்புக் கோலம்

கண்ணகி காவலன் கண்ணெதிரே வந்து நின்றாள். மெய் முழுதும் பொடி படிந்திருந்தது; கருங்கூந்தல் விரிந்து கிடந்தது; கையில் தனிச்சிலம்பு விளங்கிற்று; கண்ணீர் தாரை தாரையாய்ப் பெருகிற்று; உயிர் பிரிந்த உடலம் போல் உருவம் தோன்றியது. இக்கோலத்தை மன்னவன் கண்டான். கண்ணகியைப் பார்த்து, "மனம் வருந்தி வந்து நிற்கும் மாதே நீ யார்" என்றான். அதற்குக் கண்ணகி அடைக்கலம் புகுந்த சிறு புறாவிற்காகத் தன் ஆருயிர் கொடுத்தும், தேர்க்காலில் மடிந்த ஆவின் கன்றுக்காகத் தன் அரிய மைந்தனை மடித்தும் நீதிபோற்றிய மன்னர் ஆளும் சோழ நாடே நான் பிறந்த நாடாகும். அந் நாட்டில்

> "மாசாத்து வாணிகன் மகனேயாகி
> வாழ்தல் வேண்டி ஊழ்வினை துறப்ப
> சூழ் கழல் மன்னா நின்னகர்ப்புகுந்து ஈங்கு
> என்கால் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பால்
> கொலைக் களப்பட்ட கோவலன் மனைவி"

அரசனிடம் கண்ணகி வழக்குரைத்தல்

என்றாள். உடனே அரசன் உற்றதை உணர்ந்து, தட்டான் செய்த வஞ்சனை ஒன்றும் அறியாதவனாதலால் "மாதே உன் கணவன் களவுசெய்த காரணத்தால் கொலையுண்டான். கள்வனைக் கொல்லுதல் கடுங்கோலன்று, அது செங்கோல் முறையேயாகும் என்று கூறினான். இதைக்கேட்ட கண்ணகியின் உள்ளத்தில் கடுஞ்சினம் பொங்கி எழுந்தது. அநீதியே உருவாய் விளங்கிய அரசனைப் பார்த்து, "நற்றிறம் படராக் கொற்கை வேந்தே! என் கணவன் கள்வனல்லன் என்று இப்பொழுதே நிறுவுகின்றேன்; என் கணவனிடமிருந்த சிலம்பினுள்ளே இருப்பது மாணிக்கமென்றாள். அரசன் அரண்மனையில்காணாமற்போனசிலம்பின் உள்ளேயிருப்பதுமுத்து

கண்ணகி சிலம்பை உடைத்து அரசனது அநீதியை வெளிப்படுத்துதல்

என்று சொல்லி, கோவலனிடமிருந்து தன் காவலாளர் மூலமாய்ப் பெற்ற சிலம்பைக் கண்ணகியின் முன்னே வைத்தான். உடனே அதனை எடுத்துக் கண்ணகி உடைத்தாள். அச்சிலம்பின் உள்ளே இருந்த மாணிக்கம் விறிட்டெழுந்து தானே குற்றம் தெரிப்பது போல மன்னவன் வாயில் தெறித்தது. அம் மாணிக்கத்தை மன்னவன் கண்டான், அப்பொழுதே அவன் வெண்குடை தாழ்ந்தது, கையிலிருந்த செங்கோல் தளர்ந்தது.

"பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன், யானே கள்வன்,
மன்பதை காக்கும் தென்புலங்காவல்
என் முதல் பிழைத்தது, கெடுக என்னாயுள் என
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே"

ஓர் தட்டான் சொல்லைக் கேட்டு இக்கொலையைச் செய்வித்த நானோ அரசன். நானே கள்வன். இதுவரை பிழையாத இறைமுறை இப்பொழுது என்னால் பிழைத்தது. இனி இவ்வுலகவாழ்வு எனக்கு ஒவ்வாது என்று சொல்லி ஏங்கி மயங்கி விழுந்து அரசன் உயிர் துறந்தான்.

மன்னவன் மயங்கி உயிர் துறத்தல்

பாண்டிய அரசன் உயிரினும் நீதியை உயர்வாக மதித்திருந்தான் என்பதற்கு இதனினும் வேறு சான்று வேண்டுமோ? இம்மன்னவன் நீதியை எத்துணை அருமையாகப் போற்றிருந்தானென்பது ஆசிரியர் கூறும் ஓர் அழகிய வெண்பாவால் இனிது விளங்கும்.

"மெய்யிற் பொடியும், விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றான், அக்காரிகை தன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்."

என்று ஆசிரியர் உருக்கமாக அருளுகின்றார். மெய்முழுதும்

**நீதியே உயிரினும் பெரிது**

நிறைந்த பொடியையும் விரிந்த கருங்கூந்தலையும் கையில் தனிச் சிலம்பையும் கண்ணீர்த் தாரையையும் கண்ட பொழுதே அரசன் தோற்றான். இவ்வரசன் எத்தகைய ஆற்றல் வாய்ந்தவனென்பதை ஆசிரியர் முன்னர்க் கூறியிருக்கின்றார்.

> " கயலெழுதிய இமய நெற்றியின்
> அயலெழுதிய புலியும் வில்லும்
> நாவலந் தண்பொழில் மன்னர்
> ஏவல் கேட்பப் பார் அரசாண்ட
> மாலை வெண்குடைப் பாண்டியன் "

என்று ஆசிரியர் கூறியவாறு, இமயமலையில் புலியைப் பொறித்த சோழனும், வில்லைப்பொறித்த சேரனும், மற்றும் வடநாட்டிலுள்ள குறுநில மன்னரும் பணிந்து ஏவல் கேட்டொழுக அரசாண்ட வெண் கொற்றக் குடையையுடைய பாண்டியனாவான் நெடுஞ் செழியன். இத்தகைய ஆற்றல் வாய்ந்த அரசன் கண்ணகியின் கோலத்தைக் கண்டவுடனே

**பாண்டியனது போர்த்திறமையும் நீதியின் அருமையும்**

தோற்றான். படைக்கலத்தால் தோல்வியடையாத பாண்டியன் இப்பாவையின் கற்பெனும் திண்மையால் நிலைகுலைந்து தோற்றான். இவ்வாறு கண்ணகியைக் கண்டளவே தோற்ற காவலன் அவள் சொல்லிய சொற்களைச் செவியில் ஏற்றபொழுதே உயிரைத் தோற்றான். போர்க்களத்தில் வீரரது வில்லம்பால் தோல்வியடையாத வீரன் இம்மாதின் சொல்லம்பால் உயிரைத் தோற்றான். கூடல் என்னும் மதுரையை அரசாண்ட மன்னவன் ஆவி அகன்ற கூடாயினான்.

> " காவி யுகுநீரும் கையில் தனிச்சிலம்பும்
> ஆவி குடிபோன அவ்வடிவும்—பாவியேன்

காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சி
கூடலான் கூடாயினுன்"

என்று அடிகள் மிக உருக்கமாகக் கூறுகின்றார். இன்னும் கண்ணகி அல்லற்பட்டு ஆற்ருது அழுத கண்ணீர் அரசனது ஆவியைப் பிரித்துவிட்டது என்று ஆசிரியர் அருளுகின்றார்.

" தொல்லை வினையால் துயருழந்தாள் கண்ணின் நீர்
கொல்ல உயிர் கொடுத்த கோவேந்தன் வாழியரோ,
வாழியரோ வாழி வருபுனல் நீர்வையை
சூழும் மதுரையார் கோமான் தன் தொல்குலமே"

என்னும் வாழ்த்துப் பாவால் கற்பின் வன்மையையும் நீதியின் மென்மையையும் அடிகள் இனிதாக எடுத்துரைத்தார்.

அரச நீதி பிழைத்தமையால் மாதரி உயிர் துறத்தல்

இவ்வாறு அரசன் அறியாது பிழை செய்து ஆவிதுறந்த செய்தி கேட்டு மனம் பொருது உயரியமக்கள் சிலர் உயிர் துறந்தார்கள்; மற்றும் சிலர் உலகினைத் துறந்தார்கள்; ஆயர்சேரியில் மாசிலாது வாழ்ந்து வந்த மாதிரி என்னும் முதுமகள் 'ஐயோ

"கோவலன் தீதிலன் கோமகன் பிழைத்தான்,
அடைக்கலம் இழந்தேன், இடைக்குலமக்காள் !
குடையும் கோலும் பிழைத்தவோ என
இடையருள் யாமத்து எரியகம் புக்காள்."

என்று ஆசிரியர்கூறுமாறு கோவலன் இறந்த துன்பத்தையும் அரசன் செய்த பிழையையும் பொறுக்கமாட்டாமல் எரியில் விழுந்து உயிர் துறந்தாள். மதுரையில் வந்திருந்த கடுந் தவப் பெருமை வாய்ந்த கவுந்தியடிகளாகிய பெண்மணியும்

"நிவந்தோங்கு செங்கோல் நீழ் நில வேந்தன்
போகுயிர் தாங்காப் பொறை சாலாட்டி,
உண்ணு நோன்பொடு உயர் பதிப் பெயர்ந்தாள்."

அரசன் இறந்தமைக்கு ஆற்றாது உண்ணாநோன்பிருந்து விண்ணுலகடைந்தாள். கோவலன் தாயும் கண்ணகியின் தாயும் துயர் பொறுக்க மாட்டாமல் உயிர் துறந்தார்கள். கோவலன் தந்தையும் கண்ணகி தந்தையும் தம் பெருந் தனத்தை யெல்லாம் தானம் செய்து துறவறம் புகுந்தார்கள்.

கவுந்தியடிகள் உயிர் துறத்தல்

இவ்வாறு நீதிக்காக உயிர் கொடுத்த அரசனது உயரிய மனநலத்தை அக்காலத்தில் முடியுடை வேந்தராய் விளங்கிய மற்றைய மன்னர் கேட்டு ஒருபுறம் துன்பமும் ஒருபுறம் இன்பமும் அடைந்தார்கள். அரசன் இறந்தது கேட்டுத்துன்பமும் அவன் உயிர் கொடுத்து நீதிபோற்றிய முறையை அறிந்து இன்பமும் அடைந்தார்கள். பாண்டிய நாட்டில் நிகழ்ந்த செயல்களைச் சாத்தனார் சொல்லக் கேட்ட, சேரன் செங்குட்டுவன் மிகமனம் வருந்தினவனாய்,

கோவலன் தாயும், கண்ணகியின் தாயும் உயிர் துறத்தல்

"எம்மோ ரன்ன வேந்தர்க்கு இற்றெனச்
செம்மையின் இகழ்ந்தசொல் செவிப்புலம் படாமுன்,
உயிர் பதிப் பெயர்ந்தமை உறுக ஈங்கென
வல்வினை வளைத்த கோலை மன்னவன்
செல்லுயிர் நிமிர்த்துச் செங்கோ லாக்கியது"

என்று கூறினான். வல்வினையால் வளைந்த பாண்டியன் செங்கோல் அவன் உயிர் துறந்தமையால் மறுபடியும் நிமிர்ந்து நேர்மையுற்றது என்று சேரன் பாண்டியனைப் புகழ்ந்தான். இன்னும் வஞ்சிமா நகரத்தில் செங்குட்டுவன் எடுத்த திருவிழாவில் கண்ணகி தெய்வம் காட்சி கொடுத்தபொழுது,

பாண்டிய அரசன் நீதியைச் சேர அரசன் புகழ்தல்

"தெவ்னவன் நீதிலன் தேவர்கோன் தன்கோயில்
நல்விருந்தாயினன், நானவன் தன்மகள்"

என்று அருளினமையாலும் பாண்டியன் முறைதவறிய மன்னனல்லன் என்பது இனிதுணரப்படும்.

இனி சோழ நாட்டின் தலைநகராகிய புகார் நகரத்தில் பாவை மன்றம் என்னும் பெயர் பெற்ற ஒரு மன்றம் அக் காலத்தில் விளங்கிற்று.

"அரசுகோல் கோடினும் அறங்கூற வையத்து
உரைநூல் கோடி ஒருதிறம் பற்றினும்
நாவொடு நவிலாது நவைநீர் உகுத்து
பாவை நின்றழூஉம் பாவை மன்றமும்"

நீதி போற்றிய பாவை மன்றம்

என்று ஆசிரியர் கூறியிருப்பதால் அரசனது செங்கோல் வளைந்தாலும், நீதிமன்றத்தில் அறஞ் சொல்லு முறையில் நடுநிலைமை தவறி ஒரு சார்பாக பொய்யை மெய்யென்று முடிவு செய்தாலும், அப் பாவை மன்றத்தில் நின்ற பாவை நாவினால் ஒன்றும் பேசாது கண்களினின்றும் நீரைத் தாரை தாரையாய் வடிக்கும் என்று அறியப்படுகின்றது. இதன்கண் ஓர் உண்மை அமைந்திருக்கக் காணலாம். தமிழ் அரசர்கள் நீதியால் அரசாண்ட முறையில் ஒரோவழி அந்நீதி தவற நேர்ந்தால் அதனை அவ்வரசர் அறிந்து மாற்றிக் கொள்வதற்கேற்ற சில குறிகள் தோன்றின என்றும் அவற்றால் நீதி எப்பொழுதும் நிலைத்திருந்ததென்றும் அறியப்படும்.

இவ்வாறு அக்காலத்தில் அரசாண்ட மன்னவன் தன் நாட்டிலிருந்தாலும் அன்றி அயல் நாடுகளின்மேல் போருக்கு எழுந்தாலும் அவனைச் சுற்றி எப்பொழுதும் பல துறைகளிலும் வல்ல அறிஞர்கள் அமைந்திருந்தார்கள் என்று தெரி

அரசரைச் சுற்றியிருந்த ஐந்து சபைகள்

கின்றது. அறிவால் மாட்சிமை பெற்ற அமைச்சர்களும், சேனையை அணி வகுத்துப் போர் செய்யவல்ல சேனுபதிகளும் நல்ல நாளும் பொழுதும் பார்த்துச் சொல்லும் காலக் கணிதரும், வேற்றரசரிடம் சென்று தம் அரசர் கருத்தை மிக ஆற்றலோடு அறிவிக்கும் தூதுவரும் அயல் நாடுகளில் கரந்து வாழ்ந்து அந்நாட்டு நிகழ்ச்சிகளை தம் அரசர்க்கு அறிவிக்கும் ஒற்றரும் அக்காலத்தில் இருந்ததாக சிலப்பதிகாரத்தால் அறியப்படுகின்றது.

அக்காலத்தில் அரசர் போருக்கு எழும்பொழுது நல்ல நாளும் பொழுதும்பார்த்துப் புறப்பட்டாரென்று தெரிகின்றது. போருக்குப் புறப்படும் நாள் நன்னாளாக அமையாதெனில் அதற்கு முன்னரே ஒரு நல்ல பொழுதில் வாளும்

நல்ல நாளும் பொழுதும் பார்த்துச் சொல்லும் காலக்கணிதர்

குடையும் முரசும் அரண்மனையினின்றும் பெயர்த்து வைத்துப் பின் படை திரட்டிப் போருக்கு எழுவது வழக்கமாகும். கரிகால் வளவன் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற சோழ மன்னன் வட நாட்டில் வாழ்ந்த ஆரிய அரசர் மேல் படையெடுத்துச் சொல்லுமுன் ஓர் நன் நாளில் நல்லபொழுதில்,

"வாளும் குடையும் மயிர்கண் முரசும், நாளொடு பெயர்த்து"

வைத்துப் பின்போருக்கு எழுந்து சென்றான் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இன்னும் வடநாட்டில் குறுநில மன்னராய் அரசாண்ட கறுவிசையர் தம் குறும்பை யடக்கவும் கற்புக் கடவுளாகிய கண்ணகிக்குச் சிலையமைப்பதற்கு இமயமலையில் கல்லெடுக்கவும், எண்ணியிருப்பதாகச் சேரன் செங்குட்டுவன் சபையில் சொல்லியபொழுது அங்கிருந்த காலக்கணிதன் எழுந்து நின்று

"வெந்திறல் வேந்தே வாழ்க நின்கொற்றம்
இருநில மருங்கின் மன்னரெல்லாம் நின்
திருமலர்த் தாமரைச் சேவடி பணியும்
முழுத்தம் ஈங்கிது, முன்னிய திசைமேல்
எழுச்சிப் பாலை ஏகென்று ஏத்தி" நின்றான்.

அரசே வாழ்க. வடதிசையில் வாழும் அரசரெல்லாம் இப்பொழுது நீ போருக்கு எழுந்தால் உன் திருவடி பணிந்து நிற்பார்கள். இது அத்தகைய நல்ல முழுத்தம் என்று கூறினான். அதைக்கேட்ட அரசன் அக்கணிதன் கூறிய நல்ல பொழுதில் தன் வாளையும் குடையையும் வடதிசையில் பெயர்த்துவைத்து பின் படை திரட்டிப் போருக்கு எழுந்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. ஆகவே நல்ல நாளும் பொழுதும் பார்த்துச் சொல்வதற்கு வான நூலில் வல்ல காலக்கணிதர்கள் அக்காலத்தில் இருந்தார்களென்பது அறியப்படுகின்றது. மேற்கூறிய காலக்கணிதனை

"ஆறிரு மதியினும் காருக அடிப்பயின்று
ஐந்து கேள்வியும் அமைந்தோன்"

என்று ஆசிரியர் கூறுவதால் அக் காலக்கணிதன் பன்னிரண்டு இராசிகளையும் கிரக நிலைகளையும் பஞ்ச அங்கங்களையும் அறிந்திருந்தானென்பது இனிது அறியப்படும்.

**ஒற்றர்கள்**

இக்காலத்தில் நாகரிகமுற்ற நாடுகளில் உள்ள அரசாங்க முறையில் ஒற்றரே வெகுவாய் விளங்கித் தோன்றுகின்றார்கள். இத்தகைய ஒற்றரை ஆளா அரசற்கு கொற்றம் இல்லையென்று பண்டைத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. பகையரசர் நாடுகளிலும் மற்றும் அயல்நாடுகளிலும் நிகழுகின்ற அரசாங்க நிகழ்ச்சிகளையும் இயக்கங்களையும் செவ்வையாய்

அறிந்து அறிவிப்பதற்காக ஒற்றரை அமைத்துக்கொள்வது தமிழரசர் வழக்கம் என்று தெரிகின்றது. சேரன் செங்குட்டுவன் வடநாட்டிற்கு சேனையோடு புறப்படுமுன் வடநில மன்னர்க்கு அரசன் தன் வருகையை எழுத்துமூலமாய் அறிவிக்க வேண்டுமென்று வில்லவன் கோதை என்னும் அமைச்சன் மன்னவனிடம் கூறினன். அப்பொழுது அங்கிருந்த மற்றொரு அமைச்சன் எழுந்து, "இவ்வாறு ஒவ்வொரு நாட்டரசனுக்கும் நாம் அறிக்கை அனுப்பவேண்டிய அவசியமில்லை. நமது நகரத்திலேயே நாம் போருக்குச் சேனையோடு வடநாட்டிற்குப் புறப்படும் செய்தியைப் பறையறைவிப்போமாயின், அயல்நாட்டரசரது ஒற்றர்கள் நமதுநாட்டில் நிறைந்துள்ளார்களாதலால், அவர்களே முறையாக தம் அரசற்கு அறிவித்துக்கொள்வார்கள் என்று கூறினன். இதனை அரசனும் உண்மையென்று ஏற்றுத் தன் நகர வீதிகளில் பறையறையுமாறு பணித்தான் என்று ஆசிரியர்கூறுகின்றமையால் ஒற்றரை அக்காலத்திய அரசர்கள்வெகுவாய் ஆண்டுவந்தார்களென்பது அறியப்படுகின்றது. இவ்வொற்றரை ஆளுந் தன்மையில்தமிழ்அரசர்கள் தலைமைபெற்றிருந்தார்கள் என்பது திருவள்ளுவநாயனர் திருக்குறளினலும் மற்றைய பழந் தமிழ் நூல்களாலும் நன்ருய் விளங்குகின்றது. ஒரு

**அரசன் ஒற்றரை ஆளுந்தன்மை**

ஒற்றன் சொல்லிய பொருளை மற்றொரு ஒற்றன் சொல்லும் பொருளால் ஆராய்ந்து பல ஒற்றர்கள் சொல்லும் முறையில் ஒற்றுமை காணப்பட்டால் அதனையே தமிழரசர்கள் உண்மையென்று ஒப்புக் கொண்டார்களென்று சிந்தாமணி முதலிய பழந் தமிழ் நூல்களால் விளங்குகின்றது.

"ஒற்றர் தங்களை ஒற்றரின் ஆய்தலும்
கற்ற மாந்தரைக் கண்ணெனக் கோடலும்
சுற்றம் சூழ்ந்து பெருக்கலும் சூதரோ
கொற்றம் கொள்குறிக் கொற்றவர்க் கென்பவே"

என்னும் சிந்தாமணிச் செய்யுளால் இவ்வுண்மை இனிது விளங்கும்.

சேரன் செங்குட்டுவன் தமிழ் நாட்டில் அரசு புரிந்த காலத்தில் வடநாட்டில் அவனுடைய நண்பராகிய நூற்றுவர் கன்னர் என்னும் பெயருடைய அரசர் இருந்தாரென்று அறியப்படுகின்றது. இவ்வரசர் பெயரை ஆராயும்பொழுது வடமொழிகளில் 'சதகர்ணி' யென்று வழங்குகின்ற அரசரது பெயரின் மொழி பெயர்ப்பாகவே தெரிகின்றது. இவ்வரசர்க்கு இத்தகைய விந்தையான பெயர் அமைந்ததற்குக் காரணம் சரித்திர ஆசிரியர்களால் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது. சதகர்ணி என்னும் வட மொழிப் பெயருக்கும் நூற்றுவர் கன்னர் என்னும் தமிழ்ப் பெயருக்கும் நூறு செவிகளை உடையவன் என்னும் பொருள் கிடைக்கின்றது.

**நூற்றுவர் கன்னர் என்னும் பெயர் ஆராய்ச்சி**

இவ்வரசன் பல நாட்டிற்கும் தன் ஒற்றரை அனுப்பிப் பல வழிகளால் பிறநாட்டு நிகழ்ச்சிகளைத் தெரிந்த தன்மையைச் சிறப்பித்து, "நூற்றுவர் கன்னர்" என்னும் காரணப் பெயர் இவ்வரசர்க்கு அமைந்ததாகக் கருதப்படுகின்றது. ஆகவே இக்காலத்தில் நாகரிகத்தில் நனி சிறந்திருப்பனவாகப் புகழப்படுகின்ற நாடுகளில் கையாளப்படுகிற அரச உபாயங்களும் சூழ்ச்சிகளும் அக்காலத்திலேயே தமிழ் அரசாங்க முறையில் அமைந்து விளங்கின என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

# 3-வது அதிகாரம்

## ஆரிய அரசரும் தமிழ் அரசரும்

தமிழ் நாட்டில் சேர சோழ பாண்டியனென்னும் மூவரசரும் ஆண்டுவந்தது போல வடநாட்டில் பல ஆரிய மன்னர் அக்காலத்தில் அரசாண்டு வந்ததாகத் தெரிகின்றது. வடநாட்டில் வச்சிர நாடு மகத நாடு அவந்தி நாடு முதலிய நாடுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சிற்றரசனால் ஆட்சி செய்யப்பெற்றது. ஆற்றல் மிகுந்த தமிழ்வேந்தர் ஆரிய அரசர்மீது படையெடுத்துச் சென்று பலவகையான அரும் செயல்கள் ஆற்றியதாகவும் சிலப்பதிகாரத்தால் அறியப்படுகின்றது.

சோழ நாட்டை ஆண்டுவந்த கரிகால்வளவன் என்னும் ஆற்றல் மிகப் படைத்த அரசன் தன் சேனையோடு வடதிசை நோக்கிப் போந்து அங்குள்ள அரசரில் தன்னை எதிர்த்துப் போர் செய்வார் எவருமின்றி இமயமலை வரையும் சென்று அப்பால் செல்ல வொட்டாது அப்பெரிய மலை பகையாய்நின்று தடுத்ததென்று அதன் மீது கோபங்கொண்டு தன் புலி முத்திரையை அம்மலையிற் பொறித்து மீண்டும் சிறப்புடன் தென்னாடு போந்தான் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இவ்வாறு வளவன் தமிழ் நாட்டுக்குத் திரும்பி வரும் வழியில் வச்சிரநாட்டு வேந்தன் முத்துப்பந்தல் அமைத்து வரவேற்றான். பகைவனாகிய மகதநாட்டு மன்னவன் சோழனுடன் போர் செய்து தோல்வியுற்று வளவனது வெற்றிக்கு அறிகுறியாக ஓர் அழகிய பட்டி மண்டபம் அமைத்தான். அவந்திவேந்தன் தமிழ் அரசனது நண்பன் ஆதலின் மனம் உவந்து மிக நுண்ணிய வேலை அமைந்த தோரணவாயில் அமைத்தான். இவையெல்லாம்

கரிகால் வலவனது அருஞ் செயல்கள்

பொன்னாலும் மணியாலும் ஆரிய வேலைத்திறம் வாய்ந்தன வாய்த் திகழ்ந்தன. இவ்வரசனது பெருமையை அம்மானை வரியில்

"கடவரைகள் ஓர் எட்டும் கண்ணிமை யார்காண
வடவரைமேல் வாள்வேங்கை ஏற்றினன்யார் அம்மானை,
வடவரைமேல் வாள்வேங்கை ஏற்றினன் திக்கெட்டும்
குடைநிழலில் கொண்டு அளித்த கொற்றவன்காண் அம்மானை
கொற்றவன் தன் பூம்புகார் பாடலோர் அம்மானை"

என்று ஆசிரியர் அழகாகக் கூறியுள்ளார்.

கரிகால் வளவனுக்குப் பின் வட நாட்டின்மேல் படை எடுத்துச் சென்ற வீரன் சேரன் செங்குட்டுவனேயாவான்.

சேரன் செங்குட்டுவன்

இவ்வரசர் பெருமான் தமிழ் நாட்டில் எத்துணை பற்றுடையவனாய் தமிழரசின் பெருமையைப் பாதுகாக்கும் முறையில் எத்துணை ஊக்கமும் பரபரப்பும் உடையவனா யிருந்தா னென்பதற்கு இவன் வடநாட்டின்மேல் படை எடுத்துச் சென்ற வரலாறே போதிய சான்றாகும்.

வடநாட்டில் பாலகுமரன் என்னும் ஆரிய அரசனுக்கு கனகன் விசையன் என்ற இருமக்கள் இருந்தார்கள். அவ்விருவரும் ஒரு நாள் விருந்திற்காக பல அரசர்கள் கூடியிருந்த சபையில் முன்னர் வடநாட்டைப் படையெடுத்து வெற்றி பெற்ற கரிகால் வளவனை இகழ்ந்து பேசினார்கள். அச்

கனகனும் விசையனும் தமிழாண்மையை இகழ்ந்துரைத்தல்

சோழன் இங்கு படையெடுத்து வந்த காலத்தில் எம்மைப் போன்ற அரசர்கள் இங்கு இல்லை போலும் என்று செருக்குற்றுப் பேசினார்கள். இதனை வடநாட்டினின்றும் தமிழ் நாட்டுக்கு யாத்திரையாக வந்த தபோதனர் மூலமாய்ச் செங்குட்டுவன் அறிந்

தான். உடனே அவன் உள்ளத்தில் கடுஞ்சினம் பொங்கி எழுந்தது. இவ்வாறு கனகனும் விசையனும் இழித்துக் கூறியது கரிகால் வளவனை அன்று; தமிழ் அரசனை அல்லவோ? சோழனது ஆற்றலை அன்று; தமிழரது ஆற்றலை அல்லவோ என்று எண்ணி அவ்வாரிய அரசர் செருக்கை அடக்கி ஒழிக்க வேண்டுமெனும் சீற்றம் கொண்டான்.

"இமையத் தாபதர் எமக்கு ஈங்குணர்த்திய
அமையா வாழ்க்கை அரசர் வாய்மொழி
நம்பால் ஒழிகுவதாயின் ஆங்கஃது
எம்போல் வேந்தர்க்கு இகழ்ச்சியும் தரும்"

என்று சேரன் சினந்து கூறினான். சோழ அரசன் வேறு சேர அரசன் வேறு என்னும் வேற்றுமை ஒரு சிறிதும் அற்றவனாய் தமிழ் அரசு என்ற ஓரே உணர்ச்சி உடையவனாய்

சேர மன்னவன் வஞ்சினம் கூறல்

மற்றொரு தமிழரசனை இகழ்ந்தது தன்னை இகழ்ந்ததேயாகுமென்று துணிந்து தன் சபைநடுவே அடலேறு போன்று எழுந்து நின்று இவ்வாறு எம்மை இகழ்ந்துரைத்த

"வடதிசை மருங்கின் மன்னர்தம் முடித்தலை
கடவுள் எழுதவோர் கற்கொண்டல்லது
வறிது மீளும் என் வாய்வாள் ஆகில்
செறிகழல் புனைந்த செருவெங் கோலத்து
பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பில்
குடிநடுக் குறூஉம் கோலேன் ஆகுக"

என்று எல்லோருமறியச் சேரன் சபதம் செய்தான். "அவ்விரு அரசரையும் வென்று அவர் முடியின்மேல், கண்ணகிக் கடவுளுக்காக இமையமலையில் எடுக்கும் கல்லை ஏற்றிக் கொண்டு வராமல் வறிதே என் வாள் வருமாயின் பகையரசரை வெல்லும் ஆற்றலற்று குடிகளை வருத்தி அரசாளும் கொடுங்கோல் மன்னனென்று பேர் பெறுவேனாக" என்று

ஆசான் தடுக்க முயல்தல்

கடுகடுத்து மொழிந்தான். அரசன் கருத்தறிந்த அமைச்சர்கள் பணிந்து நின்றூர்கள். ஆனல் அச்சபையிலிருந்த ஆசான் (புரோகிதன்) எழுந்து அரசே! வடநாட்டரசர் இகழ்ந்து கூறியது உன்னையல்லவே; சோழனையல்லவோ இகழ்ந்து கூறினூர்கள். ஆகையால் நீ கோபந் தணிக என்று கூறினன்.

"இமைய வரம்ப நின்னிகழ்ந்தோ ரல்லர்
அமைக நின் சினமென ஆசான் கூற"

என்று ஆசிரியர் கூறுவது ஆராய்வதற் குரியதாகும். தமிழ் அரசர் மூவரில் வேற்றுமையின்றி ஓத்த உணர்வுடையனுய் இருந்த சேரன் ஆசான் சொல்லைப் புறக்கணித்து நல்ல முழுத்தத்தில் வாளும் குடையும் பெயர்த்து வடநாட்டரசர் மீது போர் செய்யப் புறப்பட்டான். அரசனும் சேனையும் செல்லும் வழியில் நீலகிரியின் அருகே மின்னெளி போன்ற மேனியோடு சில மாதர் தோன்றி சேரவீரனைப் பார்த்து,

மாதவர் சேரனை மனமார வாழ்த்தல்

"செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ, கேளாய்
மலையத்து எகுதம், வான்பேர் இமய
நிலையத்தே குதல் நின்கருத் தாதலின்
அருமறை அந்தணர் ஆங்குளர் வாழ்வோர்
பெருநிலமன்ன, காத்தல் நின் கடனென்று
ஆங்கவர் வாழ்த்திப் பெயர்ந்த...னர்"

என்று ஆசிரியர் கூறுகின்றூர். வட நாட்டிலுள்ள ஆரிய அரசர் மீது சிற்றங்கொண்டு செல்கின்ற சேர மன்னவன் இமயமலைச் சாரலில் இருந்து தவம்புரியும் அந்தணரையும் அறியாது அழித்தல் கூடும் என்று எண்ணி அவ்வரு மறை

யாளரை அரசன் அறிந்து காத்தல்வேண்டும் என்று சேரனிடம் சொல்லி வாழ்த்திச் சென்றார்கள். அப்பால் சேரனுடன் நட்பாளராகிய கொங்கணக் கூத்தரும், கொடும் கருநாடரும், குடக வேந்தரும், கன்னர் நூற்றுவரும் தம் தூதுவர் மூலமாய்ச்சேரனுக்குத் திறையளித்தார்கள்.

வடநாட்டரசர் சேரனுக்குத் திறையளித்தல்

இவ்வாறு சேரனிடம் வந்த தூதுவர்களில் கன்னர் நூற்றுவரின் தூதுவனாய் வந்த சஞ்சயன் மொழிகள் இங்கு கருதற்குரியனவாகும். சஞ்சயன் செங்குட்டுவன் முன்னே போந்து

"வேற்றுமை யின்றி நின்னொடு கலந்த
நூற்றுவர் கன்னருங் கோற்றொழில் வேந்தே
வடதிசை மருங்கின் வானவன் பெயர்வது
கடவுள் எழுதவோர் கற்கே யாயின்
ஓங்கிய இமையத்துக் கற்கால் கொண்டு
வீங்குநீர்க் கங்கை நீர்ப்படை செய்தாங்கு
யாம் தரும் ஆற்றலம் என்றனர்."

என்று கூறினன். "அரசே! கண்ணகிக் கடவுளின் சிலை யமைப்பதற்காக இமயமலையில் ஒரு கல்லெடுத்து வருவதே உன் கருத்தாயின் நீ அதற்காக அவ்வளவு தூரம் அலைந்து வருந்த வேண்டாம். உனது நண்பராய நூற்றுவர் கன்னர் தாமே இமயமலை சென்று கல்லெடுத்து கங்கையாற்றில் நீராட்டி உன்னிடம் கொண்டுசேர்ப்பதாகச் சொல்லும்படி என்னைத் தூதனுப்பினர்" என்றான். அதைக் கேட்ட செங்குட்டுவன், சஞ்சயனே! கேள்:

நூற்றுவர் கன்னர் சேரனுக்குத் தூதனுப்புதல்

"பால குமரன் மக்கள் மற்றவர்
காவா நாவிற் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம்மொடுங் கூடி
அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர் ஆங்கென
சீற்றங் கொண்டு இசசேனை செல்வது"

என்று கூறினன். "வடநாட்டிற்கு நான் செல்வது கண்ணகி தேவிக்குக் கல்லெடுப்பதற்கு மட்டுமன்று. கனகன் விசயன் என்ற அரசர் இருவர் அருந் தமிழ் ஆற்றல் அறியாது வாயில் வந்தவாறு பிதற்றினர் என்று அறிந்து அவர் செருக்கை யடக்கும்பொருட்டு சிற்றங்கொண்டு இச் சேனை செல்கின்றது. ஆகையால் எனது நண்பரான நூற்று வார் கன்னரிடம் இதனை எடுத்துச் சொல்லி கங்கையாற்றை இச்சேனை கடப்பதற்கு போதிய படகுகள் சேர்த்து வைக்கச் சொல்வாயாக," என்று சஞ்சயனிடம் சொல்லி யனுப்பினன். இதனல் செங்குட்டுவன் தமிழரசரின் ஆற்றலை ஆரிய அரசர்க்கு அறிவுறுத்துமாறே படை யெடுத்துச் சென்று னென்பது தெளிவாக விளங்குகின்றது. இவ்வாறு சென்ற தமிழ் சேனையை ஆரிய சேனை எதிர்த்தது.

சேரன் தூதுவனிடம் தன் கருத்தறி வித்தல்

"உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன்
சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன்
வடதிசை மருங்கின் மன்னவ ரெல்லாம்
தென் தமிழ் ஆற்றல் காண்குதும் யாமெனக்
கலந்த கேண்மையிற் கனக விசையர்
நிலந்திரைத் தானையொடு நிகர்த்துமேல்"

வந்தார்கள்.

தமிழ்ச் சேனையை ஆரிய சேனை எதிர்த் தல்

இவ்வாறு ஆரியமன்னர் பலர் தமிழரசனது ஆற்றலைப் பார்ப் போமென்றுகனகவிசயருக்குத்துணையாய்ப் போர்க்களத்திற் குவந்து தமிழ்ச்சேனையின் முன்னல்பதினெட்டு நாழிகையில்

தோற்றுச்சின்னுபின்னமாய்ச்சிதைந்து ஓடினுர்கள். சடையை வளர்த்த சன்னியாசிகள்போல வேடம் தரித்து விரைந்தோடினர் சிலர் சிவனடியார்கள்போல தூய வெண்ணீரணிந்த மேனியும் தாழ்வடமும் தாங்கித் தப்பியோடினர் சிலர் சமண முனிவர்போல் பீலிகைக்கொண்டு பெருநோன்பாளர் கோலத்தில் வெளிப்பட்ட கனகனும் விசயனும் சேரன் கைவசப் பட்டார்கள். இவ்வாறு தமிழ்ச்சேனை வெற்றிமாலை சூடியது.

ஆரிய சேனை தோல்வி யடைதல்

அப்பால் இமயமலையில் கல்லெடுத்து அக்கல்லை கனக விசயர் தம்முடிமே லேற்றி வஞ்சிமா நகரத்திற்குச் சேரன் கொண்டுவந்தான். ஆகவே சேர அரசனுக்கும் ஆரிய அரசருக்கும் நிகழ்ந்த போர் அக்காலத்தில் தமிழருக்கும் ஆரியருக்கும் நிகழ்ந்த போரென்றே கருத இடமிருக்கின்றது.

இப்போர் முடிந்த பின்னர் செங்குட்டுவனைக் காண வந்த மாடலன் என்னும் மறையவன் சிலப்பதிகாரக் கதை முழுதையும் சுருக்கி அரசே! மாதவிமடந்தை கானல் வரிப் பாட்டு கனகர்விசயர் தம்முடித் தலை நெரித்தது என்று அழகாகக் கூறினுன். அதனை விளங்கச் சொல்லும்படி சேரன் கேட்க மாடலன் கூறுகின்றுன்: அரசே! மாதவி கடற்கரையிலிருந்து பாடிய கானல் வரிப்பாட்டால் கோவலன் பிணங்கிப் பிரிந்தான். தன் குலக் கொடியாகிய கண்ணகியைச் சேர்ந்தான். அவளுடன் மாடமூதூர் மதுரை புகுந்தான். அங்கு கொலைக்களப்பட்டான். அவன் மனைவி நின் நாடு புகுந்து வடதிசை மன்னர் மணிமுடி ஏறினுள் என்று கதையைக் கூறி முடித்தான்.

இமயச் சிலையை கனக விசயர் முடிமே லேற்றல்

இவ்வாறு சேரன் ஆரிய மன்னருடன் போர் செய்து வெற்றி பெற்றதைக் கேட்ட மற்றைய தமிழ்வேந்த ரிருவரும் ஒருவகையில் இன்பமும், ஒருவகையில் துயரமும் அடைந்தார்கள்.

> " யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
> சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு "

என்னும் நாயனார் திருவாக்குக் கிணங்க வணங்கா வாயினராகிய கனகனும் விசயனும் அவர் நண்பராய குருநில மன்னரும் தோல்வியடைந்து தமிழரசன் வெற்றிமாலைசூடிய செய்தி கேட்டு சோழனும் பாண்டியனும் பெரு மகிழ்வடைந்தார்கள். ஆயினும் தமிழ்அரசர்கள் ஆற்றலும் அருளும் ஒருங்கேபடைத்தவர்களாதலால் தோல்வியடைந்த ஆரிய அரசர்மீது பின்னும் சீற்றம் காட்டிய சேர வீரனது செயல் கண்டு சிறிது வருத்தம் கொண்டார்கள். சிறையாக இருந்த ஆரிய அரசர் இருவரையும் தமிழரசர் இருவரிடமும் காட்டி வரும்படி சேர மன்னன் தன் ஒற்றனுக்கு ஆணை செய்தான். அவ்வாணையை மேற்கொண்டு ஒற்றன் ஆரிய அரசர் இருவரையும் கொண்டு சோழனது அரண்மனைக்குச் சென்றான். அம் மன்னவன்,

*தமிழரசரின் அருளோடளாவிய ஆண்மை*

> " நீள் அமர் அழுவத்து நெடும் போராண்மையொடு
> வாளும் குடையும் மறக்களத்து ஒழித்து
> கொல்லக் கோலத்து உயிர் உய்ந்தோரை
> வெல்போர்க் கோடல் வெற்றமன்று "

*சோழனது அருள்*

என்று கூறினான். தமது படைக்கலங்களை யெல்லாம் போர்க்களத்திலே போட்டுவிட்டு முனிவர் கோலங்கொண்டு தப்பிப் பிழைக்கக் கருதிய ஆரிய அரசர் இருவரையும் சிறையாகக் கொள்ளுதல் அறப்போரன்று என்று சோழ

அரசன் கருதினான். அதன்பின்னர் ஆரிய அரசர் இருவரையும் கண்டு ஒற்றன் பாண்டிய அரசன் அரண்மனைக்குச் சென்றான். அவ்வரசன்

"அமர்க்களம் அரசனதாகத் துறந்து
தவப்பெருங் கோலம் கொண்டோர் தம்மேல்
கொதியழற் சீற்றம் கொண்டோன் கொற்றம்
புதுவது என்றனன் போர்வேற் செழியன்"

பாண்டியனது அருள்

"போர்க்களத்தைச் சேரனிடம்ஒப்புவித்து தவக்கோலங்கொண்டு தப்பியோடிய ஆரிய அரசர்மீது சேரன்கொண்ட சீற்றம்புதுமையாக இருக்கின்றது" என்று பாண்டியன் மொழிந்தான். இவ்விருபெருவேந்தர்வாய்மொழியால் அக்காலத்தில்அருளோடு அளாவிய ஆண்மையே தமிழரசர் போர்முறையில் விளங்கித் தோன்றிற்றென்பதும் தமிழரசர் அறப்போர் ஒன்றையே ஒப்புக்கொண்டார்களென்பதும் இனிது விளங்கும்.

இவ்வாறு போரில் வெற்றி பெற்ற அரசர்கள் தும்பை மாலை சூடுவது வழக்கம். சேரன் வஞ்சிமா நகரத்தினின்றும் படையெடுத்துச் செல்லும்பொழுது வஞ்சிமாலையை அணிந்திருந்தான். போர்முடிந்து வெற்றிபெற்றபொழுது தும்பை மாலை சூடினான். கங்கையாற்றின் தென் கரையில் சேரன் தன் சேனையோடு ஆரிய மன்னர் அழகுற அமைத்து வைத்திருந்த வெள்ளிடைப் பாடியில் புகுந்தான். அங்கு

சேரனது ஓலக்கம்

"மன்பெரும் கோயிலும் மணிமண்டபங்களும்
பொன்புனை அரங்கமும் புனைபூம் பந்தரும்
உரிமைப்பள்ளியும் விரிபூஞ் சோலையும்
திருமலர்ப் பொய்கையும் வரிகாண் அரங்கமும்
பேரிசை மன்னர்க்கு எற்பவை பிறவும்"

ஆரிய அரசர்கள் அமைத்திருந்தார்கள். அவ்வெள்ளிடைப் பாடியில் சேர அரசன் சிறப்பொடு வீற்றிருந்து கடும்போரில் கை கால் முறிந்தும் காயம் பட்டும் மாற்றுரைக் கொன்றும் வீரச் செயல் நிகழ்த்திய வீரர்களை யெல்லாம் வரவழைத்து

"புறம் பெற வந்த போர்வாள் மறவர்
வருக தாமென வானகப் பொலந்தோடு
பெருநாள் அமயம் பிறக்கிடக் கொடுத்தான்"

சேரன் படை வீரர்களுக்குப் பரிசளித்தல்

என்று ஆசிரியர் கூறுமாறு சேரன் தனது வீரர்களுக் கெல்லாம் பொன்தோடு (medal) பரிசாகக் கொடுத்தான் என்பது அறியப்படுகின்றது.

தோல்வியுற்ற அரசன் வெற்றி பெற்ற அரசனுக்கு படைக்கலம் வழங்கல்

இன்னும் இருவேந்தர் தம்முள் மாறுபட்டுப்போர்செய்யும்பொழுது அமர்க்களத்தில் வெற்றி மாலை சூடிய அரசனுக்குத் தோல்வி யுற்றஅரசன் தன்படைக்கலங்களைக் கொடுக்கும் வழக்கம் அக்காலத்திய போர்முறையில் இருந்ததாகத் தெரிகின்றது. இவ் வுண்மை

"அடையார் முனையகத்து அமர்மேம் படுநர்க்கு
படைவழங்கு வதோர் பண்பு உண்டாகலின்"

என்னும் சிலப்பதிகார அடிகளால் அறியப்படுகின்றது.

இவ்வாறு சிறையாக விருந்த ஆரிய அரசர் இருவரையும் சேரன் கண்ணகிக்கு ஆலயம் அமைத்து வழிபாடு செய்து முடித்த பின்னர் சிறைவீடு செய்து வடநாட்டுக்குச் செல்ல விடைகொடுத்து அனுப்பினான்.

---

## 4-வது அதிகாரம்

### கண்ணகியின் கற்பின் திறம்

சிலப்பதிகார ஆசிரியர் தம் முன்னுரையிலேயே,

"உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல்"

உண்மை என்பதை உலகில் நிலைநாட்டும் பொருட்டு நூலெழுதப் போந்ததாகக் கூறியுள்ளார். உண்மையாகசிலப்பதிகாரத்தின் பெருமை கண்ணகியின் கற்பின் பெருமையேயல்லால் வேறன்று என்பது அந்நூலை ஒருமுறை ஓதினார்க்கும் இனிது விளங்கும். நூலின் அடிமுதல் முடிவுவரை கண்ணகியின் கற்பே படிப்போர் கண்ணெதிரே நிற்கின்றது. கற்பின் அளப்பெரும் பெருமையை உலகமெலாம் அறிந்து போற்றுமாறு ஆசிரியர் தமது நூல்முழுமையும் அதன்சிறப்பை அமைத்து எழுதிய அழகு கண்டு மகிழ்வதற்குரியதாகும்.

**பன்னிரண்டு ஆண்டமைந்த கண்ணகி**

முதன் முதல் பன்னிரண்டு ஆண்டுக்கு உட்பட்ட வயதுடைய இளம் பெண்ணைக் கண்ணகியைக் குறிப்பிடும் பொழுது ஆசிரியர்,

"போதிலார் திருவினாள், புகழுடைய வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறம், இவள் தன் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த, வயங்கிய பெருங்குணத்துக்
காதலாள், பெயர் மன்னும், கண்ணகி என்பாள், மன்னோ"

என்று அருளிப்போந்தார். செந்தாமரையில் பொருந்தி வாழும் திருமகள் அழகால் கண்ணகியை ஒப்பாளென்றும், ஆசற்ற அருந்ததியின் கற்பு இவள் கற்பை ஒக்குமென்றும்

கண்ணகியின் மணக்கோலம்

மாதர்கள் தொழுது புகழ்தற்குரிய அரும் பெரும்குணங்களை உடையவளாய்க்கண்ணகி விளங்கினாள். இன்னும் அம்மாதின் அழகிய மணக் கோலத்தை எழுதப் போந்த விடத்து ஆசிரியர்,

"மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணத்து
நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியம் சகடணைய வானத்துச்
சாலி ஒருமீன் தகையாளைக்"

கோவலன் முறைப்படி மணஞ் செய்தான், என்று கூறுகின்றார். இங்கும் மணமகளை அவள்பெயரால் கூறாது மேலுலகில் வாழும் அருந்ததி அன்னாளை கோவலன் மணஞ் செய்தான் என்று ஆசிரியர் கண்ணகியின் கற்பின் திறத்தையே வியந்து கூறினார்.

கண்ணகிக்கு மாதர் ஆசி கூறல்

பின்னர் கோவலனுக்கும் கண்ணகிக்கும் கடிமணம் முடிந்ததும் அங்கு மணக்கோலம் காண நிறைந்து நின்ற மாதர்கள் மணமகள் மீது மலர்தூவி,

"அங்கண் உலகில் அருந்ததி அன்னாளை
மங்கல நல்லமளி ஏற்றினர்"

என்று மீண்டும் கண்ணகியின் கற்பின் நலத்தையே ஆசிரியர் புகழ்ந்துரைத்தார். இத்தகைய கற்பிற் சிறந்த கண்ணகியை மணஞ்செய்து கோவலன் இல்லற மென்னும் நல்லறத்தைச் சில ஆண்டுகள் இனிது நடத்தினான்.

"இருந் தோம்பி இல்வாழ்வ தெல்லாம்
விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு"

கோவலனும் கண்ணகியும் நடத்திய இல்லறம்

என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளியவாறு காதலர் இருவரும் மன ஒற்றுமையுடன் அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்பல், துறவோர்க்கு எதிர்தல், சுற்றம் தழுவுதல், ஆகிய அறங்களை வழுவாது இயற்றினார்கள்.

பின்பு கோவலன் மாதவி என்னும் நாடக மாதின் ஆடல் பாடல், அழகு ஆகிய மூன்றிலும் மயங்கி, மாதவி மனையில் புகுந்து, அவள் மையலிலே தாழ்ந்து, தன் காதலியை மறந்து, களித்திருந்த காலத்தில் கண்ணகி மதி இழந்த வானம் போலும், தாமரை இழந்த தடாகம்போலும், வனப்பிழந்து சோகத்தில் மூழ்கியிருந்தாள். அவளது அழகிய சிறடி அணி சிலம்பு ஒழிந்தது. செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறந்தது. பவளவாள் நுதல் திலகம் இழந்தது. மையிருங் கூந்தல் நெய்யணி மறந்தது. மங்கல அணியன்றி, மற்றைய அணிகளை மறந்தாள். காதலன் பிரிந்த சோகத்தால் கண்ணீர் உகுத்தாள். காலையில் அரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலையில் மலரும் காதல்நோயால் நலிவுற்றாள்.

கோவலன் பிரிந்தமையால் கண்ணகியின் சோகம்

பின், வினைப்பயனால் கோவலன் மாதவியொடு மாறுபட்டு தன் மனையாளாகிய கண்ணகிபால் வந்து அவளது வாடிய மேனியும் வருத்தமும் கண்டு மனம் தளர்ந்து அவளைப் பார்த்து, "பொய்யொழுக்கத்தை மேற்கொண்ட பொதுமாதின் மயக்கத்தில் விழுந்து முன்னோர் தேடிவைத்த பொருளையெல்லாம் தொலைத்தேன். இப்பொழுது வறுமையுற்று நாணுகின்றேன்" என்று கூறினான். இதைக்கேட்ட கண்ணகி தன் காதலன் பின்னும் மாதவிக்குக் கொடுக்கப்பொருள் கையிலில்லாமையால் இவ்வாறு கூறினான் என்று எண்ணி அவனது மனவருத்தத்தை மாற்றக் கருதி, "ஐயனே, இன்னும் என்னிடம் இரண்டு சிலம்புகள் இருக்கின்றன; அவற்றை உம்மிடம் தருகிறேன்" என்றுகூறினாள். இவ்வாறு சொல்லும் பொழுது அவள்மனதில்சிறிதும் வாட்டமில்லாது அகமலர்ச்சியை முகமலர்ச்சி காட்டிற்று என்னும் தன்மையை,

"நலங்கேள் முறுவல் நகைமுகங்காட்டிச்
சிலம்புள கொண் மெனச்" சொன்னாள்

என்று ஆசிரியர் அழகாகக் கூறுகின்றார். தனது காதலன் மனத்துயரைக்காணமனம்பொறாது, அவன் தனக்குச்செய்த தீமைகளை எல்லாம் மறந்து, தன்னால் இயன்றவரை கணவன் மனவாட்டம் திருத்துவதே கற்புடை மங்கையின் கடமை என்பதை உணர்ந்து கண்ணகி தன் காற்சிலம்புகளைக் கணவனிடம் கொடுத்தாள். இதனால் கண்டார் வெறுக்கும் செயல்களைத் தன் காதலன் செய்தாலும் அவனிடம் ஒரு சிறிதும் அன்பிற் குறையாது, அவனது மனக்கவலையை மாற்றுதல்கற்புடைமாதர் இயல்பென்றுநன்கு தெரிகின்றது.

*கண்ணகி தன் கணவனது மன வாட்டம் திருத்துதல்*

இவ்வாறு கண்ணகி சொல்லிய மொழிகளைக் கேட்ட கோவலன் மனம் உருகித் தன் காதலியைப்பார்த்து, "என் கண்மணீ, நீகொடுத்தசிலம்பைமதுரையில்சென்றுவிற்றுஅப் பொருளையே மூலதனமாக வைத்து வாணிகம் செய்து நான் தொலைத்த பொருளை மறுபடியும் சேர்க்க எண்ணியிருக்கின்றேன். நீயும் என்னோடு புறப்படு" என்றுசொல்லியபொழுது, அம்மதுரை மூதூர் எங்குள்ளதென்றும் அதற்குச்செல்லும் வழி எத்தகையதென்றும் ஒன்றும் வினவாது அவனுடன் போவதற்குஇசைந்தாள். இந்நங்கையின்மெல்லியதன்மையையும் வாழ்க்கையின் மேன்மையையும் அறிவோமானால், இவ்வாறு ஒன்றும் வினவாது உடன் போவதற்குப் புறப்பட்ட அவளது உயரிய கற்பின் திறம் உள்ளங்கையில் நெல்லிக்கனிபோல் விளங்கும். கண்ணகியை ஆயர் சேரியில்

*கண்ணகி கோவலனுடன் மதுரைக்குப் புறப்படுதல்*

இடைக்குல மாதிடம் அடைக்கலமாகக் கொடுக்கும் பொழுது கடுந்தவப் பெருமை வாய்ந்த கவுந்தி அடிகள்

"என்னொடு போந்த இளங்கொடி நங்கைதன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்,"

அவளது மெல்லிய தன்மை

என்று அம்மாதின் மென்மைத் தன்மையை எடுத்துரைத்தார். தனது அழகிய மனையில் வாழ்ந்து வந்த பொழுது கண்ணகியின் வண்ணச் சீறடிகளை மண் மகளும் அறியாள் என்று அடிகள் கூறியதால் அம் மெல்லியல் மாது தன் அகத்தை விட்டு மண்மேல் நடந்து மற்றோரிடம் சென்று அறியாதவள் என்பது இனிது விளங்கும். இத்தகைய மாது

கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை

கணவன் ஆணையை மேற்கொண்டு ஒழுகுதலே கற்புடைய மங்கையின் கடமை, என்னும் ஒன்றையே குறிக் கோளாகக் கொண்டு காதலன் புறப்படு என்று சொல்லவும் உடனே புறப்பட்டாள். "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்று செந்தமிழ்ச் செல்வி அருளிய உயரிய நீதிக்குக் கண்ணகியே ஒப்பற்ற சான்றாக விளங்குகின்றாள்.

இவ்வாறு தான் செய்த தீமையையெல்லாம் மறந்து தன் மொழியைத் தலைமேல் தாங்கிப் புறப்பட்ட கண்ணகியின் பெருந்தகைமைகோவலன் நெஞ்சத்தைக் குழைத்துவருத்தியது. இருவரும் நாட்டினின்றும் விடியுமுன்னரே புறப்பட்டு புகார்நகரத்தினின்றும் முப்பத்தொருகாதவழியுள்ள தூரத்தில் ஒரு காதவழி நடந்தார்கள். கண்ணகியின் நடை பயிலாத மெல்லடிகள் வாடி வருந்தின. அவளது கொடிபோன்ற இடைகள் நோவுற்றன. மெய்முழுதும் தளர்ந்து அருகே தோன்றிய ஒரு சோலையில் இளைப்பாறத் தன் காதலனுடன் சென்றாள்.

கண்ணகி வழி நடந்து வருந்துதல்

அப்பொழுதுதான் கண்ணகி தன் காதலன் மனம் சிறிதும் வருந்தாவண்ணம் குழலும் யாழும் குழைத்தாற்போன்ற மழலைமொழிகளால் இன்னும் மதுரை மூதூர் எவ்வளவு தூரமிருக்கிறது என்று கேட்டாள். இப்படி வழி நடந்த வருத்தம் பொறுக்க முடியாமல் வினவும்பொழுதும் தன் மனவருத்தத்தைக் கோவலன் அறிந்தால் வருந்துவான் என்றெண்ணி அதனை மறைத்து,

"முதிராக் கிளவியின் முள் எயிறிலங்க
மதுரை மூதூர் யாதென வினவினள்"

தனது முற்றாத மழலை மொழிகளோடு, மெல்லிய புன்னகை செய்து, அரும்பு போன்ற பற்கள் இலங்க மதுரையின் வழியைக் கேட்டாள் என்று ஆசிரியர் கூறும் அழகு அறிந்து மகிழ்வதற்கு உரியதாகும்.

பின்னும்கடத்தற்கரிய கடுங்கானகத்தில் தன் கற்பையே துணையாகக் கொண்டு கண்ணகி வழி நடந்தாள். வெய்யோன் வெப்பத்தால் அவளது மெல்லிய அடிகள் கொப்புளித்து பூமி

கண்ணகியின் பொறுமை

யிற் பொருந்தாது வருந்தியும் கண்ணகி தன் வருத்தத்தை வாய்விட்டுக் கூறினாளல்லள். அவளது அடிகள் தரையில் பொருந்தாததைக் கண்டு கோவலன் கவுந்தி அடிகளிடம் முறையிடுகின்றான்.

"கடுங் கதிர் வேனில் இக்காரிகை பொருள்
படிந்தில சீரடி பரல் வெங்கானத்து"

என்று கோவலன் கூறுதலும் மூவரும் பகல் பொழுதில் வழி நடப்பதை விட்டு நிலாப்பொழுதில் நடக்கத் தொடங்கினர்கள். இராப்பொழுதில் அக் கடுங்கானகத்தில் புலி அதிர்த்-

தது, ஆந்தை அலறியது, கரடி இடிபோல முழங்கியது. இம் முழக்கத்தைத் தவிர வேறு யாதொரு ஒலியும் ஓசையுமில்லை. நிலமகளும் கண்ணகிமேல் இரக்கம் கொண்டு நெட்டுயிர்த்து நித்திரை போயினாள். இவ்வாறு வெயிலால் நலிந்து நடையால் மெலிந்து வாடி வருந்தினாலும் கண்ணகி தன் துயரத்தைத் தன் காதலனிடமேனும் கவுந்தி அடிகளிடமேனும் ஒரு சிறிதும் உரையாத தன்மை அவளது உயரிய மனநிலைமைக்கு விழுமிய சான்று பகர்வதாகும்.

காதலன் துயர் கண்டு கண்ணகி வருந்துதல்

இவ்வாறு தன் துயர் காணாது வழி நடந்த கண்ணகி தன் காதலன் மேனி வெங்கதிரோன் வெம்மையால் வாடியதென்று துயருற்று வருந்தினாள்.

> " கடுங்கதிர் வெம்மையில் காதலன் தனக்கு
> நடுங்குதுயர் எய்தி நாப்புலர வாடி
> தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி "

என்று கவுந்தியடிகள் வாழ்த்துவதால் கண்ணகியின் கற்பின் திறம் நன்கு அறியப்படும்.

இவ்வாறு தன் காதலியுடன் வழி நடந்த கோவலன் தன் சிறுமையையும் அவள் பெருமையையும் உணர்ந்து உள்ளம் நொந்தான்.

கோவலன் அடிகளிடம் வருந்துதல்

தனது செயலையும் அவள் செயலையும் எண்ணி எண்ணி ஏங்கினான். தனக்காகத் தன் காதலி படும் துயரத்தைக் கண்டு பெரிதும் துன்புற்றான். மதுரைமா நகர்ப்புறம் சேர்ந்ததும் கோவலன் கவுந்தி அடிகளைக் கைதொழுது,

> " நெறியின் நீங்கியோர் நீர்மையனாகி
> நறுமலர் மேனி நடுங்கு துயரெய்த
> அறியாத் தேயத்து ஆறிடை உழந்து
> சிறுமையுற்றேன் செய்தவத்தீர் ! யான் "

என்று கூறி மனம் வருந்தினன். "நன்னெறியினின்றும் விலகிச் சிறு நெறியைச் சேர்ந்தொழுகிய யான், மலர் போலும் மெல்லிய மேனியை உடைய கண்ணகி நடுங்கித் துயரம் உறும்படி கனவிலும் நினைத்தறியாத காடு நாடெல்லாம் அலைந்து திரிந்து துன்பமுற்று சிறுமையடைந்தேன்" என்று கோவலன், தனக்காகத் தன் காதலி அடைந்த கடுந் துயரத்தை நினைந்து கவுந்தியிடம் புலம்பினன்.

இன்னும் மதுரைமா நகர்ப்புறம் சேர்ந்து ஆயர் சேரியில் மாதரி மனையில், தன் மனையாள் ஆக்கிய அறுசுவை உணவை அருந்தி அமர்ந்திருக்கையில் கோவலன் தன் காதலியின் கற்பின் பெருமையை எண்ணுமலிருக்க முடியவில்லை. அருகே ஒருவருமில்லாமையைக் கண்டு தான் எண்ணிய எண்ணத்தை வாய்விட்டுச் சொல்லுகின்றான்.

" கல்லதர் அத்தம் கடக்க யாவதும்
வல்லுன கொல்லோ மடந்தை மெல்லடியென
வெம்முனை அருஞ்சுரம் போந்ததற்கு இரங்கி
எம்முது குரவர் என்னுற்றனர் கொல் "

"கல்லும் கடுமையும் நிறைந்த இக்கானகத்தின்வழியே உனது மெல்லிய அடிகள் நடந்து சென்ற செய்தி கேட்டு எனது தாயும் தந்தையும் என்ன கதி அடைந்தார்களோ என்று கோவலன் ஏங்கி உரைக்கின்றான். தனது புன்மையையும் அவளது மேன்மையையும் நினைந்து நெஞ்சம் புண்பட்டு

" இருமுது குரவர் ஏவலும் பிழைத்தேன்
சிறுமுதுக் குறைவிக்கு சிறுமையுஞ் செய்தேன்
வழுவெனும் பாரேன் மாநகர் மருங்கீண்டு
எழுகென எழுந்தாய், என் செய்தனையால் "

என்றுகோவலன் இரங்கிக்கூறுகின்றான். என் தாய்தந்தையர்க்

குச் செய்யும் ஏவலையும் செய்யாது பிழைத்தேன். அறிவு வாய்ந்த உனக்கும் சிறுமை செய்தேன். வழுவிய ஒழுக்கம் இழுக்கென்றும் அறிந்திலேன். இத்தன்மை வாய்ந்த நான் உன்னை என்னுடன் போவதற்குப் புறப்படு என்றேன். நீயும் அதற்கு இணங்கி எழுந்தாயே என்ன காரியம் செய்தாய்" என்று கோவலன் மனம் வருந்திக் கலங்கினான். இதைக்கேட்ட கண்ணகி தன் காதலனைப் பார்த்து, 'ஐயனே நீர்

கோவலன் கண்ணகியிடம் புலம்பல்

" போற்றா ஒழுக்கம் புரிந்தீர் யாவதும்
மாற்றா வுள்ள வாழ்க்கையே னாதலின்
ஏற்றெழுந்தனன், யான்,"

என்று கூறுகின்றாள். நீர் கூடா ஒழுக்கத்தை மேற்கொண்டிருந்தாலும் உமது சொல்லை ஒரு சிறிதும் மாற்றாத உள்ள வாழ்க்கை யுடையேனாதலால் உமது ஆணையை ஏற்று உடனே எழுந்தேன் என்று கண்ணகி கூறும் மொழிகளில் அவள் கற்பின் திறம் விளங்கக் காணலாம், இத்தகைய கற்புக்கடம் பூண்ட பொற்புடைய தெய்வத்தை அடிகள் வாயார வாழ்த்துகின்றார். கண்ணகியை இடைக்குல மாதிடம் அடைக்கலமாகக் கொடுக்கும்பொழுது கவுந்தி அடிகள்,

கவுந்தியடிகள் கண்ணகியைப் புகழ்தல்

" கற்புக் கடம்பூண்ட இத் தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாம் கண்டிலமால்"

என்று கண்ணகியை கற்புடைய தெய்வமென்று வாயாரவாழ்த்துகின்றார். கடுந்தவப் பெரியாராகிய கவுந்தியடிகளால் கற்புக்கடம்பூண்ட பொற்புடைய தெய்வம் என்று புகழப்பட்ட கண்ணகியின் கற்பின் திறத்தை வியந்து கூறவும் வேண்டுமோ? பின்னும்,

"வானம் பொய்யாது; வளம் பிழைப்பறியாது
நீள் நிலவேந்தன் கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடென்னும்
அத்தகு நல்லுரை அறியாயோ நீ."

கற்பின் பெருமை

என்று அடிகள் மாதரியிடம் கற்புடைய மாதரால் உலகம் அடையும் உயரிய நன்மைகளையெல்லாம் தொகுத்துரைத்தார்.

இன்னும் கொலைக்களத்துக்குக் கோவலன் செல்லுமுன் கற்புடைய தெய்வத்திற்கும் அவள் காதலனுக்கும் நிகழ்ந்த சொல்லும் தோற்றமும் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தனவாய் அமைந்துள்ளன. கோவலனும் கண்ணகியும் தனிமையா யிருக்கின்றார்கள். கண்ணகி தன் கணவனுக்காக ஆயர்குலப் பெண்கள் கொடுத்த காய் கனிகளைக் கொண்டு அறுசுவை உணவாக்கினாள். காய்களை அரியும்பொழுது காந்தள் மலர் போன்ற அவள் கைவிரல்கள் வருந்தின. கயல்போன்ற அவள் கண்கள் சிவந்தன. இவ்வாறு உணவு சமைத்துத் தன் காதலன் அமுதுண்ணும்படி வெள்ளிய வாழை இலையை விரித்து அதில் அமுதம்படைத்து அருகே நின்றாள். கோவலன் உணவருந்தி எழுந்தவுடன் அவனுக்கு வெற்றிலையும் பாக்கும் கொடுத்து கண்ணகி பணி செய்து நின்றாள். அப்பொழுது கோவலன் தன் காதலியின் நலத்தையும் குலத்தையும் மறுபடியும் நினைக்கின்றான்.

"குடிமுதற் சுற்றமும் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீங்கி,
நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணையாக

என்னெடு போந்து ஈங்கு எந்துயர் களைந்த
பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்!
நாணின் பாவாய்! நீணில விளக்கே!
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!"

என்று தன் காதலியின் நலத்தை உள்ளங் கொள்ளப் புகழ்ந்து, "உன் சீறடிச் சிலம்பில் ஒன்று கொண்டு நான் மாட மதுரையில் விற்று வருகின்றேன். அதுவரையும் மாதே நீ மயங்காதே" என்று தேறுதல் கூறினன். அந் நிலையில் தன் காதலி யாதொரு துணையுமின்றித் தனியா யிருப்பதைக் கண்டான். உள்ளம் வெதும்பினன். கண்களில் கண்ணீர் பொங்கிற்று. கலங்கிய கண்களைத் தன் காதலி கண்டால் வருந்துவாளென்று கண்ணீரை உள்ளடக்கினன். பின் ஒன்றும் சொல்ல விளங்காதவனய் வீட்டை விட்டு வெளியே சென்றான். இவ்வாறு சென்ற காதலனை பின் கண்ணகி உயிருடன் காணளாயினள்.

கண்ணகியின் கற்பைக் கோவலன் புகழ்தல்

சிலம்பை விற்றுவரச் சென்ற தன் காதலன் நெடுநேரமாகத் திரும்பி வரவில்லை. வையை யாற்றில் நீராடச் சென்ற மாதரி என்னும் முதுமகள் கோவலன் வெட்டுண்டு இறந்தானென்று ஊரார் சொல்லக் கேட்டாள். தன் வீட்டுக்கு விரைந்தோடி வந்தாள். கண்ணகியைக் கண்டாள். ஏதும் சொல்ல நாவெழாது நின்றாள். இதனைக் குறிப்பால் உணர்ந்த கண்ணகி தன் தோழியைப் பார்த்து, சோகம் பொங்கித் ததும்பும் சொற்களால் இரந்து புலம்பினள்.

கண்ணகியின் சோகம்

"காதலன் காண்கிலேன் கலங்கிநோய் கைம்மிகும்
ஊதுலை தோற்க உயிர்க்கும் என் நெஞ்சன்றே

ஊதுலை தோற்க உயிர்க்கும் என் நெஞ்சாயின்
ஏதிலார் சொன்னது எவன் வாழியோதோழி"

"தோழி! என்காதலன்இன்னும்வரக்காணேன். என் நெஞ்சம் கலங்குகின்றது. ஊதும்உலைபோலஉள்ளத்தில் அழல்பொங்கி எழுகின்றது. பாவியேனாகிய என்னை நோக்கி இவ்வாய்ச்சியர் என்ன சொல்லுகின்றார்கள். தோழீ, நீயேனும் என்னிடம் சொல்லமாட்டாயா" என்று இரங்கிக் கேட்டாள்.

"நன்பகற்போதே நடுக்குநோய் கைமிகும்
அன்பனைக் காணாது அலறும் என் நெஞ்சன்றே
அன்பனைக் காணாது அலறுரும் என் நெஞ்சாயின்
மன்பதை சொன்னதெவன் வாழியோ தோழீ"

தோழி! என் காதலன்போய் நெடுநேர மாயிற்றே; இன்னும் அவர் திரும்பி வரக்காணேனே. அன்பனைக் காணாது என் நெஞ்சம் அலறுகின்றதே. என்னை நோக்கி இவ் வாய்ச்சியர் என்ன சொல்லுகின்றார்கள். தோழீ, நீயாயினும் சொல்லாயா ?" என்று இரங்கிக் கேட்டாள்.

"தஞ்சமோ தோழீ தலைவன் வரக்காணேன்
வஞ்சமோ உண்டு மயங்கும் என் நெஞ்சன்றே
வஞ்சமோ உண்டு மயங்கு மென் நெஞ்சாயின்
நெஞ்சிலார் சொன்னதெவன் வாழியோ தோழி"

"என் தோழீ, நீயே எனக்குத் தஞ்சமல்லால் வேறொருவருமில்லையே. என் தலைவன் இன்னும் வரக்காணேனே, ஏதேனும் வஞ்சம் உண்டோ என்று என் மனம் மயங்குகின்றதே. ஏழையாகிய என்னை நோக்கி அருளற்ற இவ் வாய்ச்சியர்கள் என்ன சொல்லுகின்றார்கள். நீயாயினும் என்னிடம் சொல்லலாகாதா" என்று வருந்திப் புலம்பினாள். இவ்வாறு கண்ணகி

கண்ணகி தோழியிடம் புலம்பல்

படும் துயரத்தைக் கண்டு மனம்பொருததோழி, "கோவலனைக் கள்வன் என்று அரசனது காவலாளர்கள் வெட்டிக் கொன்றார்கள்" என்று கூறினாள். இச்சொல் செவியில் விழுந்ததும் கண்ணகி பொங்கி எழுந்தாள்; விழுந்தாள்; மோதினாள்; அழுதாள். என் கணவா! நீ எங்கே சென்றாய் என்று ஏங்கினாள், மயங்கினாள். விண்ணிலே விளங்கித் தோன்றிய கதிரவனைப் பார்த்து, "ஏ காய்கதிர்ச் செல்வனே, நீ அறியாத மறை பொருள் இவ்வுலகில் ஒன்றுமில்லையே. நீயறிய என் கணவன் கள்வனோ" என்று முறையிட்டாள். கதிரவனும் மறைந்து நின்று, உன் கணவன் கள்வனல்லன் என்று கூறினான். இச் சொல்லைக் கேட்டவுடன் கண்ணகி தன்னிடமிருந்த மற்றொரு சிலம்பைக் கையிலேந்தி மதுரை வீதியின் வழியே சென்றாள். செல்லும் வழியில்,

"முறையில் அரசன் தன் ஊரிருந்து வாழும்
நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்காள்"

கண்ணகி அழுது அரற்றுதல்

கேளுங்கள்: "பாவியேன் படாத துயரம் பட்டேன். எவரும் உறாத துயரம் உற்றேன். இனி நான் அடைய இருக்கும் துன்பம் யாதொன்றுமில்லை. என் கணவன் கள்வனே அல்லன். அவன் கையிலிருந்த சிலம்பைக் கவர்ந்து கொள்ளும்பொருட்டு இப் பாவிகள் அவனைக் கள்வன் என்று பெயரிட்டுக் கொன்றார்கள். நான் பத்தினியாயிருந்தால் என் காதலனை மீண்டும் உயிரோடு காண்பேன். கண்டு அவன் நல்லுரையைக் கேட்பேன். கேளேனாயின் என்னை எல்லோரும் இகழுங்கள்" என்று வஞ்சினம் கூறி, அல்லற்பட்டு ஆற்றாது அழுதாள். இதைக் கண்ட மதுரை மூதூர் மக்களெல்லாம் என்ன விளையுமோ என்று ஏங்கினவர்களாய்

" செம்பொற் சிலம்பொன்று கையேந்தி நம்பொருட்டால்
வம்பப் பெருந்தெய்வம் வந்தது இது என் கொல் "

என்று கண்ணகியைத் தெய்வமாகவே கொண்டார்கள். அப்பொழுது கற்பரசியாகிய கண்ணகி பொற்புடைய தெய்வம் போலவே விளங்கினாள் என்பது

கண்ணகியின் தெய்வக் கோலம்

" ஐயரியுண்கண் அழுதேங்கி அரற்றுவாள்
தெய்வமுற்றாள் போலும் தகையள் "

என்று அவளைக் கண்டோர் சொல்லிய மொழிகளாலும் இனிது உணரப்படும். இவ்வாறு கண்ணகி நடந்து சென்று மண்மேல் குருதியில் மடிந்து கிடந்த கோவலனைக் கண்டாள். தன் காதலன் தன்னை மணந்தகாலத்தில் அவன் மார்பில் அணிந்திருந்த நல் அணிகளை நினைந்தாள்.

" என்னுறு துயர் கண்டும் இடருறும் இவள் என்னீர்
பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ "

என்று புலம்பினாள். தன் காதலன் தன்னை மணந்த காலத்தில் அவன் மார்பில் இலங்கிய மணமாலையை நினைந்தாள்.

" யாருமில் மருள்மாலை இடருறு தமியேன்முன்
தார்மலி மணிமார்பம் தரைமூழ்கிக் கிடப்பதோ "

என்று புலம்பினாள். இன்னும்,

" கண்பொழி புனல்சோரும் கடுவினை உடையேன்முன்
புண்மொழி குருதியிராய் பொடியாடிக் கிடப்பதோ "

என்று புலம்பினாள். பொன்போன்ற திருமேனி பொடியாடிக் கிடக்கலாமோ, தார்மலிந்த மணிமார்பு தரை மூழ்கிக் கிடக்கலாமோ, இத் தீவினையின் காரணத்தை எவரேனும் சொல்

காதலனைக் கண்டு கண்ணகி புலம்பல்

லார்களா என்று ஏங்கி அழுதாள். இத்தகைய கொடுங் கோல் மன்னன் ஆளும் நாட்டில்

"பெண்டிரும் உண்டோ பெண்டிரும் உண்டோ
சான்றோரும் உண்டோ சான்றோரும் உண்டோ
தெய்வமும் உண்டோ தெய்வமும் உண்டோ"

என்று அரற்றினாள். தன் கணவனது பொன் துஞ்சும் மார்பைத் தழுவிக்கொண்டாள். அப்பொழுது கோவலன் உயிரோடுஎழுந்தான். தன்காதலியின்வாடிய முகத்தைப்பார்த்து, முழுமதி போன்ற உன் முகம் கன்றியதே, என்று சொல்லி தன் கையால் அவள் கண்ணீரைத் துடைத்தான். கண்ணகி ஏங்கி அழுது நிலத்தில் விழுந்து தன் கணவன் திருவடியை இரு கைகளாலும் பற்றினாள். கோவலன் அழியும் இவ்வுடலை விட்டு அழியாத இன்ப உலகம் எய்தினான். இதைக்கண்ட கண்ணகி, 'இதென்ன மாயமோ, என்னை மயக்கியதோர் தெய்வமோ, ஒன்றும் தெரியேனே' என்று மயங்கி நின்றாள். பின்பு தன் காதலனைக் காரணமின்றிக் கொன்றகொடிய வேந்தனைக் கண்டு தன் கடுஞ்சினத்தைத் தணிக்க எண்ணி எழுந்தாள். முன்னேகண்ட தீக்கனவை நினைந்தாள். கண்களில் கண்ணீர் நிறைந்து பார்வையை மறைத்தது. கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பாண்டியன் அரண்மனை சென்றடைந்தாள். கொதித்த மனத்துடன் செற்றமும் சீற்றமும் உடையவளாய் மன்னவன் முன்னே சென்று வழக்குரைத்தாள். மன்னவனும் நீதியைத் தோற்று தன் அரியாசனத்தினின்றும் மயங்கி விழுந்து உயிர் துறந்தான். அரசியல் பிழைத்த பாண்டியனுக்கு அறமே கூற்றமாய் அமைந்தது. இக் கற்புடைய தெய்வத்தை மன்னவன் மாதேவி கண்டு நடுங்கி கண்ணகியின் அடியினைத் தொழுது விழுந்தாள். அரசன் இறந்ததோடு அமைவுறாமல்

கண்ணகி வழக்குரைத்தல்

"மட்டார் குழலார் பிறந்தபதிப் பிறந்தேன்
பட்டாங்கி யானுமோர் பத்தினியே யாமாயின்
ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன் மதுரையையும்",

கண்ணகியின் சீற்றம்

என்று சொல்லித் தன் வலது கையால் இடது மார்பைத் திருகி மதுரையின்மேல் எறிந்தாள். உடனே மதுரையில் தீப்பற்றியது. அழலை விளைத்த அரும் பெரும் தெய்வம் கண்ணகியின் முன்னே தோன்றி "இவ்வூரை இப்பொழுது எரிக்கப்போகின்றேன். உனது ஏவல் யாது" என்று வினவிற்று. அதற்குக் கண்ணகி

"பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர்
மூத்தோர், குழவி எனும் இவரைக் கைவிட்டு
தீத்திறத்தார் பக்கமே சேர்க."

கற்பின் ஆற்றலால் மதுரை அழிதல்

வென்று அருளியவாறே மதுரையில் அழல் மண்டித் தீயோரை எரித்து ஒழித்தது. அதன் பின்னர் கண்ணகி மதுரையினின்றும் புறப்பட்டு, 'என் கருத்தில் பொருந்திய கணவனைக் காணுமளவும் இருக்கவும் மாட்டேன் நிற்கவும் மாட்டேன்' என்று சொல்லி இரவும் பகலும் அலைந்து திரிந்து திருச்செங்கோட்டு மலையில் ஒரு வேங்கை மரத்தின் நிழலில் வந்தாள். அப்பொழுது தேவர்கள் பூமாரி பொழிந்து தெய்வ வடிவோடு கோவலனைக் காட்டிக் கண்ணகியையும் ஆகாய விமானத்தி லேற்றி விண்ணுலகிற்குக் கொண்டு சென்றார்கள். இவ்வாறு விண்ணுலகில் வாழும் தேவர்களும் தொழும் பெருமை கற்புடைய மாதர்க்கு என்றும் உண்டு என்ற உண்மையை இளங்கோவடிகள்

தேவர்கள் கற்பரசியைத் தொழுதல்

"தெய்வம் தொழாள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வம் தொழும் தகைமை திண்ணமால்— [தெய்வமாய்
மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து."

என்று எடுத்துரைத்தார். இக்காட்சியைத் தம் கண் குளிரக் கண்ட குன்றக் குரவர்கள் கண்ணகியைக் குல தெய்வமாகக் கொண்டு வேங்கைமரத்தின் நிழலில்தெய்வம் அமைத்து,சிறு பறையடித்து, கோடுவைத்தூதி கொடுமணி யடித்து குறிஞ்சி பாடி நறும்புகை யெடுத்து பூப்பலி செய்து நறுமலர் தூவி குரவைக் கூத்தாடிக் கண்ணகியை வணங்கினார்கள். அப்பால் இமயமலையில் கல்லெடுத்துக் கங்கையாற்றில் நீர்ப்படை செய்து வஞ்சிமா நகரத்தில் ஆலயம் அமைத்து வேள்வியும் விழாவும் வகுத்துச் சேரன் செங்குட்டுவன் பத்தினியைப் போற்றினான். பத்தினிக் கடவுள் ஆலயத்தை மும்முறை வலம்வந்து அரசன் வணங்கி நின்றான். அப்பொழுது அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும் பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும், குடகக் கொங்கரும் மாளுவ வேந்தனும் கடல் சூழ் இலங்கைக் கயவாகு மன்னனும் பத்தினியை வணங்கி நின்று தாம் செய்யும் விழாவிலும் கற்புக்கடவுள் தோன்றி அருள் செய்யவேண்டுமென்று வரம் கேட்டார்கள்.

குன்றக்குரவர் கண்ணகியை வழிபடல்

சேரன் ஆலயம் அமைத்து வழிபடல்

அப்பொழுது "தந்தேன் வரம்"—என்று ஆகாயத்தில் ஒரு குரல் எழுந்தது. கண்ணகி தெய்வத்தை எல்லோரும் தொழுது வாழ்த்தினார்கள். கற்புடைய தெய்வம் மின்னுக் கொடி போன்று சேரனுக்குக் காட்சி கொடுத்தது. இக் காட்சியைக் கண்ட சேரன்,

கண்ணகி தெய்வம் காட்சி கொடுத்தல்

"என்னே! இஃதென்னே! இதென்னே! இதென்[னேகொல்
பொன்னஞ் சிலம்பில் புனைமேகலை வளைக்கை
நல்வயிரப் பொற்றோட்டு நாவலம் பொன்னிழைசேர்
மின்னுக்கொடியொன்றுமீ விசும்பிற்றோன்றுமால்"

என்று அதிசயித்து வணங்கி நின்றான். தெய்வ ஒளி பொரு

ந்தி நின்ற கண்ணகி எல்லோரும் உண்மை அறியும்படி,

வரம் தருதல்

> "தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்
> நல்விருந்தாயினுன் நானவன் தன் மகள்
> வெல்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்
> என்னோடும் தோழிமீர் எல்லீரும் வம்மெல்லாம்"

என்று அருள் செய்தார்.

இதுகாறும் ஆராய்ந்த கண்ணகியின் கற்பு சீரிய கற்பென்று அடியார்க்குநல்லாரால் கருதப்படுகின்றது. இதனை வீரக் கற்பென்றும் மறக் கற்பென்றும் மற்றைய ஆசிரியர்கள் வழங்குவார்கள். சீற்றத்தால் அழல் விளைத்து மதுரைமாநகரை எரித்தமையால் சீரிய கற்பென்றும், பெண்மைக் குணமாகிய நாணம் முதலிய நாற்குணங்களையும் துறந்து முறை தவறிய பாண்டிய மன்னன் முன்னே சென்று வழக்குரைத்து அரசனை வென்று மதுரைமாநகரையும் சுட்டெரித்தமையால் கண்ணகியின் கற்பு வீரக் கற்பென்றும் வழங்கும்.

வீரக் கற்பு

கண்ணகியின்கற்பின் திறத்தையும்பாண்டிமாதேவியின் கற்பின் திறத்தையும் ஒப்பிட்டு நோக்கும்பொழுது அரசமாதேவியின் கற்பு ஆரியகற்பாக விளங்குகின்றது. தன் காதலன் நீதி பிழைத்து உயிர் துறந்த பொழுது அரசமாதேவி அரியாசனத்தின் அருகே நின்றாள். அப்பொழுது அவளது தோற்றம் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்ததாய் விளங்குகின்றது. தன் கணவன் மயங்கி விழுந்து கிடக்கின்றான். கடுஞ்சினங் கொண்ட கண்ணகி முன்னே நிற்கின்றாள். காதலனைக் கண்டு நெஞ்சம் குழைந்தாள். கற்புடைய தெய்வத்தைக் கண்டு நடுங்கினாள். காதலனை இழந்த கற்பரசிக்கு எவ்வகையான ஆறுதல்சொல்ல முடியும் என்று எண்ணி ஒன்றும் சொல்லாதவளாய் அரசமாதேவி கண்ணகியின் காலில் விழுந்து அவள் அடியிணை தொழு

சீரிய கற்பும் ஆரிய கற்பும்

தாள். அப்பால் எழுந்து, மயங்கி விழுந்து கிடந்த தன் கணவன் மலரடியை தன் மெல்லிய கரங்களால் வருடினாள்.

"தலைத்தாள் நெடுமொழி தன் செவி கேளாள்
கலக்கம் கொள்ளாள் கடுந்துயர் பொறாஅள்
மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத்
தன்னுயிர் கொண்டு அவன்உயிர் தேடினள்போல்
கோப்பெருந் பெண்டும் ஒருங்குஉடன் மாய்ந்தனள்"

பாண்டிமா தேவியின் தலையாய கற்பு

காதலன் இறந்த கடுந்துயர் பொறாது தன் கணவன் சென்ற வழி தானும் செல்லத் துணிந்து தன் உயிரைக் கொண்டு அவன் உயிரைத் தேடுபவள்போல அரசமாதேவியும் மயங்கி விழுந்து மாய்ந்தாள்.

இத்தகைய உயிரை உருக்கும் செயல்களையெல்லாம் சீத்தலைச் சாத்தனார் சொல்லக் கேட்ட சேரன் செங்குட்டுவன், பத்தினிப் பெண்டிராகிய இருவரது கற்பின் நிலைமையையும் அறிந்து கழிபேர் உவகைகூர்ந்து தனது பத்தினியிடம் இவ்விரு மங்கையரில் எவர் கற்பு மேலானது என்று வினவினான்.

"உயிருடன் வந்த ஒருமகள் தன்னிலும்
செயிருடன் வந்தஇச் சேயிழை தன்னிலும்
நன்னுதல் வியக்கும் நலத்தோர் யாரென"

இருபெரு மாதர் கற்பின் பெருமை

மன்னவன் தன் மனைவியினிடம் வினவினான். அதற்கு அறிவால் சிறந்த அம் மெல்லியல் மாது அவ் விரு பெரு மங்கையரின் கற்பில் ஏற்றம் தாழ்வு உரைக்க மனமற்றவளாய்,

"காதலன் துன்பம் காணாது கழிந்த
மாதரோ பெருந்திரு உறுக வானகத்து
அத்திறம் நிற்க, நம் அகல் நாடடைந்த
இப்பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்."

என்று பகர்ந்தாள். தம் காதலன் இறந்த துயரம் பொறுக்க மாட்டாமல் உயிர்துறந்து வானுலகடைந்த மாதர் சீரும் சிறப்பும் உறுக. ஆயினும் நமது நாட்டையடைந்த கண்ணகியை நாம் கற்புடைய தெய்வமாக வழிபடவேண்டும் என்றாள். அதுகேட்ட அரசன், கண்ணகி தெய்வத்திற்கு ஆலயம் அமைக்கக் கருதி அவ்வாறே வஞ்சிமா நகரத்தில் அழகிய கோயில் அமைத்து கற்புக் கடவுளை வழிபட்டு நாட்டில் பசியும், பிணியும் பகையும் நீங்கி வசியும் வளமும், பெருகுமாறு செய்தான்.

கண்ணகி தெய்வ வழிபாடு

---

## 5-வது அதிகாரம்
## வினைப் பயன்

வினையை விதைத்தவன் வினையை அறுப்பான் தினையை விதைத்தவன் தினையை அறுப்பான், என்பது தமிழ் நாட்டில் இன்றும் ஓர் பழமொழியாகவே நின்று நிலவுகின்றது. சிலப்பதிகார ஆசிரியரும் வினையின் பயன் திண்ணமாய் வந்து எய்தும் என்னும் உண்மையை உலகத்தார்க்கு உணர்த்தும்பொருட்டே நூலெழுதப் போந்தார். இவ்வுலகில் விழுமிய முதல் நூல் செய்யும் அறிஞர் தாம் மெய்யாக் கண்ட உண்மைகளைத் தம் நூலின் வாயிலாக உலகத்தார்க்கு உணர்த்துகின்றார்கள். வினையின் நீங்கிய விளங்கிய அறிவுடையோர்களே முதல்நூல் செய்யும் தகுதிவாய்ந்தவர் என்று தமிழ் நூல்கள் கூறுகின்றன. ஆகவே பெருந்தொகையினராய் உலகில் வாழும் மக்களுக்கு மறைபொருளாகவும் மயக்கப் பொருளாகவும் இருக்கின்ற உலக நிகழ்ச்சிகள் எல்லாம் தெள்ளறிவு பெற்ற ஆசிரியருக்குத் தெளிவாகவும் விளக்கமாகவும் விளங்குவனவாகும்.

முதல் நூலின் தன்மை

இவ்வாறு உயரிய அறிவு வாய்ந்தவர்கள் தாம் கண்ட உண்மைகளை நூல் வாயிலாக உலகத்தார்க்கு உணர்த்துவதாலேயே உயரிய நூல்களெல்லாம் உலக வாழ்க்கையின் இயல்பைத் தெளிவாகஎடுத்துரைக்கும்என்று மேல்நாட்டுப்புலவர்களும் தமிழ் நாட்டுப் புலவர்களும் ஒன்றுபட்டுக் கூறுகின்றார்கள்.

நம் உலக வாழ்க்கையைச் சிறிது சிந்தித்துப் பார்ப்போமானால் அதன்கண் நமது அறிவிற்குப் பொருத்தமற்ற பல நிகழ்ச்சிகள் காணப்படும். நன்மையையே நாடிச் செய்வான் ஒருவன் இவ்வுலகில்துன்பத்தால்நலிவதைப்பார்க்கின்றோம். தீமையையே பெரும்பாலும் செய்வான் ஒருவன் இவ்வுலக வாழ்க்கையில் மேன்மேலும் நன்மையையே பெற்று, இன்புறுவதையும் பார்க்கின்றோம். இவ்வாறு நன்மை செய்பவர்க்குத் தீமையும் தீமைசெய்பவருக்கு நன்மையும் இவ்வுலகில் நேர்வதை நோக்குமிடத்து ஏதோ முறை பிறழ்ந்திருப்பது போலத்தோன்றுகின்றது. சாதாரண அறிவுடையமக்கள் இவ்வாறு நிகழ்வதற்குக் காரணம் இன்னதென்று அறியாது மயங்குவார்கள். இத்தகைய மயக்கத்தைத் தெளிவித்து முறையில்லாதிருப்பதுபோலத்தோன்றுகின்றஇவ்வுலகவாழ்க்கையில்எல்லாம் வல்லஇறைவனது நீதிமுறைஅமைந்திருப்பதை விளக்கிக் காட்டுவதே அறிவுடையார் கருத்தாகும். இவ்வாறு உயிரின் தன்மை இன்னதென்றும் உலகவாழ்க்கையின்முறை இது வென்றும் உணர்த்தாத நூல்கள் சொல்லின் சுவையால் செவிக்கு எத்துணை இன்பம் பயந்தாலும் உயரிய நூல்களாக அறிவுடையோரால் ஒப்புக்கொள்ளப் படமாட்டா. ஆகவே விழுமிய நூல்களெல்லாம் உயிர்க்கு இம்மையும் மறு

உலக வாழ்க்கையில் காணப்படும் மயக்கம்

உயரிய நூல்கள் உயிரின் பயனை உணர்த்தும்

மையும் உறுதி பயக்கத்தக்க உயரிய உண்மைகளைத் தம் மிடத்தே கொண்டு விளங்குவனவாகும். இவ்வுண்மையை மனத்திற் கொண்டு சிலப்பதிகாரத்தை ஆராய்வோமானால் அந் நூலில் வாழ்க்கையின் மயக்கத்தைத் தெளிவிக்கின்ற பல அரிய உண்மைகள் அமைந்திருக்கக் காணலாம். கதைத்தலைவனாகிய கோவலன் இப்பிறப்பில் யாதொரு குற்ற மும் அற்றவனாய் யாவர்க்கும் நன்மையே நாடிச் செய்யும் இயல்புடையவனாய்க் காணப்படுகின்றான்.

**கோவலன் குற்றமற்றவன்**

அவனது உயரிய குணங்களை இரண்டொரு சான்றுகளால், ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். கோவலனுக்கு மாதவி என்னும் பொதுமகளால் ஒரு பெண்மணி பிறந்தாள். அப்பெண் பிறந்த பத்தாம் நாளில் அப்பெண்ணுக்கு மணிமேகலை என்னும் பெயர் கொடுத்து, கோவலன் தானங்கள் பலவும் செய்தான். அப்பொழுது அவனிடம் தானம் பெறுவதற்காக வந்திருந்த ஒரு ஏழைப் பார்ப்பானை அங்கு நின்ற ஒரு மதயானை தன் துதிக்கையால் வளைத்துக் கொல்ல முயன்றது. இதைக்கண்ட கோவலன் அவ்வந்தணன் மீது வைத்த அருங்கருணை

**ஒரு மறையவனைக் காத்தான்**

யால் அம் மதயானையினின்றும் அவனை விடுவித்து, தான் அதன் துதிக்கையில் புகுந்து, யானையின் செருக்கை அடக்கி, மறையவனைக் காத்தான்.

இன்னும் மற்றொரு சமயத்தில் வட நாட்டிலிருந்த ஏழைப்பார்ப்பானொருவன் தன் மனைவியின்மீது கோபங் கொண்டு, அவளை விட்டுப் பிரிந்து காட்டுக்கு சென்றான். அப்பெண்மணி உண்ண உணவும் உடுக்க உடையும் அற்ற வளாய் கணவன் தனக்கு இழைத்த தீங்கை நினைந்து

நினைந்து நெஞ்சம் வருந்தி, தெருத்தெருவாய் அலைந்து திரிந்தாள். இதைக் கேள்வியுற்ற கோவலன் அம்மாது படும் துயரத்தைக் கண்டு மனம் பொறாமல் அவள் வறுமையை நீக்குதற்கு வேண்டும் பொருள் கொடுத்து காட்டுக்கு ஆளனுப்பி அவள் கணவனையும் அழைத்து வந்து இருவரும் முன்போலவே இல்லறமாகிய நல்லறத்தை இனிது நடத்துமாறு செய்தான்.

மற்றொரு மறையோன் மனத்துயர் நீக்கினன்

இன்னும் ஒரு சமயத்தில் நியாயமன்றத்தில் பொய்ச் சான்று சொல்லிய ஒருவனை பூதசதுக்கத்தினின்றும் எழுந்துவந்த பூதம் தன் பாசக் கயிற்றால் இறுகப்பிணித்து இழுத்துக்கொண்டுநின்றது. அப்பொழுது கோவலன் அவன் மீது இரக்கம் கொண்டு அவன் உற்றார் உறவினர் அடைந்த துயரம் கண்டு மனம் பொறாமல் அப்பூதத்தினிடம் சென்று தன் உயிரை ஏற்றுக்கொண்டு அப்பொய்யனைப்போக விடுமாறுவேண்டினன். அதற்கு அப் பூதம் இசையாமல்

பொய்க்கரியாளனுக்காக தன்னுயிரை அளித்தான்

"நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி இழக்கும் பண்பு ஈங்கில்லை."

என்று சொல்லி மறுத்துவிட்டது. இவ்வாறு தன்னுயிரை ஏற்றுக்கொள்ள மறுத்த பூதத்தினிடம்கோவலன் மிக வருத்தம் கொண்டவனாய் அதன் பாசக்கயிற்றில் அகப்பட்டு உயிர் துறந்த ஏழையின் உற்றார் உறவினர் அனைவர்க்கும் பசிப் பிணி நீக்கிப் பல்லாண்டு பாதுகாத்தான்.

இத்தகைய செயற்கரும் செயல்களை யெல்லாம் நேராக அறிந்திருந்த மாடலன் என்னும் மறையோன்கோவலன் காட்

டின் வழியே நடந்து கடுந்துயர் அடைந்ததைக் கண்ட பொழுது மனம் பொறுமல் அவனைப் பார்த்து ஐயனே

கோவலன் தன்மையை மாடலன் கூறல்

"இம்மைச் செய்தன யானறி நல்வினை,
உம்மைப் பயன்கொல் ஒருதனி உழந்தி,
திருத்தகு மாமணிக் கொழுந்துடன் போந்தது,
விருத்த கோபால நீ"

என வினவினன். நான் அறிந்த அளவில் நீ இப்பிறப்பில் செய்தன வெல்லாம் நல்வினையாயிருக்க இப்பொழுது துன்பத்தால் நலிவதற்குக் காரணம் முன் செய்த தீவினையோ என்று மறையவன் ஏங்கி மொழிந்தான்.

கோவலன் ஏன் துன்பம் உழந்தான்?

இவ்வாறு இவ்வுலகில் தன் உடல் பொருள் ஆவி மூன்றும் மன்னுயிர்க்கு நன்மையே நாடிச் செய்த கோவலன் ஏன், காடு நாடெல்லாம் அலைந்து, துன்பம் உழந்து இறுதியில் வெட்டுண்டு இறந்தான்? நன்மை செய்த ஒருவனுக்கு இத்தகைய தீமை உறுதல் நீதியோ? நன்மை செய்ததன் பயன் தீமையாய் முடியுமானல் இவ்வுலகில் நன்னெறி எவ்வாறு தழைத்தோங்கும் என்னும் வினக்கள் இயல்பாகவே எழுகின்றன.

பாண்டிய அரசனது செங்கோன்மை

இன்னும் மதுரைமா நகரை அரசாண்ட மன்னவன் இப்பிறப்பில் யாதொரு குற்றமும் செய்தவனல்லன். அவனது அரண்மனையில் எப்பொழுதும் மங்கலமாகிய மறையொலியே யல்லால் அசையா மணியோசை எந்நாளும் கேட்டதில்லை. அம்மன்னவனது வெண்குடை பகைவர்க்கு வெம்மையையும் தன் குடிகளுக்குத் தண்மையையும் எப்பொழுதும் கொடுத்தது. இம்மன்னவன் நீதியால் அரசாண்ட முறையை மதுரைமா தெய்வமே கண்ணகியிடம் பாராட்டிக் கூறுகின்றது.

இம்மன்னவனது செங்கோல் முறையையும் அவன் நாட்டின் வளத்தையும் நேராகக் கண்டு களித்த கோவலன் கவுந்தி அடிகளிடம் பாண்டிய மன்னனைப் பாராட்டிப் புகழ்ந்தான். இன்னும் இவ்வரசனது நீதி அவன் செய்த ஓர் அருஞ் செயலால் அறியப்படும். சேர நாட்டரசனிடம் பொன்னும் மணியும் பரிசுபெற்ற ஓர் மறையவன் பாண்டிய நாட்டின் வழியாக வரும்பொழுது ஒரு பார்ப்பனச் சிறுவன் இளவயதில் மறை முழுதும் வல்லனாயிருத்தலைக் கண்டு அவனுக்குத் தான் பெற்ற பொன்னையும் மணியையும் பரிசாகக் கொடுத்தான். இதனை அறியாத பாண்டிய நாட்டுக் காவலாளர்கள் இவ்வேழைப்பார்ப்பனச் சிறுவனுக்கு இப்பொருள் எவ்வாறு கிடைத்தது? இவன் களவு செய்தே இருக்கவேண்டும் என்று துணிந்து அவனைச் சிறைச்சாலையில் அடைத்தார்கள். இவ்வநீதி நடந்தபொழுது அவ்வூரிலிருந்த காளி கோயிலின் கதவு திடீரென்று அடைத்துக் கொண்டது. இதை அறிந்த அரசன் கோவில் அடைபட்ட காரணத்தை அறிந்து காவலாளராகிய அறியாமாக்களால் இறைமுறை பிழைத்தது என்று மனம்வருந்தி அம்மறையவன் அடியிணை தொழுது அவனைச் சிறையினின்றும் விடுவித்து சீற்றம் தணித்தான். இவ்வாறு நீதி போற்றிய அரசன் அரசியல் முறைக்கு முற்றிலும் முரணாக எவ்வாறு கோவலனைக் கொல்லும்படி ஆணை செய்தான் என்பது சாதாரண மக்களுக்கு மயக்கமாகவே யிருக்கும்.

நெடுஞ்செழியன் நீதி போற்றிய வரலாறு

இம்மன்னவன் எவ்வாறு தவறு செய்தான்

இத்தகைய மயக்கத்தை மதுரைமா தெய்வம் கண்ணகியிடம் கூறுகின்ற மொழிகளின் வாயிலாக ஆசிரியர் தெளி

விக்கின்றார். கோவலன் வெட்டுண்டு இறந்ததும் பாண்டியன் பிழைத்ததும் வினையின் பயனேயல்லால் வேறன்று.

வினையின் பயன்

முற்பிறப்பில் சிங்கபுரத்தை அரசாண்ட வசு என்பவனும் கபில புரத்தை அரசாண்ட குமரன் என்பவனும் தம்முள் மாறுபட்டு ஒருவரை ஒருவர் வெல்லக் கருதி யிருந்தார்கள் என்றும் அப்பொழுது சிங்கபுரக் கடைத்தெருவில் பண்டம் விற்றுக்கொண்டிருந்த சங்கமன் என்னும் வணிகனை பகையரசனுடைய ஒற்றன் என்று கருதி அவனைப்பிடித்து அரசனிடம் காட்டி பரதன் என்னும் காவலாளன் கொலைசெய்து விட்டான் என்றும் இதைக்கண்ட சங்கமன் மனைவியாகிய நீலி என்பாள் ஆராத் துயரமுற்று இறந்த தன் கணவனைக் காணும்பொருட்டு உயிர் விடுவதற்கெண்ணி ஓர் பெரிய மலை மீதேறி இப்பிறப்பில் எமக்குத் துன்பம் செய்தோர் மறு பிறப்பில் இத்துன்பத்தையே அடைவார்களாக என்று சாப மிட்டு உயிர் துறந்தாளென்றும் அப்பரதன் இப்பிறப்பில் கோவலனாய்ப் பிறந்தானென்றும், பரதன் மனைவி தன் கணவன் இறந்த பதினாலாம் நாள் உயிர் துறந்து விண்ணுலகடைந்தது போலவே கோவலன் மனைவியாகிய கண்ணகியும் தன் கணவன் இறந்த பதினாலாம் நாள் விண்ணுலகடைந்தாள் என்றும் சிலப்பதிகாரம் வினையின் பயனை விளக்கிக் கூறுகின்றது.

கோவலன் முற்பிறப்பில்செய்த செயல்

இதனால் ஒரு உயிர் ஒரு பிறப்பில் செய்கின்ற நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப மறுபிறப்பில் இன்பதுன்பங்களை அடைகின்றது என்னும் உண்மை இனிது விளங்குகின்றது. தான் செய்த வினைக்குத் தக்க உடம்பினை எடுத்துக்கொண்டு உயிரானது இன்பதுன்பங்களை யடையும் இவ்வுண்மையை சிலப்பதிகார நூலாசிரியர்,

மறுபிறப்புண்மை

"மக்கள் யாக்கை பூண்ட மன்னுயிர்
மிக்கோய் விலங்கின் எய்தினும் எய்தும்
விலங்கின்யாக்கை விலங்கிய இன்னுயிர்
கலங்கஞர் நரகரைக் காணினுங் காணும்
ஆடும் கூத்தர்போல் ஆருயிர் ஒருவழி
கூடிய கோலத்து ஒருங்கு நின்று இயலாது
செய்வினை வழித்தாய் உயிர் செலுமென்பது
பொய்யில் காட்சியோர் பொருளுரையாதலின்"

என்று எடுத்துக்கூறுகின்றார். இவ்வாறு ஒரு பிறப்பில் ஒருவன் செய்யும் தீவினை ஒரு சிறிதும் அவனைவிட்டு விலகாமல் மறுபிறப்பில் நிழல் போலத் தொடர்ந்து சென்று துன்பம் விளைக்கும் என்பது இந்நூலாசிரியரது முடிந்த முடிவாகும். ஆகவே உலகில் ஒருவன் துன்பத்தால் நலியும் பொழுது இறைவன் பிழை செய்தான் என்று எண்ணி மயங்குவதில் யாதொரு பயனுமில்லை. தான் முன் செய்த வினையை நொந்து கொள்வதல்லால் அறிவுடையார் வேறு எவரையும் நொந்துகொள்ள மாட்டார்கள்.

வினை நிழல் போலத் தொடர்ந்து போதல்

தீவினை தீமை பயக்கும்

"தீதுடை வெவ்வினை உருத்தகாலைப்
பேதைமைகந்தாப் பெரும்பே துறுவர்
ஒய்யாவினைப்பயன்உண்ணுங் காலை
கையாறு கொள்ளார் கற்றறி மாக்கள்"

என்று கவுந்தியடிகள் கோவலனுக்கு ஆறுதல் கூறும் மொழிகளால் மேற்கூறிய உண்மைகள் விளங்கும்.

நல்வினைசெய்தார்க்குநன்மையும் தீவினைசெய்தார்க்குத் தீமையும் திண்மையாய் வந்து சேர்தலால் மக்கள் தீவினையை அகற்றிநல்வினையேசெய்யவேண்டுமென்று ஆசிரியர்வற்புறுத்

திக் கூறுகின்றார். இவ்வாறு நல்வினை செய்ய நினைக்கும் பொழுதும் நாளைச் செய்வோமென்று அகற்றி வையாமல் அப்பொழுதே செய்ய வேண்டும். நன்றே செய்யவும் வேண்டும். நன்றும் இன்றே செய்யவும் வேண்டும். இன்றும் இன்னே செய்யவும் வேண்டும் என்று மற்றொரு ஆசிரியர் கூறியவாறு நல்வினையை இப்பொழுதே செய்யவேண்டுமென்று சிலப்பதிகார ஆசிரியரும் அருளுகின்றார்.

நல்வினையை இன்னே செய்தல்

"நாளைச் செய்குவம் அறமெனின் இன்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்
இதுவென வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகின் முழுவது மில்லை"

என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

இன்னும் இவ்வுலகப் பொருளும் இன்பமும் நிலையற்றனவாயிருப்பதால் உலகத்தின் நிலையாமையை உள்ளவாறு உணர்ந்து துறவற நெறியைக் கடைப் பிடித்தலே பேரின்பம் பயக்குமென்று ஆசிரியர் தெளிவாக எடுத்துக் கூறுகின்றார். இளமையும் யாக்கையும் செல்வமும் நில்லாவென்பதை நன்கு உணர்ந்த பின்னரே இவ்வுலகப்பற்றுஒருவனைவிட்டுவிலகும். இவ்வாறு உலகப்பற்றை ஒழித்து தூயநெறியாகிய துறவறத்தைமேற்கொண்டவர்களே பிறவியாகிய பெருங்கடலைநீந்துவார்கள். இத்தகைய துறவறத்தின்பெருமையைநமது ஆசிரியர்வாழ்க்கையிலேயேஅமைத்துக்காட்டியருளினார். இவரதுபெருமையைகண்ணகி தெய்வம்போற்றிப் புகழ்கின்றது.

நிலையாமை கண்டோர் துறவறம் புகுதல்

"வஞ்சிமூதூர் மணி மண்டபத்தினிடை
நுந்தை தாணிழல் இருந்தோய் நின்னை

அரைசுவீற்றிருக்கும் திருப்பொறி உண்டென்று
உரைசெய் தவன்மேல் உருத்து நோக்கி
கொங்கவிழ் நறுந்தார்க்கொடித் தேர்த்தானை
செங்குட்டுவன்தன் செல்ல னீங்க
பகல்செல்வா யிற்படியோர் தம்முன்
அகலிடப்பாரம் அகல நீக்கி
சிந்தை செல்லாச்சே ணெடுந்தூரத்து
அந்தமில் இன்பத்து அரசாள்வேந்து."

ஆசிரியரது துறவின் பெருமை

என்று ஆசிரியர் பெருமையைக் கண்ணகி தெய்வம் கூறுகின்றது. இம்மண்ணரசாளும் பொறுப்பைத் தன் அண்ணனுக்கு விட்டு விண்ணரசாளும் வேந்தனாய் இளங்கோவடிகள் விளங்கினார் என்று கூறுகின்றமையால், அரசாங்க உரிமையுடன் சிறந்து விளங்கிய செங்குட்டுவனைப் பார்க்கிலும் உலக இன்பத்தைத் துறந்த இளங்கோவடிகளது பெருமை சாலவும் பெரிது என்பது இனிது விளங்கும். இவ்வாறு துறவறமே சாலவும் சிறப்புடைய தென்றும் துறவறமே பிறவியை வேரறுக்கும் மருந்தென்றும் ஆசிரியர் அடிப்படையாகக் கருதினமையாலேயே சிலப்பதிகாரக் கதையால் விளங்கும் பெருமக்களெல்லாம் துறவறத்தை மேற்கொண்டு விளங்குகின்றார்கள்.

இன்னும் உலகின் தன்மையை ஆசிரியர் உள்ளவாறுணர்ந்தவராதலால் அதன் நிலையை நன்றாய் அறுதியிட்டுக் கூறுகின்றார். இவ்வுலகில் நன்னெறி என்றும் தீநெறி என்றும் இருநெறியுண்டென்றும் தீநெறியானது போலிநலம் உடைய தாய் மக்கள் கவரும் தன்மை வாய்ந்ததாய் அமைந்திருக்குமென்றும் அந்நெறியிற்செல்வோர் மது உண்டோர் மகிழுமாறு போல சிறிது காலம் இன்புற்றிருந்து பின் மீளாத் துன்பத்தையே அடைவார்களென்றும் இவ்வாறு துன்பத்

நன்னெறி தீநெறி என்னும் இரு நெறி

தால்நலியும்பொழுது நன்னெறியைநினைந்து அதைக்கடைப் பிடித்து நலம் பெறுவரென்றும், இறுதியில் நன்னெறியே வெற்றிபெறுமென்றும் தீநெறி தானே தனக்குக் கூற்றமாய் அழிந்து ஒழியுமென்றும்சிலப்பதிகாரம் உணர்த்துகின்றது. கோவலன் முதலில் மாமறை விதிவ்ழாமல் மணஞ்செய்தகண்

நன்னெறியே நிலைபெறும்

ணகியுடன் சில ஆண்டுகள் இனிது வாழ்ந் திருந்தான். அப்பால் அவ்வொழுக்க நெறி யை விலகி மாதவியின் மையலென்னும் சிறு நெறியிலே சேர்ந்தான். தீநெறியானது எப்பொழுதும் கண் டோரைவசப்படுத்தும்வண்ணத்தோடுவிளங்கும். மாதவியும் மாந்தளிர்போன்ற மேனியும் விரிந்துசுருண்ட கருங்குழலும் உடையவளாய் தன் இயற்கை நலத்தை நல்லணிகளால் அழகு

தீநெறியின் தோற்றம்

செய்து பன்னிரண்டு வயதமைந்த பாவை யாய் அரங்கத்தில் வந்து நின்றாள். கோவல னும் அவள் வசப்பட்டான். மாதவியுடன் மகிழ்ந்து வாழ்ந்து மணிமேகலை என்னும் மகவைப் பெற்று மாயையிலேயே மூழ்கியிருந்தான். இவ்வாழ்க்கையில் முன் னோர் தேடிவைத்த பெரும் பொருளை யெல்லாம் தொலைத் தான். கடல் கரையில் மாதவியோடு கானல்வரி பாடி மகிழ்ந் திருந்தபொழுது அவள் பொருள் ஒன்றையே விரும்பும் பொது மாது என்பதை உணர்ந்தான். மாதவி மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் என்று மனதில் கொண்டான். தீ

மாதவியின் தன்மை

நெறியைச்சேர்ந்தவர் உறுவது தீமையேயாத லால்கோவலன்காட்டிலடைந்தகடுந்துன்பத் திற் கெல்லாம் காரணம் இதுவேயாகும். பொருளெல்லாம் மாதவிபால் தொலைந்தமையால் சிலம்பை விற்றுவர மதுரைக்குச் சென்றான். அப்பொழுது தான், தீ

நெறியின் தன்மையைச் சிந்தித்து மனம் வருந்துகின்றான். தன்னுடன் வந்த பெரியாரிடம் தன் வருத்தத்தைச் சொல்லி முறையிடுகின்றான்.

"நெறியின் நீங்கியோர் நீர்மையேனாகி
நறுமலர் மேனி நடுங்கு துயரெய்த
வறியாத் தேயத் தாரிடை உழந்து
சிறுமையுற் றேன் செய்தவத்தீர் யான்"

கோவலன் நெறியல்லா நெறி சேர்ந்து துன்புறுதல்

என்றான். கோவலன், தான் கானகத்தில்காதலியோடு துயர் உழந்து சிறுமை யுற்றதற்கு நன்னெறியினின்றும் நீங்கி சிறுநெறி சேர்ந்ததேகாரணமென்பதை நன்றாயுணர்ந்தான். இன்னும் தன் வருத்தத்தைக் கண்ணகியிடம் சொல்லிப் புலம்பும் பொழுதும்,

"வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகைபுக்குப்
பொச்சாப்புண்டு பொருளுரையாளர்
நச்சுக் கொன்றேற்கு நன்னெறி உண்டோ"

நன்னெறி துறந்த கோவலன் வருந்துதல்

என்றுதான் தீநெறியை மேற்கொண்டிருந்த சிறுமையைநினைந்துகோவலன் வருந்துவது இனிதுணரப்படும். இவ்வாறு தீநெறியினின்றும் விலகி நன்னெறியைச் சேர்ந்த பின்னரும் அத் தீநெறியானது அவனை மறுபடியும் மயக்கித் தன் வழியில் இழுத்துக் கொள்ள முயன்றது. கோவலன் கடல் கரையினின்றும் பிரிந்த பின்னர் மாதவி தனியாகத் தன் மாளிகை சேர்ந்தாள். அங்கு தன் காதலனாகிய கோவலனைக் காணாது மனம் வருந்தி ஓர் அழகிய தாழைப் பூவின் தோட்டில் பித்திகையின் முகையாகியஎழுத்

தீநெறி மீண்டும் கோவலனைத் தன்வசப் படுத்த முயலுதல்

தாணியால் செம்பஞ்சுக்குளம்பில்தோய்த்து பாசம் நிறைந்த ஓர் பாசுரத்தை எழுதித் தன் தோழியாகிய வசந்தமாலை கையில் கொடுத்து எவ்வாருயினும் கோவலனை மறுபடியும் தன் மாளிகைக்கு அழைத்து வரும்படி சொல்லி யனுப்பினுள். ஆனுல் கோவலன் தீ நெறியின் திறத்தினை நன்குணர்ந்தவனுதலால் வசந்த மாலையைப் பார்த்து "மாலாய்! மாதவி நாடக மகளாதலால் இவ்வாறு நடித்தல் அவளுக்கு இயல்பேயாம்" என்று கூறி மறுத்து விட்டான்.

வசந்தமாலை தூது

இதனேடும் அமைவுருமல் மற்றும் ஒரு முறை தீநெறியானது கோவலனை வசப்படுத்த முயன்றது. காட்டின் வழியாகக் கோவலனும் கண்ணகியும் போகும்பொழுது கோவலன் தனிமையாயிருக்கும் நேரம்பார்த்து மாதவியிடமிருந்து தூதாக வந்த, ஒரு மறையவன் தன் மாயச் சொற்களால் கோவலனை மயக்க முயன்முன். அம்மறையவன் கோவலனைப் பார்த்து, "ஐயனே, உன்னைப் பிரிந்த தாய் தந்தையர் அருமணி யிழந்த நாகம்போல ஆருத் துயரடைந்தார்கள். நமது அழகிய நகரம் இராமனை இழந்த அயோத்திபோல ஆருத் துயர்க்கடலில் ஆழ்ந்தது. மாதவியும் நீ வசந்தமாலையின் மொழிகளுக்கு இணங்காதது கேட்டுமாடத்திலிருந்த மஞ்சத்தில் மயங்கி விழுந்தாள். சிறிது நேரம் அறிவற்று அயர்ந்து கிடந்தாள். பின் என்னை அழைத்து ஓர் திருமுகம் எழுதிக் கொடுத்து உன்பால் அனுப்பினுள்" என்று சொல்லி அத்திருமுகத்தைக் கொடுத்தான். இவ்வாறு நயவஞ்சகமாக மாதவியிடம் வெறுப்புக் கொண்டிருந்த கோவலனிடம் மாதவியின் பெயரை முன்னே

மறையவன் தூது

சொன்னால் உடனே மறந்து விடுவான் என்று எண்ணி அவன் மனத்தை முதலில் இழக்கும் பொருட்டுப் பெற்றோர் படுந்துயரத்தைச் சொல்லியும், ஊரார் படும் துயரத்தைச் சொல்லியும், பழைய ஞாபகத்தை அவன் மனதில் எழுப்பும் பொருட்டு மாதவியின் மாளிகையையும் மஞ்சத்தையும் அவள் மயங்கி விழுந்த முறையையும் மிக நயமாக எடுத்துச் சொல்லியும், கோவலன் அம்மாயையில் மறுபடியும் ஈடுபட்டா னல்லன். மறையவன் கொடுத்த ஓலையைப் படித்துப்பார்த்து மாதவியின் வேண்டுகோளை மறுத்து விட்டான். இவ்வாறு தீ நெறியானது இரு முறை கோவலனை தன் வசப்படுத்த முயன்றும் பயன்படாது ஒழிந்தது. அப்பால் கோவலன் கொலையுண்டு இறந்த செய்திகேட்டு தீ நெறியாகிய மாதவி தானே தனக்குக் கூற்றமா யமைந்து கணிகையர் வாழ்க்கையை வெறுத்து மாதவர்க்குத் தானம் புரிந்து துறவறம் எய்தினாள். கோவலனோ கண்ணகியாகிய நன்னெறியில் சேர்ந்து முன்செய்த வினைப்பயனால் கொலையுண்டு இறந்தாலும் பின் தெய்வ வடிவோடு தோன்றி விண்ணுலகடைந்தான்.

*கோவலன் மாயையை வெல்லுதல்*

நன்னெறியானது எப்பொழுதும் தன்னைச் சார்ந்தவர்க்கு நன்மையே செய்யு மென்பதற்கும் தன்னின் மாறாய தீமையை அழித்து ஒழிக்கு மென்பதற்கும் கண்ணகியே சிறந்த சான்றாக அமைந்திருக்கின்றாள். மதுரைமா நகரை நன்னெறியானது தன் கற்பின் பெருமையால் அழித்த காலத்தில் அங்கிருந்த நல்லோரைப் பாதுகாத்துத் தீயோரையே அழித்ததாக சிலப்பதிகாரம் கூறுகின்றது.

*நன்னெறி நன்மை விளக்கும்*

அறிவுடையோரையும் அறவோரையும் பசுக்களையும் பத்தினிப் பெண்டிரையும் மூத்தோரையும் இளையோரையும் கைவிட்டு

*தீமையை ஒழிக்கும்*

தீத்திறத்தார் பக்கமே சேர்ந்து கற்புத் தீயானது அழித்தது என்று கூறப்பட்டிருப்பதால் நன்னெறியானது தீமையை அறவே ஒழிக்கும் தன்மை வாய்ந்தது என்பது இனிது அறியப்படும்.

ஆகவே இதுகாறும் கூறியவாற்றால் வினையை விதைத்தவன் வினையை அறுப்பது திண்ணமென்பதும், நல்வினை தீவினைகள் நிழல்போலப் பின் தொடர்ந்து பிறவி தோறும் செல்லுமென்பதும், தீவினை தீமை பயத்தலால் மக்கள் எப்பொழுதும் நல்வினையே செய்யவேண்டுமென்பதும், அதனையும் காலம் தாழ்க்காது செய்யவேண்டுமென்பதும், உலகத்துன்பத்தை ஒருங்கே ஒழிப்பதற்குத் துறவறமே சிறந்த நெறியென்பதும், அவ்வறத்தை மேற்கொண்டார் பிறவாமையாகிய பெரும் பேறடைவார்களென்பதும், நெறியல்லா நெறியாகிய சிறுநெறியை விலக்கி நன்னெறியாகிய பெருநெறியைக் கடைப்பிடித்து ஒழுகுதலே பேரின்பம் பயப்பதாகும் என்பதும், ஆசிரியர் சிலப்பதிகார மென்னும் நூலால் உணர்த்திய சீரிய உண்மைகளாம்.

முடிவுரை

## 6-வது அதிகாரம்

### பண்டைத் தமிழ் மக்கள் நாகரிகம்

ஒரு நாட்டில் வாழும் மக்களது நாகரிகம் அந்நாட்டில் வழங்கும் மொழிகளில் எழுதப்படும் நூல்களால் நன்கு வெளியாகுமென்பது ஓர் சரித்திர உண்மையாகும். நூல் எழுதும் புலவர்கள் வாழுங்காலத்தில் வழங்கும் பழக்கவழக்கங்களும் பரவியிருக்கும் கொள்கைகளும் அவர் நூல்களில், இலை மறை காய்போல் அமைந்து விளங்குவது இயல்பேயாகும். பண்டைக் காலத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த

ஒரு நாட்டாரது நாகரிகம், அந் நாட்டு மொழியில் விளங்கும்

வாழ்க்கையின் தன்மையையும் அவரது நடை உடை முதலிய நாகரிக முறைகளையும் நாம் இக்காலத்தில் அறிந்து கொள்வதற்கு சங்கநூல்கள் என்று பேர் பெற்று விளங்குகின்ற சீரிய நூல்களே சிறந்த ஆதரவாக இருக்கின்றன. பழந்தமிழ் நூலாகிய சிலப்பதிகாரத்தில் அக்காலத்திய தமிழ் மக்களது பழக்க வழக்கங்களும் அவர் வழிபட்ட தெய்வங்களும், அக்காலத்தில்நிலைத்திருந்த அரசியல் முறைகளும்,மற்றும் தமிழ் மக்கள் பலதுறைகளிலும் எய்தியிருந்த மேன்மை

சங்க நூல்களில் விளங்கும் பண்டை நாகரிகம்

யும் சிறப்பும் செவ்வையாய் விளங்குகின்றன. இந்நூல் முடியுடை வேந்தராய்த்தமிழ் நாட்டில் விளங்கியமூவர்க்கும் உரியதாயிருத்தலின் அதனிடத்துக் காணப்படுகின்ற நாகரிக முறைகள் எல்லாம் தமிழகம் முழுவதும் பரவியிருந்தவைகளே என்று கொள்வதற்கு இடமிருக்கின்றது. கதையின் நாயகியாகிய கண்ணகி சோழநாட்டிலே பிறந்து பாண்டிய நாட்டிலே தன் கற்பின் பெருமையைக் காட்டி பின் சேரநாடு சேர்ந்து விண்ணுலகடைந்தாள் என்று சிலப்பதிகாரம்

சிலப் பதிகாரத்தில் தமிழ் மூந் நாட்டு நாகரிகமும் விளங்குதல்

கூறுவதால் தமிழ்நாட்டு மூவேந்தரது சிறப்பும் செய்கையும் இந்நூலில் ஒருங்கேகாணப்படுவது போல வேறு ஒரு தமிழ் நூலில் காண்பதரிதாகும்.

பண்டைத் தமிழ் மக்களது நாகரிகத்தை ஆராயப்புகு

தமிழ் நாடு

முன்னர் அக்காலத்தில் தமிழ்மொழி பரவியிருந்த நாட்டின் பரப்பை அறிந்து கொள்வது அவசியமாகும். ஒரு காலத்தில் இமயமலை முதல் தென்குமரிவரையும் தமிழ்மொழியே பரவியிருந்ததென்றும்,பின்

ஆரிய வகுப்பார் இங்கு குடியேறியகாலத்தில் வடபாகத்தில் ஆரியமும் தென்பாகத்தில் தமிழும் வழங்கலாயின என்றும் சிலர் கருதுகின்றார்கள். அக்காலத்திய தமிழ் நாடு இப்பொழுதுகுமரியென்றுபெயர்பெற்று விளங்கும் தென்முனைக்குத் தெற்கேயும் பரவியிருந்ததென்றும், அத்தென் நாடு ஓர்பெரிய கண்டமாய் விளங்கிற்றென்றும் அக்கண்டத்தில் ஆறுகளும் மலைகளும் இருந்தனவென்றும், அது பிற்காலத்தில் ஆழி வாய்ப்பட்டு அழிந்ததென்றும், சிலர் கருதுகின்றார்கள். ஆயினும் அக்காலத்தில் தமிழ்மொழி பரவியிருந்த நாட்டின் பரப்பை நன்றாய் அறுதியிட்டுக் கூறுதற்குப் போதிய சான்றுகள் தமிழ் நூல்களில் கிடைப்பதரிதா யிருக்கின்றது. மிகப் பழைய காலத்தில் தமிழ் மொழியில் எழுதப்பட்ட நூல்கள் இக்காலத்தில் பெரும்பாலும் இல்லா தொழிந்தன. தமிழ் மொழியில் மிகப் பழைய நூலாக இப்பொழுது நாம் காணக் கிடைத்திருப்பது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலேயாகும். இந்நூலுக்கு முன்னர் தமிழ் மொழியில் பல இலக்கிய நூல்கள் இருந்திருக்க வேண்டுமென்பது அறிவுடையார் அனைவரும் ஒப்பமுடிந்த உண்மையாகும். உலகில் வழங்கும் செம்மொழிகளின் வரலாறெல்லாம் இவ்வுண்மையைச் செவ்வையாய் உணர்த்துவதாகும். செம்மொழிகளாய் விளங்குகின்றவெவ்வொருமொழியிலும் முதலில் சொல்நயம்பொருள் நயம் அமைந்த இலக்கிய நூல்கள் எழுதப்படும். பின்னர் அந் நூலில் கண்ட நயங்களையும் அழகுகளையும் வடித்துத் தொகுத்து இலக்கணம் அமைக்கப்பெறும். இம் மொழிநூல் உண்மை "இலக்கியம் இன்றே இலக்கணம் இன்றே" என்

சில கொள்கைகள்

பழந்தமிழ் நூல்கள் அழிந்தமை

தமிழ் மொழியில் பல நூல்கள் இருந்திருக்க வேண்டும்

னும் அகத்தியத்தாலும் "இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலின்" என்னும் நன்னூல் மொழியாலும் நன்கு விளங்கும். ஆகவே தொல்காப்பியம் என்னும் இலக்கணத்திற்கு முன்னரே தமிழ் மொழியில் தலைசிறந்த இலக்கிய நூல்கள் இருந்திருக்க வேண்டுமென்பது மறுக்க முடியாத உண்மையாகும். இவ்வாறு தொல்காப்பியத்திற்கு முன்னர் இருந்த பல்காப்பியங்களும் இப்பொழுது தமிழ் மக்களுக்குக் கிடைத்திருக்குமேயானால் கடலாற் கொள்ளப்பட்ட தென் கண்டத்தின் பரப்பையும் சிறப்பையும் தெளிவாய்த் தெரியவல்ல சான்றுகள் கிடைத்திருக்கலாம்.

ஆனால் தமிழ்மொழியில் இப்பொழுது உள்ள நூல்களைத் துணையாகக் கொண்டு ஆராயுமிடத்து தமிழ் நாடானது வடக்கே திருவேங்கட மலையையும் தெற்கே குமரியையும் மற்றைய இரு பக்கங்களிலும் நெடுங் கடலையும் எல்லையாகக் கொண்டு விளங்கிற்றென்று தெரிகின்றது. "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்" என்று தொல்காப்பியப் பாயிரம் கூறுகின்றமையாலும்

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ் வரம் பறுத்த தண்புனல் நாடு"

சிலப்பதிகாரக் காலத்தில் தமிழ் நாட்டெல்லை

என்று சிலப்பதிகாரம் கூறுகின்றமையாலும் அக் காலத்திய தமிழகத்தின் பரப்பு நன்கு அறியப்படுகின்றது.

ஆயினும் தமிழ் நாட்டின் தென் பாகத்தை கடல் கொண்டதென்று அறிவுடையோர் ஆராய்ந்து கூறும் உண்மைக்கு சிலப்பதிகாரத்தில் சிறந்த சான்று கிடைக்கின்றது. மதுரைக் காண்டத்தில் நாடு காண் காதையில்,

"வடிவேல் எறிந்த வான்பகை பொறாது
பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்து
குமரிக்கோடும் கொடுங் கடல் கொள்ள"

என்று ஆசிரியர் கூறுகின்றார். தென்பால் அமைந்திருந்த பஃறுளி என்னும் ஆற்றையும் பல அடுக்குகளாய் அமைந்தமலைத் தொடரில்குமரிஎன்னும்சிகரத்தையும்,உடையதாய்விளங்கிய நெடிய நாட்டைக் கொடிய கடல் கொண்டது என்று ஆசிரியர் கூறுகின்றமையால் இப்பொழுது குமரிமுனைக்குத்தெற்கே கடலாய் விளங்குகின்ற இடத்தில் அக்காலத்தில் மலைத் தொடரும் ஆறும் இருந்தன என்பது இனிது அறியப்படுகின்றது. சிலப்பதிகாரத்திற்குஉரை வரைந்த அடியார்க்கு நல்லார்இவ்வாறு கடலில் தாழ்ந்த தமிழ் நாட்டில் பஃறுளி என்னும் ஆற்றுக்கும் குமரி என்னும் ஆற்றுக்கும் இடையே இருந்த நீர் வளம் மலிந்த ஏழ்தெங்க நாடும், ஏழ்மதுரை நாடும், ஏழ்முன் பாலை நாடும், ஏழ்பின் பாலை நாடும், ஏழ்குன்ற நாடும், ஏழ்குண காரை நாடும், ஏழ்குறும்பனை நாடும் ஆகிய நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்லம் முதலிய பன்மலை நாடும், காடும் நதியும் பதியும் ஆழி வாய்ப்பட்டு அழிந்தது என்று கூறுகின்றார். ஆகவே சிலப்பதிகாரம் எழுதப்பட்ட காலத்திற்கு முன்னரே தமிழகத்தின் பெரும் பாகம் கடலில் தாழ்ந்து போயிற்றென்பது நன்கு அறியப்படுகின்றது.

*கடலில் தாழ்ந்த தமிழ் நாடு*

இன்னும் அக்காலத்திலேயே இந்தியாவின் தென்பாகத்தையும் இலங்கையையும் கடல் இரண்டாகப் பிரித்து இலங்கை ஒரு தனி நாடாகவே விளங்கிற்றென்று தெரிகின்றது. சேர மன்னனாகிய செங்குட்டுவன் கண்ணகி தேவிக்கு ஆலயம் அமைத்து திருவிழா எடுத்த காலத்தில் அதனைக் கண்டு களிக்கும் பொருட்டு,

*இலங்கை ஒரு தீவு*

"கடல்சூழ் இலங்கை கயவாகு வேந்தன்" என்று பிறப்பித்தான் என்று ஆசிரியர் கூறுகின்றமையால் அக்காலத்திலேயே இலங்கை கடலாற் சூழப்பட்ட ஒரு தனி நாடா யிருந்த தென்பது விளங்குகின்றது.

இனி அக்காலத்திய தமிழ் மக்கள் நாகரிக முறைகள் என்று கருதப்படுகின்ற பல துறைகளிலும் தலை சிறந்து விளங்கினார்கள். இக்காலத்தில் கருதப்படுவது போலவே அக்காலத்திலும் செல்வம் மலிந்த நாடே சிறப்புடைய நாடென்று கருதப்பட்டது.

"பொன்னினாகும் பொருபடை அப்படை
தன்னினாகும் தரணி தரணியில்
பின்னையாகும் பெரும் பொருள் அப்பொருள்
துன்னுங்காலை துன்னாதன இல்லையே"

*கைத்தொழிலும் வாணிகமும் செல்வத்தைப் பெருக்கும்*

என்று சிந்தாமணி ஆசிரியர் கூறுகின்றவாறு பொருள் மிகுந்த நாடே புகழாலும் ஆற்றலாலும்சிறந்துவிளங்கும் என்பதுஎக்காலத்திற்கும் ஒத்த ஓர் உண்மையாகும். இவ்வுண்மையை அக்காலத்திய தமிழ் மக்கள் நன்றாய் அறிந்திருந்தார் என்பதற்கு அவர்கள் கைத்தொழில் வாணிகம் என்னும் இரண்டையும் கண்ணும் கருத்துமாய் போற்றி வளர்த்த முறையே போதிய சான்றாகும்.

இக்காலத்தில்செல்வத்தால் சிறப்புற்றுவிளங்கும்நாடுகளெல்லாம் கைத்தொழில் மேம்பாட்டினாலும் வணிகத்தின் பெருக்கத்தாலுமேஅவ்வாறு விளங்குகின்றன என்பதுசரித்திர நூலோர் ஒப்புக்கொள்ளும் உண்மையாகும். தமிழ் நாட்டில் விளைந்த விளை பொருள்களை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விடா

*கைத்தொழில்*

மல் அவற்றைக் கைத்தொழில் நுண்மையால் பலவகைப் பொருள்களாக அமைத்து அக்காலத்திய தமிழ்மக்கள் தொழில் முறையில் மேம்பட்டிருந்தார்கள். நாட்டில் விளைந்த பருத்தியை நூலாக்கிஅதனல் நுண்ணியமெல்லிய ஆடைகள் நெய்தும் நாட்டில் கிடைத்த பட்டுநூல் கம்பளம் ஆகிய இவற்ருல் பலவகையானஉடைகள்செய்தும்தமிழ்நாட்டுப்பொருள் அயல் நாட்டிற்குப் போகாதவாறு கைத்தொழில் நடத்தி வந்தார்கள். சோழ நாட்டின் தலைநகராகிய புகார் நகரத்தில்

ஆடை செய்தல்

"பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டும் நுண்வினைக் காருகர் இருக்கையும்"

விளங்கித் தோன்றின என்று ஆசிரியர் கூறுகின்றமையால் பட்டாலும் கம்பளத்தாலும் பருத்தி நூலாலும் மெல்லிய ஆடைகள் செய்யவல்ல சாலியர் தமிழ் நாட்டில் விளங்கினர் என்பது இனி துணரப்படும். பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரைமா நகரிலும்,

"நூலினும், மயிரினும், நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூ றடுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை வீதியும்"

விளங்கிற்று என்று சிலப்பதிகாரம் கூறுவதால் நுண்ணிய பருத்தி நூலாலும் பட்டு நூலாலும் கம்பளத்தாலும்நெய்யப்

நறுமடிக் கடைகள்

பட்ட பலவகையான ஆடைகளை வெவ்வேருகப் பிரித்து அடுக்கடுக்காய் வைத்திருந்த நறுமடிகள் நிறைந்த கடைகள் வீதியில் விளங்கித் தோன்றின என்பது உணரப்படும். ஆகவே சோழ நாட்டிலும் பாண்டியநாட்டிலும் அக்காலத்தில் கைத்தொழில் செழித்திருந்த தென்பது நன்கு விளங்குகின்றது.

ஆடைகள் செய்யும் தொழிலேயன்றியும் அக்காலத்தில் மற்றைய கைத்தொழில்களும் மேம்பாடடைந்திருந்தன

என்று தெரிகின்றது. காவிரிப்பூம் பட்டினத்தில் வெண்கலத்தில் வேலைசெய்யும் கன்னாரும், செம்பில்வேலைசெய்யும் கன்னாரும், மரத்தில்வேலைசெய்யும் தச்சரும், இரும்பில் வேலைசெய்யும் கொல்லரும், அழகிய சித்திரம் எழுதும் ஓவியப் புலவரும், சிற்பவேலையில் வல்லாரும் பொன்னாலும் மணியாலும் வேலை செய்யும் தட்டாரும், தையல் வேலையில் வல்லாரும் வாழ்ந்து வந்தார்கள் என்று சிலப்பதிகாரத்தால் அறிகின்றோம். இன்னும் அழகிய வளையல்கள் செய்வாரும் முத்துமாலைகள் செய்வாரும் கிழிந்த துணியாலும் கிடைச்சாலும் விளையாட்டுச் சாமான்கள்(பொம்மை)செய்வாரும்புகார்நகரத்தில்வாழ்ந்து வந்தார்கள். இன்னும் ஒன்பது வகைப்பட்ட நவமணிகளின் பிறப்பு முதல் சிறப்பீறாகிய வகை யெல்லாம் தெரியவல்ல வணிகரும் சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்புநதம் என்னும்நால்வகைப்பட்டபொன்னின்வகைகளை நன்றாய்த் தெரியவல்ல பொன்வணிகரும் தம் தொழில் முறையில் மேம்பட்டு விளங்கினார்கள். இத்தகைய பொன்னாலும் மணியாலும் அமைக்கப் பெற்ற அழகிய அணிகள் செம்மையிலும் வகையிலும் சிறந்தனவாய்அக்காலத்திய திருந்திய நாகரிகத்திற்குப் பொருந்திய சான்று பகர்வனவாய் அமைந்துள்ளன. சிலப்பதிகாரக்கதை நிகழ்வதற்கே காரணமாயிருந்த சிலம்பு அருமையான வேலைப்பாடுடையதாய் அமைந்திருந்தது.

*மற்றைய கைத் தொழில்கள்*

*பொன்னின் வகைகளும் நவமணிகளும்*

*சிலம்பின் சித்திர வேலை*

“மத்தக மணியொடு வயிரம் கட்டிய
பத்திக் கேவணப் பசும்பொன் குடைச்சூல்
சித்திரச் சிலம்பின் செய்வினை எல்லாம் [னன்.”
பொய்த்தொழிற் கொல்லன் புரிந்துடன் நோக்கி

என்று ஆசிரியர் கூறுவதால் மாணிக்கமும் வயிரமும் வரிசையாய் அழுத்திபசும்பொன்னால் செய்யப்பட்டுஉள்ளே கருவை

யுடையதாய்சித்திரவேலையமைந்தசிலம்பாய் அதுவிளங்கிற்று என்பது அறியப்படுகின்றது. இன்னும் மாதவி என்னும் நாடகமாது கடல் விளையாட்டுக்காண விரும்பி அங்குசெல்லும் பொழுது அம்மாது அடி முதல் முடிவரை அணிந்திருந்த அணிகளையெல்லாம் ஆசிரியர் விரிவாக எடுத்துக் கூறியுள் ளார். அழகிய அடிகளுக்கு ஏற்றதாய் அமைந்திருந்த மெல் லிய விரல்களில் மோதிரம் பீலி முதலிய அணிகளை அணிந் தாள். கால்களில் பாதசாலமும் பாடமும் சதங்கையும் அழ குற அணிந்தாள். நீல நிறம் அமைந்த அழ கிய ஆடை புனைந்து அதன்மேல் முத்துக் கோவைமுப்பத்திரண்டால் செய்தவிரிசிகை யென்னும் கலையை அணிந்தாள். கண்டோர் விரும்பும் கண் டிகையோடு முத்துமாலையையும் தோளில் அணிந்தாள். வயிர மும் மாணிக்கமும்வரிசையாய் அழுத்திய அழகிய சூடகமும், பொன்வளையலும், மணிவளையலும், சங்கவளையலும், பவள வளையலும் முன்கையி லணிந்தாள். வாய்திறந்த வாளைமீன் போல பொன்னாலமைந்த நெளியையும் மத்தியில் சிவப்பு மாணிக்கப் பீடமும் வளைவில் வயிரமும்பதித்தநல்மோதிரத் தையும் மெல்லிய விரல்களில் அணிந்தாள். இன்னும் பொன்னாலாகிய சங்கிலித்தொடரும் சவடியும் சரப்பளியும் முத்தாரமும் அழகிய கழுத்திலணிந்தாள். முகப்பில் இந்திர நீலமும் இடையிடையே வயிரமும் பதித்த நீலத்தோடு அவ ளது நீண்ட காதில் நின்று ஒளி செய்தது. கருமையாகிய கூந்தலில் அருமையான தொழிலமைந்த தலையணிகளை அழ குற முடித்தாள். இவ்வாறு மாதவி அணிந்திருந்ததாக ஆசிரியர் கூறும் அணிகள் எல்லாம் அக்காலத்திய மாதரது திருந்திய நாகரிகத்திற்கு சிறந்த சான்றாக அமைந்திருக்கின் றன. இக்காலத்தினர் நாகரிக நகைகள் என்று போற்றிப்

அக்காலத்திய அணிகலன்கள்

புகழ்கின்ற அணிகளிற் பல அக்காலத்திய மாதரால் அணியப் பெற்றிருந்தன வென்றேதெரிகின்றது. இந்நல்லணிகளிற்பல இன்னும் தென்னாடுகளில் வழங்கி வருவதைக் காணலாம்.

இன்னும் அக்காலத்திருந்த வாசனைப் பொருள்களை ஆராய்வோமானால், அவையும் தமிழ் நாட்டாரது நாகரிக நல் வாழ்க்கையை நன்கு விளக்குகின்றன. பூம்புகார் நகரத்தில் வண்ணமும் சுண்ணமும் தண்ணரும் சாந்தமும் பூவும் புகை யும் விரையும் வீதிகளில்விலைகூறி விற்கப்பட் டன வென்று ஆசிரியர் கூறுகின்றார். தமது மேனியை நறுமணம் கமழும் நீர்மையில் அமைத்துக் கொள்ளக்கருதிய மாதர்கள் பத்து வகைப்பட்ட விரகாலும் ஐந்து வகைப்பட்ட விரையாலும் முப்பத்திரண்டு வகைப்பட்ட வாசனைப் பொருளாலும் ஊறிக் காய்ந்த நன்னீ ரில் தோய்ந்து நனைந்த கூந்தலின் ஈரத்தை வாசனைப் புகை யில் உலர்த்தி சவ்வாது பூசி நலங்கிளர் மேனியொடு திகழ்ந் திருந்தார்கள்.

வாசனைப் பொருள்கள்

அக்காலத்திய தமிழ் மக்கள் அவரவர் நிலைமைக்கும் செல்வத்தின் அளவுக்கும் ஏற்ற முறையில் மண் செங்கலால் கட்டப்பட்ட வீடுமுதல்மாடமாளிகை யீறாகவீடுகள் அமைத் துக் கொண்டு வாழ்ந்தார்கள். ஆயர் சேரியில் கண்ணகியை

“ பூவலூட்டிய புனை மாண் பந்தல்
காவல் சிற்றில் கடிமனைப் படுத்தினள் ”

என்றுகூறப்பட்டிருப்பதால்ஆயர்சேரியிலிருந்த அச்சிறுமனை வேலியாற் சூழப்பட்டு அழகிய குளிர்ந்த பந்தலை உடையதாய் செம்மண்ணால்பூசப்பட்ட சிறுவீடாய்விளங் கிற்று என்று அறியப்படுகின்றது. ஆனால்

வீடுகள்

புகார் நகரத்தின் கயவாய் மருங்கில் காணப்பட்ட வீடுகள் உயர்ந்த மாளிகைகளாய் விளங்கித் தோன்றின.

" கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற அறியா யவனர் இருக்கையும் "

என்று ஆசிரியர் கூறுமாறு யவனர் என்னும் அயல் நாட்டு வணிகர் வாழ்ந்துவந்த இடங்கள் உயர்ந்த மாளிகைகளா யமைந்திருந்தன. அம்மாளிகைகளில் அழகிய நிலா முற்றங்களும் அணிகலன்கள் அமைக்கும் அறைகளும் இலங்கித் தோன்றின. ஆயினும் இத்தகைய விண் அளாவிய உயரிய மாளிகைகளிலும் மிகச்சிறிய சாளரங்களே அமைக்கப்பெற்றிருந்தன. மானின் கண்போன்ற சாளரங்களையுடைய மாளிகைகள் என்றும், "முகில்தோய் மாடத்து குறுங்கண் அடைக்கும் கூதிர்க் கால"மென்றும் கூறப்பட்டிருத்தலால் சிற்ப நூலில் வல்லாரால் சிறப்பாகச் செய்யப்பட்டு மேகம் தோய உயர்ந்த மாடங்களிலும் சிறிய கண்களையுடைய சாளரங்களே அமைக்கப்பெற்றிருந்தன என்பது அறியப்படுகின்றது.

யவனரது மாளிகைகள்

சிறிய சாளரங்கள்

இன்னும் அக்காலத்தில் தமிழ் நாடானது தரைவழியாகவும் நீர்வழியாகவும் பல அயல் நாடுகளோடு வாணிகம் செய்துவந்த தென்பது சரித்திர உண்மையாகும். புலவர் பாடும் புகழமைந்த புகார் நகரத்தில்,

" கலத்தினும் காலினும் தருவனர் ஈட்டக்
குலத்திற்குன்றாக் கொழுங்குடிச் செல்வர் "

வாழ்ந்து வந்தார்கள் என்று சிலப்பதிகாரம் கூறுவதால் மரக்கலத்தால் கடல் கடந்து வாணிகம் செய்யும் வழக்கம் அக்காலத்திலேயே, தமிழ் நாட்டில் நிலைபெற்றிருந்ததென்பது

நன்கு உணரப்படும். இத்தகையகடல்வாணிகம்சிறந்துநடந்த தன்மையாலேயே புகார்நகரத்தை "பாதர் மலிந்த பயங்கெழு மாநகர்" என்று ஆசிரியர் சிறப்பித்துக் கூறியுள்ளார். அக்காலத்தில் ஐரோப்பிய நாட்டில் சீரும் சிறப்பும் பொருந்தி வாழ்ந்த யவனர் என்னும் கிரேக்கர்கள், வாணிகத்தின் பொருட்டு தம் நாட்டைவிட்டுத் தமிழ் நாட்டில் குடியேறி வாழ்ந்தார்கள். அவர்கள் தமிழ் நாட்டாருடன் நீரொடு நீர் சேர்ந்தாற் போல வேற்றுமையின்றிக் கலந்து தாம் மேற்கொண்ட வணிகத்தை நடத்தி வந்தார்கள். இதனை ஆசிரியர்,

கடல் வாணிகம்

"கலந்தரு திருவில் புலம் பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்கு நீர் வரைப்பும்"

என்று கூறிப் போந்தார். இவ்வாறு தமிழகத்தில் வாழ்ந்த யவனர்கள், கடற்கரையி னருகே அமைத்திருந்த அழகிய மாளிகைகள் விண்ணிலே விளங்கித் தோன்றின. துறைமுகம் இருந்த இடத்தை மரக்கலங்கள் தெரிந்து அதனை நோக்கி வருவதற்கு சாதாரணமாக ஓர் கலங்கரை விளக்கம் (Light House) அமைக்கப்பட்டிருந்தது. இத்தகைய வணிக மக்கள் வாழ்ந்துவந்த துறைமுகத்தில் பலவகைச் சரக்குகளையும் பகுத்து உணர்த்துதற்கு சிறு கொடிகள் ஆங்காங்கே நாட்டப்பெற் றிருந்தன. இதனை ஆசிரியர்,

கலங்கரை விளக்கம் (LightHouse)

"கலந்தரு திருவில் புலம் பெயர் மாக்கள்
வேலை வாலுகத்து விரிதிரைப் பரப்பில்
கூல மருங்கில் கொடி எடுத்து நுவலும்"

என்று கடலாடு காதையில் கூறிப்போந்தார். இவ்வாறு அக்காலத்தில் தமிழ் நாட்டில்வணிகம் செய்யப்பெற்ற பொருள்களை மற்றொரு பழந்தமிழ் நூல் தொகுத்துக் கூறுகின்றது.

துறைமுகத்தில் சரக்குகளைப் பகுத்து வைத்தல்

"நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்
காலில் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்
தென்கடல் முத்தும் குணகடல் துகிரும்
கங்கைவாரியும் காவிரிப் பயனும்
ஈழத்துணவும் காழகத் தாக்கமும்"

வாணிகப் பொருள்கள்

என்று பட்டினப்பாலை கூறுவதால் அக்காலத்திய வணிகப் பொருள்கள் ஒருவாறு அறியப்படுகின்றன.

இன்னும் அக்காலத்தில் தமிழகத்தில் யவனரும் மற்றைய் அயல் நாட்டாரும் வெகுவாய்ப் போந்து வியாபாரம் செய்த உண்மையை நன்கு உணர்த்தவல்ல பலவகைச் சான்றுகள் இப்பொழுது கிடைத்திருக்கின்றன. காவிரிப்பூம் பட்டினத்திலும் மற்றும் அக்காலத்தில் துறைமுகப் பட்டினங்களாய் இருந்த இடங்களிலும் அயல் நாட்டுப் பழைய நாணயங்களும் காசுகளும் தரையினின்றும் வெட்டி எடுக்கப்பட்டுள்ளன.

அயல் நாட்டு நாணயங்கள்

இவற்றை ஆராயும்பொழுது பண்டைக் காலத்தில் தமிழகத்தில் யவனர் முதலிய அயல் நாட்டார் பெருந்தகையினராய்க் குடியேறிப் பண்டமாற்றுச் செய்து வந்த பான்மையால் அவர் நாட்டு நாணயங்கள் தமிழ் நாட்டில் வழங்கலாயின என்பது இனிது விளங்கும். ஆகவே இப்பொழுது வாணிகத்தால் செழித்தோங்கியுள்ள நாடுகளும் நகரங்களும் முளை கிளம்பாதிருந்த காலத்திலேயே தமிழகம் வாணிகத்தால் சிறப்புற்று அக்காலத்தில் தலை சிறந்து விளங்கிய அயல் நாடுகளோடு வாணிகம் செய்து வந்தது என்னும் உண்மை சிலப்பதிகாரத்தாலும் மற்றைய சங்க நூல்களாலும் தெளிவாக விளங்குகின்றது.

இவ்வாறு கைத்தொழிலாலும் வாணிகத்தாலும் சிறந்தோங்கியிருந்த தமிழ் நாட்டில் நீர்வளம் நிலவளம் முதலிய வளங்களெல்லாம் பொருந்தி யமைந்திருந்தமையால் பயிர்த் தொழிலாகிய பழுதற்ற தொழில்பெரிதும்மேம்பாடடைந்திருந்தது. சோழநாட்டில் பொன்னி என்னும் பெயர் பெற்ற காவிரியாறு தன் வளம் பொருந்தியநலத்தால்'சோழவளநாடு சோறுடைத்து'என்று புலவர் போற்றுமாறு வளம் பெருக்கியது. பாண்டியநாட்டில் வையையாறு நீர் வளத்தால் சிறந்து செல்வத்தைப் பெருக்கியது. இக்காலத்தில் ஊற்றுப் பெருக்கால் ஊரார்க்கு நீரளிக்கும்வையையாறு அக்காலத்தில் வற்றாத நீர்ப் பெருக்கை உடையதாய் படகுகள் இன்றி கடத்தற்கரியதோர் ஆழமுடைய ஆறாக விளங்கிற்று. கோவலனும் கண்ணகியும் மதுரைமா நகர்ப்புறம் போந்த பொழுது படகிலேறிவையையாற்றைக் கடந்தார்கள் என்றுசிலப்பதிகாரம் கூறுகின்றது. இவர்கள் சோழநாட்டினின்றும் புறப்பட்ட காலம் இளவேனிற் காலமென்றும் மதுரைமா நகரத்தைக் கண்ணகி தன் கற்பின் அழலால் எரித்தகாலம் ஆடிமாதமென்றும் அறியப்படுகின்றமையால் அருங்கோடை காலமென்று இப்பொழுது மதுரையில் கூறப்படுகின்ற மாதங்களில் அக்காலத்தில் வையையாறு படகின்றிக் கடத்தற்கரிய ஆழமுடைய ஆறாக விளங்கிற்று.

பயிர்த்தொழில்

நீர்வளம்

வையையாறு

" உலகு புரந்தூட்டும் உயர்பேர் ஒழுக்கத்துப்
புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி
வையை யென்ற பொய்யாக் குலக்கொடி "

என்று ஆசிரியர் வையையாற்றை வியந்து கூறுகின்றார். இவ்வாற்றைக் கடப்பதற்கு குதிரை முகப் படகும் யானை முகப்

படகும் சிங்க முகப்படகும் ஆங்காங்கே துறைகளில் காணப் பட்டன என்றும் அவைகளில் மக்கள் அவரவர் தகுதிக்கும் செல்வத்திற்கும் ஏற்ற படகுகளில் ஏறி ஆற்றைக் கடந்தா ரென்றும் அறியப்படுகின்றது.

சேரநாட்டின் மலைவளமும் நதிவளமும்

இனிச் சேர நாட்டில் மலை வளமும் அம்மலையினின் றும் இழிந்த அருவியின் வளமும் நீர் நிறைந்த பெரியாறு என்னும் பெருநதியும் பொருனை என்னும் பொய்யா நதியும் விளங் கித் தோன்றின.

"முதிர் பூம் பரப்பின் ஒழுகுபுனல் ஒளித்து
மதுகரம் ஞிமிறொடு வண்டினம் பாட
நெடியோன் மார்பில் ஆரம் போன்று
பெருமலை விலங்கிய பேரியாற்று அடைகரை"

என்று ஆசிரியர் கூறுவதால் இவ்வாற்றின் வளமும் சிறப்பும் ஒருவாறு அறியப்படும். இன்னும் இக்காலத்தில் திருநெல் வேலி நாட்டில் நலம் பெருக்குகின்ற பொருனை யென்னும் பெயர்பெற்ற தாம்பிரவர்ணியாறு அக்காலத்தில் சேர நாட் டைச் சேர்ந்த ஆறாக இருந்ததென்று விளங்குகின்றது. சேர நாட்டரசனை வாழ்த்தும் செய்யுளில்,

"மலையரையன் பெற்ற மடப்பாவை தன்னை
நிலவரசர் நீண்முடிவேல் ஏற்றினன் வாழியரோ
வாழியரோ வாழி வருபுனல் நீரான் பொருனை
சூழ்தரும் வஞ்சியார் கோமான் தன்தொல் குலமே"

என்று கூறப்பட்டிருப்பதால் சிலப்பதிகாரம் எழுந்த காலத் தில் பொருனையாறு சேரநாட்டைச் சேர்ந்திருந்த தென்பது இனிது விளங்குகின்றது. இவ்வாறு வற்றாத நீருடைய ஆறு கள் தமிழ் நாட்டில் அமைந்திருந்தமையால் நீர்வளமும் நில

7

வளமும் சிறந்து பழுதிலாத் தொழிலாகிய பயிர்த்தொழில் மிக மேம்பாடடைந்திருந்தது.

இனி அக்காலத்தில் தமிழ் நாட்டில் பலவகையான சமயங்கள் பரவியிருந்தன என்பதும் தமிழ் மக்களது அறிவின் அளவிற்கும் மனப்பான்மைக்கும் ஏற்ற பலதிறப்பட்ட தெய்வங்கள் வழிபாடு செய்யப் பெற்றன என்பதும் சிலப்பதிகாரத்தால் விளங்குகின்றது. குறிஞ்சி நிலமென்று வழங்குகின்ற மலைநாட்டில் வாழ்ந்து வந்த குரவரும் மற்றைய மக்களும் முருகவேளை தம் வழிபடு தெய்வமாகக் கொண்டு வணங்கினார்கள்.

முருகன் வழிபாடு

அவர்கள் வழிபடும்பொழுது குறிஞ்சிப் பறையும் சிறுபறையும் அடித்து கொம்பு ஊதி கொடுமணி இயக்கி குறிஞ்சிப் பாக்களைப் பாடி நறும்புகை யெடுத்து பூப்பலி செய்து காப்புக் கடை நிறுத்தி பரவல் பரவி விரைமலர் தூவி தெய்வம் தொழுதார்கள் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. தமது மலை நாட்டில் வளங் குன்றாது சிறக்கும்படி இவ்வாறு குரவர் வழிபாடு செய்வது வழக்கம். இனி மருதநிலத்தில் வாழ்ந்து வந்த வேளாளர் அந்தணர் வணிகர் முதலிய மக்கள் அவரவர் அறிவின் தன்மைக்கும் மனப் பான்மைக்கும் ஏற்ப சைவம் வைணவம் புத்தம் சமணம் ஆகிய சமயங்களில் ஒன்றை மேற்கொண்டு வாழ்ந்து வந்தார்கள். சோழ நாட்டின் தலைநகராகிய புகார் நகரத்தில்,

ஆலயங்கள்

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்"

இலங்கித் தோன்றின. பிறவாத பெருமையையுடைய சிவ பெருமான் கோயிலும் அழகிய செம்மை வாய்ந்த அறுமுகப் பெருமான் ஆலயமும், வெண்சங்குபோன்றநிறத்தையுடைய பல தேவர் கோயிலும் நீலமணி போன்ற நிறத்தையுடைய நெடுமால் கோயிலும் மாலேயும் குடையுமுடைய வாசவன் கோயிலும் காவிரிப்பூம்பட்டினத்தில் காணப்பட்டன என்று ஆசிரியர் அருளுகின்றார். அந்நகரத்திலேயே அறவோர் பள்ளியும் அறநோம்படையும் விளங்கின என்று ஆசிரியர் கூறுவதால் புத்தசமயத்தாருடையபள்ளியும்அருகசமயத்தாரது அறம் போதிக்குமிடமும் அந்நகரில் இலங்கித் தோன்றின என்பது நன்குவிளங்கும். இவ்வாறே மதுரைமாநகரத்திலும்

"நுதல்விழி நாட்டத்து இறையோன் கோயிலும்
உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்
மேழி வலனுயர்த்த வெள்ளை நகரமும்
கோழிச்சேவல் கொடியோன் கோட்டமும்
அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்"

காணப்பட்டனவென்று சிலப்பதிகாரம் கூறுவதால் சோழ நாட்டின் தலைநகராகிய புகார் நகரத்தில் அமைந்திருந்த கோயில்கள் பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையிலும் அமைந்திருந்தன என்பது அறியப்படுகின்றது. மேற் குறித்த கோயில்களே யன்றியும் அக்காலத்தில் பல கோட்டங்களும் தமிழ் நாட்டில் அமைந்திருந்தனவாகத் தோன்றுகின்றன. தேவதரு நிற்கும் கோட்டம், வெள்ளை யானை நிற்கும் கோட்டம், சூரியன் கோட்டம், சந்திரன் கோட்டம், வச்சிரக் கோட்டம், கைலாயக் கோட்டம், வேல் கோட்டம், அருகன் கோட்டம் ஆகிய பல கோட்டங்களும் தமிழ் மக்களால் வழிபாடு செய்யப்பட்டன என்று தெரிகின்றது.

கோட்டங்கள்

**திருமால் வழிபாடு**

இனி முல்லை நிலத்தில் வாழ்ந்துவந்த ஆயர் குலமக்கள் திருமாலை வழிபட்டு வந்தார்கள். திருமால் செய்த திருவிளையாடல்களையெல்லாம் நன்கறிந்து தம் ஆவும் கன்றும் நோயால் வருந்தும்பொழுது, திருமாலைத் தொழுது அப்பெருமான் திறம்பாடி குரவைக்கூத்து முதலிய ஆடல்கள் நிகழ்த்தினார்கள். கோவலன் மதுரைமா நகரில் வெட்டுண்டு இறந்த பொழுது ஆயர் குலமக்கள் வாழ்ந்துவந்த ஆயர்சேரியில் பல புதுமைகள் நிகழ்ந்தன. பிரையிட்ட பால் தோயாது பாலாகவே நின்றது. காளைகளின் கண்களில் கண்ணீர் பொங்கி வடிந்தது. வெண்ணெயை நெருப்பில் வைத்தபோது நெய்யாக உருகாமல் நின்றது. பசுக்கள் மெய் நடுங்கி ஓயாமல்

**குரவைக்கூத்து**

கதறிக்கொண்டிருந்தன. அவற்றின் கழுத்தில் கட்டியிருந்த மணிகள் அறுந்து விழுந்தன. இக்குறிகளைக்கண்ட ஆயர் குலமக்கள் தமது ஆயர் சேரியில் யாதேனும் துன்பம் வருமென்று அஞ்சி தம் வழிபடு தெய்வமாகிய திருமாலை நினைந்து குரவைக் கூத்தாடினார்கள்.

இன்னும் உயிர்ப்பலி உண்ணும் சிறு தெய்வங்களும் அக்காலத்தில் மறவர் முதலிய சில வகுப்பினரால் வழிபாடு செய்யப்பட்டன என்று தெரிகின்றது. மதுரைக்குச் செல்லும் வழியில் கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளும் ஐயை கோட்டத்தில் சென்று இளைப்பாறியபொழுது அங்கு அம்பும் வில்லும் கையிலேந்திய ஒரு மறக் குலப்பெண் வந்து சேர்ந்து ஆவேசமுற்று மெய்ம்மயிர் சிலிர்த்து கையை அங்குமிங்கும் அசைத்து அடிபெயர்த்து ஆடத் தொடங்கினாள். அவ்வாறு ஆடும்பொழுது மறக்குடியில் வாழும் மக்களைப்பார்த்து, நீங்களெல்லோரும் வளம் குன்றாது சீர்

சிறு தெய்வ வழிபாடு

குலையாது வாழவேண்டுமானால் தெய்வத்திற்கு நேர்ந்த கடனை இப்பொழுதே கொடுங்கள் என்று ஆரவாரஞ் செய்தாள். அதைக் கேட்ட மறவர்கள் ஒருங்கு சேர்ந்து அவள் கூந்தலைச் சடையாகப் பின்னி, தலையிலே தலைநாக மணிந்து, பன்றியின் கொம்பைப் பிறையாகச் சாத்திப், புலியின் பல்லைத் தாலியாகக் கட்டி, வரியும் புள்ளியும் நிறைந்த புலித்தோலை ஆடையாக உடுத்து, கருவில்லைக் கையில் கொடுத்து, முறுக்குக் கொம்புடைய கலைமான் மீது ஏற்றி, பாவையும் கிளியும் பந்தும் களங்கும் கானக்கோழியும் மயிலும் காணிக்கையாக அளித்து, வண்ணமும் சுண்ணமும் பூவும் புகையும் கையிலேந்திக், கொட்டும் பறையும் சின்னமும் மணியும், குழலும் கொம்பும் ஒன்றாய்க் கூடி ஒலிக்க தெய்வத்தை வணங்கி நின்றார்கள் என்று ஆசிரியர் கூறுவதால் அக்காலத்திய சிறு தெய்வ வழிபாடு ஒருவாறு அறியப்படும்.

இன்னும் சிற்றங்கொண்ட தெய்வங்களின் சினத்தைத் தணித்து சாந்தி செய்யும் பொருட்டுஉயிர்ப்பலிகளும் நரபலிகளும் கொடுக்கப்பட்டனவென்று தெரிகின்றது. பாண்டிய நாட்டை அரசாண்ட நெடுஞ் செழியன், பொற் கொல்லன் சொல்லிய பொய் மொழியைக் கேட்டு கண்ணகி தேவியின் கணவனைக்கொன்ற நாள் முதல்அந்நாட்டில்மழையென்பதே இல்லாது வறுமை மிகுந்து வெப்பும்நோயும்

உயிர்ப்பலிகள்

குருவும் தொடர்ந்த தென்றும் இத்தகைய கொடுமையைக் கண்ட வெற்றிவேற் செழியன் என்னும் பாண்டியன் ஆயிரம் பொற் கொல்லரைக் கண்ணகியின் கோட்டத்தில் களபலி யிட்டானென்றும், அதன் பின்னர் நாடுமலிய மழைபெய்து நோயும் துன்பமும் நீங்கிற்

றென்றும் சிலப்பதிகாரம் கூறுகின்றது. ஆயினும் இத்தகைய உயிர்ப்பலி ஓரோவழி நிகழ்ந்ததாக அறியப்படுகின்றதே யல்லால் வழக்கமாகத் தமிழ்நாட்டில் நடந்ததாகக் கொள்வதற்குச் சிறிதும் இடமில்லை.

இவ்வாறு வேறுபட்ட சமயங்களும் வழிபாடுகளும் நிகழ்ந்தாலும் அக்காலத்தில் ஒருசமயத்தார் மற்றொருசமயத்தாரை இகழ்வதும் வெறுப்பதும் இல்லாது ஒருகுளத்தில் அல்லியும் தாமரையும் ஒன்றாய் வாழ்வதுபோல ஒற்றுமையாகவே தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்தார்கள் என்று அறிகின்றோம். சிலப்பதிகார ஆசிரியரது பெருந்தன்மை ஒன்றே அக்காலத்தில்நிலைத்திருந்த சமயப் பொறுமைக்குப் போதிய சான்றாகும். ஆசிரியரது சமயம் சமண சமயமே யாயினும் அவர் மற்றையசமய தெய்வங்களைப் பற்றியும் சமயக் கொள்கைகளைப் பற்றியும் பேசும்பொழுதெல்லாம் அழகும் பெருமையும் அமைந்த சொற்களால்குறிப்பதன்றி பிற்காலத்திய நூல்களில்பெரிதும் காணப்படுகின்ற நிந்தனைகளும் இகழ்ச்சி உரைகளும் சிலப்பதிகாரத்தில் சிறிதும் காணப்படவில்லை.

சமயப்பொறுமை

சிவபெருமானைப் பற்றிப் பேசுகின்ற இடங்களில் "பிறவாயாக்கைப்பெரியோன்" என்றும், "நுதல்விழிநாட்டத்து இறையோன்" என்றும், 'செஞ்சடைவானவன்' என்றும்

சைவம்

"நிலவுக் கதிர் முடித்த நீளிரும் சென்னி
உலகு பொதி உருவத்து உயர்ந்தோன்"

என்றும், நிறைந்த சொற்களால், அப்பெருமான் புகழை ஆசிரியர் எடுத்துரைத்தார். சிவ நெறியில் மிகவும் பற்றுடைய சிலர்கள் சிவபெருமானது பிறவாத பெருமையையே பெருஞ் சிறப்பாக எடுத்துக் கூறுவது போன்று அச்சமயத்தைத் தழுவாத இளங்கோவடிகளும் இனிதாக

அப்பெருமையைக் கூறிய அழகு பொன்போற் போற்றுதற் குரியதாகும். இன்னும் வைணவ சமய தெய்வமாகிய திருமாலைக் குறித்துப் பேசும்பொழுதும் நீலமேனி நெடியோன் என்றும், நீள் நிலம் கடந்த நெடுமுடி அண்ணல் என்றும், ஆடக மாடத்து அறிதுயில் அமர்ந்தோன் என்றும் நிறைந்த சொற்களால் ஆசிரியர் புகழ்ந் துரைத்தார். இன்னும் புத்த சமயத்தை நிருவிய பெரியாரைக் குறித்துப் பேசும்பொழுது,

வைணவம்

"பணையைந் தோங்கிய பாசிலைப் போதி
அணிதிகழ்நீழல் அறவோன்"

பௌத்தம்

என்றும், அச்சமய நெறி நின்ற ஆன்றோரைக் குறிக்குமிடத்து மறவுரை நீத்த மாசறு கேள்வியர் என்றும்,

"புல ஊண் துறந்து பொய்யா விரதத்து
அவல நீத்தறிந்து அடங்கிய கொள்கை
மெய்வகை உணர்ந்த விழுமியோர்"

என்றும், ஆசிரியர் அருளுகின்றார். இவ்வாறே இந்திரனை விண்ணவர் தலைவன் என்றும் முருகனை அறுமுகச் செவ்வேள் என்றும்சிறப்பித்துக்கூறுகின்றார். சுருங்கச் சொல்லின் எச்சமயத்தையும் பெருமையாய்ப்பேசும் ஆசிரியரது பெருங்கருணையும் அரும் சீலமும் அவரது செம்மைசான்ற சீர்மைக்கும் அக்காலத்தில் நிலைத்திருந்த சமயப்பொறுமைக்கும் அழியாத சான்று பகர்வனவாகும். இன்னும் அக்காலத்திய சமயப் பொறுமை ஆசிரியரது சரித்திரத்திலேயே அமைந்து விளங்குகின்றது. இவ்வாசிரியரது தமையனாகவும் சேரநாட்டரசனாகவும் விளங்கிய செங்குட்டுவன் சைவசமயத்தில் பெரிதும் பற்றுடையவனாய் சிவபெருமானையே முழுமுதற் கடவுளாக் கொண்டு, வழிபாடுசெய்துவந்தான் என்பது சிலப்பதிகாரத்தால் நன்கு விளங்குகின்றது. ஆனால் இளங்கோவடிகள் மேற்கொண்ட

சமயப் பொறுமை ஆசிரியர் குடும்பத்திலேயே அமைந்திருத்தல்

சமயமோ சமணசமயம் என்பதை முன்னரே கண்டோம். இவ்வாறு ஒரு வயிற்றில் பிறந்த பிள்ளைகள் இருவரில் ஒருவர் சைவராகவும் மற்றொருவர் சமணராகவும் இருந்திருந்தால் அக்காலத்தில் சமயப்பொறுமை நிலைபெற்ற ஓர் அறமாகத் திகழ்ந்ததென்பதற்கு வேறு ஆதாரவும்வேண்டுமோ! தமிழ்நாட்டில்வாழ்ந்த ஒவ்வொருவரும் அவரவர் அறிவின் தன்மைக்கும் மனப்பான்மைக்கும் ஏற்ற சமயத்தை மேற்கொள்ளும் வழக்கம் அக்காலத்தில் இருந்ததென்பதற்கு சிலப்பதிகாரத்தின் தொடர்பாகிய மணிமேகலையே சிறந்த எடுத்துக்காட்டாய் அமைந்திருக்கின்றது. மணிமேகலை என்னும் மாது அக்காலத்தில்வழங்கிவந்த பலவகைச் சமயக் கொள்கைகளையும் சொல்லக்கேட்டு, இறுதியில் தனது அறிவிற்குப் பொருந்திய அருக சமயத்தை உண்மை என்றுணர்ந்து அச்சமயத்தைத் தழுவினாள் என்று சொல்லப்படுகின்றமையால் இக்காலத்தில் காணப்படுகின்ற சமய இறுக்கமும் சமையப் பொறுமையும் அக்காலத்திலில்லை யென்பது இனிது விளங்குகின்றது.

இதுவுமன்றிஒருசமயத்தார்வழிபடும்தெய்வங்களைமற்றொரு சமயத்தார் வழிபடும் வழக்கமும் இருந்ததாகத் தெரிகின்றது. கதாநாயகனாகிய கோவலன் சமண சமயத்தை மேற்கொண்டவன்என்பது சிலப்பதிகாரத்தாலேயே விளங்குகின்றது.

வேறுபட்ட தெய்வங்களை வேற்றுமையின்றி வழிபடல்

ஆயினும் தனது நகரினின்றும் நீங்கி மதுரைக்கும் புறப்பட்டுப்போகும் வழியில் கோவலன் திருமால் கோயிலை வலம் செய்து வணங்கிச் சென்றான் என்று ஆசிரியர் கூறுவதால் திருமால் அருகன் சிவன் முதலிய வேறுபட்ட சமய தெய்வங்களை வேற்றுமையின்றி வழிபடும் வழக்கம் அக்காலத்தில் இருந்ததாக அறியப்படுகின்றது.

இனி அக்காலத்திய சமய நிலையை ஆராய்வோமானல் தமிழ்நாட்டில் பௌத்தமும்,சமணமும்,பரவிப் பெருகிவந்த காலமாகத் தோன்றுகின்றது. அரசனும் தன் சமயத்தையே நாட்டில் நிலைநாட்ட வேண்டுமென்னும் எண்ணமற்றவனுய் எல்லாச் சமயங்களையும் வேற்றுமையின்றிப் பாதுகாத்து வந்தான். சேரநாட்டரசன் சைவசமயத்தில் பெரிதும் பற்றுடையவீரனுயிருந்தும் எம்மதமும்சம்மதமாய்த் தன் நாட்டில் வழங்கிவந்த பல சமயங்களையும் பாதுகாத்த

அக்காலத்திய சமய நிலை

ஒன்றே அக்காலத்தில்சமயப்பொறுமை சாலவும் போற்றப்பட்டதென்பதற்குப் போதிய சான்ருகும். மதுரைமா நகரில் சமண சமயம் சிறந்தோங்கி வளர்ந்து அச்சமய நூலறிவு தலைப்பட்டிருந்த தன்மையாலேயே அறவுரை கேட்டு அறிவனை ஏத்த ஆர்வங்கொண்ட கவுந்தியடிகள் தான்வாழ்ந்த நாடாகியசோழநாட்டை விட்டுக் கோவலனேடும் கண்ணகியோடும்மதுரைக்குப் புறப்பட்டார். சோழநாட்டில் வாழ்ந்துவந்த வணிகர் முதலிய பெருஞ்செல்வர் பெரும்பாலும் சமண சமயத்தையே தழுவியிருந்தார்கள் என்பது கோவலன் பெற்ருேர் சரித்திரத்தாலும் கண்ணகியின் பெற்ருேர் சரித்திரத்தாலும் நன்கு விளங்குகின்றது.

இனி அக்காலத்தில் தமிழ்நாட்டில்வழங்கியிருந்த மரபுப் பெயர்களை ஆராய்வோமானல் அவைபெரும்பாலும் தொழிலடியாகப் பிறந்த பெயர்களாகவே விளங்குகின்றன. பல வகுப்பினராய் விளங்கிய தமிழ் மக்கள் தத்தம் தொழில்முறையைக் குறிக்கும் பெயர்களால் வழங்கப் பெற்ருர்கள் என்பது நன்ருய் அறியப்படுகின்றது.

மரபுப் பெயர்கள்

“ பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையால் ”

என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவர் அருளியவாறு

தொழில் வேற்றுமையால் அக்காலத்திய மக்கள் பல வகுப்பினராய்விளங்கினரேயன்றி மற்றையபாகுபாடுகள் தமிழகத்தில் இல்லையென்பது தெள்ளிதில் விளங்கும். மறைகளில் வல்லோர்மறையவர்என்றும்,வேளாண்மையால் உலகத்தார்க்குப் பயன்படவாழும்மக்கள்வேளாளர்என்றும்,ஆயுள்வேதத்தில் வல்லவர்கள் ஆயுள்வேதர்என்றும்,வாசம்விற்பவர்கள் வாசவரென்றும், இரும்பைக் கொன்று வேலை செய்பவர்கள் கொல்லர் என்றும், பொன்னைத் தட்டிப் பணி செய்வோர் தட்டாரென்றும்,கூலம்என்னும்பலசரக்குகளில்வணிகம் செய்வோர் கூலவாணிகர் என்றும், வெற்றிலை விற்போர் இலை வாணிகர் என்றும், இசைக்கருவிகளில் பண்ணமைத்துப்பாடவல்லோர் பாணரென்றும், மறத்தொழில் செய்வோர் மறவர் என்றும், வழங்கி வந்த மரபுப் பெயர்களை ஆராயும்பொழுது அவை தொழில் முறைகளையே அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றன என்பது இனிது உணரப்படும்.

*மரபுப் பெயர்களெல்லாம் தொழிலடியாய் பிறந்தவையே*

இத்தகைய மரபினர்களில் மறையவர் மணக்காலங்களில்வணிகர்முதலியமற்றையமரபினர்க்கு மறைகள்விதித்த முறைப்படி மங்கல விழாவினை நடத்தி வைத்தார்கள் என்று தெரிகின்றது .கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நடந்த பொழுது மாமுது பார்ப்பான் மறைவழி காட்டினன் என்று ஆசிரியர் அருளுவதால் இவ்வுண்மை விளங்கும். இன்னும் தம் மரபிற்குரிய வேள்விகளையும் மறையவர்கள் செய்து வந்தார்கள் என்பது

*மறையவர் மங்கல விழா நடத்தல்*

"மறையோர் ஆக்கிய ஆவுதி நறும்புகை
இறை உயர் மாடம் எங்கணும் போர்த்து
மஞ்சுசூழ் மலையின் மாணத் தோன்றும்
மங்கல மறையோர் இருக்கை"

*வேள்வி செய்தல்*

என்று ஆசிரியர் கூறும் மொழிகளால் இனிது விளங்கும். மறையவர்களுடைய வேள்விச் சாலையினின்றும் எழுந்த நறும்புகை மாடங்களிலெல்லாம் நிறைந்திருந்தமையால் அம் மறையோர் இருப்பிடங்கள் மஞ்சு சூழ்ந்த மலைபோல் மாண்புற விளங்கின. இன்னும் மதுரைமா நகரின் மருங்கே வந்த கோவலனும் கண்ணகியும் காலைப்பொழுதில்

மறையோதல்

"நான்மறை அந்தணர் நவின்ற ஓதையும்
மாதவர் ஓதிமலிந்த ஓதையும் கேட்டார்கள்"

என்று ஆசிரியர் கூறுவதால் அந்தணர் அருமறைகளை ஒலி குன்றாமல் ஓதும் மங்கல ஒலி காலையில் மதுரைமா நகரில் மிகுந்திருந்ததென்பது அறியப்படும். இத்தகைய அந்தணர் மறைகளில் நிரம்பிய புலமை யுற்றவராய் நான்மறை ஓதியும் முத்தீவளர்த்தும் ஐம்பெரு வேள்விகள் ஆற்றியும் அறு தொழில்களை வழுவாது செய்து வாழ்ந்து வந்தார்கள்.

"ஒன்று புரிகொள்கை இருபிறப்பாளர்
முத்தீச் செல்வத்து நான்மறை முற்றி
ஐம்பெரு வேள்வியும் செய்தொழில் ஓம்பும்
அறுதொழில் அந்தணர்"

என்று ஆசிரியர் கூறுவதால் மேற்கூறிய உண்மை இனிது விளங்கும். இவ்வந்தணர்பெரும்பாலும்வறியரார்இறைவனை வாழ்த்தி வழிபடும் வைதிக வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுக்கத்தாலும்சீலத்தாலும்சிறப்புற்றிருந்தமையால்தமிழ்

தானம் பெறுதல்

மக்கள் அவர்களுக்குத் தானம் முதலிய கொடைகள் கொடுத்து வந்தார்கள். சேரன் செங்குட்டுவன் வடநாட்டு மன்னரைப் போர்க்களத்தில் வென்று தனது பாசறையில் வீற்றிருக்கும்

பொழுது அங்கு மாடலன் என்னும் மறையோன் சென்று தென்னாட்டில் தான் கண்ட காட்சிகளையெல்லாம் சேரனுக்கு எடுத்துரைத்து அம் மன்னனை மகிழ்வித்தமையால் அவன் தன் நிறையுள்ள பசும் பொன்னை அம் மறையவனுக்குத் தானமாகக்கொடுத்தான் என்றுசிலப்பதிகாரம் கூறுகின்றது.

"தோடார் போந்தை வேலோன் தன் நிறை
மாடல மறையோன் கொள்கென ஈத்தான்"

என்று ஆசிரியர் கூறுகின்றார். இவ்வழக்கம் துலாபாரம் என்னும் பெயருடன் இப்பொழுதும் சேர நாடாகிய மலையாள நாட்டில் வழங்கி வருவதைக் காணலாம்.

துலாபாரம்

இன்னும் கோவலன் மாதவியை மணந்து மணிமேகலை யென்னும் பெண்ணைப் பெற்று அதற்குப் பேரிட்ட நன்னாளில் பலவகைப்பட்ட தானங்கள் வழங்கிய பொழுது அங்கு ஒரு மறையவன் தள்ளாடித் தண்டூன்றி வந்து தானம் பெற்றான் என்றும் கூறப்பெற்றுள்ளது.

"ஞான நன்னெறி நல்வரம் பாயோன்
தானம் கொள்ளும் தகைமையில் வருவோன்
தளர்ந்த நடையில் தண்டுகால் ஊன்றி
வளைந்த யாக்கை மறையோன் தன்னை"

என்று சிலப்பதிகாரம் கூறுவதால் அக்காலத்திய அந்தணர் ஞானச் செல்வத்தையே பெற்றவராய் ஆன்றோர் விதித்த முறையில் தானம் பெற்று வாழ்ந்து வந்தார்களென்று தெரிகின்றது. இன்னும் பராசரன் என்னும் பெயர் வாய்ந்த பார்ப்பான் சேர நாட்டரசனது சிறந்த கொடைத்திறம் கேள்வியுற்று

"வண்டமிழ் மறையோற்கு வானுறை கொடுத்த
திண்டிறல் நெடுவேல் சேரலன் காண்கெனச்" சென்று

தமிழ் மறை

பரிசு பெற்றான் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இவ்வடிகளில் கூறப்படும் வண் தமிழ்மறைஎன்னும் சொற்றொடர் ஆராய்தற்கு உரியதாகும். வளம் நிறைந்த தமிழ் மொழியில் அக்காலத்தில் மறைகள் இருந்து மறைந்தன என்று அறிஞர்கள் ஆராய்ந்து கூறும் கொள்கையை இக்குறிப்பு உணர்த்துகின்றது போலும்.

இம்மறையவர்கள் தாம் வேள்வி செய்ததோடு அரசர் முதலிய மற்றைய வகுப்பினர்க்கும் வேள்விகள் செய்வித்தார்கள். ஐம்பது ஆண்டுகளாய் அரசாண்டு ஆரிய அரசர்களோடும் மற்றைய அரசர்களோடும் அரும்போர் செய்து நரைமுதிர் யாக்கை கண்ட சேரன் செங்குட்டுவனை மாடலன் என்னும் மறையோன் பார்த்து, "அரசே வானவர் நாட்டின் வழி திறக்கின்ற நல்வேள்வியை நீ இப்பொழுதே செய்ய வேண்டும்" என்று வேண்டினான் என்றும்

வேள்வி செய்வித்தல்

அரசனும் அதற்கிணங்கி வேள்வியில் வல்ல மறையவர்களை வரவழைத்து வேள்வியை முடித்தான் என்றும் சிலப்பதிகாரம் கூறுவதால் அந்தணர்கள் மற்றைய வகுப்பார்க்கு வேள்விகள் செய்வித்தார்கள் என்பது தெளிவாக விளங்கும்.

இனித் தமிழ்நாட்டில் அக்காலத்தில் இல்லறம் துறவறம் என்னும் இருவகை அறங்களும் நிலைத்திருந்ததாகத் தெரிகின்றது. இல்லறமாகிய நல்லறத்தை மேற்கொண்டவர்கள் அறவோர்க்கு அளித்தல், அந்தணரோம்பல், துறவோர்க்கு எதிர்தல் ஆகிய அறங்களை ஒல்லும் வகையால் இயற்றி வந்தார்கள். செல்வம் பெற்றவர்கள் தம் பொருளை வறியார்க்கு வழங்கி வறுமை நோயைக்

இல்லறம்

களைந்தார்கள். கோவலனது தந்தையாகிய

மாசாத்துவான் என்னும் வணிகன் மிகுந்த செல்வமுடைய வனாய் அச்செல்வத்தை வறியார்க்கு வழங்கும் வள்ளன்மை உடையவனாய் விளங்கினான் என்பதே ஆசிரியர் அவ்வணிகனுக்குச் சிறப்பாகக் கூறுகின்றார். அவ்வாறே கண்ணகியின் தந்தையாகிய மாநாய்கன் என்னும் வணிகனும் மழைபோல ஏழைகளுக்குப் பொருள் வழங்கும் வள்ளன்மை உடையவன் என்று ஆசிரியர் கூறுகின்றார். இத்தகைய நல்லறங்களைச் செய்வதற்குச் சாதனமாகிய இல்லறத்தை கணவனும் மனைவியும் கண்ணிரண்டும் ஒரு பொருளையே காணுதல் போல மனம் ஒத்து நடத்துவதே முறை என்பது சிலப்பதிகாரத்தால் நன்கு விளங்குகின்றது. கோவலன் பிரிந்த பின்னர் தனியாயிருந்த கண்ணகி தான் இல்லறமாகிய நல்லறத்தை இயற்றும் பெருமையை இழந்ததாகக் கூறும் மொழிகளால் இவ்வுண்மை இனிது விளங்கும்.

ஈகை

"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை"

என்று கண்ணகி தன் கணவன் பிரிந்த காரணத்தால் இல்லறத்தை நடத்த இயலாமற் போயிற்றென்று இரங்கிக் கூறுகின்றாள்.

இவ்வாறு இல்லற வாழ்க்கையை மேற்கொண்ட மாதர் தம் கணவன் இறந்தபொழுது தாமும் துயர் பொறுக்க மாட்டாமல் உயிர் துறந்தாரென்றும் அறியப்படுகின்றது. பாண்டியஅரசன் அரியாசனத்தினின்றும் மயங்கி விழுந்து உயிர் துறந்த பொழுது அவன் மனைவியாகிய அரசமாதேவி கலக்கம் கொள்ளாது கடுந்துயர்

கணவனை இழந்த கற்புடைய மாதர் உயிர் துறத்தல்

பெருது அவ்விடமே உயிர் துறந்தாள் என்று தலையாய கற்பின் தன்மையை சிலப்பதிகாரம் எடுத்துரைக்கின்றது.

கைம்மை நோன்பு

இவ்வாறு காதலனுடன் உயிர் துறவாத மாதர்கள் கைம்மை நோன்பாகிய விரதங்களை மேற்கொண்டு தம் உடம்பை வாட்டி வருத்தியும் புனித நீர்த் துறைகளில் சென்றுநீராடியும் நோன்பு செய்தார்கள் என்று தெரிகின்றது. இவ்வழக்கத்தை மணிமேகலை ஆசிரியர்

" காதலர் இறப்பிற் கனை எரிபொத்தி
ஊதுலைக் குருகின் உயர்த்தகத் தடங்காது
இன்னுயிர் ஈவர் ஈயாராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளி எரிபுகுவர்
நளிஎரி புகாராயின் அன்பரோடு
உடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர் "

என்று கூறிப் போந்தார். இதனையே கண்ணகியும் தன் காதலனை நினைந்து புலம்பும்பொழுது

" இன்புறுதம் கணவர் இடரெரி அகமூழ்கத்
துன்புறுவன நோற்று துயருறும் மகளிரைப்போல்

என்றும்,

தம்முறு பெருங் கணவன் தழலெரி அகமூழ்கக்
கைம்மைகூர் துறை மூழ்கும் கவலைய மகளிரைப்போல்

என்றும், கூறுகின்ற மொழிகளால் கைம்மை நோன்பை மேற்கொண்ட மாதர் தன்மைநன்கு விளங்கும். இவ்வாறு கைம்மை நோன்பென்று ஆசிரியர் கூறும் விரதங்கள் இப்பொழுதும் தென்னாடுகளில் வழங்கி வருவதைக் காணலாம். கணவனை இழந்த கற்புடைய மாது உப்பில்லாமல் சில மாதங்கள் உண்பதும், பாயில்லாமல் தரையில் படுப்பதும், துறைகளில்

நீராடும் பொருட்டு வடநாட்டிற்குச் செல்வதும், இப்பொழுதும் தமிழ் நாட்டில் காணப்படுகின்ற வழக்கங்களாம்.

இத்தகைய இல்வாழ்க்கையைத் துன்பமென்றறிந்த ஆண்மக்களும் பெண்மக்களும் துறவறத்தை மேற்கொண்டு வாழ்ந்து வந்தார்கள். பெண்மக்களும் துறவறத்தைமேற்கொள்ளும்வழக்கம்அக்காலத்தில் இருந்ததென்பதற்கு கவுந்தி என்னும் பெண்மணியின் துறவும் மாதவியின் துறவும் மணிமேகலை துறவுமே போதிய சான்ருகும். இவ்வாறு துறவறத்தை மேற்கொண்டு தவஞ் செய்த பெருமக்களது பெருமையும் வலிமையும் கவுந்தியடிகளது சரித்திரத்தால் நன்கு விளங்குகின்றது.

துறவறம்

கவுந்தியடிகள் கோவலனுக்கும் கண்ணகிக்கும் துணையாக மதுரைமா நகரை நோக்கிச் செல்லும் பொழுது ஒரு கானகத்தில் கழிந்த காமுகர் இருவர் கண்ணகியையும் கோவலனையும் பழித்துரைக்க அதைக்கண்டு உள்ளம் நொந்த அடிகள் அவ்விருவரையும் நரியாகும்படி சபித்தாரென்றும் அச்சாபம் உடனே பலித்து இருவரும் நரியாகி ஊளையிட்டாரென்றும், பின்னர் அன்பர்கள் இருவரும் வேண்டிக்கொண்டதற் கிணங்கி அடிகள் சாபவிடை செய்தாரென்றும் சிலப்பதிகாரம் கூறுவதால் துறவறத்தின் பெருமை நன்கு விளங்கித் தோன்றுகின்றது.

துறந்தார் பெருமை

"செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலாதார்"

என்று தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனார் நீத்தார் பெருமையில் கூறியவாறு ஆக்கலும் அழித்தலும் துறவறத்தை மேற்கொண்டிருந்த அடிகளிடம் விளங்கித் தோன்றுகின்றது.

கவுந்தியடிகள் காமுகரை நரியாக்குதல்

இனி அக்காலத்தில் தமிழ் மக்கள் உறக்கத்தில் காணும் கனவு உண்மையாய் விடும் என்னும் நம்பிக்கை உடையவர்களாயிருந்தார்கள். புகார் நகரத்தில் கண்ணகி தன் மாளிகையில் சிறிது கண்ணயர்ந் திருக்கையில் தன் கணவன் கையைப் பற்றிக்கொண்டு இருவரும் ஒரு பெரிய ஊருக்குச் செல்வது போலவும், அவ்வூரிலுள்ளார் தன்கணவன்மீது அடாதபழியைச் சுமத்தியதுபோலவும், அப்பழிச்சொல்லால் தன்கணவனுக்குத் தீங்கு நேர்ந்தது போலவும், தானது கேட்டு அவ்வூர் அரசன் முன்னே சென்று வழக்குரைத்தது போலவும், அதனால் அவ்வூருக்கும் அரசனுக்கும் தீங்கு விளைந்தது போலவும் பின்னால் இருவரும் பெரு நலம் அடைந்தது போலவும் கனவுகண்டாள். அக் கனவு அப்படியே பலித்தது. இவ்வாறே மதுரையின் உள்ளே போவற்குப் புறப்படு முன் கோவலன் ஒரு கனவு கண்டான். அந்நகரிலேயே தான் உடுத்திருந்த ஆடையை பிறர்பற்றிக்கொள்வதுபோலவும், நீண்டகொம்புகளையுடைய எருமைக் கடாவின் மேல் தான் ஏறுவது போலவும், அதைக்கண்ட தன் காதலி ஆருத் துயர்கொண்டு அழுது புலம்புவதுபோலவும், பின்பு தன் மனைவியுடன் விண்ணுலகடைவது போலவும் தன் மகளாகிய மணிமேகலை காமனைவென்று தூயநெறியாகிய துறவறத்தை மேற்கொண்டது போலவும் கனவு கண்டான். அது விடியற் காலத்தில் கண்ட கனவாதலால் உடனே பலிக்குமென்றும் கூறினான். இக்கொள்கை பழைய தமிழ் நூலாகிய கனநூலில் விரிவாகக் காணப்படுகின்றது. இராக்காலத்தை நான்கு பொழுதாக வகுத்து முதற்பொழு

கனவின் தன்மை

கண்ணகி கனவு

கோவலன் கனவு

கனவின் பலன்

தில் கனக்கண்டால் அது ஓர் ஆண்டிற்குள் பலிக்குமென்றும், இரண்டாவது பொழுதில் கனவு கண்டால் அது எட்டு மாசத்தில் பலிக்குமென்றும், மூன்றாவது பொழுதில் கனவு கண்டால் அது மூன்று மாசத்தில் பலிக்குமென்றும், நாலாவது பொழுதில் கனவு கண்டால் அது பத்து நாளைக்குள் பலிக்குமென்றும், கனா நூல் கூறும் கொள்கையை அக்காலத்திய தமிழ் மக்கள் நம்பியிருந்ததாகத் தெரிகின்றது. இவ்வாறு கோவலன் கண்ட கனா உடனே பலித்ததென்றும் கூறப்பட்டுள்ளது. இனி பாண்டிய அரசன் அரண்மனையிலும் அரசமாதேவி ஒரு தீக்கனவு கண்டாள். அரசனது செங்கோலும் வெண்குடையும் விழுவது போலவும் அசையாமணி நடுங்குவதுபோலவும் எட்டுத் திசைகளும் அதிர்ப்பது போலவும் விண்மீன்கள் உதிர்ந்து விழுவதுபோலவும் கனவுகண்டாள். அக்கனவின் வண்ணமே அரசனும் அழிந்து மதுரைமாநகரும் எரிந்து ஒழிந்தது. ஆகவே அக்காலத்தில் கனவானது பின்வரும் செயல்களை முன்னறிவிக்கும் தூதாகவே கருதப்பட்டிருந்தது.

பாண்டிமா தேவியின் கனவு

இவ்வாறே பண்டைத் தமிழ் மக்கள் சகுனமும் பொழுதும் பார்த்து ஒரு தொழிலைச் செய்யும் வழக்கமும் இருந்ததாகத் தெரிகின்றது. கோவலன் ஆயர்சேரியினின்றும் சிலம்பை விற்பதற்காக மனைவியை விட்டுப் புறப்படும் பொழுது வீதியில் ஓர் இமில் ஏறு அவன் எதிரே விரைந்தோடிவந்தது. அதனைத் தூர்க்குறி என்று கோவலன் அறிந்தானல்லன்.

சகுனம் பார்த்தல்

"இமிலேறு எதிர்ந்தது, இழுக்கென அறியான்
தன்குலம் அறியும் தகுதி அன்றாதலின்"

என்று ஆசிரியர் கூறுவதால், இச்சகுனம் இடைக்குலமக்கள் நன்கு அறியும் ஓர் தூர்க்குறியென்பது விளங்குகின்றது. இன்னும் ஒரு அரிய வேலையைத் தொடங்கும் பொழுது வான நூலில்வல்லவர்வாயிலாக நல்லநாளும் பொழுதும்பார்த்துச் செய்யும் வழக்கம் தமிழ் நாட்டில் இருந்ததாகத் தெரிகின்றது. கோவலனுக்கும் கண்ணகிக்கும் ஒரு நன்னாளில் வானூர் மதியம் சகடணைந்த நல்ல முழுத்தத்தில் திருமணம் நடந்ததென்று கூறப்பட்டிருப்பதாலும், சேரன் செங்குட்டுவன் போருக்கு முனைந்து நின்ற பொழுது ஆறிரு மதியிலும் காருக அடியிலும் ஐந்து அங்கத்திலும் வல்ல காலக்கணிதன் நல்ல முழுத்தத்தை அரசனிடம் எடுத்துரைத்தானென்று கூறப்பட்டிருப்பதாலும், மதுரைமா நகர் ஆடி மாசத்தில் கிருஷ்ண பட்சத்தில் கார்த்திகை பரணி நட்சத்திரத்தில் அட்டமிப் பொழுதில் வெள்ளிக்கிழமையில் எரிந்து அழியுமென்று சோதிட நூல் மொழிந்ததென்று கூறப்பட்டிருப்பதாலும், அக்காலத்தில் சோதிடம் முதலிய வான நூல்களும் நன்றாய் ஆராயப் பெற்றிருந்தன என்று தெரிகின்றது.

முழுத்தம் பார்த்தல்

இன்னும் கண்களுக்கு இனிமை தரும் இயற்கை நலத்தின் எழிலுறு காட்சியினும், காணுந்தோறும் உள்ளத்தைக் கவர்ந்து உவகை ஊட்டும் ஓவியத்திலும், சிந்தைக்கு இன்பம் பயக்கும்செய்யுள் நயத்திலும், இசையின் நயமே சிறந்ததென யாவரும் இசைந்து கூறுகின்றார்கள். இத்தகைய இசையைப் போற்றி வளர்த்து அத்துறையில் மேம்பாடடைந்த நாடுகள் நாகரிகத்தில் நனிசிறந்த நாடுகளாகக் கருதப்படுகின்றன. அக்காலத்தில் தமிழ் நாட்டில் வழங்கிவந்த இசைக் கருவிகளையும் இன்னிசையில் தமிழ்

சோதிடநூல்

இசைப் புலமை

மக்கள் எய்தியிருந்தபுலமையையும் அறிந்து கொள்வதற்கு சிறந்த குறிப்புகள் சிலப்பதிகாரத்தில்கிடைத்திருக்கின்றன. சோழநாட்டின்தலைநகரத்தில்

"குழலினும் யாழினும் குரல் முதல் ஏழும்
வழுவின் றிசைத்து வழித்திறம் காட்டும்
அரும்பெறல் மரபில் பெரும்பா ணிருக்கையும்
அமைந்து விளங்கின"

என்று ஆசிரியர் கூறுவதால் ஏழு இசைகளையும் சரிகமபதநி என்னும் ஏழு எழுத்தினையும் மூவகை வாக்கியத்திலும் நால்வகை யாழிலும் பிறக்கும் பண்களுக்கு இன்றியமையாத மூவேழு திறத்தையும் குற்றமற இசைத்துக்காட்ட வல்ல இசைமரபறிந்த குழலோர் பாணர் முதலிய பெரிய இசைகாரர்கள் புகார் நகரத்தி லிருந்தார்களென்று தெரிகின்றது. இன்னும் மாதவி யென்னும் மாது இசைவடிவாகவே விளங்குகின்றாள். தன் இசையின் நயத்தால் கோவலனைத் தன் வசப்படுத்தினாள். இன்னும், கடற்கரையில்மடலவிழ் தாழையாற் சூழப்பெற்ற புன்னைமரத்தின் நிழலில் மாதவி தன் காதலனை மகிழ்விக்கும் பொருட்டு இசைக் கருவியாகிய யாழைக் கையிலெடுத்து காந்தாள் மலர்போன்ற மெல்லிய விரல்களால் பாட நினைந்த பண்ணுக்கு இணை நரம்பு, கிளை நரம்பு, பகைநரம்பு, நட்புநரம்பு முதலிய நரம்புகள் பெயரும் தன்மையை அறிந்து கட்டி, கட்டிய நரம்பை அகவிரலாலும்

இசைக்கருவிகளை இயக்குதல்

புறவிரலாலும் காரணம் செய்து தடவிப் பார்த்து ஆரோகண, அவரோகண வகையால் இசையைத் தெரிந்து சுருதி ஏற்றி எண்ணிய வண்ணத்தில் சந்தத்தைப் போக்கி வண்ணப்பாக்களை இனிமையாய்ப் பாடினாள். இவ்வாறு மாதவி தன் யாழைத் திருத்திய அழகை ஆசிரியர்,

இனி நூலின் நயத்தினை ஆராயப் புகுமுன்னர் அந் நூலின் பெயரமைதியை ஆராய்ந்து அறிவது அவசியமாகும். பெரும்பாலும் தமிழ் மொழியில் விளங்கும் நூல்கள் கதைத் தலைவனது பெயராலும், பாவகையின் இயல்பாலும், ஆக்கியோன் பெயராலும் வழங்கக்காண்கின்றோம். சிந்தாமணி என்னும் சிறந்த பழந்தமிழ் நூல் சீவகனைக் கதைத் தலைவனாகக் கொண்ட காரணத்தால் சீவக சிந்தாமணி என்று பெயர் பெற்று விளங்குகின்றது. கதைத் தலைவியாகிய மணிமேகலையின் பெயரே மணிமேகலை என்னும் நூலின் பெயராய் விளங்குகின்றது. இனி பாவகையால் பெயர்பெற்ற நூல்கள் திருக்குறள், பத்துப்பாட்டு முதலியனவாம். தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் இயற்றிய நூல் குறுகிய பாவகையால் அமைந்திருத்தலாலேயே திருக்குறள் என்றும் பெயர் பெற்றது. பத்துப் பாட்டைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் தன்மையால் ஓர் பழந்தமிழ் நூல் பத்துப் பாட்டு என்றும் பெயர் பெற்றது. இன்னும் காப்பியக் குடியில் பிறந்து வளர்ந்த தொல்காப்பியர் இயற்றிய இலக்கண நூல் தொல்காப்பியமென்னும் பெயரால் வழங்குகின்றது. அவ்வாறே கல்லாடர் என்னும் புலவர் பெருமான் இயற்றிய பெருநூல் கல்லாடமென்னும் பெயரால் விளங்குகின்றது. இவ்வகையில் ஒன்றிலும் அமையாது இளங்கோவடிகள் இயற்றிய நூல், சிலப்பதிகாரமென்னும் அழகிய பெயரால் அழைக்கப்பெறுகின்றது. கண்ணகியின் காற் சிலம்பால் விளைந்த கதை என்பதை உணர்த்தும் பொருட்டே சிலப்பதிகாரம் என்னும் பெயரை ஆசிரியர் அமைத்தார். இவ்வுண்மை

சிலப்பதிகார மென்னும் பெயரமைதி

"சூழ்வினைச் சிலம்பு காரணமாக
சிலப்பதிகாரமென்னும் பெயரால்
நாட்டுதும் யாம் ஓர் பாட்டுடைச் செய்யுள்"

என்று அடிகள் அருளுவதால் இனிது விளங்கும். கதைத் தலைவனாகிய கோவலனும் அவன் காதலியாகிய கண்ணகியும் சிலம்பை விற்பதற்காகவே மதுரைக்குச் சென்றமையாலும் அங்குதான் கவர்ந்துகொண்ட அரண்மனைச் சிலம்பை அபகரித்துக்கொள்ளும் பொருட்டே பொற்கொல்லன் கோவலனைக் குற்றவாளியென்று அரசனிடம் கூறினமையாலும், அச் சிலம்பு காரணமாகவே கோவலன் கொலையுண்டமையாலும், பின் அச் சிலம்பினாலேயே பாண்டிய அரசன் தன் பிழையை உணர்ந்து உயிரிழந்தமையாலும், கண்ணகியின் கதை முழுவதும் சிலம்பின் கதையாகவே விளங்குகின்றது. இவ்வாறு சிலம்பின் பெருமையையும் சிறப்பையும்இனிது எடுத்துரைக்கும் நூலுக்கு சிலப்பதிகாரமென்னும் பெயர் அழகாக அமைவதாகும்.

சிலம்பின் கதை

இனி நூலின் தன்மையை ஆராயுமிடத்து, அது நாடகவியல்பைத் தன்னிடத்தே கொண்டு விளங்கும் ஒரு பெருங் காவியமாக விளங்குகின்றது. நாடகநூல்கள் மங்கல முடிவுடையனவாகவும், அமங்கல முடிவுடையனவாகவும் இரு பெரும் பகுதியில் அடங்கும். இவற்றுள் மங்கல நாடகத்தின் இயல்பாவது ஒரு தலைமகனும் ஒரு தலைமகளும் ஒருவரை ஒருவர் பெரிதும் காதலித்திருக்கும் நிலையில் ஏதேனும் எதிர்பாராத ஓர் இடையூறு நேர்ந்து ஒருவரை விட்டு ஒருவர் பிரிவதும், அவ்வாறு பிரிந்த காதலர் பல துன்பங்களை அடைந்து இறுதியில்ஒருவரைஒருவர்கண்டு மணஞ்செய்து கொள்ளுவதுமாகிய தன்மையை யுடையதாய் விளங்கும். இவற்றை மங்கல நாடகங்கள் (Comedy) என்று ஆங்கில நூலோர் வழங்குவார்கள். இவ்வாறன்றி, இவ்வுலகில்

சிலப்பதிகாரம் நாடகக் காவியம்

மங்கல நாடகம்

உயர்ந்த நிலையிலுள்ள தலைமகன் அல்லது தலைமகள் ஆற்றொணாத அருந்துயர் அடைந்து இறுதியில் இறந்து படுவதாகிய முடிவினையுடைய நாடகம் (Tragedy) அகோர நாடகம் என்று வழங்கப் பெறும்.

அகோரநாடகம்

இத்தகைய பாகுபாடு ஆங்கில நாடக நூல்களிலும், மற்றைய உயர் தனிச் செம்மொழிகளில் (Classical Language) விளங்கும் நாடக நூல்களிலும் தெளிவாகக் காணப்படுகின்றது. ஆனால் தமிழ் மொழியில் விளங்கும் நாடகங்கள் அகோரத்தன்மை வாய்ந்தனவா யிருப்பினும் இறுதியில் மங்களமாகவே முடியக் காண்கின்றோம். சிலப்பதிகாரத்தை இம்முறையில் ஆராய்ந்தால் அதன்கண் அகோரத்தன்மையே அதிகமாக விளங்குகின்றது. கதைத் தலைவர்களாகிய கண்ணகியும், கோவலனும் செல்வமும் புகழும் நிறைந்த உயர்ந்த பதவியிலுள்ளவர்கள். கோவலன் தன் பொருளையெல்லாம் மாதவிபால் தொலைத்து தன் மெல்லியல் மாதுடன் கடுங்கானகத்தில் வழி நடந்து துயருழந்தான். அப்பால் சிலம்பை விற்றுவர மதுரை வீதியிற் சென்று அநியாயமாய் அரசனது ஏவலாளரால் கொலையுண்டிறந்தான். இதைக்கண்ட கண்ணகி மனம் கொதித்து அழுது புலம்பி, மன்னனிடம் சென்று வழக்குரைத்து, அரசனையும் அழித்து மதுரைமாநகரையும் எரித்தாள். இம்மட்டில் நாடகம் முடிவு பெறுமாயின் அது அகோர நாடகமெனும் பெயரால் அமையும். ஆனால் கொலையுண்டிறந்த கோவலன் இறைவன் அருளால் மீண்டும் உயிரோ டெழுந்தான். கணவனை இழந்து துயரடைந்த கண்ணகியும், விமானத்திலேறி விண்ணுலகடைந்தாள் என்று கதை முடிவது மங்கல முடி

அகோர நாடகம் மங்கல முடிவொடு விளங்கல்

வாக விளங்குகின்றது. யாதொரு குற்றமு மற்றவர்களாய் நன்மையையே நாடிச் செய்யும் இயல்புடையவர்களாய் அரும் பெருங் குணங்கள் அமையப் பெற்றவராய் விளங்குகின்ற கதைத் தலைவர் இருவரும் படுகின்ற துன்பத்தைப் பார்த்து படிப்போர் மனம் வருந்துவதாகும். நல்லவர்கள் துன்பத் தால் நலியும்போது அவர் படும் துயரத்தைக் கண்டவர்கள் அவர் பொருட்டு வருந்துவது இயற்கையேயாகும். இவ்வாறு படிப்போர் அடையும் மனத்துயரம் கதைத்தலைவன் இறந்து

மங்கல முடி
வின் காரணம்

படும் காட்சியைக் கண்டு ஒரு சிறிதும் பொ றுக்கமாட்டாதென் றுணர்ந்து அகோரநாடக மியற்றும் ஆசிரியர்கள் இறுதியில் இறந்தவர் களை இறைவனருளால் எழும்புகின்ற முறைபானது காணப் படுகின்றது. கோவலன் இறந்ததைக் கண்டு துயரடைந்த மனம் அவனை மீண்டும் உயிரோடு கண்ட அளவில் ஆறுதல் அடைகின்றது. அவ்வாறே கண்ணகியின் ஆற்றெணுத் துயரைக்கண்டு வருந்திய மனம் அவள் ஆகாய விமானமேறி இன்பம் பெறுவதால் ஆறுதல் அடைகின்றது. ஆகையால் அகோர நாடகக் காட்சியைக் காண மனம் பொருத தமிழ் மக்கள் மனப்பான்மையை ஆசிரியர் நன்கறிந்தமையால் கோவலனையும் கண்ணகியையும் விண்ணுலகேற்றி, மங்கல மான முடிவை அமைத்தருளினர்.

இவ்வாது அகோர நாடகத்தின் தன்மையை நன்கு அமைத்து விளக்கும் நூலில் நாடக இயலுக்கு இன்றியமை

சிலப்பதிகாரத்
தில் நாடகக்
கூறுகள்

யாத மற்றைய அங்கங்களும் அமைந்து இலங்கக் காண்கின்றோம். முற்காலத்தில் நிகழ்ந்த செயல்களை, தற்காலத்தில் பார்ப் போர் கண்ணெதிரே நிகழும் செயல்போலக் காட்டுவதே நாடகத்தில் நல்லியல்பாகும். நாடகத்தைக் காணச் செல்லும்

நன்மக்கள், தாம் காணும் நிகழ்ச்சிகள் முற்காலத்தில் நிகழ்ந்தன என்பதை முற்றிலும்மறந்துபுதிதாகத்தம்கண்ணெதிரே நடக்கும் காட்சிபோலவே கருதுமாறு செய்தல் நாடகாசிரியர்களின் நோக்கமாகும். இதனை ஆங்கில நூலோர் (Dramatic Realism) என்று வழங்குவார்கள். இத்தன்மைசிலப்பதிகாரத்தால் சிறந்து விளங்குகின்றது. மதுரைமாநகரைஎரித்துமலைமீதேறிவேங்கைமரத்தின் நிழலில்கற்புடைய தெய்வம்போல் வந்து நின்ற கண்ணகியை அக்குன்றக்குறவர்கள்நேராகக்கண்டதாகவும்அவ்வம்மையாரையாரென்று அவர்கள் வினவியதாகவும் அதற்குஅம்மாது,

கதையைக் கண்காட்சி யாக்கல் (Dramatic Realism)

> " மணமதுரையோடு அரசு கேடுறவல் வினை
> வந்துருத்தகாலே.
> கணவனை யங்கிழந்து போந்த கடுவினை
> யேன் யான் "

குறவர்கள் கண்ணகியைக் காண்டல்

என்று கூறியதாகவும், அதைக்கேட்ட குறவர்கள் அம்மையாரை இறைஞ்சித் தொழுது நின்றதாகவும் அப்பொழுது வானவர் மலர்மாரி பொழிய அம்மையார் தன் காதலனோடு, விமானமேறி விண்ணுலகடைந்ததாகவும் இப்புதுமையைக் கண்ட குறவர் சேரமன்னனிடம் சென்று

> " எழ்பிறப் படியோம் வாழ்கநுங் கொற்றம்
> கான வேங்கைக் கீழோர் காரிகை
> தான் முலையிழந்து தனித்துய ரெய்தி
> வானவர் போற்ற மன்னொடுங் கூடி
> வானவர் போற்ற வானகம் பெற்றனள்
> எந்நாட்டாள்கொல்யார் மகள் கொல்லோ
> நின்னாட்டு யாங்கள் நினைப்பினு மறியேம் "

என்று சொல்லித் தொழுது நின்றதாகவும் அச் சமயம் அரசனோடு அளவளாவியிருந்த அருந்தமிழ்ப் புலவரான மதுரைச் சாத்தனார் சிலம்பு காரணமாக கோவலன் கொலையுண்டதையும் கண்ணகி பாண்டியன் முன்சென்று வழக்குரைத்து மதுரைமா நகரை எரித்ததையும் பாண்டிய மன்னனும் அவன் மாபெருந்தேவியும் உயிர் துறந்ததையும் பின் கண்ணகி சேர நாடு சேர்ந்ததையும் விரிவாக எடுத்துரைத்ததாகவும் ஆசிரியர் கூறுகின்றமையால் கண்ணகியின் கதை நிகழ்காலத்தில் நம் கண்ணெதிரே நிகழும் செயல்போலவே காணப்படுகின்றது. இவ்வாறு ஆசிரியருடன் வாழ்ந்தசாத்தனார் என்னும் தமிழ்ப் புலவர் கதையின் ஒரு பாகத்தில்விளங்கும் செயல்களை தாம் நேராகக் கண்டதாகவும் மற்றொரு பகுதியில் அடங்கிய செயல்களை குன்றக் குறவர்கள் நேராகக் கண்டதாகவும் ஆசிரியர் கூறுகின்றமையால் நாடகமென்னும் உணர்ச்சி நம் உள்ளத்தில் அறவே யொழிந்து நம் முன்னே நிகழும் காட்சிபோலவே கதை விளங்குகின்றது.

**சாத்தனார் மதுரையில் நடந்த புதுமை கண்டுரைத்தல்**

இன்னும் அகோர நாடகங்களில் நிகழும் துன்ப நிகழ்ச்சிகளைக் கண்டு வருந்தும் மனதின் துயரத்தை மாற்றும் பொருட்டு, இடையிடையே நகைச்சுவையும் இன்பச்சுவையும் ஊட்டுகின்ற காட்சிகளை நடித்துக் காட்டுவது வழக்கமாகும். இத்தகைய காட்சிகள் அகோர நாடகத்திற்கு இன்றியமையாத அங்கங்களென்று ஆங்கில நாடக நூல் வல்லார் கூறுகின்றார்கள். கடுங்கானகத்தில் கண்ணகியும் கோவலனும் வழிநடந்து கால் தளர்ந்து வருந்தும் காட்சியைக் கண்ட மனம் காளிகோட்டத்தில் மறக்குலப் பெண் ஆடும் ஆவேசக் கூத்தையும் கோலத்தையும்

**சோகக் காட்சிக்கு அடுத்து விநோதக் காட்சி அமைத்தல்**

கண்டு ஆறுதல் அடைகின்றது. கோவலன் கொலையுண்ட கொடுமையைக் கண்டு உருகிய மனம் அடுத்து நிகழுகின்ற ஆய்ச்சியர் பாடும் பாட்டாலும் ஆடும் கூத்தாலும் ஒருவாறு ஆறுதல் அடைகின்றது. கண்ணகியின் பொறுக்கமுடியாத சோகமும் மதுரை மன்னவன் இறந்துபட்ட துயரமும் மதுரைமாநகரம் எரிந் தழிந்த துன்பமும் கண்டு பொறுத மனம் குன்றக் குறவர் குரவைக் கூத்தாடுவதைக் கண்டு ஒருவாறு ஆறுதல் அடைகின்றது.

இவ்வாறு சோகத்தைப் பெரிதும் ஊட்டுகின்ற காட்சிகளை அடுத்து நகைச்சுவை விளைக்கும் இனிய காட்சிகளை ஆசிரியர் அமைத்துள்ள அழகு நாடக வியல் உணர்ந்தார் நன்கு போற்றுதற் குரியதாகும்.

இனி சிலப்பதிகாரம் நாடகத்தின் தன்மையையுடையதேயாயினும் அது பெருங் காவியமாகவே ஆசிரியரால் எழுதப்பட்டுள்ளது. ஆசிரியர் எழுதியவாறே சிலப்பதிகாரத்தை நாடக மேடையில் நடித்துக் காட்டுவது இயலாததாகும். இதனாலேயே சிலப்பதிகாரத்தை, நாடக வகையில் சேராது ஐம்பெருங் காவியங்களில் ஒன்றாய் அமைத்து தமிழுலகம் போற்றுகின்றது. பெருங்காவியமியற்றும் ஆசிரியர்கள் பெரும்பாலும் அகவலாகிய பாவகையிலேயே தமது நூலை அமைக்கக் காண்கின்றோம். அருமையும் பெருமையும் வாய்ந்த பழந் தமிழ்ப் பனுவல்களெல்லாம் பெரும்பாலும் அகவலாகவே அமைந்திருக்கின்றன. செம்மையும் சீர்மையும் அமைந்ததாய் ஆற்று நீர்போல நேராகவும் அழகாகவும் செல்லுந் தன்மையதாய் உறுதியும் கெம்பீரமும் ஒருங்கே அமைந்ததாய் கற்போருள்ளத்தைப்

*சிலப்பதிகாரம் பெரும் காவியம்*

பிணிக்கும் தன்மை வாய்ந்ததாய் சிலப்பதிகார நடைசிறந்து விளங்குகின்றது. நூலின் பிற்பகுதியில் காவிய நடை கனிந்திலங்குகின்றது. இத் தகையை பெருநூலை நயங்கள் பலவும் அமையுமாறு செய் தற்கு அகவல் நடையே ஏற்றதாகும். யாப்பிலக்கணங்களின் தடைகளும் இடையூறுகளும் இன்றி ஆசிரியர் கருதிய கருத்துக் களை எளிதாகவும் இனிதாகவும் எடுத்துரைக்க ஏற்ற நடை அகவலேயாகும்; ஆங்கில மொழியில் பெருங்காப்பியங்கள் செய்யும் ஆசிரியர்கள் Blank verse (சுத்தப் பாவினம்) என்னும் பாவகையாலேயே தமது நூல்களை ஆக்கியிருக்கின்றார்கள். ஆங்கில மொழியில் காவிய நடையில் ஒப்புயர்வற்று விளங்கும் மில்டன் என்னும் பேராசிரியர் அகவல்போன்ற மேற்கூறிய பாவாலேயே சுவர்க்க நீக்கம் (Paradise Lost) என்னும் பெருநூலை அமைத்திருக்கின்றார். ஆகவே சிலப்பதிகாரத் தின் நடையை நோக்கும் பொழுது அது காவிய நடையி லேயே அமைந்திருக்கக் காண்கின்றோம்.

நூல் நடை

அகவல் நடைப் பொருத்தம்

இன்னும் நாடகத்திற்கும் காவியத்திற்கும் உள்ள பல வேற்றுமைகளை உணரும் பொழுது கவிநயம் வாய்ந்த வர் ணனை காவியத்திற்கேயுரியதென்றும் நாடகத்திற்குச்சிறிதும் வேண்டற்பாலதன்றென்றும் மொழி நூல் வல்லார் யாவரும் இசைந்துகூறுவர். சிலப்பதிகாரத்தில்பெரும்பாகம்வர்ணனை யாகவே விளங்குகின்றது. அவ்வர்ணனைக ளும் சொன்னயம் பொருணயம் உடையன வாய் இயற்கைகாட்சியின் எழிலுறுநலங்களைகற்போருள்ளத் தில் ஓவியம்போல்எழுதி அமைக்கும்தன்மைவாய்ந்தனவாய் உவமை முதலிய நல்லணிகளின் நயத்தினைப் பெற்றனவாய்

வர்ணனைகள்

இனிது விளங்குகின்றன. கோவலனுக்கும் கண்ணகிக்கும் திருமணம் நடந்த மணமேடையை எழுதப்போந்த விடத்து,

"மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணத்து
நீலவிதானத்து நித்திலப்பூம் பந்தர்க் கீழ்"

மணமேடை வர்ணனை

என்று ஆசிரியர் சுருங்கச் சொல்லி அழகாக விளங்க வைத்தார். இன்னும் திருவேங்கட மலையில் திருமால் விளங்கும் அழகிய கோலத்தை,

திருமால் வர்ணனை

"வீங்கு நீரருவி வேங்கட மென்னும்
ஓங்குயர் மலையத்து உச்சிமீமிசை
விரிகதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி
இருமருங் கோங்கிய விடைநிலைத் தானத்து
மின்னுக் கொடியுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேகம் நின்றதுபோல
பகையணங் காழியும் பால்வெண் சங்கமும்
தகைபெறு தாமரைக் கையிலேந்தி
நலங்கிளர் ஆரம் மார்பிற் பூண்டு
பொலம் பூவாடையிற் பொலிந்து தோன்றிய
செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும்"

என்று நயமாகவும் அழகாகவும் கூறியருளினர். இன்னும் மதுரைமாநகரில் வற்றாத நீர்ப்பெருக்கை யுடையதாய் விளங்கிய வையை யாற்றை

வையை ஆற்றின் வர்ணனை

"உலக புரந்தூட்டுமுயர் பேரொழுக்கத்து
புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையையென்ற பொய்யாக் குலக்கொடி"

என்று ஆசிரியர் அழகாக எழுதிப்போந்தார்.

இத்தகைய நயம்பொருந்திய வர்ணனைகளை நூலிற் பலவிடங்களிற் காணலாம். இவ்வாசிரியர் ஆங்காங்கு சில காதை

களின் இறுதியில் அருளியிருக்கும் வெண்பாக்களில் அமைந்த உவமை நயங்களையும் மற்றைய நயங்களையும் முன்னரே கண்டோம்.

நாடகவரம்பில் நின்று ஆராயும் அறிஞர்கள் வஞ்சிக் காண்டம்என்று ஆசிரியர் வகுத்துள்ளபாகம் நாடகத்திற்குச் சிறிதும் வேண்டற்பாலதன்றென்றும் சரித்திர சம்பந்தமான காவியத்திற்கே அவசியமென்றும் எடுத்துக் கூறுகின்றார்கள். அக்காலத்தில் ஆற்றல்மிகப் படைத்தவனாய் ஆரிய அரசர் பலரை அமர்க்களத்தில்வென்ற பெருமை வாய்ந்தவனாய் தன்னுடன் பிறந்தவனாய் விளங்கிய சேரன் செங்குட்டுவனது பெருமை அழியாது உலகில் நிலைநிறுத்தும் பொருட்டும் கற்பின் பெருமையை உலகெலாம் அறிந்து வழிபடும் பொருட்டும் ஆசிரியர் வஞ்சிக் காண்டம் என்னும் பெயரால் ஏழு காதைகள் இனிதாக அமைத்தார். இவ்வாறு ஆசிரியர் அமைத்த வஞ்சிக்காண்டத்தின் பாகுபாடுகளை ஆராயும்பொழுதுபழந்தமிழ் இலக்கணமாகிய தொல்காப்பியத்தில், விரித்துக்கூறப்பட்டுள்ள வீரக்கல் நட்டு, வழிபடும் வழக்கத்தையே ஆசிரியர் அமைத்துக் கூறியுள்ளாரென்பது நன்கு அறியப்படும். போரிற்சிறந்த வீரன் ஒருவன் அஞ்சாது போர்செய்து அமர்க்களத்தில் இறந்துபட்ட பொழுது அவன் செய்த நன்றிக்கு அறிகுறியாகவும் அவ்வீரனது பெருமையை உலகில் நிலைநாட்டுதற்காகவும் அவன் இறந்தவிடத்தில் கற்சிலையில் எழுதிய அவனது உருவத்தை நட்டு, அதனை வாழ்த்தி வழிபடும் வழக்கம் பழந்தமிழ் நாட்டில் இருந்ததாகத் தெரிகின்றது. இவ்வழக்கத்தை ஆசிரியர் தொல்காப்பியனார்

வஞ்சிக் காண்டம்

வீரக்கல் நடும் வழக்கம்

இனி, கண்ணகியின் கதை முழுவதும் உள்ளத்தை உருக்குகின்ற சோகம் ஊட்டும் நிகழ்ச்சிகள் அமைந்திருத்தலால் நூலிலும் சோகரசம் வாய்ந்த பகுதிகள் பலவாய்க் காணப்படுகின்றன. மெல்லியல் வாய்ந்த கண்ணகி, காடு நாடெல்லாம் அலைந்து திரிந்து மதுரைமா நகருக்கருகே போந்து இராப்பொழுதில் அயர்ந்து அமர்ந்திருக்கையில் அவள் நிலைமையைக் கண்டு மனம்பொறாது நிலமகளும் நெட்டுயிர்த்து நித்திரை போயினாள் என்று ஆசிரியர் கூறும் பகுதி மிகுந்த சோகச் சுவையுடையதாய் விளங்குகின்றது.

சோக ரசம்

" தாரகைக் கோவையும் சந்தின் குழம்பும்
சீரிள வனமுலை சேரா தொழியவும்
தாதுசேர் கழுநீர் தண்பூம் பிணையல்
போதுசேர் பூங்குழல் பொருந்தா தொழியவும்
பைந்தளிர் ஆரமொடு பல்பூங் குறுமுறி
செந்தளிர் மேனி சேரா தொழியவும்
மலயத் தோங்கி மதுரையின் வளர்ந்து
புலவர் நாவிற் பொருந்திய தென்றலொடு
பால்நிலா வெண்கதிர் பாவைமேற் சொரிய
வேனிற் றிங்களும் வேண்டுதி யென்றே
பார்மகள் அயர்வுயிர்த் தடங்கிய பின்னர் "

நிலமகள் கண்ணகிமீது பரிவு கூர்தல்

என்று ஆசிரியர் கூறும் பகுதி சோகரசம் வாய்ந்து விளங்குகின்றது. இன்னும் கோவலனைப் பிரிந்து ஆயர் சேரியில் தனிமையாக வருந்தியிருந்த கண்ணகி நெடுநேரமாகத் தன் காதலன் திரும்பி வராததைக் கண்டு தன் தோழியிடம் மனம் வருந்துகின்றாள்.

" காதலன் காண்கிலேன் கலங்கி நோய்கைம்மிகும்
ஊதுலை தோற்க உயிர்க்கும் என்னெஞ்சன்றே
ஊதுலை தோற்க உயிர்க்கும் என்னெஞ்சாயின்
ஏதிலார் சொன்னது எவன் வாழியோ தோழி "

கண்ணகி கணவனைக் காணாது வருந்துதல்

“நண்பகற் போதே நடுக்கு நோய் கைம்மிகும்
அன்பனைக் காணாது அலமரும் என்னெஞ்சன்றே
அன்பனைக் காணாது அலமரும் என்னெஞ்சாயின்
மன்பதை சொன்னது எவன் வாழியோ தோழி”

“தஞ்சமோ தோழி தலைவன் வரக்காணேன்
வஞ்சமோ உண்டு மயங்கும் என்னெஞ்சன்றே
வஞ்சமோ உண்டு மயங்கும் என்னெஞ்சாயின்
நெஞ்சிலார் சொன்னது எவன் வாழியோ தோழி”

இம் மூன்று பாக்களும் சோகரசம் பெரிதும் வாய்ந்து விளங்குகின்றன.

இன்னும் கோவலன் இறந்து கிடந்த இடத்திற்கு கண்ணகி சென்றபொழுது அவள் புலம்பி அழுத சொற்கள் உள்ளத்தை உருக்குகின்றன.

கண்ணகி கணவனைக் கண்டு புலம்பல்

“என்னுறு துயர்கண்டும் இடருறும் இவள் என்னீர்
பொன்னுறு நறுமேனி பொடியாடிக் கிடப்பதோ
மன்னுறு துயர்செய்த மறவினை யறியாதேற்கு
என்னுறுவினை காணுவிதுவென வுரையாரோ”

“கண்பொழி புனல்சோரும் கடுவினை யுடையேன்முன்
புண்பொழி குருதியிராய்ப் பொடியாடிக் கிடப்பதோ
மன்பதை பழிதூற்ற மன்னவன் தவறிழைப்ப
வுண்பதோர் வினைகாணு விதுவென வுரையாரோ”

“யாருமில் மருள்மாலை யிடருறு தமியேன்முன்
தார்மலி மணிமார்பும் தரைமூழ்கிக் கிடப்பதோ
பார்மிகு பழிதூற்ற பாண்டியன் தவறிழைப்ப
ஈர்வதோர் வினைகாணு விதுவென வுரையாரோ”

இப்பாக்கள் கண்ணகியின் கற்பின் பெருமையையும் அவள் காதலன்பால் வைத்திருந்த அன்பின் அருமையையும் உருக்கமாக எடுத்துரைக்கின்றன.

இன்னும் நீதி தவறிய பாண்டிய அரசன் முன்னே மெய் முழுதும் நிறைந்த புழுதியும் விரிந்த கருங்கூந்தலும் கையில் ஒற்றைச் சிலம்பும் கண்ணீருமாகத் தோன்றிய கண்ணகி யின் கோலத்தையும் அவள் உடைத்த சிலம்பின் உள்ளே யிருந்த மாணிக்கத்தையும் கண்ட அம் மன்னவன் மயங்கி விழுந்து உயிர் துறந்த பகுதியைப் படிப்போர் உள்ளம் கல்லாயினும் கரைந்துருகுமென்பது திண்ணம்.

நீதியிழந்த மன்னவன் சோகம்

“மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியேமணி
தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன் [கண்டு
பொன்செய் கொல்லன் தன் சொல் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள் என
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே”

இவ்வாறு மயங்கி விழுந்த மன்னவன் அங்கிலேயே உயிரைத் தோற்றான். கூடலை அரசாண்ட மன்னவன் கூடாயினான்.

“காவியுகு நீரும் கையில் தனிச் சிலம்பும்
ஆவிகுடிபோன அவ்வடிவும்—பாவியேன்
காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சிக்
கூடலான் கூடாயினான்”

“மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையிற் தனிச்சிலம்பும் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றான் அக்காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்”

இப்பாக்கள் சோகமென்னும் துறையில் ஒப்புயர்வற்று விளங்குகின்றன.

இவ்வாறே மற்றைய காவியச் சுவைகளும் சிலப்பதிகாரத்தில் சிறந்து விளங்கக் காணலாம். கோவலன் கண்ணகியை மணம் புரிந்து அவளுடன் இல்லறம் நடத்தும் நாளில் அம் மெல்லியன் மாதின் குலத்தையும் நலத்தையும் புகழ்ந்துரைத்த மொழிகள் இன்பச் சுவையில் சிறந்து இலங்குகின்றன. இன்னும் கோவலனும் மாதவியும் கடற்கரைக்குப் புறப்படும்பொழுது அம் மாது அணிந்திருந்த அணிகளேயும் இலங்கிய தோற்றத்தையும் எடுத்துரைக்கின்ற பகுதியும் இன்பச்சுவை நிறைந்து விளங்குகின்றது. இனி கண்ணகியார் நீதி தவறிய பாண்டியன் முன்னே சென்று வழக்குரைக்கும் "வழக்குரை காதை" யிலும் மாடமதுரையை தன் கற்பின் ஆற்றலால் அழிப்பதாக கண்ணகி சபதம் கூறிய "வஞ்சினமாலை" யிலும் வீரரசம் விளங்கித் தோன்றுகின்றது. இன்னும் வஞ்சிக் காண்டத்தில் சேரன் செய்த வீரச் செயல்களை விரித்துரைக்கும் பகுதிகளெல்லாம் வீரச்சுவை பெற்று விளங்குகின்றன.

சிங்காரச் சுவை

வீரச் சுவை

இனிக் காளி கோட்டத்தில் சாலினி ஆடிய ஆவேசக் கூத்தும், ஆய்ச்சியர் ஆடிய குரவைக் கூத்தும் குன்றக் குறவர் ஆடிய குரவைக் கூத்தும், நகைச் சுவையை நல்கி மகிழ்விக்கின்றன. இன்னும் மற்றைய சுவைகள் கற்போர் ஆங்காங்கு கண்டு மகிழ்தற் குரியனவாம். ஆகவே சிலப்பதிகாரமென்னும் பெருங் காவியத்தில் பலவகை நயங்களும் ஒருங்கே அமைந்து விளங்குகின்றன.

நகைச் சுவை

---

Printed at the "Satya Nesan" Press, 3-27, Broadway, Madras.